


அமுததார
மார்ச்
விலை ரூ 5

“என்னுடைய டாஃபேயின் மாஸே-ஃபெர்குஸன் டிராக்டர் எனது குடும்பத்தின் ஒரு அங்கமாகும்”



“என்னுடைய டாஃபே-எம்.எஃப். டிராக்டரை நான் மிகவும் நேசிக்கிறேன். பொறுப்பான, நம்பத் தகுந்த என் டிராக்டர் என்னுடைய வளமான வாழ்க்கைக்கு அரும்பாடுபட்டு கடினமாக உழைத்துள்ளது. இப்போது பலபேர் விலைகொடுத்து வாங்கி என் டிராக்டரை என்னிடமிருந்து பிரிக்க நினைக்கிறார்கள். ஆனால், என் குடும்பத்தின் அங்கமான என்னுடைய டிராக்டரை பிரிந்து நான் எப்படி வாழமுடியும்.”

எம்.எஃப். மற்றும் டாஃபே டிராக்டர்களை தயாரிக்கும் டாஃபே நிறுவனத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம்:

- எம்.எஃப் - 1035 (35hp).
  எம்.எஃப் - 1035DI (35hp) எம்.எஃப் - 245 (47hp) டாஃபே 25 (25 hp) என நான்கு வகையான டிராக்டர்களை தயாரிக்கிறது.
- எரிபொருள் சிக்கனமானது, நம்பகமானது, எல்லாவகை கரடுமுரடான நிலப்பகுதியிலும் டாஃபே-எம்.எஃப். டிராக்டர்கள் பணிசெய்யக்கூடியது.
- பலவகையான எம்.எஃப். கருவிகள் மற்றும் உபகரணங்கள் - அனைத்தும் டாஃபே எம்-எஃப் டிராக்டர்களுக்கு 100 சதவிகிதம் பொருத்தமானது - வயல்வெளி மற்றும் மலைப்பகுதியில் பயிரிடப்படும் எல்லாவகை பயிர்களுக்கும் உகந்தது.
- விற்பனைக்குப் பிறகு அளிக்கப்படும் உத்தரவாதமான சேவை மற்றும் நியாயமான விலையில் உதிரிபாகங்கள் ஆகியவை கிடைக்கக்கூடிய வகையில் நாளும் வளர்ந்து வரும் டீலர்களின் கட்டுக்கோப்பான அமைப்புமுறை.
- இப்போது... டீலர்களின் நடமாடும் சேவைப் பிரிவு மற்றும் உதிரிபாகங்களை விற்பனை செய்யும் ஊர்தி சேவை ஆகியவை உங்கள் இல்லத்தை தேடி வருகின்றன.

அருகிலுள்ள டீலர் அல்லது டாஃபே அலுவலகத்திலிருந்து இலவசமாக டாஃபே நிறுவனத்தின் வேளாண்மை வளம் என்ற புத்தகத்தை பெற்றுக்கொள்ளவும்.

MASSEY-FERGUSON TAFE

டிராக்டர்ஸ் அண்ட் ஃபார்ம் எக்யிப்மெண்ட் லிமிடெட்,
35, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை 600 034.

டாஃபேயின் மாஸே-ஃபெர்குஸன் விவசாயிகளின் வளமைக்கு வழி.

எரிபொருள்
சிக்கனத்திற்கு
டாஃபே டிராக்டர்கள்

MAC-T94/TAM

அமுதசுரபி

◆ மார்ச் 1992 ◆ பிரஜோத்பத்தி பங்குனி
◆ மலர் : 44 ◆ இதழ் : 11
◆ ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்
◆ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா
◆ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.
◆ மேலட்டை : பகவான் சத்ய ஸ்ரீ சாயி.
◆ இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே —பாரதியார்

மனிதாபிமானத்தோடு நடத்துவோம்

தமிழக முதல் அமைச்சர் டாக்டர் ஜெயலலிதாவின் 44ஆவது பிறந்த நாள் 24.2.92 அன்று கொண்டாடப்பட்டது. ஜனாதிபதி உட்படப் பெருந்தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன், கோயில்களில் சிறப்புப் பூசை - பிரார்த்தனை செய்தனர். முதல்வரின் பிறந்த நாளையொட்டி ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும்.

தங்கள் வாழ்நாள் முழுமையும் சிறையிலேயே வாடி வதங்குவோமோ என்ற கவலை ஏக்கத்துடன் இருந்தவர்களுக்குத் திடீர் விடுதலை ஏற்படுத்தியிருக்கும் மகிழ்ச்சியை ஏட்டில் எழுத முடியாது.

தாங்கள் செய்த குற்றத்தை எண்ணி மனம் வாடிப் பெரும்பாலோர் திருந்தியிருப்பார்கள். விடுதலையடைந்த அவர்களுடைய நிலை இனி என்ன? சமூகம் அவர்களை எப்படி வரவேற்கும்? இழித்தும் பழித்தும் பேசாமல் அவர்களுடன் சிநேகபாவத்துடன் பழகுவார்களா?

தண்டனைக் கைதி ஒருவர் தினத்தாள் நிருபருடன் பேசிய செய்தியைப் படித்தவுடன் நம் நெஞ்சு நெகிழ்ந்தது. தாம் குற்றம் செய்த சூழ்நிலையை அவர் இப்போது விவரித்து அதற்காக வருந்தியதும் நமக்கு அவர்மீது இரக்க உணர்வே ஏற்பட்டது.

கணவன் சிறையிலிருந்த இத்தனை ஆண்டுகளும் அவருக்காகக் காத்திருந்து வீட்டு வேலை செய்து வாழ்க்கையை ஓட்டிவந்த அவர் மனைவியின் தியாக உணர்ச்சியை விடுதலையடைந்த குற்றவாளி விவரிக்கும்போது நம் விழிகளில் கண்ணீர் பெருகாதிருக்க முடியாது. இந்தச் சமூகம் அத்தகையவர்களுக்கு நல்வாழ்வளிக்க வேண்டும். தனவந்தர்கள் சமூக சேவை நிலையங்கள் மறுவாழ்வளிக்க முன்வர வேண்டும். முன்னாள் போர்வீரர்களுக்குப் பலவிதச் சலுகைகள் அளிப்பதுபோல் மனம் திருந்திய குற்றவாளிகளுக்கும், அவர்களுடைய எஞ்சிய வாழ்நாள் அமைதியாகக் கழிய வழிசெய்ய வேண்டும்.

குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்குவது சட்டத்தின் கடமைதான். ஆனால் அதற்கும் மேலாக, குற்றம் புரிந்தவர்கள் அந்தக் குற்றம் புரிந்த சூழ்நிலை ஆராயப்பட வேண்டும். நிரபராதிகள் தண்டிக்கப்படாமல் நீதிமன்றம் பாதுகாப்பளிக்கிறது என்பது உண்மையே.

தண்டனைக்குப் பிறகு விடுதலையடைபவர்கள் நலன் காத்து மீண்டும் அதுபோன்ற குற்றம் செய்யாமல் அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும்.

கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அதற்கும் தக்க அறவழி காட்டுவார்கள் என நம்புகிறோம்.

மகாமகப் படிப்பினை

விபத்துகள் எப்போது நடைபெறும் என்பதை யாரும் அறியமாட்டார்கள். ஆனால் வருமுன் காக்க பல நடவடிக்கைகள், முன் யோசனைகள் அவசியம்.

கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத்தில் ஏற்பட்ட துயரச் சம்பவம்போல் வேறு எந்தப் பெருங்கூட்டம், திருவிழாக்கள், மாநாடுகளிலும் நடைபெறாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

பல லட்சம் பேர்கள் கூடிய அந்தப் புனித பூமியில் ஏற்பட்ட துயரச் சம்பவத்தின் காரணம் ஆராயப்பட வேண்டும். நீதி விசாரணை வருவதற்கு முன்பே, முதல்வர் நீராட வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்று தவறாக வதந்தி பரப்புவது நியாயமன்று. ஒரு குறிப்பிட்ட நேரம் - அந்த நேரத்தில்தான் குளிக்க வேண்டும் என்று மதத் தலைவர்கள் கூறினார்களே - அந்த நேரத்தில் பல லட்சம் பேர்கள் எவ்வாறு நீராடுவார்கள் என்று அவர்கள் எண்ணினார்களா? நாள் முழுமையும் நீராடலாம் என்று ஏன் ஏற்படுத்தியிருக்கக் கூடாது. மக்கள் தொகை பல லட்சம் உயர்ந்துவிட்ட பிறகு, நீராடல் முறையையும் மாற்றிக் கொள்வதில் என்ன தவறு!

ரயில்வே பட்ஜெட்

ரயில்வே துறைக்கு என்று வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட்) ஒவ்வோர் ஆண்டும் நாடாளுமன்றத்தில் வெளியிடப்படும்போது துண்டு விழும் தொகையைச் சரிகட்ட கட்டண உயர்வு வெளியிடப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டு பட்ஜெட் வெளியிடப்படும் முன்பே, பயணக் கட்டண உயர்வு உண்டு என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது. மின்சார ரயில் சீசன் டிக்கெட் கட்டணங்கள் படிப்படியாக உயர்ந்து, சென்ற ஆண்டைக் காட்டிலும் மூன்று மடங்கு உயர்ந்தது பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் 'அடி'.


வழக்கம்போல், தமிழ்நாட்டில் புதிய திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. தமிழ்நாட்டிற்கென்று முன்னேற்றத் திட்டங்கள் எப்போது அறிவிக்கப்படுமோ? அந்தக்காலம் வருமா?

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா
வணக்கச் சிறப்பு மலர் பக்கம்: 49

கோயில் நிதி

கவிஞர் நா. காமராசன்

அன்றுதொட்டு இன்றும் என்றும்
ஆணும் பெண்ணும் ஒன்று என்று
வென்றபின்பு வேதம் சொல்லி
நீதி சொல்ல வந்த தேவி...
குன்றெடுத்து வந்ததுபோல்
நிதிகுவித்துக் கடவுளுக்குக்
கோயில் கட்டும் என் தலைவி!
ஆயர்பாடி மத்துச் சத்தம்
போல வந்து குவியும் அம்மா...
கோயில் நிதிகள்..!
நீறுபூத்த நெருப்பைப் போல
நீதி இங்கே இருந்தபோது
உண்மை என்ற உலையில் வைத்து
தர்மம் என்ற கனலை ஊதும்
பெண்ணரசி வாழ்க வாழ்கவே - அவர்
"பெரியகோயில்" போல வாழ்கவே!
ஜாதி மதங்கள் பேதம் அனைத்தும்
கால நதியில் கரைந்துபோக
கோயில்நிதியும் பெருக வேண்டுமே - இனி
மனிதன் இறைவன் ஆகவேண்டுமே!
இமயமலை உன் காலடியில் - தன்
சிகரங்களை வைத்துத் தலை வணங்கும்
வசந்தகாலம் நீ நடந்துவரும் பாதையில்
உதிரிப் பூக்களாய்ச் சிதறும்
வெண்ணிலவும் உன் மேஜை விளக்காக
நள்ளிரவில் மாறும்
வேதங்கள் நான்கும் உபநிடதங்கள் யாவும்
உன் விழிகள் பேசும்
சங்கத் தமிழ் பாடும் எங்கள் தமிழ்த்தாயே!
வானத்தைப் போலவும்
பூமியைப் போலவும் - நீ
பல்லாண்டு வாழ்கவே!



செல்வம்

'கர்மயோகி'



வளமான வாழ்வுக்குத் தேவையானவை ஆரோக்கியம், கல்வி, செல்வம் ஆகியவை. அவற்றுள் செல்வம் மற்ற இரண்டையும் பெற்றுத் தரக் கூடியது. மேலும் வாழ்வில் செல்வத்தைப் பெற்றால், அதன் மூலம் எதையும் பெறலாம் என்ற நிலையுள்ளது. செல்வத்தை இரு வகையாகப் பெறலாம். தவறான முறையில் பெறும் செல்வம் வாழ்வைச் சீர் படுத்தாது. சீர் குலையச் செய்யும். நேர்மையான முறையில் பெறும் செல்வம் எதையும் பெற்றுத்தரும். அத்துடன் அருளையும் பெற்றுத் தரும்.

செல்வம் ஆன்மிகத்திற்கெதிரானது என்ற பரம்பரையான கருத்திற்கு எதிரான கருத்து இது. எல்லாச் சக்திகளையும் போல ஆதியில் செல்வம் இறைவனுடைய சக்தி, இன்று அசுரன் பிடியில் உள்ளது. அதை அசுரனிடமிருந்து மீட்டு அன்னையின் திருவடியில் வைப்பது நம் கடமை என்று பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

செல்வத்தைத் தவறாகப் பெற்றால்தான் பெரும் செல்வம் அடைய முடியும் என்ற பொதுவான கருத்து உண்மையல்ல. தவறான முறையில் பெறும் செல்வம் அளவு கடந்து பெருகும் என்பது உண்மை. ஆனால் அது குறுகிய காலத்தில் அழிந்து போகும் என்ற உண்மையின் ஒரு பகுதியை சகடக்கால் போல் வரும் என்ற வழக்கு குறிக்கின்றது. இந்த அனுபவத்தை மட்டுமே கண்டவர்கள் செல்வத்தைத் தவறாக நினைக்கின்றார்கள். 30 வருஷம் வாழ்ந்தவருமில்லை, 30 வருஷம் கெட்டவருமில்லை என்ற பழமொழியும் ஒருவகையில் இதே கருத்தை வலியுறுத்துகிறது. கடந்த இரு நூறு ஆண்டுகளாகத்தொழில், வணிகம், கம்பெனிகள் பெருகிவருகின்றன. அவற்றுள் சிலர் செல்வத்தை முறையாகச் சம்பாதித்தார்கள். அவர்கள் செல்வம் நூறு ஆண்டுகளாக நிலைத்துள்ளது, தொடர்ந்து பெருகியுள்ளது.

இக் கட்டுரையில் அன்னைக்கும் செல்வத்திற்கும் உள்ள தொடர்பை விளக்க முற்படுகிறேன். அத் தொடர்பு வாழ்வுக்குரிய நிலையிலும், யோகத்திற்குரிய நிலையிலும் அமைந்துள்ளது. வாழ்வுக்குரிய நிலையில் பல கட்டங்கள் உள்ளன. அரசியல் போன்ற பொது வாழ்வுக்குரிய நிலை ஒன்று, தொழிலுக்குரிய (Industry) நிலை மற்றொன்று. நாட்டின் வளத்தை வளர்க்கும் வாழ்வு நிலை வேறொன்று. தேசிய பால் வளர்ச்சிக் கழகம் பொது சேவையில் ஈடுபட்டு 700 கோடி மூலதனம் சேகரம் செய்துள்ளது. தொழிலில் ஈடுபட்ட அதிபர்களின் குடும்பவாழ்வு செல்வாக்குடன் உள்ள உயர்ந்த நிலையில் செல்வம் பெற்றது. இப்படி தொழிலால் பெரும் செல்வம் பெற்றவரும் உண்டு. இவையெல்லாம் போக சாதாரணமாகக் குடும்பம் நடத்தும் மக்களுடைய வாழ்வில் சிலருக்குச் செல்வம் பெருகுவதும் உண்டு. பெரும்பாலான மக்களின் குடும்ப வாழ்க்கைக்குப் பொருத்தமான கருத்துகளை மட்டும், அன்னையின் அருள் வழியில் விளக்க முற்படும் முயற்சி இக்கட்டுரை. இதில் கண்டுள்ள அடிப்படை உண்மைகள் எல்லா நிலையிலுள்ளவர்க்கும் பொருந்தும் என்றாலும், அதை நான் விளக்க முயலவில்லை. குடும்ப வாழ்வில் நேர்மையாக அதிக செல்வ வளம் பெறுதல், அதன் மூலம் அன்னையின் அருளைப் பெறுவது, அருள் மூலம் செல்வத்தையும், செல்வத்தால் அருளையும் வளரச் செய்யும் முறைகளையே இங்கு எழுதுகிறேன்.

அன்னையை நெருங்கி வந்தால், அருள் பெருகிவரும். அருள் பெருகினால் அனைத்தும்

பெருகும். அவற்றுள் பொருள் ஒன்று. இடையறாத நினைவு, ஆத்ம சமர்ப்பணம், தியானம், நம்பிக்கை, பக்தி, நேர்மை, உண்மை, சேவை, காணிக்கை, ஞானம், சுத்தம், மௌனம், ஒழுங்கு போன்ற எல்லா உயர்ந்த ஆன்மிக முறைகளும் நம்மை அன்னையின்பால் கொண்டு செல்லும். இவற்றுள் உயர்ந்தவற்றை உடனே பெற முடியாது. முயன்று, பயிற்சி மூலம், நாள் கடந்து பெற வேண்டும். சிலவற்றை நாம் பெற முடியாது என்றும் நினைப்போம். ஞானமும், மௌனமும் பிறப்பிலேயே இருக்க வேண்டும். இப்பொழுது நம்மால் எப்படிப் பெறமுடியும் என்று மனம் சொல்லும். நேர்மையையும், உண்மையையும் நாளைக்கே பயில முடிவு செய்வது இயலாத காரியம். அதற்கு நாளாகும். உடனே பயிற்சியை மேற்கொள்ளக் கூடியதை, அனைவரும் ஆரம்பிக்கலாம். அதிக சுத்தம், குறைந்த சத்தம், ஒழுங்கு ஆகியவை நம்மால் முயற்சியால் பெறக் கூடியவை. அவற்றிற்கும் அன்னையின் அருளுக்கும், அதன் மூலம் பொருளுக்கும் உள்ள தொடர்பை மட்டும் விளக்குகின்றேன்.

சுத்தம் :

பொதுவாக செல்வமுள்ள இடத்தில் சுத்தம் இருப்பதைக் காணலாம். சுத்தம் செல்வத்தைக் கொண்டுவரும் என்பது ஆன்மிக உண்மை. பொருள்களுக்கு ஜீவன் உண்டு. அவற்றை நாம் கவனிப்பதை அவை விரும்புகின்றன. சுத்தமாக இருப்பதை அவை போற்றுகின்றன. அழகாக அடுக்கி வைத்தால் அவை பெருமைப் படுகின்றன. அழகான கம்பளம், அதன் மீது அன்னை நடக்கும்போது அவரை நிறுத்தி நான் எப்படியிருக்கின்றேன் என்று கேட்கிறது. அதன் அழகை நாம் கவனித்தால் அது சந்தோஷப்படுகிறது. பொருள்களை அலங்கோலமாக வைத்திருந்தால் அவை அன்னையிடம் எங்களை எப்படி வைத்திருக்கின்றார்கள் பாருங்கள் என்று குறை சொல்கின்றன. சுத்தமாகவும், ஒழுங்காகவும் இருக்க அவை பிரியப்படுவதால், நாம் அவற்றைச் சுத்தம் செய்யும்பொழுது அவற்றைச் சார்ந்த மற்ற பொருள்கள் நம்மை நாடி வருகின்றன. அவற்றைப் பெறத் தேவையான பொருள் - பணம் - நம்மை நாடி வருகின்றது. இதுவே சுத்தத்தின் ஆன்மிக உண்மை. பொருள்களை தெய்வமாகக் கருதி அதன் தெய்வீகத்தைப் போற்றும் வகையில் சுத்தமாகவும், ஒழுங்காகவும் அவற்றை வைத்தால், அவற்றுள் உள்ள தெய்வீகம் வெளிப்பட்டு அருள் செயல்படுகிறது. அருளால் பொருள் பெருகுகின்றது.

சுத்தம் பல நிலைகளில் உள்ளது. சுமார் 5 நிலைகளிலும் சொல்லலாம், பத்து நிலையாகப் பிரித்தும் சொல்லலாம். எத்தனை நிலையானாலும், சுத்தம் என்பதை உயர்த்த முடியும் என்பது தெரிகிறது.

1. வீட்டைத் தினமும் பெருக்கிச் சுத்தம் செய்வது முதல் நிலைச் சுத்தமாகும்.

2. மாதந்தோறும் வீட்டை ஒட்டடை அடித்துச் சுத்தம் செய்வது அடுத்தது.

3. தரையைப் பெருக்குவது, ஒட்டடை அடிப்பதுபோல், மேஜை, நாற்காலி, அலமாரி, மற்ற பொருள்களை அடிக்கடி துடைத்துச் சுத்தம் செய்வது ஒரு நிலை.

4. அலமாரிக்குப் பின்னால், அதன் அடியில், மேஜைக்குக் கீழ் துடைத்துச் சுத்தம் செய்வது அடுத்த கட்டம்.

5. மாதம் ஒருமுறை செய்வதை வாரம் ஒருமுறை செய்வதும், வாரம் ஒரு முறை செய்வதை வாரம் இருமுறை செய்வதும் சுத்தத்தை உயர்த்துவது.

6. சுவர்களில் அழுக்கில்லாமல் வெள்ளையடிப்பதும், பர்னிச்சர்களுக்கு வார்னிஷ் அடிப்பதும் அவற்றை அடிக்கடி மேற்கொள்வதும் அடுத்த நிலைச் சுத்தத்தை வரவழைக்கும்.

7. மேஜை டிராயர், பெட்டிகள், அலமாரி இவற்றை மேல்புறம் சுத்தம் செய்வதுபோல் உள்ளே சுத்தம் செய்வது சிரமம். அவற்றை அடுத்த நிலையில் மேற்கொள்கிறோம்.

8. பாத்திரங்களைச் சுத்தம் செய்வதிலும், துணிகளை வெளுப்பதிலும், காலதாமதமின்றி உடனே அவற்றை மேற்கொள்வது உயர்ந்த நிலைச் சுத்தம்.

9. மேற்சொன்னவற்றிலெல்லாம் சுத்தத்தின் தரத்தை உயர்த்துவது அடுத்த கட்டம்.

10. சுத்தத்தை அதன் தெய்வீகத்திற்காக நாடும் மனநிலையுடன் மேற்கொள்வது கடைசிக் கட்டம்.

குறைந்த சத்தம் :

பேச்சு சக்தியாகும். பேசினால் சக்தி செலவாகும். சக்தியை அதிகமாகச் செலவு செய்தால் அது பொருள் ஈட்டும். பேசுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறார்களோ, அவ்வளவு அதிகமாக சம்பாதிப்பார்கள். அதற்கும் எல்லையுண்டு. அவர்களும் அளவு மீறிப் பேசும்பொழுது சக்தி விரயமாகும். சக்தி விரயமானால், பொருள் சேர்வது குறையும்.

பேசினால் சக்தி செலவாகும் என்பதால், அதிகப்பேச்சு பொருள் வரவைக் குறைக்கும். பேசாமலிருந்தால் சக்தி சேகரமாகும், அதனால் பொருள் வரவு அதிகமாகும். பேச்சில் இரு அம்சங்களுண்டு. சத்தம், அளவு. அதிக சத்தம் விரயம். அதிக நேரம் பேசுவது விரயம். அளவோடு, குறைந்த தொனியில் பேசுவது பொருள் சேர்வதற்குரிய முறை.

நாம் பேசியபின், பேசியவற்றை நினைத்துப் பார்த்து அதைச்சுருக்கமாக எப்படிச் சொல்லியிருக்கலாம் என்று கண்டால், 300 வார்த்தைகளில் சொல்லியதை, 30 வார்த்தைகளில் சொல்லியிருக்க முடியும் என்பது தெரியும். எதிரேயிருப்பவரிடம் பேசும்பொழுது நாம் அடுத்த அறையிலிருப்பவர்களுக்குக் கேட்பது போல் பேசுகிறோம். சில சமயம் அடுத்த வீட்டிலிருப்பவர்களுக்குக் கேட்பதுபோல் பேசுகிறோம். எதிரேயுள்ளவருக்குக் கேட்கும் அளவு பேசப் பழகிக் கொள்ளுதல் சக்தி விரயமாவதைத் தடுக்கும்.

இதற்குரிய பயிற்சியில் பல கட்டங்கள் உள்ளன.

1. நாம் எப்படிப் பேசுகிறோம் என்று கவனித்து எத்தனை நிலை இறங்கி வர வேண்டும் என்று கணக்கிட வேண்டும்.

2. நாம் ஏன் சத்தமாகப் பேசுகிறோம், வளவள எனப் பேசுகிறோம் என்று பார்த்து அதன் ஆதியைக் கண்டுகொண்டால் பேச்சைக் குறைக்க உதவும். நாம் பேசுவது நமக்குப் புரியவில்லை என்றால் சத்தம் அதிகமாகும். புரிந்தால் சத்தம் குறையும். திரும்பத் திரும்பச் சொல்வதும் நமக்கே புரியவில்லை என்பதால் தான்.

3. நம் பெற்றோர் சத்தமாகப் பேசுவதால் நாம் சத்தமாகப் பேசுகிறோம் என்றால், அதை முயற்சியால் மாற்றிக் கொள்ளலாம்.

4. யோசனையேயில்லாமல் பேசுகிறோம். சத்தத்தைப் பற்றி நினைக்கவேயில்லை என்றால் எளிதில் மாற்றிக் கொள்ளலாம்.

5. சத்தத்தைக் குறைக்க முக்கியமாகத் தேவைப்படுவது மனத்தின் தீர்மானம், உள்ளுறை முயற்சி. ஆழ்ந்த தீர்மானம் இருந்தால் சத்தம் குறையும். பெருமுயற்சியிருந்தால் பேச்சு குறையும். முயற்சியுள்ளவருக்கே இதில் பலன் கிடைக்கும்.

6. பேச வேண்டும் என்ற ஆசை மனதிலிருக்கும்வரை பேச்சும் குறையாது, சத்தமும் குறையாது. மனத்தினுள் பேச்சு குறைய வேண்டும் என்ற முடிவு ஏற்பட்டால் அம் முடிவு வெளிப்படும்பொழுது சத்தமும், பேச்சும் குறைவதைக் காணலாம். அவற்றோடு பொருள் பெருகுவதும் தெரியும்.

ஒழுங்கு :

சுத்தமும், குறைந்த சப்தமும் எளிதில் சாதிக்கக் கூடியவை. ஒழுங்கை அனைவரும் உடனே ஆரம்பிக்கலாம். ஆனால் எளிதில் நமக்குக் கட்டுப்படாது. புற ஒழுங்கு என்பது, அக ஒழுங்கைப் பிரதிபலிப்பதால், ஒரு முயற்சியால் மட்டும் ஒழுங்கை நிலைநிறுத்த முடியாது. மனம் கட்டுப்பட்டாலன்றி ஒழுங்கு கட்டுப்படாது. அதே காரணத்தால் பொருள் ஈட்டும் விஷயத்தில் ஒழுங்கிற்குப்பலன் அதிகம். ஒழுங்கைப் பின்பற்றுதலும் பல நிலைகளில் உள்ளன. அவையாவன :

1. பொருள்களை ஒழுங்காக அடுக்கி வைத்தல்.

2. பொருள்களை ஒழுங்காகச் செலவு செய்தல்.

3. Regularity பொருள்களைப் பெறுவதில் காலதாமதமின்றி ஒழுங்காகப் பெற்று, செலவு செய்தல் அதைவிடச் சிறந்தது.

4. குறித்த நேரத்தில் செயல்படுதல். (Punctuality)

5. சொல்லியபடி நடத்தல்.

6. முறையாக நடப்பது.

இவற்றுள் குறித்த நேரத்தில் செயல்படுதலை அனைவரும் மேற்கொள்ள முடியும். அதை மட்டும் மேற்கொண்டு அதிகபட்சம் கவனம் செலுத்தினால், அதற்குரிய பலனே அதிகமாக இருப்பதைக் காணலாம். ॐ



● ஒருவர் தம் மனைவியைக் காணவில்லையென்று போலீசாரிடம் புகார் செய்தார். அவர்கள் மனைவியின் அங்க அடையாளங்களைக் கூறும்படி கேட்டதற்கு அவரால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

"என்ன உயரம்!"

"தெரியாது"

"என்ன புடைவை கட்டிக் கொண்டிருந்தார்!"

"தெரியாது"

"என்ன நகை போட்டுக் கொண்டிருந்தார்!"

"அதுவும் தெரியாது. ஆனால் எங்கள் நாயையும் அழைத்துக் கொண்டுதான் போயிருக்கிறாள் என்று மட்டும் தெரிகிறது".

"அது என்ன நாய்!"

"அதுவா! அது புல்டாக் வகையைச் சேர்ந்தது. எடை பதினைந்தரை ராத்தல். மூன்று வெள்ளைக் கால்கள். ஒரு கால் பழுப்பு நிறம். வலக் கண்ணுக்கு மேலே மூன்று வெள்ளைப் புள்ளிகள். வால் நுனியில் ஒன்றரை அங்குலத்துக்கு வெள்ளை நிறம்" என்று சொல்லிக்கொண்டேபோனார்.

"கவலைப்படாதீர்கள். அந்த நாயைக் கண்டுபிடித்துக் கொடுத்துவிடுகிறோம்" என்று போலீசார்சொன்னார்கள். ●

●

● 1. தெருவில் நீங்கள் சந்திக்கும் ஒருவர், உங்களைத் தெரிந்தவர்போல் பேச ஆரம்பிக்கிறார் நீங்கள்,

(அ) "மன்னிக்க வேண்டும். நீங்கள் யார் என்று மறந்து விட்டேனே!" என்று சொல்வீர்களா! அல்லது,

(ஆ) தெரிந்தவர்போல் பேசிக் கொண்டே போவீர்களா! அல்லது,

(இ) "மன்னிக்க வேண்டும். அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்று நழுவி விடுவீர்களா!

2. பஸ்ஸில் ஏறியபிறகுதான் பர்ஸை வீட்டில் வைத்து மறந்துவிட்டது ஞாபகம் வருகிறது. அப்பொழுது என்று கண்டக்டர் டிக்கட் கேட்டுக் கொண்டு எதிரே வந்து நிற்கிறார். அப்பொழுது நீங்கள்,

(அ) "பர்ஸைக் கொண்டு வர மறந்துவிட்டேன்" என்று சொல்லுவீர்களா! அல்லது,

(ஆ) "பஸ் எங்கே போகிறது!" என்று கேட்டு, "தவறாக ஏறி விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்குவீர்களா! அல்லது,

(இ) ஒன்றும் சொல்லாமல் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்குவீர்களா!

3. வெங்காயம் சாப்பிடக் கூடாது என்று நினைத்திருக்கும் உங்களுக்கு ஒரு நண்பர் வீட்டில், சாதத்தில் வெங்காய சாம்பார் ஊற்றுகிறார்கள். அப்பொழுது நீங்கள்,

(அ) "வெங்காயம் சாப்பிடுவது இல்லை" என்று சொல்லுவீர்களா! அல்லது,

(ஆ) சாதத்தில் ஊற்றப்பட்ட சாம்பாரை எறிந்து விடுவீர்களா! அல்லது,

(இ) பேசாமல் சாம்பாரைச் சாப்பிடுவீர்களா!

4. ஹோட்டலில் பில்லுக்குப் பணத்தைக் கொடுக்கும்போது, பர்ஸிலிருந்து சில்லறைக் காசுகள் உருண்டு விழுகின்றன. அப்பொழுது நீங்கள்,

(அ) கீழே குனிந்து பணத்தைப் பொறுக்குவீர்களா! அல்லது,

(ஆ) பக்கத்தில் உள்ளவர்கள் பொறுக்கித்தரும்படி காத்துக் கொண்டிருப்பீர்களா! அல்லது,

(இ) பேசாமலேயே போய் விடுவீர்களா!



(அ) என்ற பதிலுக்கு 5 மதிப்பெண்கள், (ஆ) என்ற பதிலுக்கு 4 மதிப்பெண்கள் (இ) என்ற பதிலுக்கு 3 மதிப்பெண்கள் கொடுத்துக் கொள்ளுங்கள்.

18 - 20 மதிப்பெண்கள் கிடைத்தால் நீங்கள் தைரியசாலிகள். 15 - 17 மதிப்பெண்கள் கிடைத்தால் சாதாரணம், 15க்குக் கீழ் கிடைத்தால் நீங்கள் தைரியமற்றவர்கள். ❀

கத்தரித்து ஒட்டியது

நாடோடி

றுக்கு இன்னும் ஒன்பது ஆண்டுகள்

சென்னை நகரின் சபாக்
ல், மிகவும் தொன்மை
ந்த ஸ்ரீ பார்த்தசாரதி சபா
வல்லிக்கேணி) 1900 ல்
டங்கப்பட்டது. இந்த சபா
91ஆம் ஆண்டு விழா,
த 21ஆம் தேதியன்று மிக
ரிசையாகக் கொண்டாடப்
து. திரு நல்லி குப்புசாமி
ர்களின் மேற்பார்வையில்
ஏற்பாடுகள் நடந்தன
றால் அதன் சிறப்பைத்
யாக விவரிக்க வேறு
ண்டுமா? திருமதி சுஹா
மணிரத்னம் அவர்கள்
விளக்கேற்ற இவ்விழா
த் தமிழக சட்ட அமைச்சர்
ன்புமிகு திரு. கே.ஏ.
ஷ்ணசாமி அவர்கள்
டங்கி வைத்தார்கள். நீதி
திரு. கே.எஸ். பக்தவத்
தலைமை தாங்கினார்கள்.
பு விருந்தினராக வருகை
ார் இந்தியன் வங்கித்
லவர் திரு. எம். கோபால
ஷ்ணன் அவர்கள். பிரபல
ஸ்வர வித்வான் கலை



மாமணி டாக்டர் நாமகிரிப் பேட்டையின் மங்கள இசை வந்திருந்தோரைப் பரவசப் படுத்தியது. அமரர் மஹா வைத்தியநாதய்யர் முதல் இன்று மாண்டலின் சீனிவாசன் வரை பலர் இந்த சபாவில் இசை நிகழ்ச்சிகள் நடத்தி சிறப்பித்தனர் என்று நீதிபதி மிகவும் புகழ்ந்து பேசினார்.

இவ்விழாவின் சிகரமாக அமைந்தது கலைமாமணி திருமதி ஜெயலக்ஷ்மி நல்லி குப்புசாமி அவர்களின் மறக்க முடியாத அற்புத நடன நிகழ்ச்சி. தன் அழகிய முகத்தில், 'நவரஸ' முக பாவங்களைச் சித்தரித்து அவையோரைப் பரவசத்துக்குள்ளாக்கினார் என்றால் மிகையில்லை. திருமதி. இந்திரா ராஜனின் மாணவியான இவர் வெளிநாடுகளுக்கும் சென்று, பல நடன நிகழ்ச்சிகளை அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


புகழ்பெற்ற 'பேலூர்' 'ஹளபேடு' சிற்பங்களின் நடன நிலைகளைப் போன்று இவர் காட்டிய முத்திரைகள் மிகவும் அழகாக அமைந்திருந்தன. 'பிருந்தாவன சாரங்கா' தில்லானாவை மிகவும் நேர்த்தியாக ஆடி நிகழ்ச்சியை நிறைவு செய்தார். இந் நடன நிகழ்ச்சிக்குச் சிறப்பாக நட்டுவாங்கம் செய்த கலைமாமணி திருமதி. கே.ஜே. ஸரஸாவை மிகவும் பாராட்ட வேண்டும்.

—கே. இந்திரா

சாஸ்திரி சகோதரிகளின் நாட்டிய விழா!

கோபாலி ஃபைன் ஆர்ட்ஸ்
பில் மியூசிக் அகாடமி மினி
லில், புதுடில்லி சாஸ்திரி
ாதரிகளான திருமதி
ந்தி, குமாரி பாக்யலட்சுமி
யோர் இணைந்த பரத
டிய நிகழ்ச்சி 29.1.92 அன்று
பாக நடைபெற்றது.

ாஸ்திரி சகோதரிகளின்
ாத்தில் உயர்தரமான ஜதிக்
ர்வைகள், பாவங்கள்,



அடவுகள், கரணியங்கள் யாவுமே சிறப்பாக இருந்தன.

ஐயப்பன் சரித்திரம் நாட்டிய நாடகம் - ரசிகர்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திய நிகழ்ச்சி என்று சொல்லலாம். இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களிலும் அயல்நாடுகளிலும் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தியுள்ள இந்த கலைச் சகோதரிகளுக்குச் சிறப்பான எதிர்காலம் காத்திருக்கிறது. குரு காமேஸ்வரனின் நட்டுவாங்கமும், ஸ்ரீமதி கௌரியின் இன்னிசையும் சிறப்புடன் அமைந்து நிகழ்ச்சிக்கு இனிமை சேர்த்தன.

~ஜனகன்~

விக்கிரமன்

19. 'என் மகள்'

பழையாறையிலிருந்து புறப்பட்ட இரதம் பெரும்பாட்டை வழியாகச் சென்று, மேற்குத் திசையில் ஒரு சிறு பாட்டையில் திரும்பியது. இருபுறமும் உயர்ந்த மரங்கள் நிறைந்த அந்தக் காட்டுப்பாதையினிடையே சாய்ந்து வீசும் கதிரொளி வெள்ளம்போல் பாய்ந்து வந்து கண்களைக் கூசச் செய்தது.

அருகே இருந்த பொன்னரசியிடம் வீரமாதேவி கேட்டாள் :

"பொழுது சாயும் நேரத்தில் நாம் எங்கே பயணம் செய்து கொண்டிருக்கிறோம்?"

பொன்னரசி சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள்.

அவளுக்கும் தெரியாது எங்கே செல்கிறோமென்று.

தேர்ப்பாகனை நோக்கிக் கேட்டாள். அவன் ஏதும் மறுமொழி கூறாமல் இரதத்தை விரைவாகச் செலுத்துவதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தான். இருள் சூழ்வதற்குள் அந்தச் சிற்றூரை அடைய வேண்டும்.

வட்டவடிவமான சூரியப் பந்து மிக வேகமாக மேற்குத் திக்கில் இறங்கி மறைய முயன்று கொண்டிருந்தது.

பாட்டையின் இருபக்கங்களிலும் நெடிய மரங்கள் அணிவகுத்து நிற்க வட்டக் கதிரவன் கம்பீரமாகச் சுழன்றவாறு இறங்கும் காட்சி வீரமாதேவிக்குப் புத்துணர்ச்சியை அளித்தது. கொள்ளிடக் கரையிலும் சில நாள்களில் மேற்குக் கதிரவன் வீடு திரும்புவதைக் கண்டிருக்கிறாள். ஆனால் இது போன்ற புதுமை உணர்வை அடைந்ததில்லை.

பொன்னரசியை நோக்கி, சிறு குழந் போல் கரங்கொட்டி, "பொன்னரசி! அதே பார்த்தாயா, சூரியனின் அழகை? செ பொன் வண்ணத்தில் வட்டவடிவமா அவன் சுழன்றபடி மேற்கு வானில் இறங் வதைப் பார்த்தாயா?" என்று கேட்டாள்.

பொன்னரசிக்கு எந்தப் புதுமையு தெரியவில்லை. அவள் வீரமாதேவியின் குழந்தை உள்ளத்தை எண்ணித் தனக்கு நகைத்துக் கொண்டாள்.

"என்ன பொன்னரசி? நான் பேசி கொண்டேயிருக்கிறேன் நீ மௌனமா இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"மௌனமாயில்லை தேவி! யோசி கிறேன்".

"என்ன யோசனை - ஆழ்ந்த யோசனை மேற்குத் திசைக் கதிரவன் உனக்குப் புது தெம்பை அளிக்கவில்லையா?"

பொன்னரசி இல்லையென்பதற்கு அ யாளமாகத் தலையசைத்தாள்.

"என்ன யோசனை? யாரைப்பற் எதைப் பற்றி?" வீரமாதேவி கேட்டாள்.

பொன்னரசி அவளைச் சுட்டிக் காட் னாள்.

"என்னைப் பற்றியா? என்னைப் பற் என்ன நினைக்கிறாய்?"

"கவலைப்படுகிறேன் தேவி".

வீரமாதேவி வியப்புடன் அவளை பார்த்தாள்.

"என்னைப்பற்றி என் அத்தை கவலை படவில்லை. என் ஆருயிர்த் தோழி முத் மாள் கவலைப்படவில்லை. மறந்தே விட்டாள். நான் சுக சௌக்கியமாக இருப்பதாக அவள் நினைத்திருக்கிறாள். என்

கங்காபுரிக் காவலன்


ளத்தை அழுத்தும் கனத்தை அவளுக்கு யார் விளக்குவது?"

"நான் விளக்குகிறேன் தேவி. இந்தக் காட்டுப் பிரதேசத்திற்கு நீங்கள் வரச் சம்மதித்ததிற்குக் காரணம் என்ன என்று சொல்லுங்கள். நான் உங்கள் உயிர்த் தோழியிடம் தெரிவிக்கிறேன்." பொன்னரசி வீரமாதேவியை நோக்கினாள்.

அவள் முகத்தில் கவலை படர்ந்தது. "எனக்கே தெரியவில்லை; இளவரசரின் கட்டளைப்படி நடக்கிறேன். அவரிடம் மனம் விட்டுப் பேசினேன். அதை நிறைவேற்றுவதற்குத் தக்க இடமிருக்கிறது என்று அவர் தெரிவித்தார். கருவூர்த்தேவர் வந்திருந்தார். ஆசி வழங்கினார். உடனே புறப்பட்டு விட்டேன். எங்கே செல்கிறேன்; என்ன நடக்கப் போகிறது என்று எனக்கே தெரியாது" என்றாள் வீரமாதேவி.

பொன்னரசி மெல்லச் சிரித்தாள். "தேவி! இப்படியும் ஓர் இளவரசி இருப்பதை நான் இப்போதுதான் பார்க்கிறேன். நீங்கள் எப்படிப் பிழைக்கப் போகிறீர்கள் என்று நான் கவலைப்படுகிறேன்"

இரதம் ஓரிடத்தில் நின்றது. அதற்குமேல் அந்தக் குறுகிய சாலை மேலும் குறுகியது. உடன் வந்த வீரர்கள் குதிரையை விட்டு இறங்கி தேவியின் அருகே வந்து வணக்கம் தெரிவித்து, அவள் அங்குதான் இறங்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.



"இந்தக் காட்டுப் பகுதிக்குள் நடந்து செல்ல வேண்டுமா?" என்று கேட்டாள்.

"அதிகத் தொலைவு இல்லை. ஒற்றையடிப் பாதையாயிருந்தாலும் செப்பனிடப்பட்ட பாதை. வாருங்கள்..." என்று, மரியாதையுடன் வணங்கிக் கூறிய வீரன் வழி காட்டியபடி சென்றான்.

சிறிது தொலைவு சென்றவுடன் அடர்ந்த மரங்களினிடையே நான்கைந்து குடிசைகள். குடிசை வாயில் தூய்மையாக சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. குடிசைக் கதவுகள் திறந்திருந்தன.

அவற்றைத் தாண்டிச் சென்றவுடன் திறந்த வெளியில் ஒரு தடாகம் இருந்தது. அல்லி மலர்கள் பூத்திருந்தன. காட்டருவி ஒன்று தடாகத்திற்குத் தண்ணீரைக் கொண்டு சேர்த்துக் கொண்டிருந்தது.

தடாகக் கரையில் உள்ள படிக்கட்டுகளில் பெண்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள். வீரமாதேவியும், மற்றவர்களும் வருவதை ஒருகணம் வியப்புடன் பார்த்துவிட்டுத் தங்கள் காரியத்தில் அவர்கள் கண்ணாயிருந்தார்கள்.

பறவைகள் கூட்டை அடையக் குதூகலமாகக் குரலிசை எழுப்பிப் பறந்து வந்து கொண்டிருந்தன. திடீரென இருள் சூழ்ந்துவிட்டது போன்ற நிலை. சுற்றுச் சூழலை நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள் வீரமாதேவி.

"தேவி! சற்று இங்கு நில்லுங்கள். நான் உள்ளே சென்று கலைத் தேவியிடம் உங்கள் வருகையைத் தெரிவித்து வருகிறேன்" என்று கூறி உடன் வந்த வீரனொருவன் விரைந்துச் சென்றான்.

அந்த இடம் மற்ற குடிசைகளைவிடப் பெரிதாக இருந்தது. சற்று உயரமாக இருந்தது. பெரிய பர்ணசாலைபோல் இருந்தது. கூரைமீது கொடிகள் படர்ந்திருந்தன. வாயிலில் பூச்செடிகளில் பறிக்கப்படா மலர்கள் சிரித்துக் கொண்டிருந்தன.

வீரமாதேவி உள்ளே சென்றாள். பொன்னரசி அழைக்கப்படவில்லை.

யாரைச் சந்திக்கப் போகிறோம்; அவர் யார் என்றெல்லாம் விவரிக்கப்படாததால் வீரமாதேவி தயங்கித் தயங்கி உள்ளே சென்றாள்.

கூரை வேயப்பட்ட நடுக் கூடம் விசாலமாக இருந்தது. புதுமையான சர விளக்குகள் உயர்ந்த மேல் கூரையிலிருந்து தொ கின.

மண்ணாலான சுவரில் காரை பூசப்பட் நடனத் தோற்றங்கள் சில வண்ணச் சித் ரங்களாக வரையப்பட்டிருந்தன.

அவற்றைப் போல் சில சித்திரங்கள எங்கோ பார்த்த நினைவு அவளுக்கு எழு



து. 'ஆம்,' தஞ்சைப் பெரிய கோயில் திருச் ற்றில் பார்த்திருக்கிறோம். அங்கே கண்ட அழகிய மன்னரின் திரு உருவம் இங்கும் கெழ்கிறது.'

பலவித நடனத் தோற்றங்கள் ஜீவ த்திரமாகத் தீட்டப்பட்டிருந்தன.

"வீரமாதேவி" என்று இரண்டு முறை யாரோ குரல் கொடுத்த பிறகு தன் நிலை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள் வீரமாதேவி.

"சோழ நாட்டு இளவரசி அவர்களே வருக, வருக" என்ற அந்தக் குரலின் இனிமை அவளை வசீகரித்தது.

ஒரு கணம் அவளைப் பார்த்த வீரமா தேவியின் மெய் சிலிர்த்தது. ஐம்பதைத் தாண்டியும் இளமையும் அழகும் அகல மாட்டாது குடிகொண்டிருக்கும் வடிவம். தபஸ்வினியைப் போன்ற தோற்றம். அகன்ற விழிகள். எடுத்து முடிக்கப்பட்ட கூந்தல். கழுத்தில் ஒரே ஒரு மணிமாலை.

விழிகளும், நாசியும், இதழ்களும் செழுமையான கன்னப் பகுதிகளும், செவி மடல்களும், புருவமும், சங்குக் கழுத்தும், வேயுறு தோள்களும் அந்தப் பெண்ணிடம் தனி மரியாதையை அளித்தன.

கூந்தலில் ஒளிந்தும் தெரிந்தும் வெள்ளி இழை போல் பளிச்சிடும் நரைமுடி மட்டுமே அவள் வயதை விளக்கியது.

என்ன தோன்றியதோ, வீரமாதேவி குனிந்து வணங்கினாள்.

"என்ன இது... இளவரசி என் பாதத் தைத் தொடுவதா? எழுந்திரு எழுந்திரு. களைத்து வந்திருப்பாய். குளித்து, உண வருந்திவிட்டு வா. பிறகு பேசலாம்" என்று கூறினாள்.

வீரமாதேவிக்கு நடப்பன எல்லாம் கனவு போல் தோன்றின. உடன்வந்த பொன்னரசி இன்னும் வெளியே நின்று கொண்டிருப் பாளே என்ற கவலையுடன் அவள் நீராடி விட்டுத் தனக்கென்று ஏற்படுத்தப் பட்டிருந்த அறைக்குள் நுழைந்தாள். பொன்னரசி உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடன் கொண்டு வரப்பட்டிருந்த பெட்டிகள் ஓர் ஓரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

வீரமாதேவி புத்துடை அணிந்து வெளியே வந்தாள். கலை அரசி அவளை அன்புடன் வரவேற்றாள். அந்தப் பகுதிக்கு அவள்தான் அரசி. அவளைக் கலையரசி என்றே எல்லோரும் அழைத்தார்கள். வீரமாதேவி நீராட உதவிய பெண் சுருக்க மாக அவளைப் பற்றி விவரித்தாள். அவளை என்ன சொல்லி அழைப்பது?

அறையைவிட்டு வெளியே வந்த அவ ளைக் கலையரசி அன்புடன் அழைத்துத் தன் எதிரே நிற்கவைத்துப் பாதம் முதல் கேசம் வரை ஒருமுறை ஆராய்வதுபோல் நோக்கி னாள். அவள் அவ்வாறு உற்றுப்பார்ப்பது - வீரமாதேவிக்குக் கூச்சமாக இருந்தது. அவள் தலை குனிந்தாள். நாணத்தால் முகத்தில் செவ்வரி ரேகைகள் படர்ந்தன. மூடிய விழிகளை மெல்லத் திறந்து நோக்கினாள்.

"சோழ நாட்டு இளவரசி வீரமாதேவி! இனி உங்களை - தங்களை என்று அழைக் காமல் என் அருமை மகளே என்றுதான் அழைக்கப் போகிறேன், சரிதானே?" என்று கூறியவுடன் வீரமாதேவி கலையரசியை ஏறிட்டுப் பார்த்து, "அம்மா, என்னைத் தாங்கள் எப்படியும் அழைக்கலாம். கலை யரசியின் எதிரே நான் ஓர் எளிய இள வரசி. மற்ற இளவரசியர்கள் என்னை ஏற்கவில்லை. இளவரசி என்று என்னைத் தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். என்னைப் பற்றித் தெரிந்தால் தங்கள் முடிவு மாறிவிடலாம்" என்று மிகவும் அமைதியாக, பயம் நிறைந்த குரலில் கூறினாள்.

அங்கே இருந்த நடராசர் சிலையின் பாதத்திலிருந்து ஒரு கொன்றை மலரை எடுத்து, வீரமாதேவியிடம் நீட்டி, குங்குமச் சிமிழிலிருந்து குங்குமத்தைத் தன் இரு விரல்களால், வீரமாதேவியின் நெற்றியில் திலகமிட்டாள்.

மீண்டும் வணங்கி எழுந்த வீரமா தேவியைப் பரிவுடன் அணைத்து, "வீரமா தேவி, உன்னைப் பற்றிய எல்லா விவரங் களையும் என் சகோதரர் சொல்லியிருக் கிறார் - என்ன வியப்புடன் பார்க்கிறாய்? இந்த நாட்டின் இளவரசர், நாளையே சக்ரவர்த்தியாகப் போகும், இராசேந்திர சோழர் என் உடன் பிறவா சகோதரர்.

உனக்கு யாரும் சொல்லவில்லையா?" என்று கேட்டாள்.

வீரமாதேவிக்கு வியப்பாக இருந்தது. கானகத்தின் நடுவே உள்ள அந்த இடம், அந்த இடத்திலே வாழும் கலையரசி என்றழைக்கப்படும் வயதைப் புரிந்துகொள்ள முடியாத பெண், இளவரசரைத் தன் உடன் பிறவா சகோதரர் என்று அவர் கூறுவதிலுள்ள இரகசியம் எல்லாம் புரியாத புதிராக இருந்தது.

"வீரமாதேவி! இன்று மாசிமகம். பௌர்ணமி நன்னாள். இன்னும் சிறிது நேரத்தில் நாட்டிய அரங்கு நடைபெறவிருக்கிறது. ஆடல் கலையில் சிறந்து விளங்கும் நீ இங்குள்ள நாட்டியப் பெண்களின் நிருத்யத்தை, நடனத்தைக் கண்டு மகிழ வேண்டாமா? உன்னை அழைத்துச் செல்ல வருவார்கள்; ஆயத்தமாக இரு.

"இன்னும் ஓரிரு நாள்களில் இந்த இடம் உனக்குப் பழக்கமாகிவிடும்" என்று கூறி, மறு பேச்சுக்கு இடம் வைக்காமல், கலையரசி அங்கிருந்துச் சென்றாள்.

முழுமதி நாள். வட்ட முழுமதி வானத்தே உலாவரத் தொடங்கிவிட்டது. திறந்த வெளியில் சற்று உயரமான மேடை. நிலவு ஒளிக்கு வெளிச்சம் தருவதாக எண்ணிக்கொண்டு ஆங்காங்கே பெரும் குத்து விளக்குகள் கம்பீரமாக நின்று ஒளி அளித்துக் கொண்டிருந்தன.

மேடை எதிரே ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்கள். இருபது முதல் அறுபது வரை பல வயதுடையவர்கள் அமர்ந்திருந்தார்கள். மேடையின் ஒருபுறம் அருளும் அழகும் திகழும் நடராசர் சிலை. புதிய செப்புப் படிமம்; வார்த்துச் சில நாள்களே ஆகியிருக்க வேண்டும்.

மேடையின் எதிரே ஆடவர்கள் சிலர் இருந்தனர், இளைஞரும் முதியவருமாக. அவர்கள் சிற்பிகள்; ஓவியர்கள். அகிலின் மணம் காற்றில் பரவியது. கூடியிருந்தோர் தமக்குள் மெல்லப் பேசிக் கொண்டாலும் அந்த மெல்லிய ஒலி அந்தத் திறந்தவெளி அரங்கில் பெருகிப் பரவியது.

மத்தளத்தைத் தட்டிச் சுருதி பார்த்துக் கொண்டிருந்தார் ஒருவர். குழல் கலைஞரும், வீணை இசைப்புலவரும் வ[...]மர்ந்திருந்தனர்.

கலையரசியைத் தொடர்ந்து வீரமாதே[...] அந்த அரங்கினுள் நுழைந்தாள். ஒரு கண[...]தில் அங்கே சூழ்ந்திருந்த மெல்லிய பே[...]சொலியையும் காணவில்லை. ஓரி[...] பறவைகள் அங்குமிங்கும் பறப்பதை[...] தவிர வேறு ஒலியற்ற அமைதி.

மரியாதை செலுத்தப் பெண்கள் எழு[...] நிற்கும்போது அவர்களது புடைவைகளி[...] சலசலப்பு. காலில் கட்டியிருந்த பாத[...] சலங்கைகளின் சிணுங்கலும், கைவளை[...] ஓசையும் மரியாதை கலந்த சூழ்நிலையை[...] தோற்றுவித்துக் கொண்டிருந்தன.

குழல், வீணை, மத்தளம் ஒருசே[...] முழங்க மேடையிலே ஐந்து அழகிய பெ[...]கள் ஆடவல்லானுக்கு மலர் தூவி வண[...]கினர்.

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்கா
தான் தாள் வாழ்[...]
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்[...]
ஆகமும் ஆகி நின்று அண்ணிப்பான் தாள்
வாழ்[...]
ஏகன், அனேகன் இறைவன் அடி வாழ்க,'

என்று அவர்கள் இனிய குரலில் பாடிக் கொண்டே மலர் தூவினர்.

கலையரசி, வீரமாதேவியை மேடைக்[...] அழைத்து வந்து அங்குள்ளவர்களுக்[...] அறிமுகப்படுத்தினாள்.

"நாட்டியக் கலை பயில வந்திருக்கும் எ[...] அருமை நாட்டிய மணிகளே! இந்த இன[...] நன்னாளில் நான் சோழ நாட்டு இளவர[...] வீரமாதேவியை உங்களுக்கு அறிமுக[...]படுத்துகிறேன். நாட்டியக் கலைக்கு[...] தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்[...] வீரமாதேவி இந்தச் சின்னஞ்சிறு கிராம[...]திற்கு வருகை தந்திருப்பதில் பெரிய செ[...] இருக்கிறது. வீரமாதேவி இங்கே நம்முட[...] தங்கப் போகிறாள். இளவரசியை அவ[...] இவள் என்று அழைப்பதாக எண்ண வே[...]டாம். என் மகள் அவள். புருவத்[...] உயர்த்தி அதன் கதையையும், காரணத்[...]

ும் அறியத் துடிக்காதீர்கள். எந்தச் செய லும் இரகசியமாக இருக்கமுடியாது. சின்னச் சின்னக் கவலைகளில் கருத்தைச் செலுத் தாமல் தெய்வீகக் கலையாம் நடனக் கலைக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள் வோமாக" என்று சுருக்கமாகப் பேசினாள்.

வீரமாதேவி மெய்சிலிர்க்க அரங்கி லிருந்தவர்களுக்குக் கை கூப்பி வணக்கம் தெரிவித்தாள். பிறகு, அரங்கில் அமர்ந் திருந்தவர்களுடன் ஒருத்தியாகக் கலை யரசியுடன் சேர்ந்து அமர்ந்தாள்.

"இங்கே நடனக் கலையை முழுமையாகப் பயின்று, அந்தக் கலைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மங்கையர் பிறகு தஞ்சைக்கும், மற்றுமுள்ள கோயில் களுக்கும் கலைத் தொண்டாற்றச் சென்று விடுவார்கள். பேரரசர் இராசராசர் ஏற் படுத்திய வழக்கம் ஆல்போல் வளர்ந்து விட்டது. சோழநாட்டின் ஒவ்வொரு திருக் கோயிலிலும், தம்மை அர்ப்பணித்துக் கொண்ட இந்தப் பதியிலாதார் கலைத் தொண்டாற்றக் காணலாம்" என்றாள்.

மேடையில் ஆடலழகிகள் ஆடினார்கள். தேவலோகத்து அரம்பையர் வந்து ஆடியது போல் அவர்கள் ஆடினார்கள். மாதவி நல்லாள் பூர்ண மதியொளியில் இந்திர விழாவில் ஆடியதுபோல் பலவித நடனங் களை ஆடினார்கள்.

நடுநிசியை நெருங்கும் நேரத்தில் நாட் டிய அரங்கு முடிவடைந்தது.

வீரமாதேவி தனக்கு ஏற்படுத்தப் பட்டிருந்த குடிலுக்குச் சென்றாள். இரவு உறக்கம் பிடிக்கவில்லை. பொன்னரசி நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

பொழுது புலர்வதற்குச் சற்று முன்பே எழுந்து பொன்னரசியுடன் அந்தச் சின்னஞ் சிறு கிராமத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப் பட்டாள் வீரமாதேவி.

போகும்போதே அவள் மனத்தில் பல விதத் திட்டங்கள் எழுந்தன. ஒரு குடிலில் தேவாரப் பதிகங்கள் இனிய குரலில் யாரோ பாடுவது கேட்டது. குடிலுக்குள் எட்டிப் பார்த்தாள் –

அங்கே சிற்பி அமர்ந்து பாடிக் கொண் டிருந்தார். அவர் அருகே ஒரு பெண் தம்புராவில் சுருதி மீட்டிக் கொண்டிருந் தாள்.

இனிய காலை வேளையில் அந்த இனிய இசையும், சுற்றுச் சூழல் நிலையும் அவள் மனத் திரையில் ஒரு பெரிய கலைக் கூடத்தைத் தீட்டிவிட்டன.

"பொன்னரசி! எனக்கு இந்தக் கிராமச் சூழ்நிலை மிகவும் பிடித்துவிட்டது. சோழ சாம்ராஜ்யத்தைக் கொடுத்தால்கூட எனக்கு வேண்டாம். நான் இங்கேயே தங்கிவிடப் போகிறேன். இங்கே நடனமணிகள் இருக் கிறார்கள். ஓவியர் இருக்கிறார். சிற்பி இருக்கிறார். வேறு என்ன வேண்டும். நான் ஒரு பெரிய கலைக் கோயிலை இங்கே கட்டப் போகிறேன். என் இதய நேசர் இள வரசர் இராசேந்திரர் புகழ் நிலைத்து நிற்கும் அளவிற்குப் பெரிய கோயில் கட்டுமாறு தூண்டப் போகிறேன்" என்றாள்.

—தொடரும்



சூடஸ்ரீக் கிளி

வித்யாவாசஸ்பதி டாக்டர் இரா. நாகசாமி

பிரபாகரவர்த்தனின் முகத்தில் பெரும் மகிழ்ச்சி வெளிப்பட்டது. தன் தேவி யசோமதியின் முகத்தைப் பார்த்தான். யசோமதிக்கோ ஒருபுறம் ஆனந்த பாஷ்பம் பெருகிக் கொண்டிருந்தது. மறுபுறமோ ஒரே வருத்தம். தனது செல்வ மகளுக்கு அப்பொழுதுதான் திருமணம் முடிந்தது. கன்யாகுப்ஜ அரசன் கிருஹவர்மன் மிகவும் நல்ல உதாரகுணம் படைத்தவன். அழகிலும் சிறந்தவன். தன் செல்வமகளைப் பட்டமகிஷியாக மணந்து கொண்டுள்ளான். அதனால் அவளுக்குப் பெரும் மகிழ்ச்சி. அதே சமயம் தன் செல்வ மகளை விட்டுப் பிரியவேண்டும் என்ற வருத்தம். பிரபாகர வர்த்தனை நோக்கினாள். பிரபாகரன் அவளுக்கு ஆறுதல் கூறுவதுபோல் முதுகில் தட்டிக் கொடுத்தான். அவர்கள் இருவருக்கும் தங்கள் பெண்மீது ஈடு இணையில்லாத அன்பு, பாசம். அவர்களது அளவற்ற அன்பையும் விஞ்சியது அவர்களது இரு மைந்தர்களாம் ராஜ்யன், ஹர்ஷன் இருவரது அன்பு. இரு சகோதரர்களும், தங்கள் சகோதரியிடம் உயிரையே வைத்திருந்தார்கள்.

ராஜ்யஸ்ரீ தன் கணவருடன் வந்து பெற்றோரை வணங்கினாள். தன் சகோதரர்களைப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. இன்பத்தோடு கலந்த துன்பம். அப்பெரும் அரச குடும்பமே ராஜ்யஸ்ரீ தம்மைப் பிரிந்து செல்வதால் வருத்தத்தில் ஆழ்ந்தது என்றுதான் கூறவேண்டும்.

பிரியாவிடை பெற்றுச் செல்லும் முன், ராஜ்யஸ்ரீயின் கணவன் கன்யாகுப்ஜ அரசன் கிருஹவர்மன் கூறினான், "மாமா! நீங்கள் வருந்தவேண்டாம். உங்களில் யாராவது ஒருவர் ராஜ்யஸ்ரீயைப் பார்க்கவேண்டும் என்று சொல்லி அனுப்பினால் போதும். உடனே நானே அவளை இங்கு அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டு ராஜ்யஸ்ரீயையும் அழைத்துக் கொண்டு கன்யாகுப்ஜம் சென்றான்.

ராஜ்யஸ்ரீ அந்த அளவுக்கு தன் குணத்தாலும், அழகாலும், அனைவர் மனதையும் கவர்ந்திருந்தாள். மிகவும் புத்திசாலி. அவளது அறிவாற்றலை அந்த நாடே புகழும். அவள் கிளம்பிச் சென்றவுடன் அந்த நாடே வெறிச்சோடிப் போனது போலத்தான் ராஜ்யனும் ஹர்ஷனும் எண்ணினர்.

அச்சமயத்தில் தானேச்சுரத்தின் வட எல்லையில் ஹூணர்கள் படைகுவித்து விட்டதாகச்செய்தி வந்தது. பிரபாகர வர்த்தனர் தன் இரு மைந்தர்களையும் அழைத்தார். "ராஜ்ய - ஹர்ஷ! நீங்கள் இருவரும் தேவையான படை திரட்டிக் கொண்டு உடனடியாக வட திசை சென்று ஹூணர்க[...] தோற்கடித்து வாருங்[...] ராஜ்யன் பெரியவன். போ[...] தந்திரங்கள் நன்கு அ[...] தவன். அவனே முன்செ[...] போரை நடத்தட்டும். ஹ[...] நீ சிறியவன். உனக்குப் [...]னைந்து வயதுதான் ஆகிற[...] ஆதலின் நீ பின்பலமாக [...] காதம் போதியப் படையு[...] பின்பாடி இறங்குவாய். அ[...]றாடம் செய்திகள் இருவரி[...]யேயும் பரிமாறிக் கொ[...] வகை செய்து கொள்ளுங்[...] விஜயலட்சுமி உங்கள் பக்[...] இருப்பாள்" என்று இருவரை[...] அனுப்பி வைத்தான்.

ராஜ்யனும், ஹர்ஷனும் [...] திசை பெயர்ந்தனர். தக்கதே[...] இடத்தே ஹர்ஷனையும் உ[...] வந்த வீரர்களையும் ப[...] இறக்கி நிறுத்திவிட்டு, ராஜ்[...] போர்க்களம் நோக்கி வி[...]தான். பல நாள்கள் ஒ[...] தனக்கு வந்த செய்தி[...]லிருந்து போர் மிகவும் கடு[...]யாக இருப்பதை அறிந்த[...] ஹர்ஷன். தான் இனி வா[...] இருக்கக்கூடாது. உடனடி[...] அண்ணன் இருக்குமிடம் செ[...] வேண்டும் எனத் தன் ப[...] வீரர்களுக்கு ஆணையிட்டா[...] அதே சமயத்தில், ப[...]

தடித்துக் கொண்டு ஒரு குதிரை வீரன் செய்தி கொண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்டான். தன் அண்ணன் ராஜ்யனின் படையிலிருந்துதான் அவன் வருகிறான் என்பதை உணர்ந்தான். "ஏன் அவன் இப்படி வேகமாகப் பாய்ந்து வருகிறான்? ஒருக்கால் தனது அண்ணனுக்குப் போரில் ஏதாவது... சே, அப்படியெல்லாம் இருக்காது. ஏன் மனது நல்லது அல்லாததையே எண்ணுகிறது?" என்று எண்ணினான் ஹர்ஷன்.

"குமார! வெற்றி வெற்றி. அசுரர்கள் போல் போரிட்ட ஹூணர்களை ராஜ்யன் சின்னாபின்னமாகச் சிதறி ஓடச் செய்து, மாபெரும் வெற்றி வாகை சூடி இருக்கிறார். இவ்வெற்றியைத் தங்களிடம் கூற என்னை வேகமாகச் செல்லப் பணித்தார். இன்னும் சில நாள்கள் அங்கு தங்கி நாட்டு ஆட்சியைச் சீர்செய்து, பின்னர் வந்து சேர்வதாகவும் சொல்லச் சொன்னார்" என்றான் வீரன். ஹர்ஷன் முகம் மலர்ந்தது. "நமது அண்ணன் ராஜ்யன் எப்பேர்ப்பட்ட வீரன்" என்று அண்ணனின் பெருமையில் மூழ்கினான் ஹர்ஷன். "அதோ வேறொரு குதிரை வீரனும் பாய்ந்து வருகிறானே! நமது தலைநகராம் தானேச்சுரத்திலிருந்து வருபவனாக அல்லவா தோன்றுகிறது! அரசர் ஏதாவது நல்ல சேதி சொல்லி அனுப்பியிருப்பார். அவன் மூலமாகவே அண்ணன் ராஜ்யனின் வெற்றியைச் சொல்லி அனுப்பலாம்" என்று எண்ணிய ஹர்ஷனின் முன் வந்து இறங்கினான் குதிரை வீரன்.



"குமார!" குதிரை வீரன் தொடங்கினான். ஆனால் அதற்குமேல் அவனால் கூற இயலவில்லை. நாக்குளறியது. கண்களில் ஒரு கலக்கம். "என்ன செய்தி? சொல்!" ஹர்ஷனின் சொல் ஆணையாக வெளிப்பட்டது. "குமார! தங்களது அருமைத் தந்தை, எமது அன்பு அரசர் திடீரென ஒரு கடும் நோய்வாய்ப் பட்டுள்ளார். தங்களை உடனடியாக தானேச்சுரம் திரும்ப உத்தரவிட்டுள்ளார். ராஜ்யருக்கு இச்செய்தி சென்றடைய இன்னும் சில நாள்கள் பயணம் செய்தாக வேண்டும். அதுவரை காத்திராது உடனடியாக உம்மைத் திரும்ப ஆணையிட்டுள்ளார்" என்றான் வீரன். ஹர்ஷன் திடுக்கிட்டான்.

"என்ன, எந்தை நோய்வாய்ப்பட்டாரா? இல்லை, நீ கூறுவதைப் பார்த்தால் அவருக்கு ஏதாவது...?"

"இல்லை குமார! உங்களை உடனே திரும்ப வேண்டும் என ஆணையிட்டது அவர்தான்" என்றான் வீரன். போர் முகத்துக்குச் செல்ல ஆயத்தம் செய்த தனது படையை தலைநகரம் தானேச்சுரம் திரும்ப ஆணையிட்டான். தனது குதிரைமீது தாவி ஏறினான். உடன் சில தானைத் தலைவர்களுடன் தானேச்சுரத்தை நோக்கி அவன் பறந்தான்.

குதிரை பாய்ந்துதான் சென்று கொண்டிருந்தது. அன்று அவன் நாட்டிலிருந்த குதிரைகளனைத்திலும் மிகவும் வேகமாகச் செல்லும் குதிரை அது ஒன்றுதான். ஆயினும் அது ஏதோ மிகவும் மெதுவாகச் செல்வதாகத்தான் அவன் எண்ணினான்.

"எந்தையே - நான் திரும்பு வதற்குள் உமக்கு... சிவ பெருமானே! நீதான் எந்தையைக் காக்கவேண்டும்!" ஹர்ஷன் தானேச்சுரத்தை அடைந்தான். அந்நகரின் அமைதியிலிருந்து நடக்கக் கூடாதது ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை. நேரே அரண்மனைக்குச் சென்றான்.

தன் அருமைத் தந்தையைக் கண்டான். ஆனால் ஒரு சில நாள்களுக்குள்ளாக அடையாளமே தெரியாத அளவுக்கு மெலிந்திருந்தார். ஹர்ஷனை அணைத்துக் கொள்ளத் தனது கரத்தைத் தூக்கவும் அவரால் இயலவில்லை. அவர் பேசக்கூடச் சிறிதும் வலிவற்றவராகக் கிடந்தார். துயரமே உருவாக அருகில் தாய் அமர்ந்து இருப்பதைக் கண்டான். "அம்மா" என்றலறியபடியே அன்னையைத் தழுவிக் கொண்டான். அரசர் பிரபாகர வர்த்தனர் ஏதோ சொல்லத் துடிப்பது தெரிந்தது. "சொல்லுங்கள் அப்பா! சொல்லுங்கள்" என்றான். அவரது பேச்சு மிகவும் மெலிவாகக் கேட்டது. "ஹர்ஷ்! நீ புத்திசாலி. நாட்டைப் பார்த்து கொள்" என்ற சொல் காதி விழுந்தது. அடுத்த கண அவர் உயிர் பிரிந்தது.

உலகே இருண்டு உருண அவன் தலையில் விழு போல் உணர்ந்தான். தன குடிமக்களிடம் பேரன்பு பூ வனாக, தனது மக்களா ராஜ்யனிடமும் ஹர்ஷனிட ராஜ்யஸ்ரீயிடமும் ஈடில்ல பாசம் கொண்டவனாக, ய மதியின் காதலுக்குப் பாத்



ாக, பரம ஆதித்ய பக்தனாக,
ரம பட்டாரகனாக, மஹா
ாஜாதிராஜனாக தானேச்
ரத்தின் அதிபதியாகத்
ிகழ்ந்த பிரபாகரவர்த்தனன்
யிர் துறந்தான். புஷ்பபூதி
ன்ற அரசகுலத்தைச் சார்ந்த
வனது மறைவு அந்நாட்டையே
க்கத்தில் ஆழ்த்தியது. அவ
து உடலை சிதையில்
டத்திட அதற்குத் தீ மூட்டி
ான் ஹர்ஷன்.

அன்பிற்குரிய தந்தையை
ழந்த அவனுக்கு மற்று
மாரு பேரிடி காத்திருந்தது.
வனது அன்புத்தாய், யசோ
திதேவி அவனது கண்
திரிலேயே, பிரபாகர
ர்த்தனரது உடல் எரியும்
ப்பிழம்பில் பாய்ந்து தன்
ன்னுயிர் நீத்தாள். அந்தக்
ாட்சி, ஷர்ஷனின் மனதை
ிகவும் கலக்கிவிட்டது. அவ
ால் அக்காட்சியைத் தாங்க
யலவில்லை. கதறினான்.
து அருமை அண்ணன்
ாஜ்யன் உடனில்லையே என்று
லறினான். "ராஜ்யஸ்ரீ! நமது
ன்புத் தந்தை இறந்ததை
அறிந்தாயோ" என்று
ங்கினான். ராஜ்யனுக்கு இச்
சய்தியை எவ்வாறு சொல்
து என்று தயங்கினான்.
வனது தாய்மாமன் பாண்டன்
வனுக்குச் சமாதானம் கூறி
ான். பாண்டன்தான் அந்நாட்
ன் சேனாதிபதியாகவும்,
தி அமைச்சனாகவும் திகழ்ந்
வன். அவன் ஆலோசனைப்
டி ராஜ்யன் வரவை எதிர்
ாக்கி இருந்தான். சகோதரி
ாஜ்யஸ்ரீயையும் அவள் கண
ன் கிருஹவர்மனையும் அவ
ரமாக வரும்படி செய்தி
னுப்பினான்.

ஹர்ஷன் துக்கத்தில் ஆழ்ந்
ிருக்க,சில நாள்களில் ராஜ்யன்
ந்தான். தனது அரண்மனை

வந்து சேரும் வரை ராஜயனுக்கு அந்தச் செய்தி தெரியாது. தான் ஹூணர்மீது கொண்ட வெற்றியைத் தன் தந்தையிடமும் தாயிடமும் சொல்லி மகிழ்வுற நேரே அரண்மனைக்குள் சென்றான். உள்ளே நுழைந்த ராஜ்யனுக்குப் பேரிடி போன்ற அந்தச் செய்தி காத்திருந்தது. தந்தை நோய்வாய்ப்பட்டு இறக்க, தாய் தீப்பாய்ந்து உடன் இறந்தாள் என்று கேட்ட ராஜ்யனால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உயிரற்ற கட்டையாகச் சமைந்தான். ஹர்ஷன் "அண்ணா" என்று அலறிக் கொண்டே ராஜ்யனின் தோளைப்பிடித்து உலுக்கினான். அருகில் நின்ற தாய், மாமன் பாண்டன், சகோதரர் இருவரையும் ஆசுவாசப்படுத்தி, தன் நினைவுக்குக் கொண்டுவந்தான்.

ராஜ்யன் சிறுவயதிலிருந்தே பௌத்த மதத்தில் ஈடுபாடு கொண்டிருந்தான். புத்த பெருமானது கருணைவழி அவனை மிகவும் ஈர்த்திருந்தது. பெரும் துக்கத்தைக் கடக்க பௌத்த தர்மமே சிறந்தவழி என அவன் எண்ணியதுண்டு. இப்பொழுது தனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தைத் துடைக்க அது ஒன்றே வழி என்று எண்ணத் தொடங்கி விட்டான்.

"குமார ஹர்ஷ" என்று தன் தம்பியை அழைத்தான். "நம் அருமை அத்தனும் அன்னையும் இறந்து பட்டனர். அவர்கள் இறக்கும்போது அருகில் இருந்து பார்க்கக்கூட கொடுத்து வைக்காதவனாகி விட்டேன். என்னால் இத்துன்பத்தைத் தாங்க இயலாது. நீ அறிவில் என்னைவிட மிகச் சிறந்தவன். ஆற்றல் மிகுந்தவன். இந்நாட்டை ஆளும் பொறுப்பை நீயே ஏற்றுக் கொளவாய். தானேச்சுரத்தின் மன்னனாக நீ முடிசூடிக் கொள்வாய். நான் பௌத்த பிக்குவாகத் துறவு மேற்கொள்ள முடிவு செய்துள்ளேன்" என்றான். ஹர்ஷனோ அண்ணன் ராஜ்யவர்த்தனனிடம் அளவில்லா அன்பு கொண்டவன். அவன் துறவு பூண்டு பௌத்த பிக்குவாக மாறிவிட்டால் தான் மட்டும் தனியாக நாட்டை ஆள்வதா? அண்ணனைப் பிரிந்து வாழ்வதா? "அண்ணா" என்றான். "இலக்குவன் இராமனை எப்படிப் பின்பற்றிச் சென்றானோ அதுபோல் உன்னடியைப் பின்பற்றி நானும் துறவறம் மேற்கொண்டு உன்னுடன் வருகிறேன். அதுவே எனது முடிவும்" என்றான்.

அவர்கள் அருகில் அவர்களது தாய் மாமன் பாண்டன் நின்று கொண்டிருந்தான். இவர்களது பேச்சைக் கேட்ட அவன், "ராஜ்ய! – நீங்கள் இருவரும் என்ன கூறுகிறீர்கள்? அரசகுடும்பத்தில் பிறந்தவர்களும் உணர்ச்சிக்கு இடமளிக்கலாம். ஆனால் அதற்கு அடிமை ஆக முடியாது. அவர்கள் எவ்வளவோ தியாகம் செய்யவேண்டும். நாட்டு மக்களைக் காப்பதற்காகத் தங்களது உணர்ச்சிகளுக்கு இடமளிக்காது தியாகம் செய்தாக வேண்டும். இந்த தானேச்சுர நாட்டை ஒப்பரும் நாடாக மாற்றி ஆண்டாரே உங்கள் தந்தை, அவர் செய்த பணியைத் தொடராது துறவறம் பூணுவோம் என்கிறீர்களோ? இதுவா நீங்கள் உம் தந்தைக்கு ஆற்றும் சிறப்பு? இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டு, விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு சமநிலை நிற்பவ

ரன்றோ துறவறம் மேற்கொள்ளலாம்? துன்பம் மேலிட்டு, அது தாங்க ஒண்ணாது அல்லவோ நீங்கள் துறவிகளாக விரும்புகிறீர்கள்? அது துறவு இல்லை. துன்பத்தைக் கண்டு ஓடுவதாகும்" என்று ஒரு பெரும் உண்மைத் தத்துவத்தை எடுத்து வைத்தார்.

அவ்வமயம் கன்யா குப்ஜத்திலிருந்து ஒரு வீரன் உள்ளே நுழைந்தான். ராஜ்யனும் ஹர்ஷனும் இருவரும் ஒருங்கே ராஜ்யஸ்ரீ வந்து விட்டாளா - கிருஹவர்மன் வந்தாரா என்று கேட்டனர். வந்த வீரனோ ஏதும் கூறாமல் தயங்கித் தயங்கி நின்றான். "ஏன் ராஜ்யஸ்ரீக்குத் தந்தையும் தாயும் இறந்தது தெரிந்து விட்டதா? என்ன சொன்னாள்? மிகவும் அழுது வர இயலாது பதறிப் போய் விட்டாளா? சொல். சொல்" என்றான் ராஜ்யன். வந்த வீரன் பாண்டனைப் பார்த்தான். பாண்டன் ஏதோ விபரீதம் நடந்துள்ளது என்று புரிந்து கொண்டான். "மறைத்துப் பயனில்லை. நீ கூறலாம்" என்றான்.

"நாக் கூசுகிறது. என்னால் சொல்ல இயலவில்லை. மன்கணவர் கன்யாகுப்ஜ அரசர் கிருஹவர்மர்..." என்றான். வீரன், அவன் முடிப்பதற்குள் ராஜ்யன், தன்னை மறந்து உரக்கக் கத்தினான். "கிருஹவர்மர் என்ன ஆனார்? சொல்!" என்றான். கிருஹவர்மரைக் கொன்று விட்டனர் என்றான் வீரன். அதற்கு மேல் ராஜ்யனாலும் ஹர்ஷனாலும் நிற்க முடியவில்லை. மயங்கி வீழ்ந்தனர். அவர்கள் சற்றுத்தேறி விழித்தபோது அவர்களது தாய் மாமன் பாண்டன் கூறினான், "ராஜ்ய - ஹர்ஷ - இந்த புஷ்யபூதி அரச குலத்துக்கு மேலும் மேலும் ஏற்படும் துன்பத்தை வயது முதிர்ந்த என்னாலேயே தாங்க இயலவில்லை. உங்களுக்கு உபதேசம் செய்தேன். ஆனால் என்னை என்னாலேயே கட்டுப்படுத்த இயலவில்லை. என்ன செய்வது? ஆயினும் நீங்கள் அரச மக்கள் என்பதை நினைவுபடுத்தாமல் இருக்கவியலாது நெஞ்சம் பதறுகிறது. இப்பொழுது நீங்கள் செய்யக் கூடியது ஒன்றுதான். ராஜ்யஸ்ரீயைச் சிறையிலிருந்து மீட்கவேண்டும். இப்பழிகாரச் செயலைச் செய்தவன் மாளவ அரசன் குப்தன் என அறிகிறேன். அவனைத்

கிறேன். இனி நீங்களே எங்களை வழிநடத்த வேண்டும்" என்றான். பாண்டன் அறிவுரைப்படி முதலில் ராஜ்யன் தானேச்சுரத்தின் அரசனாக ராஜ்யவர்த்தனன் என்ற பெயரில் முடிசூடிக் கொண்டான்.

பின்னர் ஹர்ஷனை தானேச்சுரத்தின் ஆட்சியைக் கவனிக்கச் சொல்லி தானும் பாண்டனும் 10,000 குதிரைப் படையோடு மாளவ அரசின் மீது படையெடுத்துச் சென்றனர். அவனது வேகம் கௌட அரசன் சசாங்கனை அழிக்க, பழிக்குப்பழி வாங்க, பன்மடங்கு ஆவேசமாக வெளிப்பட்டது. ஏற்கெனவே ஹூணர்களைப் போர்க்களத்தில் சந்தித்திருந்த ராஜ்யவர்த்தனனுக்கு சசாங்கன் ஒரு துச்சமாகப் பட்டான். ராஜ்யவர்த்தனனுக்கு உதவ வயது முதிர்ந்த பாண்டன் இருந்தான். படை மிகவும் கடுகிச் சென்றது. அவனது படை எழுப்பிய புழுதி மண்டலமே, சசாங்கனின் புகழை மறைக்கும் மேகத் திரள்போல் காணப்பட்டது.

மாளவ அரசன் குப்தன் முதலில் ராஜ்யவர்த்தனனுடன் போரிட்டு ஜெயிக்கலாம் என்று தான் எதிர்த்து நின்றான்.

சுயநலம்

நடைபாதையில் சென்று கொண்டிருந்த ஒருவன், திடீர் என்று கீழே குனிந்து, பாதையில் கிடந்த கண்ணாடித் துண்டை எடுத்து ஓரமாகப் போட்டான்.

'எத்துணைப் பொதுநலம் உனக்கு?' என்று அவனைப் பாராட்டினேன்.

"பொது நலமா? அதெல்லாம் ஒன்றும் இல்லை. இப்பாதையில் நான் திரும்பி வரும்போது, இதே கண்ணாடித் துண்டு என் காலைப் பதம் பார்த்துவிடுமே எனும் பயம்தான்!" என்றான் அவன்.

—தமிழழகன்

னித்து விடுங்கள். உங்களது அருமைச் சகோதரி தானேச்சுரத்துப் பிறந்த அரசிளங்குமரி, கன்யாகுப்ஜத்தின் பட்டத்தரசி இப்பொழுது சிறைபிடிக்கப்பட்டு காராக்கிருஹத்து வாடுகிறாள். அவரது தாண்டிவிட்டவன் கௌட தேச அரசன் சசாங்கன். அவன் மீது படையெடுக்க வேண்டும்" என்றான் பாண்டன்.

ராஜ்யனுக்கு ஒரு வேகம் தோன்றியது. "மாமா நீங்கள் சொல்வதே சரி என உணர்

ஆனால் ராஜ்யவர்த்தனின் ஆவேசப் பாய்ச்சலை அவனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. கடும் போரில் ஒவ்வொரு வினாடியும் தன் படை படிப்படியாக அழிந்து வருவதைக் கண்டான். தன்னைச்



தேர்ந்தெடுத்த வைரவரிக் கவிதைகள்

ஆயுதத்தை மாற்று

தோழி!
கண்ணீரும் புன்னகையும் மட்டுமே
ஆயுதமாய் இருக்கும்வரை – உன்
விடியல் – வெகுதூ...ரத்தில்தான்!

— வெற்றிப்பேரொளி

முள்

கீழே விழுந்தபோது
தான் தெரிந்தது – முள்ளுக்கு
தான் சுமந்தது
ரோஜாவென்று!

— க. அசோகன்

வரதட்சணை

அறிவுச் சிலம்புகள் கேட்ட
இந்தியத் தாயின் கால்களில்
ஆண்பிள்ளைகள் அணிவித்த
அவல விலங்குகள்

— எம்.இ. பிரபாகரபாபு

கண்டதுண்டமாக வெட்டி வீசாமல் ராஜ்யவர்த்தனன் ஓயமாட்டான் என்பதை உணர்ந்த அடுத்தகணம் போர்க்களத்தை விட்டுப் புறமுதுகிட்டு ஓடினான். யார் கையிலும் படாது தலை தெறிக்க ஓடினான். அவனது படை ராஜ்யவர்த்தனனின் அடி பணிந்தது. மாளவ குப்தன் கௌட அரசன் சசாங்கனின் அரண்மனை சென்று தஞ்சம் புகுந்தான்.

"ராஜ்யவர்த்தனன் தனது தங்கையைக்கூட விடுவிக்க கன்யா குப்ஜம் செல்லவில்லை. ஒரே மூச்சில் தன்னை அழிக்க வருகிறான்" என்று சசாங்கன் கண்டான். மாளவன் பட்ட பாட்டிலிருந்து தனக்கு என்ன கிட்டும் என அவனுக்குத் தெளிவாகப் புகட்டியது. யோசித்தான். இதைச் சுமூகமாகத் தீர்த்துக் கொள்வதே வழி என எண்ணினான்.

மாளவ அரசனை விரட்டியடித்து சசாங்கன் மீது பாய்ந்து வந்தான் ராஜ்ய வர்த்தனன். வரும் வழியில் ஒரு மவர்வனம். தனது களைப்புத் தீர அந்த வனத்தில் சிறிது நேரம் தனித்து இளைப்பாற விரும்பினான். தான் மட்டும் அங்கு படுத்து இளைப்பாறினான். அப்பொழுது அருகில் இரு பெண்கள் கலகலவெனச் சிரித்துக்கொண்டு வருவதைக் கண்டான். வந்தவர்களில் ஒருத்தி அழகே உருவெடுத்து வந்ததுபோல் காணப்பட்டாள். அவளது முகப்பொலிவும், குரலினிமையும், நடையும் அவன் மனதைக் கவர்ந்து விட்டன. எழுந்து அவளையே நோக்கினரான். அவளது உருவிலிருந்து இன்னும் அவள் மணமாகாதவள் என்பதை உணர்ந்தான். உடன் வந்தவள் சற்று வயது முதிர்ந்தவள். அவளது சேடி என்று தோன்றியது. "பெண்ணே! இளம் வயதுடைய இப் பெண் யார்?" என்றான் ராஜ்யவர்த்தனன். ராஜ்யவர்த்தனனின் அழகில் அப்பெண்ணும் மயங்குகிறாள் என்று தெரிந்தது. சேடியிடம் அவள் ஏதோ கூறினாள். சேடி சிரித்துக் கொண்டாள். "இவள் யார் எனக் கூறுவதற்கு முன், உங்களைப் பற்றிக் கூறுங்கள். உங்களைப் பார்த்தால் அரசிளங்குமரராகத் தோன்றுகிறதே!" என்று கேட்டாள் சேடி.

"நான் தானேச்சுரத்தின் அரசகுமாரன் ராஜ்யவர்த்தனன். அண்டை நாட்டின் மீது படை செலுத்தி வந்துள்ளேன். இப்பெண்ணின் அழகு என்னை வசீகரித்துவிட்டது" என்று தயங்கினான். "அரசிளங்குமர! இவள் பெயர் தேவி!" என்று தொடங்கிய சேடி, திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவள் போல, "நாங்கள் விரைவாக ஓரிடம் செல்ல வேண்டும். பௌர்ணமிக்கு இன்னும் மூன்று நாள்களே உள்ளன. பௌர்ணமியன்று நாங்கள் இருவரும் இங்கு மீண்டும் வருகிறோம். தாங்களும் இங்கு வரவேண்டும்" என்று தன் தோழியின் கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்று விட்டாள்.

ராஜ்யவர்த்தனனுக்கு இனம் தெரியாத ஒருவகை இன்பம். அப்பெண் யார்? அவள் ஏன் நம்மிடம் தன்னைப் பற்றிக் கூறவில்லை, அல்லது அவள் சேடி ஏன் அவளைப் பேசவிடவில்லை? சசாங்கன்மீது படை செலுத்திச் செல்லும் வழியில் இவள் எங்கு வந்தாள்? நமது படையை மூன்று நான்கு நாள்கள் கழித்து மேலே செல்லச் சொல்வதா? அதனால் ஏதாவது விபரீதம் நேருமோ? பாண்டன் இருக்கிறார். பார்த்துக் கொள்வார். அப்பெண்ணைக் காணாது மேலே செல்ல நம்மால் இயலாது என்ற முடிவுக்கு வந்தான் ராஜ்யவர்த்தனன். "சிலநாள் தங்கிப்பின்னர் மேலே செல்லுங்கள்" என்று அவன் ஆணையிட்டபோது அவனது படையினர் வியப்படைந்தனர்.

(அடுத்த இதழில் முடியும்)



குங்குமக் கோலம்

ஆர்யா தியாகராஜன்

சரயு, தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்தபடி, எதிரில் சாய்வு நாற்காலியில் பரப் பிரம்மமாய் உட்கார்ந்து கொண்டிருந்த அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பாவின் உயிர் பிரிந்து விளையாட்டுப்போல் பத்தாவது நாள் காரியமும் இன்று முடிந்து விட்டது. ஆயிற்று, இன்னும் சற்று நேரத்தில் இரவுச் சாப் பாட்டை முடித்துக் கொண்டு, பக்கத்து பங்களாவிலிருந்து சரயுவின் தம்பி, தங்கைகள் இங்கு வந்து விடுவார்கள். அப்பாவின் காரியத்துக்காக வரும் தன் உடன்பிறப்புகளின் சௌகரியத்துக்காகவே வாசு பக்கத்து வீட்டையும் ஒருமாத வாடகைக்கு எடுத்திருந்தான்.

"என் மகன்கிற அந்தஸ்தும் உனக்கு இல்லை - எனக்குக் கொள்ளி போடும் உரிமையும் உனக்குக் கிடையாது" என்ற அப்பாவின் உக்கிரமான ஆவேசத்துக்குக் கட்டுப்பட்டு, வாசுவும் அப்பாவின் எந்தக் காரியத்திலேயும் கலந்து கொள்ளவில்லை. அதனால் அன்று இரவு அங்கு நடக்க இருக்கும் சம்பிரதாயச் சடங்கு களுக்கும் அவனை எதிர் பார்ப்பதில் அர்த்தமில்லை. பத்து நாள்களாகவே தம்பி தங்கைகளும் - அவர்களைச் சார்ந்தவர்களும் இந்தச் சடங்கை எப்படிச் செய்வது என்று பூடகமாகப் பேசி வந் திருந்தாலும், யாருக்கும் சரயு விடம் அதைப் பற்றிப் பேச தைரியம் வரவில்லை. ஆனால் இன்று பத்தாம் நாள் இரவு. அந்தச் சடங்கைச் செய்தே தீரவேண்டும் என்ற கட்டாயத் தால் அனைவரும் ஒன்றுகூடி ஒரு முடிவு எடுத்துத்தானே தீரவேண்டும்?

சரயுவிற்குத் தன்னுடைய இருபத்தோராவது வயதில் நடந்த அந்தக் கொடூரச் சம் பவம் நினைவைத் தாக்கியது. அதுதானே அம்மாவின் இந்த அவல நிலைக்கே காரணமாகி விட்டது! ஆனால் அதையெல் லாம் இவளுக்குப் போய் எப்படிச் செய்வது? சரயு தன்



அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்த இந்தச் சொற்ப நேரத்திற்குள் - அவள்தான் எத்தனை தடவை தன் பக்கத்தி லிருந்த குங்கும டப்பாவி லிருந்து குங்குமத்தை அள்ளி அள்ளிப் பூசிக்கொண்டு விட் டாள்! அதுமட்டுமா? வலக்கை தான் இப்படி என்றால் - இடக்கையோ கழுத்தில் இருந்த தாலிச்சரட்டை எப்போ தும் அழுத்தமாகப் பற்றிக் கொண்டு - ஏதோ எதிரில் இருப் பவர் தன் தாலியைப் பறிக்க வந்திருக்கிறார் என்ற எண் ணத்தை ஏற்படுத்திக் கொண்ட வள்போல்! அம்மாவின் இந்த நிலைக்குத் தான்தானே கார ணம் என்ற நினைப்பு வதைக்க, கண்களை இறுக மூடிக் கொண்ட போதிலும் பழைய நினைவுகள் மனத்தை அலைக் கழிப்பதை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை.

கும்பகோணத்தை அடுத் திருந்த கல்யாணபுரம் கிரா மத்திலுள்ள கற்பகாம்பாள் கோயிலில் சரயுவின் அப்பா நடேச சாஸ்திரிகள் பிரதான குருக்கள். கல்யாணபுரம் முனிசிபல் பள்ளியில் சரயு பத்தாவது படித்துக் கொண் டிருந்தாள். அப்பொழுது அவ ளுக்கு வயது பதினைந்து. அவளுக்கு இரண்டு தங் கைகள், மூன்று தம்பிகள்.

ஒருநாள் - தம்பி தங்கைகள் சூழப் பள்ளியிலிருந்து திரும் பும் சரயுவை எதிர்பார்த்து வாசலிலேயே நின்று கொண் டிருந்த அவள் தாய், சரயு உள்ளே நுழைந்ததும் நுழை யாததுமாய், "சரயு! சீக்கிரம் போய் முகம் அலம்பி, பளிச் சென்று ஒரு பொட்டு வைச் சுண்டு, இந்தப் புடைவையைச் சுத்திண்டு - வாச உள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கும் மாமிக்கும் மாமாவுக்கும் போய் நமஸ்காரம் பண்ணும்மா" என் றாள்.




ஓவியர் உமாபதியிடம் சில கதைகளைக் கொடுத்தோம். அவர் 'குங்குமக் கோலம்' கதையைத் தேர்ந்தெடுத்து, 'எனக்கு மிகவும் பிடித்த கதை' என்று பாராட்டி இதற்குச் சித்திரம் வரைந்து கொடுத்தார். ஓவியர் தேர்ந்தெடுத்த சிறுகதை:

ஒரு கணம் விக்கித்து நின்றாள் சரயு. "நான் எதுக்கும்மா இப்பப் போய் அவர்களுக்கு நமஸ்காரம் செய்யணும்? அதுவும் போர்வை மாதிரியிருக்கிற இந்தப் புடைவையைச் சுத்திக் கொண்டு?"

"அசடாட்டம் பேசாதே! வள்ளியூர் சுப்ரமண்ய கனபாடிகள் உன்னைப் பெண் கேட்க அவர் சம்சாரத்தோட வந்திருக்கிறார். என்ன உசத்தியான இடம்! நமக்குக் கிடைக்கக் கொடுத்து வைச்சிருக்கணுமே!"

"அய்யய்யோ, என்னம்மா இதெல்லாம்? எனக்கு இப்ப




என்னம்மா கல்யாணத்துக்கு அவசரம்? உனக்குத் தெரியா தாம்மா, ஸ்கூல்லயே நான் தான் எல்லாப் பாடத்திலேயும் முதல் மார்க் வாங்கறேன்னு? கட்டாயமாக எஸ்.எஸ்.எல்.சி. யில் மாகாணத்திலேயே முதன் மையா வருவேன்னு என் னோட வாத்தியார் சொல்றார். எனக்குக்கூடப் பக்கத்து வீட்டு வனஜா மாதிரி தஞ்சாவூர் காலேஜுக்குப் போய் படிக் கணும்னு ஆசையாய் இருக் கும்மா".

"சரயு! போகாத ஊருக்கு வழி தேடாதே! போன வருஷம் நீ பெரியவளா ஆனவுடனேயே உன்னைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பக் கூடாதுன்னு உங் கப்பா குதிச்சார். கல்யாணம் ஆகிறவரை படிக்கட்டுமேன்னு நான்தான் உனக்கு வக்காலத்து வாங்கினேன். இப்ப நீ பேசறது உங்கப்பா காதுல ஏதானும் விழுந்ததுன்னா அவ்வளவு தான், நம்ம ரெண்டு பேருமே தீர்ந்தோம். பிறகு அது மட்டு மில்லை - உன்னை மாதிரியே நன்னாப் படிக்கிற உன் தங்கைகளின் படிப்பையும் உடனே நிறுத்திடுவார்".

பதினைந்தே வயதான சரயு வுக்காக வாதாட யாருமே இல்லாததால், பெற்றோரின் கட்டாயத்திற்குப் பணிய வேண் டியவளானாள்.

வள்ளியூர் சுப்ரமண்ய கன பாடிகள் மிகச்சிறந்த பண்டி தர். அவர் கலந்து கொள்ளாத கோயில் கும்பாபிஷேகமோ, ஹோமமோ கிடையாது. அவ ரது ஒரே வாரிசான சுந்த ரேசனும் கும்பகோணம் வேத பாடசாலையில் தேர்ச்சி பெற்று அப்பாவுக்கு வலக்கை யாய் விளங்கினான். ஒருமுறை கல்யாணபுரம் கற்பகாம்பாள் கோயில் கும்பாபிஷேகத்திற்கு வந்தவர் - நடேச சாஸ்திரி களின் கட்டுக்கோப்பான



கோயில் நிர்வாகத்தையும், ஊரின் சிறப்புகளையும் வியந்து அப்பொழுதே அவர் வீட்டில் பெண் எடுப்பது என்று நிச்சயித்துக் கொண்டவர் - அவ்வாறே நடத்தியும் விட்டார்.

திருமணமான மறு ஆண்டே சரயு நீலகண்டனைப் பெற்றெடுத்தாள். கணவன், மனைவி, குழந்தை, மாமனார், மாமியார், சமையற்கட்டு, தோட்டம், மாடு கன்று என்ற வட்டத்துக்குள் சுழல நன்கு கற்றுத் தேர்ந்து விட்டாள். நீலகண்டனின் ஐந்தாம் வயதில் ஊரே வியக்குமாறு அட்சராப்யாசம் செய்தார்கள்.

இடைப்பட்ட இந்த ஆண்டுகளில் கல்யாணபுரத்திலும் பல மாற்றங்கள் ஏற்படத்தான் செய்தன. சரயுவைவிட ஒரே வயது சிறியவனான வாசு சர்க்கார் உத்யோகம் கிடைத்து சென்னைக்குச் சென்றுவிட்டான்.

நீலகண்டனின் அட்சராப்யாசம் முடிந்த மறுவாரத்தில் சென்னையில் நடந்த யாகம் ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு - சரயுவிற்குப்பட்டுப் புடைவையும் நீலகண்டனுக்கு ரெடிமேட் சொக்காயும் வாங்கிக் கொண்டு ஊருக்கு ரயில் ஏறலாம் என்று தீர்மானித்து - பிரபலமான அந்தக் கடை வீதியில் பஸ்ஸை விட்டு இறங்கிய சுந்தரேசன், எதிரில் வந்த லாரியில் சிக்குண்டு உயிரிழந்தான்.

ஆசாரசீலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த கனபாடிகள் குல வழக்கப்படி மருமகள் தலைமுடி மழிக்கப்பட்டு, நார்மடி உடுத்தித்தான் இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். மகனால் கொள்ளி போடக் கொடுத்து வைக்காமல் போனாலும், பேரனாலாவது அது நடைபெற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் சரயுவைத் தன் வீட்டில் தங்க அனுமதி கொடுத்து இருப்பதாயும், அவள் அப்படி இருக்கும் பட்சத்தில் தன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தான் ஆகவேண்டும் என்றும் உறுதியாய்ச் சொல்லிவிட்டார். தன் மகளுக்கு நடக்கவிருக்கும் கோரத்தை அறிந்த சரயுவின் தாய், "முடியாது. என்ன நடந்தாலும் அந்தக் கொடுமை நடக்க நான் விட மாட்டேன்" என்று மகள் இருந்த அறையை நோக்கி ஓடினாள். ஓடிய வேகத்தில் தடுக்கிக் கீழே விழ - பின்னர் சுயநினைவே இல்லாமல் - ஒரு கையால் தன் தாலியை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு, மறு கையால் குங்குமத்தை எடுத்து, எடுத்து அப்பிக் கொள்ள ஆரம்பித்தாள். எந்த வைத்தியத்திற்கும் அவள் கட்டுப்படவேயில்லை. தனக்குத் தேவையான காரியங்களை மட்டும் செய்து கொள்வாள். மற்ற நேரங்களில் இடக்கையால் தாலியைப் பிடித்தபடி, வலக் கையால் குங்குமத்தை நெற்றி முழுவதும் அப்பிக்கொள்ள ஆரம்பித்து விடுவாள். நாளடைவில் வீடு முழுவதும் குங்குமமாகக் காட்சியளிக்க - அம்மா தனி அறையில் - பக்கத்தில் ஒரு குங்கும டப்பாவுடன் அமர்த்தப்பட்டாள்.

கைம்பெண் கோலம் கொண்ட சரயு மாட்டுத் தொழுவத்தை ஒட்டிய கொட்டகையைத் தன் அந்தப்புரமாக ஆக்கிக் கொண்டாள். மாமனார் கண்ணில் படவே கூடாது என்ற கண்டிப்பு.

ஆறு வயதே நிரம்பிய நீலகண்டனைத் தாயிடம் ஒட்ட விடாமல், எப்படியும் தன் வசமே அவனை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தில் - கண்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தும் - கேட்டதையெல்லாம் செய்து கொடுத்தும் மிகச் செல்லம் கொடுத்து வந்தார். ஒருநாள் அவனுக்கு ஏற்பட்ட வாந்திபேதியில் அவன் உயிரிழந்தான்.

மகனுக்கு மட்டுமல்லாது, பேரனுக்கும் கொள்ளிபோட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தனக்கு ஏற்பட்டது மருமகளால் தான் என்ற கருத்தில் உறுதியாய் இருந்த கனபாடிகள், உடனே நடேச சாஸ்திரிகளுக்குக் கடிதம் போட்டு சரயுவைக் கையுடன் அழைத்துக் கொண்டு போகுமாறு கேட்டுக் கொண்டார். அவரது ஆசாரத்திற்குச் சற்றும் குறைவுபடாத நடேச சாஸ்திரிகளும், 'தன்னால் அந்தத் துக்கிரிப் பெண்ணை வைத்துக் கொள்ள முடியாது; திருமணத்தின் போதே அவளைத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டேன்; அவள் இனி இருந்தாலும் சரி, செத்தாலும் சரி உங்கள் பொறுப்புதான்' என்று காரசாரமாக எழுதிவிட்டார். இந்நிலையில்தான் தம்பி வாசு ஒருநாள் வள்ளியூர் வந்தான். வந்த ஒரு மணி நேரத்திற்குள் சரயு அவனுடன் அனுப்பப்பட்டாள். அவளுடைய ஒரே ஆஸ்தியான ஒரு தகரப் பெட்டியுடன் வீட்டைவிட்டுப் போகும்போது - மாமனாரும் மாமியாரும் கதவைத் திறந்து வெளியே வரவேயில்லை.

அக்காளின் நிலை கண்டு மனம் பதைத்தான் வாசு. ஊர்க் கோடியில் இருந்த ஏரிக்கரை வரை இருவரும் பேசாமல் நடந்தார்கள். ஏரிக்கரை மண்டபத்தின் படியில் அமர்ந்த வாசு, சரயுவையும் உட்காரச் சொன்னான்.

"சரயு! இப்ப நான் மனம் திறந்து சில உண்மைகளையும், உன்னைப் பற்றிய என்னுடைய எதிர்காலத் திட்டம் என்ன என்பதைப் பற்றியும் பேசப் போகிறேன். நான் சொல்லப் போறது உன்னோட நன்மைக்குத்தான்னு நீ நினைத்

தால் அதன்படியே நடப்பேன்னு முதல்ல எனக்கு சத்தியம் செய்து கொடு" என்றான்.

"வாசு! நான் சுயமா சிந்திக்கிறதையோ, செய்யறதையோ விட்டு எவ்வளவோ கால மாச்சு. நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அப்படியே சத்தியமாச் செய்றேன்" என்று சத்தியம் செய்தாள்.

"இது போதும் சரயுக்கா! ஒரு வாரம் லீவில் நான் கல்யாணபுரம் போயிருந்தபோது, நான் அப்பாவுடன் போராடி உன்னை அழைத்துக் கொண்டு வரச் சொன்னேன். பிடிவாதமாக அவர் மறுத்து விட்டார். அப்படியானால் நான் அவளைச் சென்னைக்கு அழைத்துச் சென்று என்னுடன் வைத்துக் கொள்கிறேன். உங்களோட பொறுப்பெல்லாம் முடிச்சுட்டு, இனிமே அவளால உங்களுக்கு ஒரு தொல்லையும் இல்லங்கிற போது நீங்க அழைச்சிக்கிங்க என்றேன். ஆனால் அப்பாவோ, என் பேச்சை மதிக்காமல், அவளை நீ உன்னோட அழைச்சிண்டு போனால், 'நீ என் பிள்ளைங்கிற ஸ்தானத்தையும் இழந்து, எனக்கோ உங்க அம்மாவுக்கோ கொள்ளி போடற உரிமையும் இழந்து விடுவாய்' என்றார். நான் துணிந்து வந்து விட்டேன். இங்கு உன் மாமனாரிடம் பேசியபோது அவர் உன்னை அழைத்துப் போவது உண்மையிலேயே அவருக்கு நான் செய்யும் ஒரு பெரிய உபகாரமாக இருக்கும் என்றும், 'இனி அவளுக்கும் இந்த வீட்டுக்கும் எந்த விதமான பந்தமும் கிடையாது' என்றும் சொல்லி என் எதிரிலேயே அவர்கள் இருவரும் இந்த ஆற்றில் உனக்குத் தலை முழுகி விட்டார்கள். நீ கொண்டு வந்திருக்கிறாயே அந்தப் பெட்டி அதையும் அந்த ஆற்றிலேயே போட்டு விட்டு - இந்த நார்மடி வேஷத்தையும் களைந்துவிட்டு - இந்தப் பையில் இருக்கும் புடைவையைச் சுற்றிக் கொண்டு கிளம்பு. பாழ் நெற்றி ஒன்றே போதும், நீ விதவை என்பதைக் குறிக்க. தலைமுடி தன்னால் வளர்ந்து விடும்" என்று உணர்ச்சி பொங்கப் பேசினான்.

"வாசு! நீ சொல்றபடியே செய்றேன். ஆனால் இந்தப் பெட்டிக்குள்ளே இருக்கிற - என்னுடைய கணவனால் கட்டப்பட்டு - மற்றவர்களால் அறுத்து எறியப்பட்ட அந்தத் தாலிக் கயிற்றையும், என் மகன் பள்ளிக்கூடத்துக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்த துணிப்பை ஒன்றையும் மட்டும் அவர்களது நினைவுக்கு வைத்துக் கொள்கிறேன்" என்று சொன்னதுமில்லாமல் செய்தும் காட்டினாள் சரயு.

அதற்குப் பிறகுதான் காலம் எவ்வளவு வேகமாகப் போய் விட்டது! சரயு கொஞ்சம் கொஞ்சமாக சகஜ நிலை அடைந்து காசி மெட்ரிக் தேர்ந்து - பக்கத்தில் இருந்த இந்தி வகுப்பில் சேர்ந்து படிப்படியாகப் படித்து முன்னேறி அதையே மையமாகக் கொண்ட பள்ளியில் இந்தி டீச்சராகச் சேர்ந்து... வருஷங்கள் உருண்டன. ஆனால் சரயு எவ்வளவோ மன்றாடியும் வற்புறுத்தியும் வாசு திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டான். அவர்களுக்கும் கல்யாணபுரத்திற்கும் இருந்த உறவும் ஒட்டு மொத்தமாக விட்டுப் போயிருந்தது.

நடேச சாஸ்திரிகளுக்கு திடீரெனப் பக்கவாத நோய் தாக்கியது. மற்ற புதல்வர்களும் புதல்விகளும் தந்தையை வைத்துக் காப்பாற்ற முடியாததற்குப் பல காரணங்களைச் சொல்லித் தட்டிக் கழித்தனர். சென்னையில் சரயு வாசுவுக்கு எந்தவிதப் பிக்கல் பிடுங்கலும் இல்லையென்பதால் அவர்களிடம் தந்தையைச் சிகிச்சைக்கு அனுப்புவது என்று முடிவு கட்டி - தாங்கள் கேட்க வெட்கப்பட்டுக் கொண்டு - ஊர்ப்பஞ்சாயத்து மூலம் வாசுவை அணுக - வாசு அவர் மகன் என்ற ஸ்தானத்தை அன்றே மறுத்துவிட்டபடியால், மனிதாபிமான அடிப்படையிலும், தாயின் கணவன் என்ற உரிமையாலும் அவர்களை வைத்துக் கொள்ளச் சம்மதித்தான். ஆனால் மற்றவர்களிடம் பொருளாதார உதவி எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. எவ்வளவோ பாடுபட்டும் நடேச சாஸ்திரிகள் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அனாதையாக விடப்பட்ட அம்மாவை நினைத்து சரயு துக்கித்துக் கொண்டிருந்தாள்.

"சரயும்மா! அவங்க எல்லாம் அப்பவே வந்து ஹால்ல உட்கார்ந்து, உங்களுக்காகக் காத்துக்கொண்டு இருக்காங்கம்மா. மணி இப்பவே பத்துக்கு மேலே ஆயிடுச்சு. இன்னமும் மனசைப் போட்டுக் குழப்பிக்காம வெளியே வாங்கம்மா" - சமையற்கார பங்கஜம் சரயுவைத் தன்னிலைக்குத் கொணர்ந்தாள்.

சரயுவும் ஒரு முடிவுக்கு வந்தவளாக, பீரோவிலிருந்த நீலகண்டனின் பள்ளிப் பையில் வைத்திருந்த தன்னுடைய பழைய தாலிச்சரட்டைக் கையில் எடுத்துக் கொண்டவளாய் ஹாலை நோக்கி நகர்ந்தாள்.

அம்மாவின் அறையை ஒட்டியிருந்த அந்த ஹாலில் தம்பிகள் மூன்று பேரும் சோபாவில் அமர்ந்திருக்க, தங்கைகளும், தம்பிகளும் அவர்களது மனைவிமார்களும் ஒன்று கூடித் தரையில் அமர்ந்து அம்மா இருந்த அறையையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களைத் தவிர, தங்கையின் மாமியாரும், வயதான ஒரு விதவை மூதாட்டியும் ஓரமாக

வீணா நாதமணி ஆர்.பிச்சுமணி

வீணை இசையில், அப்பழுக்கில்லாத, தூய மரபு சங்கீதத்தை, தன் திறம்பட்ட வாசிப்பினால் ஆராதித்து வருபவர் பிரபல வீணை வித்வான் திரு. ஆர். பிச்சுமணி அவர்கள்.

1920 ஆம் ஆண்டு, தமிழ் நாட்டில் நாகப்பட்டினத்தில் பிறந்த இவர் இசைப் பாரம்பரியத்தில் உதித்த ஒரு நல் முத்து. தன் 10ஆவது வயதில் பிரபல புல்லாங்குழல் மேதை அமரர் மாலியின் குருவான ஜாலர் கோபால அய்யரிடம் முதலில் வாய்ப்பாட்டு கற்க ஆரம்பித்த இவர், தன் 15ஆவது வயதில், மிக்க கௌரவம் வாய்ந்ததாகக் கருதப்பட்ட 'நேஷனல் காலேஜ்', (திருச்சி) பரிசைப் பெற்றார். பிறகு திருச்சி திரு. குப்பண்ணா அவர்களிடம் முறையாக வீணை பயில ஆரம்பித்தார். அதன் பின் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சேர்ந்து வீணையிசை பயின்று 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்றார். தன் 20ஆவது வயதில் பிரபல சங்கீத மேதைகளாகக் கருதப்பட்ட அமரர் டைகர் வரதாச்சாரியாரிடமும், திரு கே.எஸ். நாராயணஸ்வாமி அய்யர் மற்றும் திரு வி.எஸ். கோமதிசங்கர் அவர்களிடமும் பயிற்சி பெற்றுத் தன் திறமையை மேலும் வளர்த்துக் கொண்டார்.

1940 ஆம் வருடத்தில் இருந்து சென்னையின் புகழ்பெற்ற அத்தனை இசையரங்கங்களிலும் இவரது வீணைக் கச்சேரிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை வானொலி நிலையத்திலும், தொலைக்காட்சியிலும், அகில இந்திய வானொலி நிலையத்தின் 'சங்கீத சம்மேளன'க் கச்சேரிகளிலும் இவர் எண்ணற்ற நிகழ்ச்சிகளை அளித்திருக்கிறார். தன் பாரம்பரிய வீணையிசையின் மூலம் எண்ணற்ற ரசிகர்களைக் கவர்ந்தவர்.

1989 ஆம் ஆண்டு, குடியரசுத் தலைவர் திரு. ஆர். வேங்கட்ராமன் அவர்களிடமிருந்து 'சங்கீத நாடக அகாடெமி அவார்டை'ப் பெற்றார். தமிழகத்தின் சிறப்புமிக்க 'கலைமாமணி' விருதையும் பெற்றிருக்கிறார்.

1984 ஆம் ஆண்டு காஞ்சி மடத்தில் 'ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்' இவருக்கு 'வீணா நாதமணி' என்ற பட்டத்தை அளித்து, தங்கக் காசு வழங்கி, பொன்னாடை போர்த்தி ஆசி அருளியதை கண்களில் நீர் மல்கக் குறிப்பிட்டார். ஒவ்வோர் ஆண்டும், இசைவிழாவில் 'அமுதமென' இசை பொழிந்து வரும் இவருடைய சிறப்பைப் பாராட்டி, 14.12.1991 அன்று, 'மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ்' அரங்கத்தின் 40ஆவது இசை விழாவில் "சங்கீத கலா நிபுணா" என்ற மிகவும் சிறப்பான விருதை, உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. கே.எஸ். பக்தவத்சலம் அவர்கள் வழங்கினார்கள்.

இசை தெய்வீகமானது என்று குறிப்பிட்ட திரு. பிச்சுமணி அவர்கள், இதற்குச் சான்றாக, மெய்சிலிர்க்க வைத்த தம் அனுபவங்களைக் கூறினார்.

"ஸ்ரீவில்லிபுத்தூரில் திரு. ஏ.எஸ். சாரியார் அவர்கள் நடத்திய ஸ்ரீராமநவமி உற்சவத்தில், நான் வீணைக் கச்சேரி நடத்தச் சென்றபோது, மழையே இல்லாமல் கடும் தண்ணீர்ப் பஞ்சம் நிலவியது. நிகழ்ச்சி ஆரம்பிக்குமுன்,"நான் இப்போது 'அம்ருதவர்ஷிணி' ராகம் வாசிக்கப் போகிறேன். இன்னும் ஓரிரு வாரங்களில் மழை பெய்யாவிட்டால், இனி இங்கு கச்சேரிக்கு வர மாட்டேன்" என்று சவால் விட்

உட்கார்ந்து இருந்தனர். சரயுவும் வந்து தம்பி, தங்கைகளுடன் அமர்ந்த உடன் விதவை மூதாட்டி ஆரம்பித்தாள்:

"நடந்தது நடந்து போய் விட்டது. இப்ப உங்கம்மாவுக்குச் செய்ய வேண்டியதைப் பார்ப்போம். இன்னிக்கு ராத்திரி, ஊர் அடங்கின பிறகு, உங்கம்மாவோட குங்குமத்தைக் கலைச்சிட்டு, அவ கழுத்தில இருக்கிற தாலிச் சரட்டைக் கழற்றி - தரையில் படாமல் ஒரு வெள்ளி டப்பாவிலே போட்டு மூடி வைச்சுடணும். இது சம்பிரதாயம். இது நடக்கிற சமயத்தில் சுமங்கலிங்க யாரும் இந்த வீட்ல இருக்கக் கூடாது. ஏன்னா - அது கழற்றப்படும் போது - இத்தனை நாள் தொங்கத் தொங்கக் கிடந்த தாலி - மனம் பொறுக்காமல் சாபம் கொடுக்குமாம். அந்தக் காலத்துல இன்னும் என்ன கண்றாவியோ எல்லாம் செய்வாங்க. இப்பத்தான் காலம் ரொம்ப மாறிடுச்சே".

சரயுவிற்கு முப்பது வருஷத்துக்கு முன்னால் தனக்கு இழைக்கப்பட்ட அந்த கண்றாவியெல்லாம் நினைவுக்கு வர - அந்த மூதாட்டியையே வெறித்து நோக்கினாள்.

மூதாட்டி மேலும் தொடர்ந்தாள்; "ஆனாடி அம்மா, உங்க அம்மா இப்ப இருக்கிற

டேன். ஆனால் இறைவனின் கருணையால் மழை பொழிந்து என் வாக்கு உண்மையாகி, சத்தியம் நிலை நிறுத்தப்பட்டது. அதேபோல் மந்த்ராலயம் ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனத்தில் என் நிகழ்ச்சி இடம் பெற்றபோது, மிருதங்கம் வாசிப்பவர் திடீரென்று வரவில்லை. நானே தனியாகச் சுமார் இரண்டு மணி நேரம் மிருதங்கம் இல்லாமல் கச்சேரி செய்தேன். கோயிலுக்கு வெளியே 'ஸ்பீக்கர்கள்' கட்டி வைத்திருந்தனர். கச்சேரி முடிந்ததும் ரசிகர்கள் என்னைப் பாராட்டியபோது அன்று மிருதங்க வாசிப்பு மிகவும் அருமை என்று குறிப்பிட்டுப் பேசியபோது அந்த ராகவேந்திரரின் மஹிமையை எண்ணி மெய்சிலிர்த்துப் போனேன். நல்ல தரமான இசைக்கு இறைவன் செவி சாய்ப்பான் என்பதற்கு இதை விட என்ன எடுத்துக்காட்டு வேண்டும்?" என்று ஆத்மார்த்தமாக உணர்ந்து பேசினார் அவர். தொடர்ந்து கூறினார்:

"1991 ஆம் ஆண்டு காஞ்சிப் பெரியவர் முன்னிலையில் சங்கர மடத்தில் வாசித்தபோது முதலில் அரைமணி நேரம் வாசிக்கச் சொன்னவர், கடைசியில் நிறுத்தாதே, வாசி, என்று அன்புக் கட்டளையிட்டு சுமார் இரண்டு மணி நேரம் வாசித்த பிறகு எனக்கு அளிப்பதற்காகச் சால்வை கொண்டு வரச் சொன்னவர், ஒவ்வொன்றாக நிராகரித்து விட்டு, கடைசியில் பொன் ஜரிகை இழைத்த பெரிய சால்வையை எடுத்துப் போர்த்தி என்னை ஆசீர்வதித்தது என்னால் மறக்க முடியாத பேரின்ப நிகழ்ச்சி" என்றார்.

தன் திறமையான வாசிப்பால் கர்நாடக சங்கீத உலகில் கோலோச்சும் இவர் திரைப் படங்களிலும் வாசித்திருக்கிறார். 'ஸ்ரீவள்ளி', 'ராமராஜ்யம்' படத்தில் சீதை வீணை வாசிக்கும் காட்சி, 'பெண்' ஆகிய படங்கள் இவருக்குப் புகழ் தேடித் தந்தன. கர்நாடக இசையில் வீணை வித்வானாகத் திகழும், இவர் எவ்வாறு திரைப்படங்களுக்கு வாசிக்க முடிகிறது என்று முன்னாள் வானொலி நிலைய இயக்குநர் திரு. எஸ்.என். மூர்த்தி அவர்கள் ஒருமுறை இவரிடம் கேட்டபோது, "அடிப்படை சரியாக இருந்தால் எங்கு வேண்டுமானாலும், கர்நாடக இசையின் சுவை சிறிதும் கெடாமல் வாசிக்க முடியும்" என்று பதில் அளித்தாராம். அமரர் ஏவி.எம். செட்டியார், டைரக்டர் சுப்ரமண்யம், டி.வி.எஸ். குடும்பத்தினரிடம் மிக்க நன்றியுடையவராக உள்ள இவர், நட்பிற்கு இலக்கணமாக அமரர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களைக் குறிப்பிட்டார்.

சங்கீத இலக்கணம் வழுவாத நல்ல வீணைப் பாரம்பரியத்தை உருவாக்கி வரும்



இவருக்கு அநேக சிஷ்யர்க
உண்டு. 'சிஷ்யர்கள் குருவை
தேடிச் சென்றுதான் கற்
வேண்டுமே தவிர, சிஷ்யர்க
வீட்டிற்குப் போய் குரு க
பிப்பது தவறு' என்று ஆணி
தரமாகக் கூறும் இவருக்கு தி
பி. வஸந்தகுமார், திரும
வஸந்தா கிருஷ்ணமூர்த்தி, தி
பி. கண்ணன் ஆகியோர் குறி
பிடத்தக்க சீடர்கள். வெளிநா
களிலும் இவருக்குச் சிஷ்யர்க
உள்ளனர். வெல்லிங்டனிலும்
மெல்பர்னிலும் (ஆஸ்திரேலிய
இவருடைய பள்ளியைப் பி
பலமாக நடத்தி வருகிறார்கள்
இவர்களுள் இவருடைய சீட
திரு எஸ். ராம்நாத் குறி
பிடத்தக்கவர். —கே. இந்திரா

நிலைமைல என்னால அதைச் செய்ய முடியாதும்மா, நீதான் இதைச் செய்யணும்".

"வேணும்னா நம்ம குங்கும டப்பாவுக்குப் பதிலா விபூதி டப்பாவையும்,தாலிச்சரட்டுக்குப் பதிலா துளசி மணி மாலையும் போட்டுடலாம்" – ரெடியாக எடுத்துக் காட்டினான் கடைசித் தம்பி கணேசு.

"சரயுக்கா! அம்மா கழுத்தில இப்ப போட்டுண்டு இருக்கிற ஆறு பவுன் கொடி, நாங்க மூணு பேரும் சேர்ந்து அப்பாவோட சதாபிஷேகத்துக்குச் செய்தோம். அதை இப்ப அழிச்சு அம்மாவோட நினைவா ஆளுக்கு ரெண்டு பவுன்ல நெக்லஸ் செய்து போட்டுக்க லாம்னு இருக்கோம்" – இ
இரண்டாம் தங்கை மாலா.

சேகர், ராஜி, ஜானா, வச
எல்லாரும் ஏதேதோ செ
னார்கள். சரயுவுக்கு அது எ
வும் காதில் விழவே இல்லை.

"எல்லாரும் பேசி மு
சிட்டீங்களா? இல்லை இன்
பாக்கியிருக்கா? அப்படி எ
வும் இல்லைன்னா என்னோ
இந்த முடிவையும் கேட்
கோங்கோ. அம்மாவுக்கு இ
நிலைமை ஏற்பட்டது எப்
என்பது உங்களுக்கு நினை
இருக்கும்னு நினைக்கிறே
முப்பது வருஷத்துக்கு மு
னாடி எனக்கு இப்ப
இதைவிட மோசமான
ஏற்பட்டபோது அம்மா செ

கறியாது என்னை நோக்கி ஓடிவந்து தடுக்கிக் கீழே விழுந்தவள் - எழுந்த போது சுவாதீனத்தை இழந்து அதுக்குப் பிறகு நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியுமே!

"அம்மாவைப் பொறுத்தவரை அவள் எப்போது சுய நினைவு இழந்தாளோ அப்பொழுதே இறந்துவிட்டாள். இப்பொழுது அவள் இறுகப் பற்றியிருப்பதும் அவளுடைய தாலியில்லை. அள்ளி அள்ளிக் குங்குமத்தை அப்புவதும் அவளுக்காக அல்ல. தன்னோட ஒரு மகளின் வாழ்க்கையில் விளையாடிய விதி தன்னுடைய குடும்பத்தைச் சார்ந்த மற்ற பெண்களின் வாழ்க்கையையும் பறிக்க விடமாட்டேன் என்ற வெறியினால் தான். ஆமாம்; அவள் அப்படி அழுத்தமாகப் பிடித்திருப்பதும் உங்கள் தாலியைத்தான். அவள் திரும்பத் திரும்பக் குங்குமத்தைத் தன் நெற்றியில் பூசிக்கொள்வதும் உங்கள் நெற்றியாகப் பாவித்துத்தான். அவளின் இந்த வெறிச் செயல்தான் காரில் அடிபட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாக டாக்டராலே கைவிடப்பட்ட மாலாவின் கணவரைக் காப்பாற்றி அவள் மாங்கல்யத்தைத் தக்க வைத்தது. தீப்பிடித்து எரிந்த விமானத்தில் போக இருந்த கடைக்குட்டி கணேசுவின் பயணத்தில் திடீர்த் திருப்பம் ஏற்படச் செய்தது. அவன் மனைவியின் குங்குமத்தை நிலைக்கச் செய்தது. போரில் வீரமரணம் அடைந்து விட்டார் என்று உடைமைகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட ஆஷாவின் கணவர், எதிரிகளாலேயே காப்பாற்றப்பட்டுத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். இப்போது சொல்லு மாலா -அம்மா கெட்டியாகப் பிடித்திருக்கும் உங்கள் திருமாங்கல்யத்தையா அழித்து நெக்லஸ் செய்து போட்டுக்கணும்? அடி பைத்தியக்காரி! இறந்தது அப்பா, அம்மாயில்லை. இதையும் மீறி அந்தக் கண்றாவிக் கோலத்தை அம்மாவுக்குக் கொடுத்துத்தான் ஆகணும்னு நீங்க நினைச்சீங்கன்னா இதோ நான் கைல வைச்சுண்டு இருக்கேனே - என் கணவனால் என் கழுத்தில் கட்டப்பட்டு, சொற்ப காலமே என் கழுத்தில் குடியிருந்து - கொடூரமாக அறுத்து எறியப்பட்ட இந்தத் தாலி, எந்த நேரத்தில அம்மாவினுடைய மாங்கல்யமானது கழற்றப்படுகிறதோ அதே நேரத்தில் என் கழுத்தில் ஏறிவிடும். ஏன்னா, அம்மா இத்தனை நாள் போட்டுண்ட இந்தக் குங்குமக் கோலமும் அவளுக்காக அல்ல; இனி நான் போட்டுக்கப் போற சுமங்கலி வேஷமும் எனக்காக அல்ல. உங்களுக்கு இன்னும் அரை மணி நேர அவகாசம் தருகிறேன். அதுக்குள்ளே கோலமா, அல்லது வேஷமா என்ற முடிவுக்கு வாங்க" சொல்லிவிட்டு அம்மா இருந்த அறைக்குள் சென்று கதவை உள்பக்கமாகத் தாழிட்டுக் கொண்டாள் சரயு.

அரை மணி நேர அவகாசம் ஒரு மணி நேரத்தைக் கடந்தும் கதவு தட்டப்படாததை உணர்ந்தவளாய் - மெதுவாகத் திறந்து வெளியே வந்த சரயு - ஹால் வெறிச்சோடி இருந்ததையும், அம்மாவின் தலையில் சூட்டுவதற்காக வைத்திருந்த மல்லிகைப்பந்து ஹாலின் நடுநாயகமாக மாட்டியிருந்த அம்மா, அப்பா இருவரும் சேர்ந்து இருந்த போட்டோவில் மாலையாகச் சூட்டப்பட்டிருந்ததையும் கண்டவளாய் ஹாலைத் தாண்டி வெளியே வந்தபோது, வாசலில் வானத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த வாசு, நான்காய் மடித்திருந்த ஒரு கடிதத்தை சரயுவிடம் நீட்டினான். கண்களில் கலவரமும், கைகளில் நடுக்கமும் கொண்டவளாய் அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள் சரயு!

"அன்புள்ள சரயுக்கா,

பாசம் என்றால் என்ன என்பதை எங்களுக்கு இன்று நீ உணர்த்தி விட்டாய். அம்மா தெய்வ ஸ்தானத்துக்கு உயர்ந்து விட்டதால் இன்று முதல் நீயே எங்களுக்குத் தாயாகிவிட்டாய். இனி என்றும் உன் சொற்படியே வாழ விரும்பும் குடும்பத்தினர். மற்றவை நாளை வாசு அண்ணனையும் கலந்து நேரில் பேசுவோம்.

இப்படிக்கு . உன் பிரியமுள்ள மகன், மகள் மற்றும் மருமகள்கள்" என்று எழுதி அனைவரும் கையெழுத்திட்டு இருந்த அந்தக் கடிதத்தைப் பழையபடியே மடித்து சரயு - வயதில் தன்னைவிடச் சிறியவனாயிருந்த போதிலும் தான் இந்தத் தாயார் ஸ்தானத்துக்கு உயரக் காரணமாகயிருந்த வாசுவின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தாள்.

மதக்கலவரம்

கலவரக் களத்தில்
செருப்புகள் மட்டும்
ஒன்றாகக் கிடந்தன
மனிதர்கள்... பிரிந்து... பிரிந்து

— தமிழமுதன்

உரிமை

நகங்களை வெட்ட
கத்தி துடைத்தோம்
சில
விரல்களைக் காணோம்

— து. கவிநிலவன்

மனசின் விளையாட்டு

வல்லிக்கண்ணன்

கனவுகள் விசித்திர ானவை. அற்புதமான விஷ ங்களும்கூட. மனம், தூக்க லையில், தனக்குத் தானே க்கியும் அழித்தும் மகிழ்கிற சமான விளையாட்டுகள்தாம் னவுகள் என்று நான் நினைக் றேன்.

மனம் எங்கெங்கோ பிர ாணம் செய்கிறது. புதுப்புது டங்களைப் பார்க்கிறது. ாழ்ந்து பழகிய இடங்களில் ஞ்சரிக்கிறது. பழைய இடங் ளைப் புதிய புதிய மாற்றங் ளுடன் கண்டு களிக்கிறது. ான்றோ பார்த்ததுபோல் ிருக்குதே!' என்ற பிரமையை ண்டாக்குகிற புதிய புதிய ாட்சிகளைக் காட்டுகிறது. ிப்படி எத்தனையோ அதிச ங்கள்.

என் கனவுகளில் விரி லங்கள், நீர்நிலைகள், நீர் ற்றிப்போன ஆறுகள், குளங் ள், நீர் பெருகி ஓடும் நதிகள், ணல் மேடுகள், ஒற்றையடிப் ாதைகள், பெரிய பெரிய ீடுகள், தனிரகமான கட்ட ங்கள், ரயில் நிலையங்கள் எல் ாம் அடிக்கடி வருகின்றன.

'ஊர் சுற்ற வேண்டும். பல இடங்களுக்கும் பிரயாணம் ாக வேண்டும்' என்ற ினைப்பு உள்ளத்தில் நிலை பெற்று இருப்பதால், மனம் ிந்தைக் காட்சிகளைப் டைத்து அந்த நினைப்பைத் ிருப்தி செய்துகொள்கிறது ன்று எனக்குப் படுகிறது.

நேரில் கண்டு அனுபவிப்பது போலவே கனவுகளில் எல்லாம் ளிச்சிடுகின்றன. நேர மாற் ங்கள் - வெயில் வேளைகள், இருட்டு நேரங்கள், நிலா மோகனமாய் ஒளிரும் பொழுதுகளும் இன்னும் பலவும் கனவுகளில் துல்லியமாய்த் தெரிகின்றன. பலவிதமான புத்தகங்களையும் படிக்கிறபோது, மிகுந்த ஈடுபாட்டுடன் அவற்றில் வருகிற நிகழ்ச்சிகள், சூழ்நிலைகள் முதலியவற்றில் ஒன்றிப்போவது போன்ற லயிப்புடன் ரசிக்கிற மனம் கனவுகளில் மிகுதியான ரசனை பெறுகிறது என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

இப்படி எண்ணி ஒரு திருப்தியை உண்டாக்கிக் கொள்ளலாமே தவிர, பல கனவுகளின் விஷயத்தில் சரியான காரண, காரியத் தொடர்புள்ள விளக்கம் காணமுடியவில்லை. பழக்கமான சூழ்நிலைகளில் இயற்கைக்கு முரணான பல அமைப்புகளை மனம் ஏன் சிருஷ்டிக்கிறது என்பது புரிந்துகொள்ள முடியாத புதிர்தான். பகலில், விழிப்பு நிலையில், ஒரு கட்டுப்பாட்டுடன் இயங்குகிற கற்பனை, இரவில் தூக்கம் சிலிர்ப்புற்ற ஒரு நிலையில், கட்டற்று நீந்துவதின் கோளாறாக இருக்கும் என்று கொள்ளலாம்.

எனது கனவுகள் சிலவற்றை இங்கு தொகுத்திருக்கிறேன். வெவ்வேறு காலங்களில் அனுபவித்தவை இவை.


✧ வயல்களின் மத்தியில் ஒரு கிணறு. கரைகட்டி விடப்படாத கேணி. திருச்சி மாவட்ட கிராமப்பகுதிகளில், வயல்கள் நடுவில் அமைந்து, ஊர்க்காரர்கள் குளிக்க உபயோகப்படுத்துகிற கேணிகளின் அமைப்பு கொண்டது. வெட்டப்பெற்ற அகன்ற பகுதி. உள்ளே பகுதி பகுதியாகக் குறுகிக்கொண்டே போகும் அளவு. ஒவ்வொரு பகுதிக்கும் இடையே, பிளாட்பாரம் மாதிரி சமநிலம். இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகள் இருக்கும்.

தண்ணீர் நிறையக் கிடக்கிறது. வெயில் வேளை. வெயில் நீரில் பட்டு மினுமினுப்பு உண்டாக்குகிறது. நான் ஓர் ஓரத்தில் நின்று நீரில் குளிக்கிறேன். மேல் பகுதி 'பிளாட்பாரத்தில்' ஒரு குழந்தை தளர்நடை நடந்து வருகிறது. ரொம்ப அழகான குழந்தை. சிவப்பான பொம்மை போல் அருமையான தோற்றம். தண்ணீரைப் பார்த்தபடி நடந்து நடந்து வருகிறது. எந்த நேரத்திலும் அது தவறி, கீழ்ப்பகுதி நோக்கி விழுந்துவிடும். நான் அதைத் தடுக்க முயலவில்லை. எச்சரிக்கும் குரலில் 'தூரப் போ!' என்று சொல்லவில்லை. சும்மா வேடிக்கை பார்த்து வியப்பது போல் நின்றது தவிர வேறு எதுவும் செய்யவில்லை.

'குழந்தை! குழந்தை!... குழந்தையைப் பிடியுங்க! ... தண்ணிக்குள்ளே விழுந்துவிடப் போகிறது!' என்ற கூச்சல் மேலேயிருந்து வருகிறது. சிலர் உயரே, தரைப்பகுதியிலிருந்து எட்டிப் பார்க்கிறார்கள். கூச்சலிடுகிறார்கள். சிலர் குழந்தை நிற்கும் பகுதிக்கு இறங்கி வருகிறார்கள். 'குழந்தையைக் காப்பாற்றாமல் சும்மா வேடிக்கையாப் பார்த்து நிற்கிறாயே?' என்று ஒருவர் கோபிக்கிறார்.

'அழகான குழந்தை. அமைதியும் சந்தோஷமும் நிறைந்த முகம். அந்த விளிம்புக்கு வந்து எட்டிப் பார்த்து, கீழே விழுகிற நிலையில் அந்த முகத்தில் பயம் எப்படித் தோன்றுகிறதுன்னு பார்க்கலாமே! கீழே விழுந்தால் என்ன? தண்ணீரில் தானே விழும்! விழுந்த உடனேயே எடுத்துக் கொள்ளலாம். அந்த அதிர்ச்சியில் சிறு பிஞ்சுமுகம் எப்படி மாறும் என்று பார்க்க வேண்டும்' என்கிறேன்.

ஒரு பெரியவர் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு, வேகமாக முன்வந்து குழந்தையைத் தூக்குகிறார். அது அழுகிறது. அழகிய முகம் விகாரம் அடையும்படி கத்தி அழுகிறது... நான் விழித்துக் கொள்கிறேன்.



✧ வேறொரு கனவு. நாங்கள் சிலபேர் போகிறோம். என்கூட வரும் வாலிபர்கள் யார் யாரோ, எனக்குத் தெரியாது.

பெரிய ரயில் நிலையத்தைச் சேர்ந்த விசாலமான வெளிப்புறம் என்று தோன்றுகிறது. எங்கும் தண்டவாளங்கள். ஏகப்பட்ட தண்டவாள அமைப்புகள். கல்சுவர்கள், கரி என்ஜின்கள், தூரத்து மரங்கள், நீல வானம். செயற்கையும் இயற்கையும் கம்பீரமாக இணைந்து கிடக்கும் இனிய சூழல்.

அழகை வியந்து கொண்டே போகிறோம். தண்டவாளங்களுக்கு மேலாகக் காணப்படுகிற நீண்ட 'ஓவர்பிரிட்ஜ்' - மேம்பாலம் ஒன்று. குறுக்கும் நெடுக்குமான இரும்புப் பட்டைகள். அண்ணாந்து, ரொம்ப அண்ணாந்து நன்றாகப் பார்க்கும்படியான உயரத்தில் - மிகுந்த உயரத்தில் - அது இருக்கிறது. வானப் பகைப் புலனில் அந்தப் பாலம் ஏதோ அபூர்வமான டெக்னிக்கலர் சினிமாக் காட்சி மாதிரித் தோன்றுகிறது.

நான் கான்க்ரீட் படிகள் மீது ஏறுகிறேன் வேகமாக. எல்லாருக்கும் முன்னதாக. ஓடியும், படிவிட்டுப் படி தாண்டியும், மேலே மேலே போகிறேன். கீழிருந்து பலரும் 'ஏ, ஏய்!' எனக் கத்துகிறார்கள். 'நில்லு! பாலம் சரியாக இல்லை' என்கிறார்கள்.

நான் அடுத்த அடி எடுத்து வைக்க முயல்கையில் முன்னால் பார்த்தேன். படிக்கட்டுகளிலுள்ள கான்க்ரீட் பலகைகள் (ஸ்லாப்ஸ்) உள்வளைந்து, முறிந்து விடும் நிலையில் உள்ளன. சில படிகளுக்கு அப்பால் பலகைகளே இல்லை. இரும்பாலான சட்டங்கள் மாத்திரமே உள்ளன.

நான் அந்த இடத்திலேயே உட்கார்ந்து விடுகிறேன். என் உள்ளத்தில் ஏமாற்றமா? கீழே இறங்க வேண்டுமே என்ற மலைப்பா? இன்னும் சில எட்டுகள் வைத்திருந்தால் விழுந்தே இருப்பேனே என்ற பய அரிப்பா? நல்லவேளை, மேலே மேலே ஏறிக் கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் போச்சு என்ற சந்தோஷமா? எந்த உணர்வு மிஞ்சி நின்றது என எனக்குப் புரியவில்லை.

வெயில். நல்ல வெயில். எல்லாரும் போகத் திரும்பு கிறார்கள். நான் படிகள் வழியாக வேகமாக இறங்கிக் கீழே வருகிறேன். படிக்கட்டு அருகில் நின்று அண்ணாந்து பார்க்கிறேன். இப்போது தோன்றும் கோளாறுகளும், குறைபாடுகளும் ஏன் அப் போதே என் பார்வையில் படாமல் போயின என்று சந் தேகிக்கிறேன்.

எல்லாரும் சேர்ந்து ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்குப் போகி றோம். ரயில் ஒன்று புறப்படத் தயாராக நிற்கிறது. மற்ற அனைவரும் வண்டியில் ஏறு கிறார்கள்.

நான் கீழே நின்று, 'இந்தச் சூழ்நிலையில் ரயில் போகிற காட்சி அழகாக இருக்கும். ஓடி ஓடி ரயில் வண்டித் தொடர் தூரத்துப் புள்ளியாய் மறைந்து போகிற தோற்றம் பிரமாதமாக இருக்கும். அதைப் பார்த்து ரசிக்க விரும்புகிறேன்' என்று சொல்கிறேன்.

ரயில் கிளம்புகிறது. வேக மெடுத்து ஓடுகிறது.

பரபரப்பு குன்றிவிட்ட ரயில் நிலையத்தின் வெறுமையைப் பார்த்தபடி நான் நிற்கிறேன்.

அவ்வளவுதான்!

✧ தாமிரவருணி ஆற்றில் தண்ணீர் குறைவாக ஓடுகிறது. சுகமாகக் குளித்துக் கொண் டிருக்கிறேன்.

குளித்துக் கரையேறிய பின், வெள்ளம் வருகிறது. அதி கரிக்கிறது. விரைவிலேயே வெள்ளப் பெருக்கு பொங்கிப் புரண்டு ஓடுகிறது. வெள்ள மாவது வெள்ளம்! கரை புரண்டு, எவ்வி, மேலே மேலே ஏறி, பனைமரக் காட்டைத் தாண்டி, வயல் வெளியில் பரவி, பச்சைப் பசிய வயல் பரப்பை எல்லாம் கலங்கிய நீர் புரளும் கடல் மாதிரி மாற்றி விடுகிறது. எவ்வளவு பிரமாத மான, பயங்கரமான காட்சி!

இப்படி எல்லாம் கனவுகள் வருகின்றன. ஏன் வருகின்றன என்று எனக்குப் புரிவதே இல்லை.

---

25 ஆண்டுகளுக்கு முன் அமுதசுரபி (மார்ச் – 67)

தாயை அணைத்து மகி ழும் கண்ணனது ஸ்பரிச இன்பத்தில் யசோதை மகிழ்கி றாளா? அல்லது அவனது நடையழகில் மயங்கிப் பூரிக்கி றாளா? இல்லை, அவன் வெண் ணெய் கேட்டு இறைஞ்சும் முக அழகில் மோகிக்கிறாளா? எல் லாமே ஆனந்த மயம். உள்ளத் தில் கொள்ளை இன்பத்தின் இறுதி கண்ட யசோதையின் ஆனந்த முகத்தை ஓவியர் லதா வண்ணச் சித்திரமாகத் தீட்டி இருப்பதைத் தாங்கி வெளி வந்திருக்கிறது 1967 ஆம் வருடத் திய மார்ச் மாத 'அமுதசுரபி'.

வித்வான் வே. லட்சு மணனின் 'காணிக்கை' தொட ரும், சாண்டில்யனின் 'பல்லவ திலகம்' தொடரும் தொய் வில்லாக் காவியங்கள். இதில் பல்லவ திலகம் தொடரை (25 ஆண்டுகளுக்கு முன்பே) தனியே புத்தகவடிவில் 'பைண்ட்' செய்யும் வகையில் வெளியிட்டு இருப்பது (தற் போது பிரசுரமாகி வரும் கங்காபுரிக் காவலன் தொட ருக்கு முன்னோடியோ?) பாராட் டத்தக்கது.

கோவிந்தன் எழுதிய 'மனி தாபிமானம்', கோவி. மணி சேகரனின் 'ஒரு நடிகையின் கதை', எஸ். ஸ்ரீனிவாசனின் 'விஜி! நீ என்...', வையவனின் 'கடிகாரங்கள் எதைக் காட்டு கின்றன?', சித்ராவின் 'சதாபி ஷேகம்' ஆகிய சிறுகதைகள் அமுதசுரபியின் மகுடத்திற்கு வைர அணிகலன் வகை யறாக்கள்.

பிரும்மஸ்ரீ சி.வி.ஸ்வாமி சாஸ்திரிகளின் 'திரிபுரா ரக சியம்' இதழைத் தெய்வீக மணம் கமழ வைக்கிறது.

'ஹோப் வைரம்' பற்றி 'தபஸ்வி' எழுதியுள்ள கட்டுரை விறுவிறுப்பாய் வியக்க வைக் கிறது.

பாரதத்திற்கு உலக அரங் கில் பெருமை தேடித் தந்து அந்த மாதத்தில் 'பத்ம விபூஷண்' பட்டத்தைப் பெற்ற 'டென்னிஸ்' கிருஷ்ணன் (ரமேஷ் கிருஷ்ணனின் தந்தை) பற்றிய சிறப்புக் கட்டுரை விளை யாட்டுத் துறை வளர்ச்சிக்கு ஒரு நல்முத்தாய் அமைந்திருக் கிறது. இளைஞர்களுக்கு விளை யாட்டின் மேன்மையை எடுத் துரைக்கிறது.

வளரும் இசைப்புலவர்கள் வரிசையில் ஸ்ரீவத்ஸன் (பார்வையற்ற கலைஞர்) திருப் பூந்துருத்தி ஆர். வேங்க டேசன் ஆகியோர் மேலும் ஊக்கம் பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டு உள் ளனர். (இவர்கள் இன்று பிரபலமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது).

மாதர் மலரில் திருமதி சுபத்ரா ஜனார்த்தனம் (சென்னை வைத்திய கல்வி டைரக்டராகப் பணியாற்றிய திரு ஜனார்த்தனின் மனைவி) பேட்டி மகளிர் உயர்வுக்கு வழி காட்டுகிறது; தன்னம்பிக்கை தருகிறது.

ஆக மொத்தத்தில் – 60 காசுகளுக்கு மனம் முழுக்க அனைத்து ஆரோக்கியங்களும் பெற்றுவிட்ட ஓர் உணர்வை ஏற்படுத்தி விட்டது. —நந்து

சுங்கத்துறையும், பொதுமக்களும்...

சந்திப்பு : ஆர். புவனா



சுங்க ஆணையர்
திரு. ஆர். கோபால் நாதன்

ஒவ்வொரு நாளும் சென்னை சர்வதேச விமான நிலையத்திற்குச் சுமார் எட்டு பன்னாட்டு விமானங்கள் வந்து போகின்றன.

மேல் படிப்பிற்காக, சிகிச்சைக்காக, தொழில் சம்பந்தமாக, வேலைக்காக மற்றும் சுற்றுலாவிற்காக உலகம் முழுவதும் பயணம் செய்பவர்கள் ஏராளம். இவர்களைத் தவிர, கடத்தல் தொழில் செய்வதற்கென்றே அடிக்கடி வெளிநாடு செல்பவர்களும் உண்டு.

அயல்நாடு சென்று வருகிற பலர் தம்முடன் என்னென்ன பொருள்களை எடுத்துக் கொண்டு வரக் கூடாது; எவற்றையெல்லாம் எடுத்துச் செல்லலாம், எடுத்துக் கொண்டு வரலாம், அதற்கு அவர்கள் எத்தனை சதவிகிதம் வரி செலுத்த வேண்டும் போன்ற விவரங்களை அறியாதிருக்கின்றனர்.


சென்னை 'சுங்க இல்லத்தில்' (Customs House) சுமார் 27 ஆண்டுகளாகப் பணி புரியும் 'சுங்க ஆணையர்' (Customs Collector) திரு.ஆர். கோபால் நாதன் அவர்களைப் பேட்டி கண்டபோது, பயனுள்ள பல விவரங்களைச் சொன்னதுடன், கடத்தல் சம்பந்தப்பட்ட சில வியப்பூட்டும் செய்திகளையும் விவரித்தார். அவற்றிலிருந்து சில பகுதிகள் :

ஒரு பயணி எத்தனை எடையுள்ள பொருளைக் கொண்டு வரலாம்? என்னென்ன பொருள்களைக் கொண்டு வரலாம்?

சுங்க சட்டப்படி எடை அளவு கட்டுப்பாடு ஏதும் இல்லை. வீட்டு அல்லது தன் சொந்த உபயோகத்திற்கென்று சில விதிகளுக்கு உட்பட்டு சாமான்கள் கொண்டு வரலாம். தங்கம், வெள்ளி மற்றும் வைரம் போன்ற விலையுயர்ந்த கற்கள் கொண்டு வருவதற்கு அனுமதி இல்லை. அவை முழுமையாகத் தடை செய்யப்பட்டு உள்ளன. ஒரு பயணி ஆணாக இருந்தால் வெளிநாட்டில் ஓர் ஆண்டிற்கு மேல் தங்கி இந்தியாவிற்குத் திரும்பினால் ரூ. 1,500 /- மதிப்புள்ள தங்க நகைகளை, அதாவது அவர்கள் தங்கள் உபயோகத்தில் உள்ள நகைகளைக் கொண்டு வரலாம். பெண்ணாக இருந்தால் அவர்கள் உபயோகத்தில் இருந்த தங்க நகைகளை, அதாவது ரூ. 3,000 /-

கடத்தல் பொருளுடன் துணை ஆணையர் திரு. எஸ். கே. கருப்பன், மேற்பார்வையாளர்கள் திரு. கே. ஏ. விஜயராஜ், திரு. பி.ஆர். எம். பஹருதீன்





கடத்தல்காரர்கள் பூட்டுகளின் அடியில் துவாரமிட்டு தங்கத்தை உருக்கி சிறு துண்டுகளாக்கிப் பூட்டின் உள்ளே அடைத்து வெளிப் புறத்தை அழகாகப் பூசி விடுவார்கள். இது பார்ப்பதற்குச் சாதாரண பூட்டு போலத் தோன்றும்.

மதிப்புள்ள தங்க நகைகள் கொண்டு வரலாம். இந்தச் சலுகை தவிர வரியில்லாமல் கொண்டு வரும் ரூ. 2,400 /- மதிப்புள்ள பொருள்களும் கொண்டு வரலாம். இந்தச் சலுகையில் பரிசுப் பொருள்கள் (Gift Articles) ஏதாவது கொண்டு வந்தால் அதுவும் இதற்குள் அடங்கும்.

தங்கக் கடத்தல் சம்பந்தமாகக் குறிப்பிட்டுச்சொல்லும்படியான சம்பவம் ஏதாவது?

கடத்தல் குழுவினர் குருவிகளை அனுப்பி மிகச்சாமர்த்தியமாகத் தங்கத்தை அவர்கள் கொடுத்தனுப்பும் டி.வி., வி.சி.ஆர்., எலெக்ட்ரானிக் அடுப்பு, விளையாட்டுப் பொம்மைகள், பூட்டு, இஸ்திரிப் பெட்டி, ஸ்டாம்பிங் மெஷின் உணவுப் பொருள்கள் அடங்கிய தகர டப்பாவில் மறைத்து வைத்தும் சிலர் தங்கள் உடம்பின் ஆசனவாய் உறுப்பிலும் சிலர் தங்கத்தை விழுங்கியும் இடுப்பில் மறைத்து வைத்தும் சிலர் 'பால் பேரிங்குகள்' போன்ற யந்திர பாகங்களில் அதன் உருண்டை வடிவத்தைப் போலவே மறைத்து வைத்தும் பெட்டிகளின் அடிப்பாகத்திலும் சக்கர உருளைகளிலும், கைப்பிடிகளிலும் மறைத்து வைத்துக்கொண்டு வரும் போது பிடிபட்டிருக்கிறார்கள். ஒரு சமயம் ஒரு பயணி தன் தாடியிலும், மற்றொரு பயணி தன் தலைமுடியினுள்ளும் தங்கத்தை மறைத்து வைத்து எடுத்து வந்து பிடிபட்டு தங்கம் கைப்பற்றப்பட்டு இருக்கிறது. பிரிஸ்டிஜ் குக்கர் இடைவெளிப் பகுதிகளிலிருந்தும் தங்கம் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

எதன் அடிப்படையில் பொருள்கள் கைப்பற்றப்படுகின்றன?

தடை செய்யப்பட்ட பொருள்களோ அல்லது சட்டவரம்பிற்கு

தங்கத்தகடுகளை சிலிண்டர் உருவத்தில் செய்து டின்களின் உள்ளே நுழைத்து அதில் உணவுப் பொருள்களை நிரப்பி விடுவார்கள். இந்த டப்பாக்களைக் காணும்போது உணவுப்பொருள் மட்டும்தான் உள்ளே இருக்கிறது என வெளிப்பார்வைக்குத் தோற்றமளிக்கும்.



மீறி அனுமதியின்றி கொண்டு வரும் பொருள்களோ அல்லது ஒன்றைச் சொல்லி வேறு ஒரு பொருளைக் கொண்டு வந்தாலோ முற்றிலும் தவறான டிக்ளரேஷன் (Declaration) கொடுத்தாலோ அவை சம்பந்தப்பட்ட பொருள்களைச் சுங்க சட்டப்படி விசாரணை செய்வதற்கும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காகவும் பின்னர் விசாரணையின் விளைவாகப் பறிமுதல் செய்ய ஏதும் இருப்பின் அப்படிப்பட்ட பொருள்களைக் கைப்பற்றுகிறோம். வியாபார நோக்கத்தோடு எடுத்து வரும் பொருள்களையும் கைப்பற்றிப் பின்னர் அதற்குண்டான தீர்வை செலுத்தினால் அவற்றைத் திருப்பித் தருகிறோம்.

கைப்பற்றப்படும் பொருள்கள் கஸ்டம் ஹவுஸில் வேலை செய்பவர்களுக்கே பெரும்பாலும் கொடுக்கப்படுகின்றன. பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதில்லை என்ற பொதுமக்களின் குற்றச் சாட்டிற்குத் தங்களின் பதில்?

இது ஒரு தவறான கருத்து. கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் பொது நிறுவனமான என்.சி.சி.எஃப் (N.C.C.F) என்ற தேசிய நுகர்வோர் நிறுவனத்திற்கு விலைக்குக் கொடுத்து விடுகிறோம். இந்த நுகர்வோர் நிறுவனம், சிந்தாமணி போன்ற கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலமாகப் பொது மக்களுக்கு இவற்றை விற்பனை செய்கின்றன. சுங்க இல்லத்திலும் ஒவ்வொரு மாதமும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளும் ஏல... நடத்தப்பட்டு அங்கும் வி... பனை நடைபெறுகிறது. சுங்... இல்லத்தில் சில்லரையாகவும் பொதுமக்கள் வாங்குவதற்கா... வாரத்தில் விடுமுறை நாள்கள் தவிர எல்லா நாள்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன

தாங்கள் ஆசையாகக் கொண்(டு) வரும் சில பொருள்களை கஸ்டம்... அதிகாரிகள் அபகரித்துக் கொ... கிறார்கள் என்ற புகாருக்குத்தங்... ளின் பதில் என்ன?

அப்படிப்பட்ட புகார்க... இதுவரை எங்கள் கவனத்திற்(கு) வரவில்லை. அப்படிப் புகா... வந்தால் உடன் விசாரணை செய்து தவறு செய்யும் அதி... காரிகள் மீது தக்க நடவடிக்கை எடுப்போம்.


குருவிகளால் (CARRIERS) அந்நியச் செலாவணி பெருமளவி... குறைந்துள்ளது. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?


குருவிகளை அடையாள... கண்டு முழு சோதனை நடத்...



பதப்படுத்தப்பட்ட பால், வெண்ணெய், ஜாம் போன்ற உணவு பொருள்களை அடைத்து வைக்க 'கண்டெய்னர்கள்' எனப்படும் டப்பாக்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவை 'தெர்மகோல்' எனப்படும் மெல்லிய தக்கையால் ஆனவை. இவற்றின் உள்ளே தங்கக்கட்டிகள் வைத்துக் கடத்தப்பட்டபோது எடுத்த படம்.

மார்க்கிங் பென் எனப்படும் பேனாக்களின் உள்ளே 'ஹிராயின்' எனப்படும் போதைப் பொருள் திணித்துக் கடத்தும்போது பிடிபட்டு விட்டது- இதன் மதிப்பு சுமார் 5 கோடி.





'நம்பரிங் மெஷின்' இது நோட்டுப் புத்தகங்களின் மூலையில் எண்கள் போட உதவும் ஒருவகை சின்ன இயந்திரம். இதன் நடுப்புறத்தில் 'ஸ்பிரிங்' ஒன்று உள்ளது. இந்த ஸ்பிரிங்கைச் சுற்றியுள்ள இரும்புக் கம்பியை நீக்கி விட்டுத் தங்கத்தால் அந்த நீண்ட கம்பியைப் பொருத்திக் கடத்தி வரும் போது பிடிபட்டது.

சரியான தீர்வை நிர்ணயம் செய்து வசூல் செய்து வியாபார ரீதியான பொருள்களைப் பறி முதல் செய்தும், திருப்பித் திருப்பிச் சென்று வரும் குருவி களின் மீதும் தண்டனை விதித் தும் குருவிகளின் மூலம் கள்ளக் கடத்தல் கும்பலின் சட்ட விரோதச் செயல்களைக் கடும் நடவடிக்கைகளின் மூலம் தடுத்து நிறுத்துவதில் ஓரளவு பயன் ஏற்பட்டிருக்கிறது. இதன் பயனாக அந்நியச் செலாவணி சேமிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. இதற்கென்று சிறப்புப் புலனாய்வுப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது.

கைப்பற்றப்பட்ட பொருள்களை என்ன செய்கிறீர்கள்?

கைப்பற்றப்பட்ட பொருளை விசாரணை முடிந்தபின் கைப் பற்றப்பட்ட நபரிடமே திருப்பிக் கொடுக்க வாய்ப்பு உண்டு. அல்லது அபராதம் விதித்தோ, தீர்வை வசூல் செய்த பிறகோ திருப்பித் தரலாம். முழுவது மாகப் பறிமுதல் செய்த பொருள்களை மேல் முறையீடு (அப்பீல்) காலம் முடிந்தபின் அவர்கள் முறையீடு செய்யாமல் இருந்தால் அப்படிப்பட்ட நிலை யில் அந்தப் பொருள்களை பொதுமக்கள் விற்பனைக்காக மேலே சொன்னபடி ஏலம் மூலமாகவும் பொது விற்பனை நுகர்வோர் கூட்டுறவு சங் கத்தின் மூலமாகவும் சுங்க இல்லத்தில் சில்லரையாகவும் விற்பனை செய்யப்படும். தங்கம், வெள்ளி போன்ற தடை செய்யப்பட்ட பொருள்களை பம்பாய் தங்கசாலைக்கு அனுப்பி விடுகிறோம். வைரம் போன்ற விலையுயர்ந்த கற் களை ஏலம் விடுகிறோம். தடை செய்யப்பட்ட சக்தி வாய்ந்த கார்ட்லெஸ் தொலைபேசி மற்றும் போதை மருந்துகளை, காலம்கடந்த மருந்துப் பொருள் களை மூத்த அதிகாரிகளின் மேற்பார்வையில் அழித்து விடு கிறோம். மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் துணிமணிகள், கைக்கடிகாரம், எலக்ட்ரானிக், பிளாஸ்டிக் பொருள்கள், பொதுமக்களுக்கு மேலே சொன்னபடி விடுமுறை நாள் தவிர எல்லா நாள்களிலும் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை விற்பனை செய்யப் படுகின்றன.

கைப்பற்றப்படும்தங்கம், வெள்ளி போன்ற பொருள்கள் எந்தெந்த நாள்களில் ஏலம் விடப்படுகின்றன? ஏலம் எடுக்க என்னென்ன தகுதியை எதிர்பார்க்கிறீர்கள்?

தங்கம், வெள்ளி போன்ற வற்றைப் பொது ஏலம் விடு வதில்லை. அவற்றை மேலே சொன்னபடி பம்பாய் தங்க சாலைக்கு (Mint) அனுப்பி விடு கிறோம்.

புதிதாக அயல்நாடுகளுக்குச் செல்லும் நபர்கள் என்னென்ன கொண்டு வரலாம்? என்னென்ன கொண்டு வரக்கூடாது?

தடை செய்யப்பட்டும் சில வரைமுறை செய்யப்பட்டு முள்ள பொருள்களை, அதாவது முறையே தங்கம், வெள்ளி, வைரம் போன்ற விலையுயர்ந்த கற்கள், போதை மருந்து, போதைப் பொருள்கள், சக்தி வாய்ந்த கார்ட்லெஸ் தொலை பேசிகள், டிரான்ஸ்மிட்டர்கள் ஆகியவற்றைக் கொண்டு வரக் கூடாது. லைசென்ஸ் பெறாமல் ரிவால்வர், பிஸ்டல், ரைஃபிள் போன்ற ஆயுதங்களையும் கொண்டு வரக்கூடாது. தன் சொந்த தினசரி உபயோகத்திற் காகத் துணிமணிகள், ஒரு கைக்கடிகாரம் (ரூ. 500 /- க்கு மேற்படாமல் இருந்தால்) ஆகியவற்றிற்கு வரி கிடையாது. இது இல்லாமல் ரூ. 2,400 /- வரை மதிப்புள்ள துணிமணிகள் மற்ற பொருள்களைத் தன் சொந்தக் குடும்ப உபயோகத் திற்கு வரி செலுத்தாமல் கொண்டு வரலாம். இந்த ரூ. 2,400 /- மதிப்புள்ள பொருள் கள் பரிசுப் பொருளாயிருந் தாலும் வரி இல்லாமல் கொண்டுவர அனுமதியுண்டு. இந்த வரி இல்லாமல் எடுத்து வரும் துணிமணிகளுக்கு ரூ. 500/ வரை தான் வரி விலக்கு உண்டு. அதற்கு மேல் இருந்

தாஷ் 25 % வரி செலுத்த வேண்டும். ஆனால் எலக்ட்ரானிக் பொருள்களுக்கு, அதாவது டி.வி., வி.சி.ஆர்., வி.சி.பி போன்றவற்றிற்கு அவற்றின் மதிப்பில் ரூ. 1,200 /- மட்டும் வரி விலக்கு அளிக்கப்படும். இது வும் ரூ. 2,400 /- வரம்பிற்கு உட் பட்டதுதான். இந்தச் சலுகைக்கு மேல் தொழில் /வேலையின் பொருட்டு வெளிநாடு சென்று 3 மாதத்திற்குமேல் தங்கி இந்தியா திரும்பினால் தன் உபயோகத்திலிருந்த வீட்டு நட்டு முட்டுச் சாமான்கள் வெளிநாடு சென்று 2 ஆண்டுகளுக்குமேல் தங்கிப் பின்னர் இந்தியாவுக்கு வந்து ஓர் ஆண்டாவது (குறைந்தது) தங்கினால் அவர்கள் வீட்டு உபயோகத்திற்கான பொருள்களுக்குக்குறைந்த அளவு வரிச் சலுகை உண்டு.

வரிகட்டாமல் பொருள்களை ஏர் போர்ட்டில் விட்டுவிட்டுச் செல்பவர்கள் ஏராளம். அப்படிப்பட்ட பொருள்களை எத்தனை நாள் களுக்கு உங்கள் பாதுகாப்பில் வைத்திருக்கலாம்? இதன்பின் அப் பொருள்களை என்ன செய்கிறீர்கள்?

அவர்களின் முகவரி இருந்தால் அவர்களுக்கு அறிவிப்பு (நோட்டீஸ்) அனுப்பி 15 நாள் களுக்குள் பதில் அனுப்பாமல் இருந்தால் அவற்றை சுங்க நோட்டீஸ் அறிவிப்புப் பலகையில் போட்டு, அவை காலக் கெடு முடிவடைந்தவுடன் பறிமுதல் செய்யப்படும். அப்படிப் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களைப் பொது ஏலத்திலோ அல்லது சுங்க இல்லத்திலுள்ள சில்லறைக் கடையிலோ அல்லது என்.சி.சி.எஃப் போன்ற பொது நிறுவனங்கள் மூலமாகவோ விற்பனை செய்யப்படும்.

பரிசுப் பொருள்களுக்கு வரி உண்டா?

பயணிகள் தங்களுடன் கொண்டு வரும் பரிசுப் பொருள் களுக்கென்று தனிச் சலுகை எதுவும் இல்லை. மற்ற பொருள்களுக்குண்டான விதி முறைகளும், தீர்வையும்தான் அவற்றிற்கு உண்டு. ஆனால் அஞ்சல் மூலமாக வரும் பரிசுப் பொருள்களுக்குத் தடை அல்லது வரையறை செய்யப்பட்ட பொருள்களைத் தவிர மற்ற பொருள்களுக்கு ரூ. 750 /- மதிப்புள்ள பொருள்களுக்குத் தீர்வை இல்லை. இதுபோல் அதற்கு மேற்பட்ட பொருள் களுக்குச்சில விதிமுறைகளுக்கு உட்பட்டு 14% சதவிகிதம் வரி உண்டு.

கேரளா, பம்பாய் போன்ற நகரங்களை விடச் சென்னையில் தான் அதிக கெடுபிடிகள், டூட்டி அதிகம் போன்ற குற்றச்சாட்டுகளுக்குத் தங்களின் பதில்?

இந்தக் குற்றச்சாட்டு களுக்கு ஆதாரம் எதுவும் இல்லை. இந்தியா முழுவதற்கும் சட்டமும் பொருள்கள் மதிப்பீடும் ஒரே மாதிரியாகத் தான் உள்ளன. வேறுபாட்டிற்கு இடமே இல்லை. பொருள்கள் விலை நிர்ணயம் எல்லா இடங் களிலும் பொதுவாகத்தான் உள்ளது. தீர்வையும், வரிச் சலுகையும் அதே அளவில்தான் உள்ளது. ஒவ்வொரு பொருளுக்கும் இன்ன விலை என்று நிர்ணயம் செய்துள்ளதால் அந்த விலைப் பிரகாரம் ரூ. 2,400 /- வரை சுங்க வரி இல்லாமல் கொண்டு வரலாம்.

எந்த வருடம் வரி வசூலில் சாதனை புரிந்திருக்கிறீர்கள்?

1990 - 1991 ஆம் ஆண்டு ரூ. 3023 கோடி வரி வசூலித்துள்ளோம். மற்ற எல்லா ஆண்டை விட இது அதிகமானது.

1989 - 1990 ரூ. 2628 கோடி

1988 - 1989 ரூ. 2270 கோடி

1987 - 1988 ரூ. 1960 கோடி

தங்கம், வெள்ளி போன்ற பொருள்கள் இந்தியாவிற்குள் கடத்தப்படும்போது அத் தகவலை எப்படிப் பெறுகிறீர்கள்? அதற்கு எவ்வளவு சன்மானம் தருகிறீர்கள்?

எங்களுக்கு நேரிலோ, தொலைபேசியிலோ தகவல் கொடுக்கும் நபர்கள் உண்டு. அதிகாரிகளுக்கும் சம்பந்தப் பட்ட நபர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து தகவல் சேகரித்துச் செயல்படுதல், வெளிநாட்டு ஏஜெண்டுகள் மூலமும் தகவல் சேகரிக்கப்பட்டுக் கள்ளக்கடத்தலுக்கு எதிராக நடவடிக்கைகள் பலவும் மேற் கொள்ளப்படுகின்றன. 24 காரட் சுத்தத் தங்கத்திற்கு 10 கிராமுக்கு ரூ. 500/- ம் வெள்ளி 1 கிலோவிற்கு ரூ. 100 /- ம் அதிகபட்சமாகக் கொடுக்கப்படுகிறது. மற்ற பொருள் களுக்கு அதன் மதிப்பில் 20 சதவிகிதம் வரை தகவலின் தன்மையையொட்டித் தரப் படுகிறது. பொருள்கள் கைப் பற்றப்பட்டவுடன் தங்கத் திற்கும், வெள்ளிக்கும் வெகுமதித் தொகையில் பாதி உடனே கொடுக்கப்படுகிறது. மீதி விசாரணை முடிந்து பொருள் பறிமுதல் செய்யப்பட்டவுடன் கொடுக்கப்படுகிறது.

முந்தைய ஆண்டுகளைவிட இந்த ஆண்டு தங்கத்தின் கடத்தல் கூடி உள்ளதா? குறைந்துள்ளதா? இந்த ஆண்டு கைப்பற்றப்பட்ட தங்கம், வெள்ளியின் மதிப்பு எவ்வளவு?

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் தங்கம், வெள்ளி கடத்தல் குறைந்துள்ளது.

சென்ற ஆண்டு பிடிபட்ட தங்கம் ரூ. 8,74,74,751

சென்ற ஆண்டு பிடிபட்ட வெள்ளி ரூ. 3,63,16,802

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் வரை பிடிபட்ட தங்கம் ரூ. 6,68,52,782

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் வரை பிடிபட்ட வெள்ளி ரூ. 25,92,498

ஃ

அகல்யா..

வித்யாசுப்ரமணியம்

"நல்லா யோசிச்சுதான் சொல்றயா அகல்யா?"

அவள் பதிலை ஜீரணிக்க முடியாமல் மீண்டும் கேட்டான் பிரபாகர், அவளது அண்ணன்.


"உன் பதிலைக் கேட்டா நாலு பேர் காறித் துப்புவாடி! உன் முடிவை மாத்திக்கோ." அம்மா மங்களம் அழுகை கலந்த கோபத்தோடு அவளைச் சாடினாள். "பணம் வரும் போகும் அகல்யா! நாளைக்கு நீ நிச்சயம் இதுக்காக வருத்தப்படுவ. எல்லாம் முடிஞ்சப்பறம் நீ என்ன அடிச்சுண்டாலும் அவனைப் பார்க்கக் கிடைக்காது உனக்கு." ராமபத்ரன் - அவள் அப்பா - தன் பங்குக்கு கொஞ்சம் புத்தி சொன்னார்.

அகல்யா அவரை நிமிர்ந்து பார்த்தாள் ஒரு நிமிடம். "இல்லப்பா, எனக்குப் பணமே போதும். இதுக்கு மேல என்னை எதுவும் கேக்காதிங்கோ! எல்லாரும் போயிடுங்கோ, தயவுசெஞ்சு எல்லாரும் இங்கேர்ந்து போயிடுங்கோ." அவள் கத்தவும் அனைவரும் சட்டென்று அந்த அறையிலிருந்து வெளியேறினார்கள்.

சாயங்காலத்திற்குள் வீடு நிறைய உறவினர்கள் கூடி விட்டனர். "திருஷ்டி படற மாதிரி எப்படி இருந்தடி அகல்யா! பாவி இப்படி ஆக்கிட்டுப் போய்ட்டானே"

ஆயிரம் ரூபாய் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை

அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி



என்று ஆளாளுக்கு அவளை கட்டிக்கொண்டு அழுதார்க அகல்யாவுக்கு மூச்சு முட் யது. கண்ணீர் வற்றிச் சோ அதிகமாகித் தலை சுற்றிய

"என்னடா செய் போறேள்?" அத்தை கம விசாரித்தபோது பிரபாகர் மாறினான்.

"பாடி எப்ப வரதா தாம்பரம் சித்தி கேட்ட ஆடிப் போனான்.

"உள்ளூரா இருந்தாலும் வால்ல! பாவி கடல்கடந்து கயோ போய் செத்து வெச்சி கானே!" சொல்லிவிட்டு முசு வென்று அழ ஆரம்பித்தா மங்களம்.

"உடனே அனுப்பிடுவா பாடியை? மிஞ்சிப்போ ரெண்டு நாளாகுமா? பா அகல்யா கடைசி தடவை அவன் முகத்தப் பார்க்கனும் துடிச்சுண்டிருப்பா!" அத் பெண் சீதா புலம்பினாள்.

"விதி யாரை விட்டது? ந வேலைலதான் இருந்தா இங்க! பாழும் பணத்தா வெளிநாடு இழுத்து போயிடுத்து. கடைசி நேரத் ஏக்கத்தோட உசிரை விட்டா பாவி!" பெரியம்மா பெரிச ஒப்பாரி வைக்கத் தொடங் அதையும் மீறிக்கொ வாசல் பக்கமிருந்து அழு சப்தம் கேட்க எல்லா திரும்பினார்கள். அகல்யாவி மாமியாரும் மாமனாரும்தா

"என் கண்மணி போ டானா? இப்ப என்ன வேன் நான்! என் வயிறு துடி கிறதே!" பெற்றவள் மார் அடித்துக் கொண்டு க அவளைச் சமாதானப்படுத் வழி தெரியாமல் கொஞ் அழுகையை அடக்கி திருந்த கூட்டமும் சேர்ந்து ம படியும் அழ ஆரம்பிக் அறைக்குள் அகல்யா மட் அழுகை வற்றிப்போய் தா பெற்ற செல்வங்களை மடி

ிட்டுக் கொண்டு எங்கோ சூனி
த்தை வெறித்துக் கொண்டு
ட்கார்ந்திருந்தாள்.

தரகர் மூலமாகத்தான் ராம
ிருஷ்ணன், அகல்யா இருவரது
ாதகங்களும் கை மாறின.
ாதகம் சேர்ந்திருந்தது.

ராமகிருஷ்ணன் பார்த்த
தல்பெண்ணே அகல்யாதான்.
பண்ணை எல்லாருக்கும்
டித்திருந்தது.

"நீங்க என்ன வேணா செஞ்
க்கோங்கோ. ஆனா எங்க
டும்பத்துக்கு மாட்டுப்
பாண்ணா வரணும்னா
வரத்தோடும், வைர மூக்
த்தியும் போட்டுண்டுதான் வர
டியும். தலை தீபாவளிக்கு
ாப்பிள்ளைக்கு நவரத்ன
ாதிரமும் போட்டுடணும்.
து முடியும்னா உடனே நிச்சய
ார்த்தம் வெச்சுப்போம்" என்
ான் ராமகிருஷ்ணனைப்
பற்ற மதுரம்.

"மன்னிச்சுடுங்கோ. எனக்கு
ணு பொண்ணு. ஒருத்திக்குப்
பாட்டா இன்னொருத்தியும்
ப்பா! எல்லார்க்கும் போட
க்கு வசதியில்ல" என்றார்
கல்யாவைப் பெற்றவர்.

"அப்ப நாங்க புறப்படறோம்"
ன்று எழுந்தாள் மதுரம்.
ன்னாடியே அத்தனை பேரும்
ழுந்திருக்க, குத்துக்கல் போல்
ட்கார்ந்திருந்தான் ராம
ருஷ்ணன்.

"என்னடா, எழுந்திரேன்"
ன்றாள் மதுரம்.

"அம்மா! வரும்போது நான்
ன்ன சொல்லிட்டு வந்தேன்?
ான் பாக்கற மொதல்
பாண்ணு இதுதான். எப்படி
ருந்தாலும் இந்த இடத்தை
ச்சயம் பண்ணிடு. ஏகப்பட்ட
பண்களைப் பாக்க மாட்
ன்னு சொல்லித்தானே கூட்
ண்டு வந்தேன்?"

"அதுக்கென்ன இப்போ?"



"அதுக்கென்னன்னா? இப்ப எனக்கு அகல்யாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. அது ஒண்ணே போறாதா?"

"உனக்குப் பிடிச்சா மட்டும் போறாது! மத்ததையும் கொஞ்சம் பாக்கணும். உன் மன்னிகள்ளாம் காதுலயும் மூக்குலயும் பளீர், பளீர்னு டாலடிக்க வளைய வரும்போது இவ வெறும் தங்கத்தைப் போட்டுக்கறது நல்லாயிருக்குமா? யோசி!"

"பரவால்ல! அவ போட்டுண்டாலும் போட்டுக்காட்டாலும் ரசிக்கப் போறவன் நான்தான். பேசாம நிச்சயதார்த்தத்துக்கு நாளைப் பாரு" என்றான் அழுத்தமாக.

மதுரத்தின் கண்கள் சிவந்தன. பெண் பார்க்க வந்த இடத்தில் அத்தனை பேருக்கு முன்னாலும் பிள்ளை அவளை மட்டம் தட்டிப் பேசியதை அவளால் தாங்க முடியவில்லை.

"அதெல்லாம் முடியாது. உன் இஷ்டத்துக்கு விட மாட்டேன். இந்த இடம் வேண்டான்னா வேண்டாம்தான்." கத்தினாள்.

"அதை முடிவு செய்ய வேண்டியவன் நான்தான்" என்றான் ராமகிருஷ்ணனும் அமைதியாக.

"பாருடா, முடிவாச் சொல்றேன். இந்த இடம் வேண்டாம். புறப்படு. இல்ல.. நான் வேணுமா, அவ வேணுமான்னு யோசி!" மதுரம் விறுவிறுவென்று வாசலுக்குப் போக அவளுக்கு அடங்கியவர்களாக அப்பாவும், அக்காக்களும், அண்ணன்களும், மன்னிகளும் வெளியேறுவதை மௌனமாய்ப் பார்த்தான் ராமகிருஷ்ணன். பிறகு பெண்ணின் அப்பாவைப் பார்த்தான்.

"நீங்க நிச்சயதார்த்தத்துக்கு நாள் பாருங்கோ. யார் வந்தாலும் வரலன்னாலும் மாப்பிள்ளை நான் வந்துடுவேன். உங்க பொண்ணைக் கண்ணைப் போல வெச்சுக் காப்பாத்துவேன். அந்த நம்பிக்கை உங்களுக்கிருந்தா என்னைச் சேர்ந்தவா பேசினதை மறந்துட்டு நாள் பாருங்கோ".

பெண் வீடு ஸ்தம்பித்தது. அகல்யாவின் அப்பா மிகவும் நெகிழ்ச்சியோடு அவன் கைகளைப் பிடித்துக்கொண்டார்.

இப்படித்தான் அவர்கள் திருமணம் நடந்தது. இதற்குப் பிறகுதான் எத்தனை தொல்லைகள்! எந்தக் குடும்ப விழாவுக்கும் அவளுக்கு அழைப்பில்லை. மீறிப் போனாலும் அவமரியாதைகள்தாம். மூத்தவன் பாலாஜி பிறந்தபோது ஒருவர்கூடக் குழந்தையை வந்து பார்க்கவில்லை.

சொந்தமாய் பேப்பர் மில்ஸ் வைத்திருந்தார் அவன் அப்பா. அதில்தான் ராமகிருஷ்ணனும் வேலை செய்து கொண்டிருந்தான். குடும்பத்தினர் ஒரேயடியாக அவனை ஒதுக்கியதும்

தலில் வேலையை விட்டு
ட்டான். வேறு வேலை எளி
ல் கிடைக்கவில்லை. இறுதி
ல் எண்ணூறு ரூபாய் சம்பளத்
ற்கு ஒரு சிறிய கம்பெனியில்
வலைக்குச் சேர்ந்தான்.

பிறகு அகல்யா இரண்
ாவது முறையாகக் கர்ப்பம்
ரித்தாள். கூடவே செலவு
திகரித்தது. மிகவும் நொந்து
பானான் ராமகிருஷ்ணன்.
ங்காவது வழியில் மதுரம்
வனைப் பார்க்க நேரிட்டால்,
ங்க பேச்சைக் கேட்காமப்
பானாயேனு' என்பதுபோல்
ார்க்க, அவனுக்குள் புது
வராக்கியம் குடிபுகுந்தது.
தை உசத்தி என்று நினைத்து
ம்மா அவர்களை ஒதுக்கி
வத்தாளோ அந்த வைரத்
ாலேயே அகல்யாவை அலங்
ரித்து அவர்கள்முன் நிறுத்தி
வர்கள் கண்ணெதிரே
ாழ்ந்து காட்ட வேண்டும்'
ன்ற வெறி அதிகரித்தது,
ாளுக்குநாள்.

தெரிந்தவர்கள் அறிந்த
ர்கள் என்று எல்லாரிடமும்
சால்லி வைத்து வெளி
ாட்டில் ஒரு வேலை தேடிக்
காண்டு புறப்பட்டு விட்டான்.
வன் படிப்புக்கேற்ற
களரவமான வேலைதான்
ன்றாலும் அகல்யாவுக்கு
வன் கடல் கடந்து செல்வதில்
ஷ்டமில்லை.

"நீங்க போகத்தான் வேண்
மா?" என்று அமுதவளைச்
மாதானப்படுத்தினான்.

"நல்ல சான்ஸ் அகல்யா!
ம்மளை துச்சமா மதிக்கறவா
ன்னாடி. நாம வாழ்ந்து
ாமிக்கணும். வைரம்
வரம்னு அடிச்சுண்ட எங்
ம்மா முன்னாடி உன்னை
வரத்தாலேயே இழைச்சு
றுத்தப் போறேன். அப்ப
ாவது எங்கம்மா என்னைப்
ன்னென்னு சொல்றாளா
ார்ப்போம். அஞ்சே வருஷம்
ான். ஓடிடும் பாரேன்.
முடிஞ்சா நடுவுல ஒரு தரம்
வரேன், சரியா?"

ராமகிருஷ்ணன் விமானம் ஏறுவதற்குள் அடுத்த பிரசவத்தில் அகல்யா இரட்டைப் பெண் குழந்தைகளைப் பெற்றாள். அவளுடைய அம்மா வீட்டில் அவளைப் பத்திரமாக விட்டு விட்டு ராமகிருஷ்ணன் விமானமேறினான்.

சொன்னது போலவே போன ஒரே வருடத்தில் அவன் பணம் அனுப்பியதில், அவன் வார்த்தையைத் தட்ட முடியாமல் அம்மாவை அழைத்துக் கொண்டு போய் வைரத் தோடும், வைர மூக்குத்தியும் வாங்கிக் கொண்டு வந்தாள் அகல்யா. அவன் ஊர் திரும்பிய பிறகுதான் அதைப் போட்டுக் கொள்வேன் என்று கூறி விட்டுப் பத்திரமாய் உள்ளே வைத்துவிட்டாள்.

அதற்கு மறுவருடம் அவளுக்கொரு வைர மோதிரமும் அவன் அளவுக்கொரு நவரத்ன மோதிரமும் வாங்கினார்கள்.

அதற்கும் மறுவருடம் மெல்லிய தங்க நெக்லஸின் முன் பக்கம் மட்டும் மூன்று வைரக் கல் பதித்த டிசைனில் கழுத்துக்கு வாங்கிக் கொண்டாள்.



வித்யா சுப்ரமணியம்

வாங்கியது எதையும் அணியவில்லை. ஒருமுறை வந்து போகும்படி அவள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 'வருகிறேன்' என்று கடிதம் எழுதியவன் அதற்கடுத்த கடிதத்தில் வரப்போகும் நாளையும் குறிப்பிட்டு எழுதினான்.


திடீரென்று அந்தச் செய்தி வந்தது. ஒரு சாலை விபத்தில் ராமகிருஷ்ணன் இறந்து விட்டானாம். தவறு அவன் மீது தானாம். சாலை விதியை மீறியிருக்கிறான். அவன் உடலை அனுப்பும் பொறுப்பை கம்பெனி ஏற்றுக் கொண்டது, ஒரு நிபந்தனையின் பேரில். உடலை அனுப்ப வேண்டுமென்றால் குடும்பத்தினருக்குப் பணம் ஏதும் கிடைக்காது. உடலை இங்கேயே தகனம் செய்யச் சம்மதித்தால் கணிசமான தொகை அவன் குடும்பத்திற்குத் தரப்பட்டு விடும். எது தேவை என்ற முடிவை விரைவில் தெரியப் படுத்தவும் என்று நிபந்தனை விதித்தது.

"அவன் முகத்தைப் பார்க்க வாண்டாமாடி அகல்யா?" என்று புலம்பினவர்களிடமிருந்து சற்று பிரிந்து சென்று வெகு நேரம் யோசித்தாள் அகல்யா. பிறகு ஓர் உறுதியான முடிவுக்கு வந்தாள்.

"எனக்கு பாடியப் பார்க்க வேண்டாம்பா. பணத்தை அனுப்பச் சொல்லுங்கோ" என்றவளை அதிர்ந்து போய்ப் பார்த்தார்கள் அனைவரும்.

"நல்லா யோசனை செய்துட்டுத்தான் சொல்றேன். 'பாடிய' வாங்கி என்ன செய்யப் போறோம்? 'ஓ'ன்னு ஊரைக் கூட்டி அழுதுட்டு ஒரு நாழில எரிச்சு, அஸ்திய சமுத்திரத்துல கரைச்சுடுவோம். அதோட தீர்ந்துடும். அதுக்குப் பிறகு..? அதுக்குப் பிறகு என் கதி?

ப்பொணத்தை வாங்கி எரிக்கற வரைதான் இங்க கும்பல் கூடி யிருக்கும். பிறகு நானும் என் குழந்தைகளும் அநாதைகள். யார் எங்களை வெச்சுக் காப் பாத்துவேள்? சொல்லுங்கோ! என் படிப்புக்குப்பெரிசா என்ன வேலை கிடைச்சுடும்? சுயமா தொழில் தொடங்கணும்னாகூட மூலதனம்னு ஒண்ணு வேணுமே! நாங்க நன்னாருக் கணும்னுதான் அவர் வெளி நாடு போனார். செத்தும் குடுக் கணும்னுதான் கடல்கடந்து போய் செத்து வெச்சிருக்கார்.



நான் மட்டும்தான்னா பாடி போதும்னு சொல்லிடுவேன். என்னை நம்பி மூணு ஜீவன்கள் இருக்கே! அதுகளுக்குப் பாது காப்பு வேண்டாமா? போனவர் போயிட்டார். அவரோட வாரிசு களை நான் நல்லபடியா அவர் கனவு கண்டபடி வளர்க்க எனக்குப் பணம் வேணும். அவரை நன்னாப் பார்த்துட் டேன். அந்த உருவம் என் மன சுல பதிஞ்சுபோச்சு. இப்போ சிதைஞ்சு செத்த உருவமா அவரைப் பார்க்க என்னாலே முடியாது. அவர் செத்துப் போனதாவே நான் நெனக் கலை. வெளிநாட்டுலதான் இருக்கார்னு நெனச்சு சிரிச்ச அவர் முகத்தை மட்டுமே நினைச்சுண்டு கடைசிவரை வாழ்ந்துடுவேன்".

அகல்யாவின் முடிவு தெரிந் ததும் மதுரம் ஆர்ப்பாட்டம் செய்தாள்.


"நீ பொண்ணே இல்லடி! பேய்! பணப்பேய். என் பிள்ளை யக் கொன்னும் பணத்தை உறிஞ்சற பேய். உனக்குப் பாக்க வேண்டாம்னா விடு. எனக்கு எம் பிள்ளையப் பாக் கணும் அவனை வரவழைக்க ஏற்பாடு செய்".

"பாக்கணுமா? உங்க பிள்ளையப் பாக்கணுமா? காட்டறேன் இருங்கோ" என்று ஆவேசம் வந்ததுபோல் கத்தின அகல்யா எழுந்து உள்ளே போனாள். திரும்பி வந்தவளின் கையில் நகைப் பெட்டிகள்! "இதோ இது வைர மூக்குத்தி. இது வைரத் தோடு. இது வைர மோதிரம். இது வைர நெக்லஸ். போதுமா? இதுக்காகத் தானே... இது இல்லன்னுதானே எங்களை ஒதுக்கி வெச்சேள்! இதைச் சம்பாதிக்கத்தான் உங்க பிள்ளை அங்க போனார். ஒதுக்கி வெச்சவா முன்னாடி ஒசந்து வாழ்ந்து காட்டணும்னு தான் போனார். உங்க பிள் ளைய நானா கொன்னேன்? நீங்கதான் கொன்னேள். நீங்க கேட்டதெல்லாம் வாங்கி வெச் சுட்டார். கட்டிண்டு அழுங்கோ. இதோ இது உங்க பிள்ளை யோட மூக்கு! - இது உங்க பிள்ளையோட காது! - இது கழுத்து! - இது கை விரல் - தட வித் தடவிக் கொஞ்சுங்கோ உங்க பிள்ளையை!" விஸ்வரூப மெடுத்த காளியாய் முகம் சிவக்க, கண் சிவக்கக் கத்தி விட்டு உள்ளே போய் கதவை அறைந்து சாத்திக் கொண்ட வளை மிரண்டு போய்ப் பார்த்தது கூட்டம்.

அவதார புருஷர் ஸ்ரீசத்ய சாயிபாபா

பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா அவர்கள் உலகை உய்விக்கத் தோன்றிய மகான்களுள் ஒப்பற்ற ஒளிவிளக்காகத் திகழ்பவர் ஆவார். அவர் கலாசாரத்தையும், ஆன்மிகத்தையும் காலத்திற்கு ஏற்றவாறு, தர்மத்தை அனுசரித்து, மக்களுக்கு உணர்த்தத் தோன்றிய ஓர் அவதாரப் புருஷர் ஆவார். அவதாரப் புருஷர் என்பதற்கு தர்மத்தை நிலைநாட்டவும், உலகில் நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களைத் திருத்தவும் கடவுளே மானிடராக மண்ணில் அவதரிப்பது என்பது பொருள். உலகில் தர்மம் இல்லை என்றால் மனித இனமானது போட்டியும், பொறாமையும், புறம்பேசுதலும் ஆகியவற்றை மேற்கொண்டு விலங்கின வாழ்வையுடையதாய் மாறிவிடும். எனவேதான் உலகில் தர்மம் தாழ்வு — அடையும் நிலை ஏற்படும் போதெல்லாம் இறைவனே மானிடராய் தோன்றி தர்மத்தை நிலைநாட்டி அதைக் காப்பார். கடவுள் உலகில் அவதாரம் எடுக்கும்போது தன் உண்மை உருவத்துடன் தோன்றுவது இல்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், இறைவன் மண்ணில் தன் உண்மை வடிவத்துடன் தோன்றினால் அவனது ஆற்றலை மக்களால் தாங்க இயலாது. மேலும் யாரும் அவரை இறைவன் என நம்ப மறுப்பர். அவர் தன் ஆற்றலால் அற்புதங்களைச் செய்து காட்டினாலும் அவற்றைக் கண்டு ரசித்து விளையாட்டுகளைச் செய்பவர்களுள் ஒருவராக மக்கள் எண்ணுவார்களேயல்லாமல் அவரை கடவுள் என்று நம்பமாட்டார்கள். எனவேதான் கடவுள் மானிட அவதாரம் எடுத்து அப்பிறவிக்குரிய இன்ப துன்பங்களைத் தானும் அடைகின்றார். தூய உள்ளமும், இறைப்பற்றும் உள்ளவர்களால்தான் அவரை அடையாளம் கண்டு கொள்ள இயலும்; அத்தகைய அவதாரப் புருஷராகத் தோன்றியவரே பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா ஆவார்கள்.

பாபா அவர்கள் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதை உலகில் நிலைநாட்ட அவதரித்துள்ளார். உயிர்கள் அனைத்தும் இறைவனின் குழந்தைகளே என்பது அவரது கருத்து.



அன்புடன் நாளைத் தொடங்கி அன்புடன் அதைக்கழித்து
அன்புடனே முடித்தல்தான் ஆண்டவனை அடையும் வழி.



பாபா அவர்கள் அருளுரை ஆற்றுகின்றபோதெல்லாம் அதில் மிகுதியாக இடம் பெறுவது அன்பும், சேவையும் பற்றிய கருத்துகளேயாகும். உண்மை அன்பு என்பது தன்னைப்போல் பிறரை நேசிப்பது போன்றது ஆகும். அவ்வாறு வாழ்வோமானால் பொய், போட்டி, பொறாமை போன்ற தீய குணங்கள் நம்மிடம் காணப்படா. நம் இன்பத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும்போது நல்வாழ்க்கை இனிமை நிறைந்ததாகக் காணப்படுகிறது. ஒவ்வோர் உயிரையும் கடவுளின் வடிவமாகவே நாம் எண்ண வேண்டுமே தவிர, எலும்பு, சதை ஆகியவற்றின் திரட்சியாக நினைத்தல் கூடாது. நாம் மற்றவரிடம் அன்பை மட்டும் பொழியாமல் மதிப்பும், மரியாதையும் மிக்கவர்களாகத் திகழ்வதோடு அவரவர்களிடம் மறைந்து கிடக்கும் தெய்விகத் தன்மைகளையும் உணருமாறு செய்தல் வேண்டும். உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் அன்பும், சேவையுமாகிய இரண்டு தெய்விகப் பண்புகளை வளர்த்துக் கொள்வானேயானால் இவ்வுலகம் அமைதியும் மகிழ்வும் நிறைந்த ஒரு சொர்க்க உலகமாகக் காணப்படும். அன்பே தெய்வமாகும். மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகும். பாபா அவர்கள் அன்பு, சேவை ஆகியவற்றின் திருவுருவமாகத் திகழ்கின்றார். அதற்குச் சான்று காட்ட வேண்டுமானால் பல்லாயிரக்கணக்கான மக்களின் முன் அவர் அருளுரை வழங்குகின்றபோது அவர் மக்களை நோக்கி, "ஆத்ம சொருபிகளே! அன்பின் திருவுருவங்களே" என்றுதான் தன் உரையைத் தொடங்குவார். பாபா அவர்களின் அருளுரைகள் எல்லாம் உபநிடதங்களாகும். அவர்களின் உருவம் அன்பின் திருவுருவமாகும். பாபா அவர்கள் எல்லாரிடமும் வேறுபாடற்ற அன்பையே பொழிவார். அவரைக் காணும் வாய்ப்புத் தமக்குக் கிட்டாதவர்களும் உண்மையான பக்தியுடன் அவரை நினைப்பார்களேயானால் அவரது அன்பிற்குப் பாத்திரமாவார்கள். மனித சக்திக்கு அப்பாற்பட்ட சில அற்புதச் செயல்களின் மூலம் பாபா அவர்கள் தம் அன்பை வெளிப்படுத்துகிறார். இதுகுறித்து எனக்கு ஓர் இனிய அனுபவம் ஏற்பட்டுள்ளது. அதை நான் இங்கே நினைவு கூர்கின்றேன். 1968 ஆம் ஆண்டு எனது மூத்த மகளுக்கு எதிர்பாராத விதமாக தீ விபத்து ஒன்று நிகழ்ந்தது. மருத்துவர்களும் கைவிட்டார்கள். நான் அச்சமயம் டில்லியில் இருந்தேன். அந்நிகழ்ச்சி நிகழ்ந்த இரண்டு நாள்களுக்குப் பிறகுதான் அதுகுறித்து எனக்குத் தெரியும். நான் எனது மகளைப் பார்த்தபோது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அப்போது என்னிடத்தில் பேராசிரியை லீலா அம்மையார் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்று இருந்தது. அவ்வம்மையார் பாபாவின் மேல் தீவிர பக்தியுடையவர். நான் அவ்வம்மையார் தந்த அக்கடிதத்தை எடுத்து வந்து பாபாவைப் பிரார்த்தித்து, எனது மூத்த மகள் படுத்திருந்த படுக்கையின் அடியில் வைத்து விட்டேன். அன்று நடு இரவில் என் மகள் அவள் படுத்திருந்த அறையின் ஒரு மூலையைப் பார்த்து, காவி அங்கி அணிந்த தோற்றத்துடன் பாபா அங்கு இருக்கிறார் என்றாள். இதற்கு முன் அவள் பாபாவைப் பார்த்ததில்லை. அன்றைய மறுநாளிலிருந்து வியக்கத்தக்க வகையில் அவளது உடல்நலத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. அதன் பிறகு மூன்று மாதங்களுக்குப் பிறகு பாபா அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்தபோது கஸ்தூரி ரங்க அய்யங்கார் தெருவில் அவருடைய பக்தர் ஒருவருடைய வீட்டில் தங்கினார். ஒருநாள் மதியம் என் நண்பர் ஒருவர் வந்து என்னிடம், "நாம் போய் பாபா அவர்களைத் தரிசித்துவிட்டு வரலாம் வாருங்கள்" என்று அழைத்தார். அன்று எதிர்பாராத விதமாக என் மூத்த மகளும் என் வீட்டிற்கு வந்திருந்தாள். நாங்கள் எல்லாரும் பாபாவை தரிசிக்கச் சென்றோம். நாங்கள் அவர் தங்கியிருந்த இடத்தை அடைந்தவுடன் அங்கு நாங்கள் அமர கூடத்தில் இடம் கிடைத்தது. வெளியிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது. 'என்ன ஆச்சர்யம்! திடீரென்று என்னை யாரோ தட்டுவதுபோல் இருந்தது. நான் திரும்பிப் பார்த்தபோது பாபா அவர்கள் என் பெயரை உச்சரித்து என்னுடன் கனிவுடன் பேசினார். இதற்கு முன் நான் அவரைச்

அன்பு நிறைந்த உள்ளமே இறைவனின் இல்லம். துன்பங்களைத் தவிர்க்கும் சாதனம் இதுவே.

சந்தித்தது இல்லை. அதன் பின்பு பாபா அவர்கள் என்னை முதல் மாடியில் தங்கியிருக்குமாறு கூறிவிட்டு மற்றவர்களுக்கு தரிசனம் கொடுப்பதற்காகச் சென்றுவிட்டார். ஒரு மணி நேரம் சென்ற பிறகு பாபா அவர்கள் அங்கு வந்தார். நாங்கள் கை குவித்து வணங்கினோம். அவர் அங்கிருந்த இருக்கையில் அமராமல் எங்கள் கைக்கெட்டும் தொலைவில் தரையில் எங்களுடன் அமர்ந்தார். கண்ணீர் நிரம்பி வழியும் கண்களுடன் அமர்ந்திருந்த என்னுடைய மகளைப் பார்த்தார். அவளுக்குக் கண்களில் கண்ணீர் நிரம்பி வழியக் காரணம் என்னவென்றால் தீ விபத்து ஏற்பட்டுப் படுத்திருந்த அன்று இதே தரிசனம் அவளுக்குக் கிட்டியது. அவளால் அவளது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் அவள் மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். பாபா அவர்கள் அவளைத் திரும்பிப் பார்த்து மென்மையான குரலில், "அன்று இரவு நான் வரவில்லை என்றால்...?" என்று கேட்டார். அவர் அவளை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றினார். இதிலிருந்து அவர் அன்பும் இரக்கமும் நிறைந்த ஊற்று என்பது இதனைப் படிப்பவர்கள் நன்கு உணர்வர்.

(குலபதி டாக்டர் எஸ்.பாலகிருஷ்ண ஜோஷி தம் அனுபவத்தை விவரித்து எழுதிய கட்டுரை)

தியானத்தின் சிறப்பு





தியானத்தினால் நீங்கள் மனிதகுல ஒற்றுமையையும் தெய்வத்தின் எல்லையற்ற சக்தி எங்கும் பரவியிருப்பதையும் உணர்வதுடன் அதிலேயே ஆழ்ந்துவிடலாம். உங்களது அன்றாட வாழ்க்கை அனுபவத்தில் ஒரு பெரிய கவலை தோன்றியதும் அதுவரை உங்களைப் பற்றியிருந்த சிறிய கவலைகளை அது ஒடுக்கிவிடுவதை உணர்ந்திருப்பீர்கள். உங்கள் மனதில் தெய்வதைப்பற்றிய சிந்தனையே நிறைந்திருந்தால் தெய்வத்திற்காகவே நீங்கள் முழுமனதுடன் எப்போதும் இடைவிடாது ஏங்கிக் கொண்டிருந்தால் மற்ற அற்ப ஆசைகளும், சாதனைகளும், தோல்விகளும்கூட உங்களைப் பாதிக்கமாட்டா. அவை யாவும் உங்கள் கவனத்திலிருந்து நீங்கிவிடும். தெய்வசிந்தனை என்ற வெள்ளத்தில் மூழ்கி விரைவிலேயே தெய்வத்தை உணர்தல் எனும் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கும் நிலையை அடைவீர்கள். ●

—பாபா

(From 'sadhana' - Inward Path)

அகங்காரங்களே தீயகுணங்களின் தாய் இல்லம்.
அகங்காரத்தை அகற்ற நகரசங்கீர்த்தனம் வல்லமை கொண்டது.

புண்ணியத்தலமான புட்டபர்த்தியிலே பகவான் பாபாவின் பேரருளால் எழுப்பப்பட்டுள்ள பிரமிப்பூட்டும் மருத்துவமனை திறப்புவிழா




சென்ற ஆண்டு 65ஆவது பிறந்த தின விழாவின்போது பகவான் பாபா உலகிலேயே மிகச் சிறந்த அறுவை சிகிச்சை வாய்ப்புகளும் மற்றும் பல வசதிகளும் கொண்ட "ஸூப்பர் - ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல்" நிறுவி இலவச சிகிச்சை அளிக்க தாம் சங்கற்பம் செய்துள்ளதாகவும் எந்தவிதமான சக்தியாலும் இதைத் தடை செய்ய முடியாதென்றும் 22.11.91இல் அது திறந்து வைக்கப்படும் என்றும் கூறினார். 110 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த மருத்துவமனையைக் கட்டி முடித்து எல்லா நவீன வசதிகளையும் அமைத்து 22.11.91 அன்று இதய ஆபரேஷன் (அறுவை சிகிச்சை) செய்யப்படும் என்றும் கூறிவிட்டார். இதைக் கேட்ட பக்தர்களுக்கு பகவானின் சங்கற்பம் அவரது எல்லையற்ற சக்தியில் எப்படியும் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கையிருப்பினும், உலகத்தில் அனுபவ ரீதியாக இதற்காக பிரும்மாண்டமான கட்டுமானப் பணிகளும், வெளிநாட்டிலிருந்து வர

உன்னை மனிதனெனக் காட்டும் சின்னம் இல்லையேல்
உனக்கும் விலங்குக்கும் பேதமில்லை!

வேண்டிய மிக நவீனமான அதிக கனமான இயந்திரங்களும் வந்து சேர்வதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்குமே என்ற ஏக்கமும் இருந்தது. மே மாதத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு காம்பவுண்டு சுவர் எழுப்பும் பணி ஆகி இருந்ததுடன் தரை மட்டத்திற்கே கட்டடம் எழும்பியிருந்தது. ஆனால் கடந்த ஐந்து மாதங்களில் கட்டட வேலைகள் முடிவடைந்து இயந்திரங்கள் நிர்மாணிக்கப்பட்டு, 22.11.91 அன்று முன் அறிவிப்பின்படி பிரதம மந்திரி திரு பி.வி. நரசிம்மராவ் இதைத் திறந்து வைத்தார் என்பதை நேரில் கண்ணுற்றோரும்கூட "நாம் காண்பது கனவா, நனவா!" என்று ஐயுறும் வகையில், இந்த மருத்துவமனையின் முதல் கட்டம் திட்டப்படி முடிவுற்று இதய அறுவை சிகிச்சையும் அன்றே செய்யப்பட்டது. இது இறைவனாலன்றி மனித எத்தனத்தினால் மட்டும் சாத்தியமாகக் கூடியது அல்ல என்பதை அன்று கூடி இருந்த யாவரும் ஒருமனதா[க] ஒப்புக்கொண்டனர்.

முதற்கட்ட கட்டுமானப் பணிக்கு முதலீடு [...] 105 கோடி பகவான் சத்ய சாயி சென்ட்ர[ல்] டிரஸ்ட், செலவழித்துள்ளதாகவும் இத[ற்கு] மாதாமாதம் செலவாகும் தொகை ரூ. 1.5 கோ[டி] என்றும் இதற்குப் பண உதவி பன்னாட்டு பெருமக்களிடமிருந்தும் வந்து குவிந்துள்ளதெ[ன]வும் அறிவிக்கப்பட்டது.

ஏராளமான பக்தர்கள் இவ்வாண்டு பிறந்தின விழாவிற்கு 19ஆம் தேதியிலிருந்தே [...] ஆரம்பித்து விட்டதால், புட்டபர்த்தி [...] மாபெரும் நகரம்போல் சுறுசுறுப்புடன் பலவ[...]களிலும் இயங்கிக் கொண்டிருந்தது. எங்[கும்] பக்தர்கள் கூட்டமே நிரம்பி வழிந்தது.



அன்புடன் நாளைத் தொடங்கி, அன்புடன் நாளைக் கழித்து,

அன்புடன் நாளை முடிப்பாய்! அன்பே இறைவனை அடையும் வழி.

18 ஆம் தேதியன்று பத்திரிகைக்காரர்களுக்காகச் சிறப்புக் கூட்டம் நடத்தியதில் மத்திய டிரஸ்ட்டைச் சார்ந்த திரு இந்துலால்ஷா, திரு. ஸ்ரீநிவாசன், சத்திய சாயி மருத்துவ டிரஸ்ட் தலைவர் திரு சஃபையா பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சம்பத் ஆகியோர் சத்ய சாயி பல்கலைக் கழகம், மருத்துவக் கூடம் இரண்டும் இரண்டு முக்கியமான சாதனைகளென்பதைக் குறிப்பிட்டு சேவா நிறுவனங்கள் சேவைப்பணிகள் செய்து வருவதையும் குறிப்பிட்டனர். அருங்காட்சியகம், விண்வெளிக் காட்சியகம் (பிளானடோரியம்), பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள கல்விக்கூடங்கள் யாவையும் பத்திரிகைக்காரர்கள் பார்த்துப் புரிந்துகொள்ள அவர்களைத் தனிப்பேருந்தில் அழைத்துச் சென்று காட்டி விளக்கங்கள் தரப்பட்டன. மனிதனின் முக்கியத் தேவைகள் கல்வியும், ஆரோக்கியமும் என்பதைக் கருத்தில் கொண்ட பகவான் இந்த இரண்டு துறைகளிலும் உலகிற்கே வழிகாட்டியாக விளங்கும் இரண்டு உயர்மட்ட நிறுவனங்களை உருவாக்கி இருப்பது தெளிவாக விவரிக்கப்பட்டது. இந்தப் பணிகள் பற்றியும் மற்றும் சாயிசேவா நிறுவனங்கள் ஆற்றிவரும் கல்வி, ஆன்மிக, சேவைத் தொண்டுகளைப் பற்றியும் விளக்கும் சிறப்பு விளம்பரம் எல்லா முக்கிய பத்திரிகைகளிலும் 18 ஆம் தேதி வெளியிடப்பட்டது.

இவ்வாண்டு பிறந்த தினவிழாவில் இந்த உயர்மட்ட அறுவை சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைத் திறப்புதான் மிகவும் முக்கிய நிகழ்ச்சி என பகவான் திரு உள்ளம் கொண்டதால் இதில் எல்லாரும் ஒருங்கிணைந்து ஈடுபட்டனர். நிறுவனத் தொண்டர்களும், கல்லூரி மாணவர்களும், மருத்துவமனையையும் சுற்றியுள்ள இடங்களையும் சமன்படுத்தி, சீர்படுத்தி, துப்புரவு செய்யும் பணிகளில் மும்முரமாக உழைத்தனர். மிகக்குறுகிய காலத்தில் (3,00,000 ச.அடி.) 3 லட்சம் சதுர அடி பரப்புள்ள இந்த பிரும்மாண்டமான கட்டடம் உருவாக்கப்பட்டது. இதில் ஈடுபட்ட L & T கம்பெனியின் பகுதியான E.C.C. "கம்பெனியாரின் மாபெரும் சாதனை இதுவென எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

22.11.91 அன்று காலை திறப்பு விழாவிற்கு நாடெங்குமுள்ள முக்கியஸ்தர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. 21.11.91 அன்று பகவான் பாபா தமக்கே உரிய சுறுசுறுப்புடன் சிறப்பு அனுமதிச் சீட்டுகளைக் குறிப்பிட்ட முக்கிய பக்தர்களுக்குத் தாமே கூட்டத்தில் தேடித் தமது




திருக்கரங்களாலேயே வழங்கினார். அரசாங்க மேல்மட்ட அதிகாரிகள், தொழிலதிபர்கள், ஆளுநர்கள், மந்திரிகள் போன்றவர்களுக்கு அழைப்புக் கடிதம் முன்பே அனுப்பப்பட்டது. அங்கு கூடிய இலட்சக்கணக்கான பக்தர்களில் சுமார் 100 பேருக்கு மட்டுமே அனுமதிச் சீட்டு அளிக்கப்பட்டிருந்தது.

9 மணிக்கு என அறிவிக்கப்பட்டிருந்த திறப்பு விழாவிற்கு 6 மணியிலிருந்தே அழைக்கப்பட்டவர்கள் கூட ஆரம்பித்துவிட்டனர். 80 அடி உயரமும் 80 அடி அகலமும் கொண்ட மத்திய கோபுர அமைப்பில்தான் திறப்புவிழா நடந்தது. இதற்கு முன்புறம் திறந்தவெளியில் அழைக்கப்பட்டவர்கள் அமர்ந்தனர். பெருவட்ட வடிவமான திறந்த புல்வெளி (இதற்கென சிறப்பான புல்நாற்றுகள் மெக்ஸிகோவிலிருந்து பக்தர்கள் அளித்திருந்தனர்)யில் பட்டு போன்ற புல்தரையில் குளுமையான சூழ்நிலையில் விருந்தினர்கள் வசதியாக மடக்கு நாற்காலிகளில் அமர்ந்து கல்லூரி மாணவர்களின் பாண்டு வாத்திய இசையைக் கேட்டனர். சுமார் முன்னூறு மாணவர்கள் புனிதப்பட்டாடை தரித்து அந்த மாபெரும் கூட்டத்தைச் சுற்றிலும் வரிசையாக நின்று வேத கோஷம் செய்தனர்.

சரியாக 9 மணிக்கு பகவான் வந்து சேர்ந்ததும் வேதகோஷம் இயங்கியது. பகவான் அங்கு கூடி இருந்த விருந்தினர்களிடையேயும் மாணவர்களிடையேயும் சென்று அனைவரையும் ஆசிர்வதித்து அருள்புரிந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார். பிரதம மந்திரியின் வருகைக்காக பகவான் காத்திருந்தது பகவானின் எளிமையையும் நேரம் தவறாமைக்கு எடுத்துக்காட்டாக நடந்து கொள்ளும் விதத்தையும் பிரதிபலித்தது. காத்திருக்கும்போது பகவான் விருந்தினர்களுக்காகப் போடப்பட்ட சாதாரண

உணர்வுகள் மிருகத்தன்மையாக இருக்கும்போது உன்னை மனிதனெனக் கருதும் தகுதி உனக்கேது?




திரும்பு மடக்கு நாற்காலியில் (folding chair) அமர்ந்துவிட்டார். இதுகண்ட பக்தர்களின் மனம் பெரிதும் பரிதவித்தது அவர்கள் முகங்களில் பிரதிபலித்தது. சிலர் கண்கலங்கி விட்டனர். இது பகவானின் எளிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. எல்லாரும் உயரமான இடத்தில் அமர்ந்திருக்க பகவான் கீழே தாழ்ந்த இடத்தில் நாற்காலியில் அமர்ந்தது உள்ளத்தை உருக்கியது. 9.20க்கு பிரதம மந்திரியும் அவருடன் கூட வந்த மத்திய மந்திரி அர்ஜுன்சிங், ஆந்திர முதலமைச்சர் திரு. ஜனார்த்தன ரெட்டி, கர்நாடக முதலமைச்சர் திரு. பங்காரப்பா, ஆந்திர மாநில கவர்னர் கிருஷ்ணகாந்த், கர்நாடகக் கவர்னர் குர்ஷித் ஆலம் கான், மகாராஷ்டிர கவர்னர் திரு. சி. சுப்ரமணியம் மற்றும் ஆந்திரப்பிரதேச மந்திரிகள், மக்களவை சட்டசபை உறுப்பினர்கள் கொண்ட பெரிய குழுவினர் உடன் வந்தனர்.

பகவானின் பாதத்தில் தலைவணங்கிப் பணிந்த பிரதம மந்திரி நரசிம்மராவை பகவான் கையைப்பிடித்து எழுப்பிப் போதுமென்று ஆசி கூறி திறப்பு விழாவை நடத்தச் சொன்னார். நாடாவைக் கத்தரித்து பிரதான வாயிற்கதவைத் திறந்து வைத்தார் பிரதம மந்திரி. இந்த வாயிற்கதவு பெரிய தேவாலயங்களின் கதவு போல் மிக நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் சிறந்த கலைப்பொருள் போன்று அமைக்கப்பட்டிருப்பது அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. உள்ளே அந்த வானளாவிய 80 அடி கோபுரத்தின் (Dome) அடியில் மாநிலத் தலைவர்களும் மாநில டிரஸ்ட் அமைப்பாளர்களும் வெளிநாட்டில் உள்ள நிறுவனத் தலைவர்களும் இந்தப் பணிக்குச் சிறப்பு நன்கொடை கொடுத்த பெரியோர்களும் கூடி பிரதம மந்திரிக்கும் பகவானுக்கும் மரியாதை செலுத்தினர். அங்கிருந்து மருத்துவமனையின் முக்கிய பகுதிகளைச் சுற்றிப் பார்த்தபின் முதல் இதய அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருப்பதையும் வெளியிலிருந்து கண்ணாடி மூலம் முக்கிய விருந்தினர்கள் கண்டனர்.


அங்கு கூடியிருந்த அழைப்பினருக்கு சிறந்த இனிப்புப் பண்டமும் முந்திரிப் பருப்பும் ஐஸ் கிரீமும் வழங்க பகவான் ஆணையிட்டு அதை அக்கறையுடன் மேற்பார்வையிட்டார். (ஒரு டைரியும் மருத்துவமனைப் படம் கொண்ட காலண்டரும் ஒவ்வொருவருக்கும் வழங்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.)

இதன்பின்னர், பிரதம மந்திரியை மியூஸியத்திற்கும் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கும் அழைத்துச் சென்று காண்பித்து பிரசாந்தி நிலையத்தில் பூர்ண சந்திரா அரங்கில் மதிய உணவு வழங்கி அருளினார் பகவான்.



பகவான் பாபா வழங்கிய அருளுரை

நீங்கள் யாவரும், எப்போதும் பரஸ்பர அன்புடன் ஒருவருக்கொருவர் கருணையுடனும் இரக்கத்துடனும் உதவி செய்துகொண்டு, நல் லறத்துடன் கூடிய இல்லற வாழ்க்கை நடத்தி வருபவர்களாகவும் நல்லறிவை வளர்ப்பவர் களாகவும், கஷ்டப்படுவோர்களுக்குத் தாமத மின்றி சகாயம் செய்து, 'தர்மஜிக்ஞாசு' என்று கருதப்படும் வகையில் உத்தம மனிதர்களாக வாழ வேண்டுமென்பதே இங்கு கூடியுள்ள சாதுக்களான நல்லோர்களுக்கு நான் சொல்லும் அறிவுரை. இதைவிட மேலான எதை நான் சொல்லமுடியும்?



அகந்தையே துயரத்திற்கு மூலகாரணம்.

அகந்தை அகன்றால் அடைவீர் மகிழ்ச்சியும் சுகமும்.

உயிரினங்கள் யாவும் தெய்வத்துவத்தி லிருந்து தோன்றி தெய்வத்துவத்திலேயே வாழ்ந்து தெய்வத்துவத்திலேயே இணைந்து விடுகிறது. ஆக்கல், காத்தல், இணைதல் (ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம்) மூன்றிற்கும் தெய்வத் துவமே காரணம். சங்கல்பம் எனும் எண்ணத்தி லிருந்தே மனிதன் பிறந்து அதனாலேயே வளர்ந்து அதிலேயே சேர்ந்து விடுகிறான். யத் பாவம் தத்பவதி – எப்படி எண்ணுகிறானோ அப்படியே ஆகிறான். எண்ணத்திலிருந்து சொல்லும் சொல்லிலிருந்து செய்கையும் வரு கிறது. செய்கையின்படியே விளைவும் இருக்கும்.

பிரேம ஸ்வரூபிகளே,

உத்தமமான எண்ணங்களை வளர்த்து உத்தமமான சொற்களே பேசி உத்தமமான செய்கைகளில் ஈடுபட்டு இலட்சிய வாழ்க்கை வாழ வேண்டும். வாழ்க்கை குணத்தைப் பொறுத்தே அமையும். மனிதன் ஆத்ம தர்மத் தையே கடைப்பிடிக்க வேண்டுமேயன்றி சரீர தர்மத்தைக் கடைப்பிடிக்கலாகாது. இந்திரிய தர்மம் மிருக தர்மம். மனிதன் பின்பற்ற வேண் டியது தெய்வத்துவமே. பிரகிருதி ஈஸ்வர ஸ்வரூபம். ஆகவே ஈஸ்வர பாவத்தையே மனிதர்கள் கொள்ள வேண்டும். படைப்பே தெய்வ சக்தியின் வடிவம். இதன் பெயரே பிர கிருதி. இங்கே பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் தெய்வ சக்தி உள்ளது. மனிதன் தன்னுள் உள்ள தெய்வத்துவத்தை வெளிக்காட்டவே பிறப்பு எடுக்கிறான். மனிதப்பிறவி புனிதமானது. வாழத்தக்கது. லட்சியத்தை அடைய உதவக் கூடியது. படைப்பில் தெய்வத்துவமும் பிர கிருதியும் வெவ்வேறல்ல. மனிதத்துவமே தெய்வத்துவமென்பதை உணர்த்தவே உலகில் அவதாரங்கள் தோன்றுகின்றன. தெய்வத்துவத்திலிருந்து தெய்வத துவமே வெளிப்படும்.



அவசரம் விரயத்தில் வீழ்த்தும்
விரயம் கவலையை வளர்க்கும்
அவசரத்தைத் தவிர்த்திடுவீர்
நிதானத்துடன் செயல்பட்டு
சுகமடைவீர்!

திவ்யாத்ம ஸ்வரூபிகளே,

தெய்வத்துவம் தனியாக இல்லை. ஈஸ்வர: சர்வபூதானாம். ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம்: என்றபடி ஈஸ்வரன் எங்கும் நிறைந்துள்ளான். எல்லாமே ஈஸ்வரத்துவம்தான். இப்படிப்பட்ட அருமையான மேன்மையான தெய்வத்துவமான மனிதவாழ்வை புலனிச்சையில் ஈடுபட்டு உலக சுகங்களில் வீணடித்துக் கொண்டிருக் கிறார்கள் மனிதர்கள். ஆன்மிகமென்பது உலக வாழ்க்கையிலிருந்து வேறுபட்டதெனக் கருது வது சரியல்ல. பௌதிக, லௌகிக, ஆஸ்திக ஆகிய எல்லாவற்றிலும் ஆன்மிகம் அடிப்படை யாக உள்ளது. இப்படிப்பட்ட திவ்யமான அடிப்படையை மறந்து, அசத்தியமான அழியக் கூடிய மாறுதலுக்குட்படக் கூடியவற்றை நம்பி வாழ்வது துரதிர்ஷ்டவசமானது.

கணத்துக்குக் கணம் மாறிக் கொண்டே இருக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் மாறாமல் இருக்கும் ஆதார சக்தி ஒன்று உள்ளது. இந்த ஆதாரமான தெய்வசக்தியை உணர்ந்தால்தான் ஆனந்தம் பெற இயலும். எந்தப் பாதையில் சென்றாலும் இந்தத் தெய்விக அடிப்படையை மறக்காமல் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் இந்நாளைய மனிதர்கள் தனம், பதவி, அதிகாரம் போன்றவற்றில் நாட்டம் கொண்டு செயல்படுகின்றனரேயன்றி குணத்தில் நாட்டம் கொள்வதில்லை. குண மில்லாமல் அதிகாரம் செலுத்துவதோ, உயர் பதவி வகிப்பதோ, பணம் சம்பாதிப்பதோ பய னில்லை. மனிதருக்கு முக்கியமான தகுதி குணமே. இதற்கு தெய்வத்துவத்தை உணர முயலவேண்டும். இயல்பை விட்டு விட்டால் வாழ்க்கை வீணாகிவிடும்.

நல்லதுக்கும் கெட்டதுக்கும் எண்ணமே கார ணம். எல்லாமே சத்தியத்திலிருந்து வந்தவை. சத்தியமே தெய்வஸ்வரூபம். சத்தியமே எல்லாவற்றிற்கும் ஆதாரம். "சத்யம் நாஸ்தி பரோதர்ம:" சத்தியத்தைவிட மேலான தர்மம் வேறு இல்லை. படைப்பனைத்தும் சத்தியத்தில் பிறந்து சத்தியத்திலேயே இணைகின்றன. சுத்த சத்துவமே அதன் துணை. இதில் குணத்திற்கே முக்கியத்துவம் உள்ளது. எவ்வளவு தன வந்தராயினும் குணமே பிரதானமானது. தெய்வத்துவத்துடன் கூடிய நற்குணமே மனிதத்தன்மையை வெளிப்படுத்தக் கூடியது: இந்தத் தெய்விக உணர்வினைப் பற்றிப்பாரத மக்கள்தான் நன்றாகத் தெரிந்து கொண்டிருந் தார்கள். இன்று இப்படிப்பட்ட உயர்ந்த கலா சாரத்தை மறந்துவிட்டனர். தெய்விக உயர் வினை மறந்துவிட்டது மிகுந்த துர்பாக்கியமே. எல்லாத் தனங்களையும் விட மிகவும் உயர்ந்த தனம் 'சகன' என்ற பொறுமையே. எல்லா விர தங்களையும்விடச் சிறந்த விரதம் சத்தியமே. தாய்மையைவிடச் சிறந்த பாவம் ஏதுமில்லை. பிராணனை விட மேலானதாக மானத்தைக் கருதுவது நமது பாரத மக்களின் மரபு. மானமே பெரிதென்பதை இன்று மறந்து விட்டனர் பாரத மக்கள். அந்நிய நாட்டின் கலாசாரங்களைப் பின்பற்றி நம்நாட்டுக் கோட்பாடுகளை மறந்து இன்று அவலநிலைக்கு வந்துள்ளனர் இந்தியர். தனது பலத்தைத் தானே உணராத யானை பாகனுக்குப் பணிவதுபோல் நம் நாட்டவர்கள் பிறநாட்டினரைப் போல் வாழ்க்கை நடத்த முயன்று அவல நிலைக்கு வந்துள்ளனர். இந்தியரின் வாழ்க்கை முறை சுயநலமற்றது. அது ஆத்ம விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை இழந்ததால்தான் இன்று இந் நிலையில் உள்ளோம்.



திவ்யாத்ம ஸ்வரூபிகளே,

நீங்களே தெய்விக ஆத்மாவின் வடிவங்கள். உங்களை நீங்களே தெரிந்து கொள்ளாதது எவ்வளவு துரதிர்ஷ்டவசமானது என்று சிந்தி யுங்கள். உங்கள் உண்மையை உணர்ந்தால், உங்களுடைய சக்தியை உணரலாம். அது தானே வெளிவந்து உங்களுக்கு ஆனந்தத்தை அளிக்கும். (self-confidence) ஆத்ம விசுவாசமே எல்லாவிதமான ஆனந்தத்துக்கும் மூல கார ணம். இதை வளர்க்க வேண்டும். இன்றைய உலகம் அதிருப்தியிலும் அமைதியின்மையிலும் குழப்பத்திலும் ஆழ்ந்திருக்கிறது. இந்த நிலையை மாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்? இதற்கு சக்தி உள்ளதா? ஆத்மசக்தியுடன் ஒவ்வோர் இந்தியரும் இதில் தீவிரமாக முயன்றால் ஆத்ம விசுவாசத்தின் மூலம் ஆத்ம சாந்தி பெற இயலும். பரோபகாரம் செய்யும் உறுதி ஒவ்வொருவருக்கும் வேண்டும். ஒவ் வொருவரிடமும் அன்பு பாராட்டாவிடில் அது மனிதத்தன்மை அல்ல. எல்லா இடங்களிலும் இந்த எண்ணத்தை வளர்த்து, இலட்சிய மனிதர்களாக வாழ வைக்கும் உறுதியுடன் பாடுபட வேண்டும். மனிதன் பலஹீனமானவன்

அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை மற்றும்
பண்பு, மனஉறுதி, ஈகை இவை மனிதனை தேவனாக்கும்

அல்ல. தெய்வ சக்தி ஒவ்வொருவரிடமும் உள்ளது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன?

கிராம முன்னேற்றத்திற்காக அரசாங் கங்கள் எவ்வளவோ திட்டங்கள் நிறைவேற்ற பாடுபட்டு வருகின்றன. ஆனால் சொல்வது எளிது - செய்வது கடினம். எவரும் கிராமத் தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. முன் னேற்றப் பணிகளில் சிரத்தை காட்டுவதில்லை. நம் நாடு செல்வம் மிகுந்ததே. அப்படி இல்லா விட்டால் முன்னாளில் பிரிட்டிஷாரும், பாரசீகர் களும், முகலாயர்களும் ஏன் இந்த நாட்டின்மீது படை எடுக்க வேண்டும்? செல்வம் செழித் திருந்ததால்தான் அவர்களின் நாட்டம் பாரத நாட்டின் மீது விழுந்தது. நாமே இதை ஏழை நாடாகக் கருதி வருகிறோம். இதனால் பெரிய அபாயம் நிகழ்ந்துள்ளது. அதுவே ஆத்ம விசு வாசம் நசித்துப் போய்விட்டதாகும். அதனால் தான் நாடு பின்தங்கிப் போய்விட்டது: இந்தப் பின்தங்குதலைத் தடுத்து நிறுத்தி முன்னேற்றப் பாதையில் நாம் செல்ல முயலவேண்டும். பின்நோக்கிச் சென்றால் பள்ளத்தில்தான் வீழ்ந்து விடுவோம். நமக்கு தனமும் வாகனமும் மற்ற பரிவாரங்களும் தேவையில்லை. இவை யாவும் ஓடும் மேகங்களே. நற்குணமும் நற் பண்புமே உண்மையான அழியாத செல்வ மாகும். இதை வளர்த்துக் கொள்வதே உண்மை யான கல்வி. பரோபகார சம்பந்தம் கொண்டதே தெய்வகுணம். இதை வளர்ப்பதே முக்கியமான பணியாகும்.

சமுதாயத்திற்கும், அரசாங்கத்திற்கும், தனி மனிதருக்கும் இதை நிரூபிக்கும் நோக்கத்துடனே சுவாமி சின்னச் சின்ன பணியிலிருந்து மிகப் பெரிய பணி வரையில் எல்லாவற்றையும் தொடங்கிவைத்து, செய்து வருகிறார்.

இந்த புட்டபர்த்தி கிராமம் 200 பேரை மட்டுமே ஜனத்தொகையாகக் கொண்டது. இப் படிப்பட்ட குக்கிராமத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படுவது கனவிலும் எண்ணிப்பார்க்க முடியாதது. ஒரு மாவட்டத்தின் முக்கிய நகரத்தில்கூட இல்லாத ஆகாய விமான மையம் இக் குக்கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டதும் ஒரு விசித்திரமே. உலகிலேயே பல நாடுகளின் மக்களும் நாடிவரும் ஒரே குக்கிராம மையமாக விளங்குவது இந்த புட்டபர்த்தி. பெரிய மாநகரங்களில் மட்டுமே நிறுவப்படக்கூடிய இந்த பிரும்மாண்டமான ஆஸ்பத்திரி இந்தக் கிராமத்தில் நிறுவப்பட வேண்டிய காரணம் என்னவென்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெரிய நகரங்களில் உள்ளவர்கள் மற்றும் செல்வர்கள் எங்காவது சென்று பல லட்சம் செலவு செய்து தங்களது நோய்க்கு நிவாரணம் காணலாம். ஆனால் ஏழை கிராம மக்கள் வெகுதூரம் போக முடியாது. இப்





அன்பின்றிக் கடமை புரிதல் வருந்தத்தக்கது. அன்புடன் கடமை புரிதல் விரும்பத்தக்கது. கடமையின்றி அன்புகாட்டுதல் தெய்விகமானது. தெய்விகத் தொண்டே முக்தி பெறும் மார்க்கம்!



படிப்பட்ட ஏழை கிராம மக்களுக்கெனவே இந்த மாபெரும் மருத்துவமனை நிறுவப்பட்டுள்ளது. முதலில் டாக்டர்களை கிராமங்களுக்குச் சென்று அங்கு மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கச் செய்தேன். அவர்கள் சிரமப்பட்டு கிராமங்களுக்குச் சென்று இதய நோயாளி களைப் பரிசோதனை செய்தனர்.

இன்று ஒரு நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்ல முன்வந்துள்ளேன். பிரதம மந்திரி மருத்துவமனையைத் திறந்து வைத்ததும், 15 நிமிடங்களுக்குள் ஆபரேஷன் (இதய அறுவை) ஆரம்பமாகிவிட்டது. 3 மணி நேரத்திற்குள் நான்கு (major operations) பெரிய அறுவை சிகிச்சைகள் நடைபெற்றன. அதில் ஒன்று மிகவும் சிக்கலானது (complicated). இதயத்தில் ஓர் ஓட்டை இருந்தது. அதையும் சரிசெய்து அவர்கள் இப்போது நலமுடன் உள்ளனர். இந்த ஆஸ்பத்திரி கட்டடம் நிறுவப்பட்டதன் விவ ரங்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். Larsen & Toubro எவ்வளவோ கட்டடங்கள் இங்கு மட்டுமின்றி வெளிநாடுகளிலும்கூடக் கட்டிப் பெரும்புகழ் பெற்ற கம்பெனியாகும். எங்கு கட்டட வேலை நடப்பினும் இங்கு பணியில் ஈடு பட்டவர்கள் அடைந்த ஆனந்தம் வேறு எங்கு பணி செய்தவர்களும் அடையவில்லை. கீழ் நிலைப் பணியாளர் முதல் மேல்நிலைவரை அனைவரும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

மே மாதம் கொடைக்கானலிலிருந்து நான் திரும்பி வந்ததும்தான் இந்தக் (project) கட்டு மானப் பணி தொடங்கப்பட்டது. இப்போது 5 ஆண்டுகளில் கட்டக்கூடிய மாபெரும் கட்டடம் 5 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது மகத் தான சாதனையாகும். இது 1000 ஆண்டுகள் வரை நீடித்துப் பயன்படக் கூடியது. எந்தவித விஸ்தரிப்புப் பணியும் தேவைப்படாது. எனது உத்தேசம் முதலில் இதய அறுவை, இரண் டாவது (lungs) சுவாசப்பை சிகிச்சை, மூன்றா வது சிறுநீரகக் கோளாறுக்கான அறுவை சிகிச்சை, அதற்குப்பின் மூளை ஆபரேஷன். இந்த நான்கு அம்சங்களிலும் மிக உயர்ந்த சிகிச்சை கிராம மக்களுக்கு அளிக்கவே இந்த ஆஸ்பத்திரி தொடங்கப்பட்டது.

எனக்கு நகரத்திற்கும் கிராமத்திற்கும் வேறுபாடு காணும் இயல்பு கிடையாது. நோய் வருவது கிராமத்தாரா, நகரத்தாரா என்ற பாகுபாடின்றி வரக்கூடும். நிவாரணத்திலும் எந்த பேதமுமில்லை. கிராமத்தாருக்கும் நக ரத்திலிருந்து வருபவர்களுக்கும் ஒரே மாதிரி யாகவே சிகிச்சை அளிப்பது எங்களது சங் கல்பம். உலகில் எந்தப் பணி செய்வதாயினும் சரீரம் முக்கியமாகும். எல்லா தர்மத்திற்கும் சரீர ஆரோக்கியம் முக்கியம். மனிதன் தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்ற நான்கு புருஷார்த் தங்களையும் கொண்டவன். இதில் எதற்கும் ஆரோக்கியம் அவசியம் ஆகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

ஆனால் ஆரோக்கியமான சரீரத்துடன் நற்பணிகளைச் செய்தல் வேண்டும். துரதிர்ஷ் வசமாக இன்று மனிதர்கள் அர்த்தம், காமம் என்ற நடு இரண்டையும் பின்பற்றித் தலையும் காலுமான தர்மத்தையும் மோட்சத்தையும் நாடுவதில்லை. துன்மார்க்கத்தில் பிர வேசிக்கும் சரீரம் இருந்தும் பயனில்லை. சரீ ரத்தை நற்பணியில் ஈடுபடுத்துதல் முக்கிய மாகும்.

பிரேம ஸ்வரூபிகளே,

உலகமே கடவுளின் வடிவம்தான். எட்டுவித சக்திகளுடன் இந்த உலகைப் படைத்துள்ளார் இறைவன். மக்களுக்கு முக்கியத்தேவை ஜலமே. பூமியில் மூன்று பாகம் நீரே நிறைந் துள்ளது. மனிதருக்கு உயர் சக்தியளிப்பது நீரே. உபநிஷத்தில் இதை தெய்வஸ்வரூபமாக விவரிக் கின்றனர்.

இரண்டாவது 'அக்னி' (தீ) இது ஒவ்வொரு வரின் வயிற்றிலும் ஜடராக்கினியாக இருந்து உண்ணும் உணவை செரிக்க வைத்து 'ரஸ'மாக அங்கங்களுக்கெல்லாம் அனுப்புகிறது. இந்த அக்னியில்லையெனில் மனிதருக்குப் பசியும் இராது. உணவைச் செரிக்கும் சக்தியும் இராது. ஏழு தாதுக்களும் இந்த ரஸத்தினால் இயங்கு கின்றன. ஆகவே தெய்வத்தை 'அங்கீரஸ' என்று விவரிக்கின்றனர்.

மூன்றாவது 'பூமி'. இதிலேயே 'ஸ்ருஷ்டி ஸ்திதி, லயமெனும் மூன்றும் நிகழ்கின்றன. வாழ்வுக்குத் தேவையான உணவுப் பொருள்களும் மூலிகைகளும் பூமியிலிருந்தே விளைகின்றன. ஆகவே உயிர்சக்தியளிக்கும் இதுவும் பகவத் ஸ்வரூபமே.

அன்பும் அமைதியும் இறைவனின் இயல்பு.

அறமும் வாய்மையும் இறைவனிடம் இணைக்கும்.

நான்காவது 'வாயு' (காற்று). இது வாழ்வின் சிறந்த துணைவனாகும். ஒவ்வொரு விநாடியும் காற்றைச் சுவாசிக்கிறோம். உள்ளிழுக்கும் போது 'ஸோ' என்றும் வெளிவிடுவது 'ஹம்' என்றும் இந்த சுபாவமே மனித வாழ்க்கையின் மிக முக்கிய தத்துவத்தை விளக்குகிறது. போதனா கூறினார் "நான் பாடியது பாகவதம் - பாட வைத்தது அவனே (இறைவனே)". நான் என்பது 'அஹம்' எனப்படும். சம்ஸ்கிருதத்தில் அவன் என்பது 'ஸஹ'. ஆகவே 'அவன் நானே' என்பதே 'ஸோஹம்' என்பதன் பொருள். 'நான் தெய்வம்' என்பதை இது போதிக்கிறது. வாயு இப்படிப்பட்ட உண்மையை நமக்கு உணர்த்தி வருகிறது. ஒரு நாளைக்கு 21,600 முறை சுவாசிக்கிறோம். இந்த வாயு இல்லாவிடில் நமது வாழ்வே வியர்த்தமாகிவிடும். இதுவும் தெய்வ ஸ்வரூபமே.

ஐந்தாவது ஆகாசம். இதுவே பஞ்சபூதங்களில் மற்ற நான்கிற்கும் இடம் கொடுத்து எங்கும் பரவியுள்ளது. எல்லாமே ஆகாசத்திலிருந்து வருபவையே. ஆகாசம் சப்த ஸ்வரூபம். சப்தமே பிரும்மம் - சப்தப்ரும்மயி, சராசரமயி, ஜோதிர்மயி, வாங்மயி, நித்யானந்தமயி, பராத்பரமயி, மாயாமயி, ஸ்ரீமயி என்ற எட்டு சக்திகளிலும் முதலில் உள்ளது சப்தமே. இது எங்கும் பரவியுள்ளது. ஆகாசம் என்பது எங்கெங்கு சப்தம் உள்ளதோ அங்கு எல்லாம் உள்ளது. இதுவும் பிரும்மஸ்வரூபம். ஆறாவது சூரியன். இது உஷ்ண ஸ்வரூபம். ஜலவாயு (Hydrogen), ஹீலியம் வாயுவாக மாறும்போது உஷ்ணம் உண்டாகிறதென்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. எல்லா சக்திகளிலும் எட்டு சக்திகளும் அடங்கியுள்ளன. இவை (1) Mechanical யந்திர, (2) Heat உஷ்ண, (3) Light காந்தி, (4) Magnetic காந்தசக்தி, (5) Electric மின், (6) Rasa sakthi ரஸ சக்தி, (8) Atomn power அணுசக்தி (குறிப்பு : ஏழவது சக்தியை ஸ்வாமி குறிப்பிடவில்லை. ஆ-ர்). இவை அஷ்டைஸ்வர்ய ஸ்வரூபமாக உள்ளன. விஞ்ஞானிகள் ஒரு விநாடியில் (second) 4000 லட்சம் டன் சக்தி சூரியனிடமிருந்து வெளிவருவதாகக் கணித்துள்ளனர். இந்த அளவில் சக்தி வெளிப்படுத்தினாலும் எத்தனையோ லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குச் சூரியனின் சக்தி குன்றாதிருக்கும். இந்தச்சக்தியை எவரும் விவரிக்க முடியாது. 'அவாங்கமனஸகோசரம்' புத்திக்கும்-மனதுக்கும் எட்டாத சக்தி. சூரியன் புத்திக்கு அதிபதி. இவரே ஆறாவது சக்தி வடிவம். அடுத்து சந்திரன் - இவர் மனதிற்கு அதிபதி. மனோமூலம் ஜகத். இந்த உலகே மனதினால் அடங்கியதே. உதாரணமாக ஹைதராபாத்திலிருந்து இங்கு வந்து அமர்ந்திருப்பவர் ஒரு செகண்டில் ஹைதராபாத்துக்கோ டெல்லிக்கோ மனதினால் சென்று அடைந்துவிடலாம். மனோவேகம் ஒளிவேகத்தைவிட அதிகமானது. இதுவே ஏழாவது சக்தி - அடுத்தது கர்மசக்தி / இதுவும் 'பகவத்ஸ்வரூபமே - மனிதன் கர்மத்தினால் பிறந்து, வளர்ந்து, மடிகிறான். இதையே 'யக்ஞம்' என்பர் - விஷ்ணு யக்ஞ ஸ்வரூபன் - அவரே விஸ்வஸ்வரூபன். ஆதலால் கர்ம சக்தியும் பகவத்ஸ்வரூபமே. இன்று மனிதர்கள் இவற்றைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆகவேதான் அவல நிலையில் உள்ளனர்.



சப்த, (ஒலி) ஸ்பரிச, (ஊறு) ருப, (ஒளி) ரஸ, (சுவை) கந்தம் (மணம்) என்ற ஐந்து புலனுணர்வுகளையும் சரியாய் பயன்படுத்தாமல் புலனுறுப்புகளைத் தவறான வழியில் செலுத்தி பாதைபடுகின்றனர். அவற்றைத் துஷ்பிரயோகம் செய்வதால் மூலப் பொருள்கள் ஐந்தும் மனிதனிடம் வெறுப்புணர்வு கொண்டுவிடுகின்றன. அவர்கள் பிறரை நிந்திப்பதும் குறைகூறுவதும் தான் முக்கியமாகக் கொண்டுள்ளனர். தீய எண்ணங்களும், தீய பார்வைகளும் தீய செய்கைகளும் அதிகமாகிவிட்டன. நல்ல வார்த்தை கேட்பதில்லை. ஊராரின் வம்புகளென்றால் இரண்டு காதுகளையும் விரித்துக் கொண்டு ஆவலாய்க் கேட்கின்றனர். தெய்வத்தைப் பற்றிக் கேட்க முயல்வதில்லை. இதனால் மனமும் கெட்டு, உணர்வுகளும் கெடுகின்றன. காற்றும் மாசுள்ளதால் மூச்சுக்காற்றும் தீயதாகவே உள்ளது. உண்ணும் உணவும் தீயதாக உள்ளது.

நமது கஷ்ட துக்கங்களுக்குக் காரணம் நாம் பஞ்சபூதங்களைத்தீயவழியில்பயன்படுத்துவதே. நல்லதையே கேட்டு, பேசி, பார்த்து, நினைத்து செய்துவந்தால் பஞ்சபூதங்களும் உதவிகரமாக இருக்கும். தெய்வானுக்கிரகமும் கிட்டும்.

நம்மைப் போற்றி வளர்ப்பவற்றையே நாம் விரோதித்துக் கொண்டால், அனுக்கிரஹம்

அறநெறி பற்றி வாய்மை காத்து

அன்புவழி வாழ்ந்து அமைதி அடைவீர்!

எப்படி நமக்குக் கிட்டும்? உங்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பவர்களை நிந்திப்பதே இந்நாளைய கல்வித் துறையின் முன்னேற்றம். இது முன்னேற்றமா? நல்லதை நாடாமல் நற்குணம் இல்லாமல் தனத்தையே நாடுகின்றனர். இதயம் நாற்றக்குட்டையாகி விட்டது. அதிருப்தி அதிகமாகி சுயநலமே அதிகம் உள்ளது. இது கல்வியின் இலட்சணமல்ல. பரோபகார சிந்தையும் ஆத்ம வித்தையும் முக்கியமாகக் கற்க வேண்டியவை. ஒற்றுமையை வளர்க்கும் வித்தையை வளர்க்க வேண்டும். இன்று உண்மையான கல்வித் தேர்ச்சி பெற்றவர் எவருமே காணப்படவில்லை. புத்தகப் படிப்பும், பட்டம் பெறுதலும் வித்தையல்ல. சுகுணமும், சுஞானமும் பெறுவதே உண்மைக்கல்வி. வயிற்றை நிரப்புவதில் மிருகங்கள் கூடத்தான் ஈடுபடுகின்றன. இதற்குக் கல்வி தேவையா? Living வாழ்தலுக்கும் Life புனித வாழ்விற்கும் என்ன வேறுபாடு? ஒரு விஞ்ஞானி சோதனைக் கூடத்தில் 2 பாகம் ஹைட்ரஜன் 1 பாகம் ஆக்ஸிஜன் சேர்த்தால் நீர் வருமென்கிறார். இது விஞ்ஞானக் கல்வி (Theory) நீரை எப்படி எல்லாருக்கும் சமமாக விநியோகிப்பது என்பது நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டியது (practical). இவை இரண்டும் இணைய வேண்டும். கன்னடத்தில் ஒரு பழமொழி உண்டு.



நீருக்கு தாமரை ஆபரணம்
நகருக்கு தெருக்கள் ஆபரணம்
கடலுக்கு அலைகள் ஆபரணம்
ஆகாயத்திற்கு சந்திரன் ஆபரணம்
மனிதனுக்குக் குணமே ஆபரணம்

என்பதே இப்பழமொழியின் பொருள். நமக்கு அளிக்கப்பட்ட அழகு மாற்ற முடியாதது. அதை மேலும் சிறப்பாக்க முயற்சி செய்வது தேவையற்றதே. எவ்வளவுதான் தேய்த்தாலும் சரீரத்தின் நிறம் மாறாது! குணமே மனிதருக்கு அழகு!

God is beauty - கடவுளே அழகின் உருவம். எதற்காக அவரளித்த அழகிற்கு அழகு சேர்க்க முயல வேண்டும்? ஆத்யாத்மிகம் என்றால் பஜனை, ஜபம், தியானம் அல்ல. எல்லாரிலும் உள்ள ஒற்றுமையை ஆத்மாவைக் காண்பதே ஆத்யாத்மிகம். சமத்துவத்தை வளர்க்க வேண்டும்.

சரீரம் அவசியம் - இத்துடன் குணம் சேர்ந்தால் இலட்சிய வாழ்க்கை வாழலாம். இரண்டும் தேவைதான்.

மானிடப் பிறவி அரிது. இதை அடுப்புக் கரிக்கு விலை பேசுகிறோம். இது வைரம், மாணிக்கம் போன்றது.

நல்ல எண்ணம், நல்ல சொற்கள், நல்ல செய்கைகளில் ஈடுபட வேண்டும். காலையிலிருந்து இரவு வரை தன்னலத்தையும் நான், எனது என்ற உணர்வையும் வளர்க்காமல் "லோகாஸ்ஸமஸ்தா: ஸுகினோ பவந்து" என்று எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுவதே சரியான வழி. எவரிடமும் வெறுப்புணர்வு தேவையில்லை. எவருக்கும் எவரும் விரோதியில்லை. எல்லாரும் எனக்கு வேண்டியவர்களே. நீங்களும் இந்த உணர்வை வளர்க்க வேண்டும். எல்லாரும் நன்றாக இருந்தால்தான் நீங்களும் நன்றாயிருக்கலாம். உன்னை வெறுப்பவரையும் நேசிக்க வேண்டும்.


"பகவான் பிரேமஸ்வரூபி. ஆனால் எனது குறையைப் போக்கவில்லை" என்கின்றனர். அவர் சொல்லியபடி நீங்கள் நடக்கிறீர்களா என்று சுயசோதனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் அவரது போதனையைக் கடைப்பிடித்தால்தான் தெய்வம் உங்களுக்கு உதவும்.

பகவத்கீதை, இராமாயணம் இவற்றைப் பாராயணம் செய்கிறீர்கள். அது பயன் தராது. அவற்றில் உள்ள போதனையைக் கடைப்பிடிக்க வேண்டும். இராமாயணம் படிப்பவர்கள் இன்று பித்ரு வாக்கிய பரிபாலனம் செய்கின்றனரா? பேசுவதில் (Hero) சூரர் - காரியத்தில் (Zero) சுன்னமே - இப்படிப் பின்பற்றாமல் இவற்றைப் பாராயணம் செய்து என்ன பயன்? பாகவதம், பைபிள், திருக்குர்ஆன், கிரந்த் சாஹிப் யாவும் பின்பற்ற வேண்டியவையே. வாழ்க்கை முழுவதும் படிப்பதிலே என்ன பயன்? நூலகத்தில் பல்லாயிரம் புத்தகங்கள் உள்ளன. நூலகத்திற்கு இதில் எதுவும் தெரியாது. மனிதர்களும் இப்படித்தான். எல்லாவற்றையும் கேட்டு ஒன்றையும் பின்பற்றாமலிருக்கின்றனர். ஆஸ்திகர்கள் கேட்டதைப் பின்பற்ற வேண்டும். பரோபகாரத்தை வளர்க்க வேண்டும். மானிட சேவையே மாதவ சேவையாக, பர சேவையை பரமாத்ம சேவையாகப் பாவித்துச் செய்திடுங்கள். இதுவே நீங்கள் செய்ய வேண்டிய சாதனை - பஞ்ச பூதங்களைத் தீய வழிகளில் பயன்படுத்தாதீர்கள். எப்போதும் தெய்வ சிந்தனையுடன் சேவைப் பணியில் ஈடுபடுங்கள். ●

—பாபா.

அன்பெனும் நீரூற்று பெருகிடில்
துன்பமெனும் கொடிய தாகம் தீர்ந்துவிடும்.

அமுதசுரபியின் 'முக்கனி'- திட்டம்



ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ.3000/- டெபாசிட் செய்து 6 வருடங்களில் இரட்டிப்பாக ரூ.6000/- பெறுங்கள்.

44 வருடங்களாகத் தமிழகத்தில் தொடர்ந்து வெளிவரும் "அமுதசுரபி" தமிழ்ப் பெருமக்களால் விரும்பிப் படிக்கப்படும் தமிழ் மாதப் பத்திரிகை.

இயல், இசை, நாடகத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் ஸ்ரீராம் நிறுவனங்களின் ஓர் அங்கமான ஸ்ரீராம் டிரஸ்ட், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிய 'அமுதசுரபி'யை வெளியிடுகிறது.

அதன் தொடர்பாக வாசகப் பெருமக்களுக்கு இனிய பல நல்ல பலன்களை அளிக்கவே இந்த முக்கனித் திட்டம்.

முக்கனி போனஸ்:

1. ஒவ்வொரு மாதமும் "அமுதசுரபி" மாத இதழ் சந்தா முதலீடு செய்த உங்களுக்கோ அல்லது நீங்கள் விரும்பும் அன்பருக்கோ அனுப்பப்படும்.

   ஆறு வருடத்திற்கு, வருடா வருடம் "தீபாவளி மலர்" பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

   நீங்கள் முதலீடு செய்தவுடன் உங்களுக்கு (அன்பளிப்பாக) 8 கிராம் எடையுள்ள பூஜையில் வைப்பதற்கேற்ற வெள்ளிப் பதக்கம் அளிக்கப்படும்.

உங்கள் முதலீட்டிற்கு, ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (Shriram Investments) முழு உத்திரவாதம் அளிக்கிறது.

சந்தா முதலீட்டுத் திட்டத்தில் (டெபாசிட்) முதலீடு செய்பவர்களுக்கு :

1. தமிழ் அன்பர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளிக்கப்படும் டெபாசிட் இது.
2. ரூ.3000/-ம் டெபாசிட் தொகை ஆறு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் ரூ.6000/-ம் ஆகத் திருப்பித் தரப்படும்.
3. டெபாசிட் தொகையை டிராப்ட்டாகவோ, செக்காகவோ "ஸ்ரீராம் டிரஸ்ட்" பெயருக்கு கிராஸ் செய்து Account Payee எனக் குறிப்பிட்டு எழுதப்படல் வேண்டும்.
4. டெபாசிட்டுகளைத் தனியாகவோ கூட்டுக் கணக்காகவோ அளிக்கலாம். திரும்பப் பெறும்போது முதலில் குறிப்பிட்டுள்ள பெயருக்கோ அல்லது எழுத்து மூலம் தெரிவிக்கப்படுபவருக்கோ டெபாசிட் தொகை அளிக்கப்படும்.
5. ஆறு ஆண்டு காலத்திற்குப் பிறகே டெபாசிட் தொகை (இரட்டிப்பாக) திருப்பி அளிக்கப்படும்.

கலையும், நிதியும் கலந்து அளிக்கும் ஸ்ரீராம்.


புத்தகக் காட்சியில் சில மணி நேரம்

இரண்டாவது உலகப் பாருக்குப் பிறகு தொடங்கப் ட்ட தென்னிந்திய புத்தக விற்னையாளர் மற்றும் வெளியீட் ாளர்கள் சங்கம், முதலில் ருசில புத்தக இறக்குமதி ாளர்களின் அமைப்பாக ருந்து, பிறகு வெளியீட்டாளர் ளும் சேரச் செழிப்புற்று, ுபதுகளில் தமிழ்நூல் வெளி ட்டாளர்களின் வரவால் வலுப் பற்று. இன்று 168 உறுப்பினர் ளுடன், தென்னகத்தில் ஆங் லை - தமிழ் நூல்கள் வெளியீடு, மாத்த விற்பனை , சில்லறை ிற்பனை ஆகிய துறைகளின் ளிப்பெரும் பிரதிநிதியாகச் சயல்படுகிறது. வெளியீட் ாளர், விற்பனையாளர் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதொன்றே கடமையென்று இருந்த நிலை மாறி, 1976இல் புத்தகக் காட்சியை நடத்த ஆரம்பித்து, பொதுமக்களின் வரவேற்பு கண்டு உற்சாகத்துடன் இயக்கம் தொடர்கிறது.

வெவ்வேறு தேவைகளுக்கேற்ற, பல்வகை நூல்களும் ஒரே இடத்தில் காணக் கிடைப்பது புத்தகம் வாங்குவோர் அடையும் பயன். புதிது புதிதாய் வரும் புத்தகங்களை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக வெளியீட்டாளர்களும் விற்பனையாளர்களும் பெறும் நன்மையும் பெரிது. 1992 ஜனவரி 4 முதல் 16 வரை, காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்ற, இந்த வருடக் காட்சி பற்றித் தெரிந்து கொள்வோமே!

குடும்பத்தலைவி திருமதி சூர்ய குமாரி :

டி.டி. 'மேப்ஸ்' வெளியிட்டிருக்கும் சென்னை நகர வரைபடம் வாங்கினோம். விலை அதிகம்தான். எங்கள் வீட்டிற்குப் புதிதாக வருபவர்கள் எவரும் கண்டுபிடிக்கச் சிரமப்படும் எங்கள் தெருகூட அதில் இருக்கிறதே! என் தாய்மொழியான தெலுங்குமொழிப் புத்தகங்களுக்கான ஒரு விற்பனை நிலையத்தின் தனி ஸ்டால் பார்க்கையில் மகிழ்ச்சியாகத்



தான இருக்கிறது. வரவிருக்கும் யுகாதிக்கான பஞ்



சாங்கம் இப்போதே கிடைத்து விட்டது. 'நீதிசாஸ்த்ரமு' என்ற அறநெறி விளக்கம் வாங்கினேன். 'வசு சரித்ரம்', 'மனு சரித்ரம்' போன்ற பயனுள்ள நூல்கள் 15 ரூபாய் 20 ரூபாய் என்ற விலைக்குக் கிடைப்பது பாராட்ட வேண்டிய ஒன்று. காகிதம், அச்சு அவற்றின் தரம் சுமார்தான்.



தினமணிகதிர் துணை ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன் :-

இரவல் வாங்கிப் படிக்க விழையும் நம்மவர்களை விலை கொடுத்துப் புத்தகம் வாங்கச் செய்வதில் புத்தகக் கண்காட்சி வெற்றி பெற்றுள்ளது என்றே தோன்றுகிறது.

வடமொழி விற்பன்னர், விரிவுரையாளர் திரு. கோடா வெங்கடேஸ்வர சாஸ்திரி :

ஐந்தாறு வருடங்களாகப் புத்தகக் கண்காட்சிக்கு வருகிறேன். டெல்லியின் புகழ் பெற்ற சம்ஸ்கிருத வெளியீட்டு நிறுவனம் தரும் படைப்புகளின் தரம் உயர்வுதான். ஆனால் விலை கட்டுப்படி ஆகாது. அதே விஷயத்தை மலிவுப் பதிப்பாக வெளியிடும்



காசியைச் சேர்ந்த நிறுவனத்தால், இவ்வளவு வாடகை கொடுத்து இடம் பிடிக்க முடியாது. அதையே ஒரு சேவை நோக்கத்தோடு சலுகை விலையில் வெளியிடும் கோரக்பூரைச் சேர்ந்த ஒரு டிரஸ்ட்டிடமிருந்து தான் புத்தகங்களை வரவழைத்துக் கொள்வது வழக்கம். ஆனால் அதற்கு முன்னால், என்னென்ன புதிதாக வந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள இந்தக் காட்சிதான் உதவுகிறது.




விவேகானந்தா கல்லூரி பி.காம்., மாணவர் பாலாஜி :

ஆறேழு ஆண்டுகளாகவே வருகிறேன். பாட சம்பந்தமான புத்தகங்களுக்கான அலைச்சல் இல்லாமல் இங்கேயே வெவ்வேறு வெளியீட்டாளர்களும் புத்தகங்களைப் பார்வைக்கு வைத்திருப்பது மாணவர்களுக்கு வசதிதான். பள்ளிக்கூட நூலகங்களுக்குப் புத்தகக் காட்சியில் புத்தகங்கள் வாங்குவதைப் பார்த்திருக்கிறேன், அதுபோல் கல்லூரி நூலகங்களுக்கும் வாங்குகிறார்களா என்று தெரியவில்லை. தள்ளுபடி விஷயத்தில், துணிக்கடைகளில் செய்வதுபோல், விலையை ஏற்றி விட்டுப் பிறகு குறைக்கிற மாதிரி படுகிறது. மாணவர்களுக்கென்று ஒரு சலுகை விலை நிர்ணயம் செய்யலாம்.

ஸ்பிக் நிறுவனத்தில் ஆராய்ச்சி அலுவலராகப் பணிபுரியும் திரு எம்.எம். ஹெக்டே :

ஒவ்வொரு வருடமும் நாங்கள் வாங்குகிற 200 ரூபாய் மதிப்புவரை உள்ள புத்தகங்



களுக்கான செலவின் ஒரு பகுதியை (அதிகாரிகள் என்றால் 50%, ஊழியர்கள் என்றால் 37.5% என்ற அளவில்) எங்கள் நிறுவனம் தந்துவிடுகிறது. ஆனால் பாடப்புத்தகங்களுக்குக் கிடையாது. 'ஹோம் கிஃப்ட் ஸ்கீம்' என்ற இந்தத் திட்டத்தைப் பலரும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



NIIT கணிப்பொறி கல்வி நிலைய மாணவி பிரபா :

கோடை விடுமுறையில் இந்தக் காட்சி நடந்தால் உபயோகமாக இருக்கும்.



அண்ணா ஆதர்ஷ் கல்லூரி பி.ஏ. மாணவி நிஷா :

புத்தகக் காட்சிக்கு வருவது இது முதல் தடவை. Corporate Management பற்றிய புத்தகம் வாங்க நினைத்தேன். 150 ரூபாய் விலை என்றார்கள். பேசாமல் திரும்பிவிட்டேன்.




ஆதர்ஷ் வித்யாலயா
எட்டாம் வகுப்பு மாணவி நந்திதா

எனக்கு திகில் கதைகள் பிடிக்கும். 'அஞ்சலி' படத்தின் கனவுக்காட்சியில் வருவதைப் போன்ற திகில் புத்தகத்தை ஒரு ஸ்டாலில் பார்த்து அதன் விலை கேட்டேன். அது விற்பனைக்கு இல்லை என்று சொன்னதும் ஏமாற்றமாகி விட்டது.



பத்மா சேஷாத்திரி சீனியர் செகண்டரி பள்ளி மாணவர்கள் சுதர்ஸன், சுஹாசன் :

பால்டிக் நாடோடிக் கதைகளைக் கொண்ட புத்தகம் ரொம்ப அழகு. விலை பத்தே ரூபாய்தான்.



கேசரி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. சி. வெங்கடாசலம் :

ரஷ்யப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த முறை நேர்த்தியாக இருந்தது; 'டி.டி.மேப்ஸ்' நிறுவனத்தாரின் 'பூகோளப் புதிர்' வெளியீடு அருமை!



அதே பள்ளியில் படிக்கும் மேல்வகுப்பு மாணவர்களான சோமயாஜி, ஈஸ்வர் :

நாங்கள் படிக்கும் பாடம் சம்பந்தமான புத்தகங்களைத் தான் வாங்க விரும்புவோம். ஆனால் கேள்விப்பட்ட புவி இயல் பயிற்சிப் புத்தகம் கிடைக்கவில்லை. Puzzle வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தோம்.



விவேகானந்தா வித்யாலயா ஐந்தாம் வகுப்பு மாணவி தயா :

இந்தியில் பொதுக் கட்டுரைகளைக் கொண்ட புத்தகம் வாங்கினேன். பள்ளிக்கூடத்தில் என்னவெல்லாமோ தலைப்புகளைக் கொடுத்துச் சொந்தமாக (இந்தியில்) எழுதச் சொல்கிறார்களே!

செயற்குழு உறுப்பினர் திரு.வி. சங்கர நாராயணன் :

புத்தகங்கள் வாங்கும் ஆர்வத்தை இளைய தலைமுறையினரிடம் வளர்ப்பதே, தற்போதைய நோக்கம். அந்த வகையில்தான், ஏராளமான பள்ளிகள் மூலம் மாணவ மாணவியருக்கு (1 லட்சம்) இலவச நுழைவுச் சீட்டுகளைக் கொடுத்திருக்கிறோம்.

குழந்தைகளுக்கான புத்தகங்களே அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. கண்காட்சிக்கு வந்தவர்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பில், நிறைய பேர் 'ஜர்னலிஸம்' பற்றிய புத்தகங்கள் அதிகம் இல்லையே என்ற குறையை வெளியிட்டிருந்தார்கள். மொத்தம் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட நுழைவுச் சீட்டுகள் விற்பனையான விவரம் அறிகிறோம்.

சங்கத்தின் செயலர் திரு. என்.ஏ. வி. சுப்ரமணியன் :

"போன வருடத்தைவிட இந்த வருடம் பங்கேற்ற வெளியீட்டாளர்கள் - விற்பனையாளர்களின் எண்ணிக்கை அதிகம். (113 அமைப்புகள், 169 ஸ்டால்கள்). சங்க உறுப்பினர் மட்டுமே கண்காட்சியில் பங்கு பெறலாம். கடந்த சில ஆண்டுகளின் சாதனையைப் பொறுத்து, வெளியீட்டாளர் என்றால் ஆண்டுதோறும் குறைந்தது பத்து தரமான நூல்களை வெளியிட்டிருக்கிறார்களா, விற்பனையாளர் என்றால் குறைந்தது ஆண்டுதோறும் 2 முதல் 3 லட்ச ரூபாய் வரை விற்பனை செய்திருக்கிறார்களா என்ற அடிப்படையில் உறுப்பினர் ஆகும் தகுதி தரப்படுகிறது. மிகவும் போராடி ஒரு தெலுங்கு புத்தக விற்பனை நிலையம் இந்த ஆண்டு இடம் பிடித்திருக்கிறது.

கைலாயக் கம்பளிச்சட்டை முனி நாயனார் திருவூர் குருதட்சிணா மூர்த்தி சுவாமிகள்

கம்பளிச்சட்டை முனி நாயனார் தனது முன் ஞானம் நூறில் வாசனைத் தொடர்பு அறுக்கும் முறையைச் சொல்கிறார்.

இறைக்க ஊறும் கேணி. அதேபோல் நுகர, நுகர வாசனை மேலிடும். நுகர்வு நின்றால் வாசனையும் நிற்கும்.

சித்தர் பாடுகிறார்.

'எழும்பாமல் அடிப்பதற்கோர் சூட்சம் சொல்வேன்.
என் மக்காள்! மவுனத்தே இருந்தால் போதும்!
எழும்பாமல் வாசனைதான் போச்சு தானால்
ஏதுமில்லை சுத்தவெளி, இருளும் போச்சே!

தன்பின் ஞானம் நூறில்

'சரியை என்ன தேவி தீட்சை!
கிரியை என்ன தேவி பூசை!
யோக மென்ன மாசற்ற அமுதம் உண்ணல்!
ஞான மென்ன மௌனம்!'

என இரத்தினச் சுருக்கமாகப் பாடுகிறார்.

சிவப் பேற்றினை அடைந்த சீவன் முத்தர்கள் இவ்வழியையே கடந்து வருகின்றனர். அவ்வழியைக் காட்டிய சட்டைமுனிக்கு வணக்கம் சொல்லி சீவன் முத்தரின் அடையாளங்களைக் காண்போம்.

மெய்கண்ட தேவர் சிவஞான போதம் மிகவும் அற்புதமாகக் கூறுகிறது.

'அவனே தானே யாகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே!

இந்த இடத்தில் சைவ மதங்கள் பலவாறாகக் கருத்துக் கொள்கின்றன.

'முத்தியிலும் மும்மதம் உண்டு' – ஒரு சாரார்.

'முத்தியில் இறைவனுடன் இரண்டறக் கலப்பே' – இது ஒரு சாரார்.


'முத்தியில் ஆன்மா இறைவன் திருவடிக்கீழ் லயித்து இருக்கிறது'. இது ஒரு சாரார்.

அவரவர் கொள்கை அவரவருக்குச் சரியே.

திருவாசகம் கூறுவதைப் பார்ப்போம்.

'முத்தி நெறி யறியாத மூர்க்க ரொடு முயல் வேனை
பத்தி நெறி யறிவித்து, பழவினைகள் பாறும் வண்ணம்

டாக்டர் கவியோகி பேகன். இ.ஆ.ப.



சித்தமலம் அறுவித்து சிவ மாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா(று) ஆர்பெறுவார்
அச்சோவே!

'சீவன் எனச் சிவ னென வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவ னார் சிவனாரை அறிந்த பின்
சீவனார் சிவனா யிட்டிருப்பாரே!

என்கிறார், திருமூல நாயனார்.

அதாவது சீவனில் உள்ள ஆணவக் கொம்பை ஒடித்தால் சிவம் ஆகிவிடும். மும்மலங்களில் முதல் மலம் ஆணவம். அது அகல, மற்ற இரண்டும் தாமே அகலும். சீவன் சிவன் ஆகும்.

முப்பொருள் உண்மை ஏற்றுக் கொண்டபின் எவ்விதம் இரண்டறக் கலக்க முடியும் - ஒரு சாரார் கேள்வி.

இறைவன் மட்டுமே இருக்கின்றான். வேறு எதுவுமே இல்லை. இது ஒரு சாரார்.

இரண்டு பிரிவுகளிலும் பெரிய மகான்கள் இருக்கின்றனர். அவரவர் குருவின் வழியே நிற்பதே சிறந்தது.

திருவாரூர் குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமி கோயிலை அறியாதவர் யார்? சிறுவயதிலேயே பல சித்துகள் செய்து சீவன் முத்தராய் சீவ சமாதியில் இருக்கின்ற சிவமே அவர். அவருடைய சிவஞான போத இரகசியம் என்ற நூலிலிருந்து அடியேனின் நாட்குறிப்பில் எழுதி வைத்திருந்த வாக்கியங்கள் என் கண்ணிற் படுகின்றன, உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைவு.

சுவாமிகளின் மகா வாக்கியங்கள் :

1. அறிவன விடு. அறிவாய் இரு. நோய்கள் நீங்கும்.

2. சுட்டு இறந்து நின்றால் எங்கும் இருக்கலாம்.

3. சேதனம் ஆகிய ஆன்மாவுக்கு அசேதனப் பொருள்கள் இன்பம் தரா. தரும் எனில் கானல் நீர், உஷ்ணப் பூமியைக் குளிரச் செய்யும்.

4. உண்மை நோக்கு இன்மையே பேதப் பிரார்த்திக்கு மூலம்.

குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சிவப்பேறு பெற்றவரின் இலக்கணங்களைக் கூறி நம்மை வழிநடத்திச் செல்கிறார்.

எம் சற்குருநாதர் தவத்திரு கோவிந்த சாமியின் மகா வாக்கியங்கள்.

1. அறிவன விடுத்து அறிவாகல் தவம்.

2. அசித்தினை நீக்கிச் சித்தாதல் சிவம்.

சிவப்பேறு பெற்ற சீலர்கள் தம் அனுபவங்களைக் கூறுவதைக் காண்போம்!

திருவாசகம்

நாகொழிந்து சிவமானவா பாடித்
தெள்ளேனம்கொட்டோமோ.

திருமந்திரம்–

சித்தஞ் சிவ மாய் மலமுன்றுஞ் செற்றபின்
சுத்த சிவமாவார் தோயார் மல பந்தம்!

அருணகிரி நாதர் தம் கந்தர் அனுபூதியில்—

'ஆனா அமுதே! அயில் வேல் அரசே!
ஞானா கரனே! நவிலத் தகுமோ?
யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலை நின்றது தற்பரமே!

சிவ வாக்கியர்.

'உருக் கலந்து நின்ற போது,
நீயும் நானும் ஒன்றலோ'

திருஉந்தியார்

நம் செயலற்று இந்த நாம் அற்றபின்
நாதன் தன் செயல் தானே என்றுந்தீபற.
தன்னையே தந்தான் என் றுந்தீபற

திருவாசகம்:

கடிய மலம் அகற்றிப் பழமலப்
பற்றறுத்துஆண்டவன்
பந்தம் அறுத்து 'எனை யாண்டு'

எனவே ஆட்கொள்ளும்போது மலபரிபாகம் செய்யப் பெறுகிறது. பந்தம் அறுக்கப் பெறுகிறது.

சூத்திரம் – 10

'சிவஞான சித்தன் சிவத்தோ டைக்கியச்
சிவசம் பத்தால் மல மாயை இலதாய்
பந்தம் அறுபட சிவரூபம் பெறுமே!

— கவியோகி.

இத்தகைய சிவப் பெரும் பேற்றை எவ்விதம் நம்மைவிட்டுப் போகாமல் தக்க வைத்துக் கொள்வது?

காகபுசுண்டர், தூங்கன் சுவாமிகள்

காமராசர் மாவட்டம் கன்னிசேரிப் புதூரில் 1870 முதல் 1905 வரை ஒரு சித்தர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் ஈசபிள்ளை. ஆனால் மக்கள் அவரைத் தூங்கன் சாமி என்றே அழைத்து வந்தனர். சதாகாலம் சுவாமிகள் நிட்டையிலேயே இருப்பதால், தூங்குவதாக

எண்ணி மக்கள் அவ்வாறு அழைத்தனர். எப்போதும் அவர் பரமானந்தத்தில் மிதந்து கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரியும். நிட்டை நீங்கினால், ஆடுவார், பாடுவார், சித்துகள் புரிவார்!

ஒரு கிணற்றில் குதிப்பார், வேறொரு கிணற்றில் இருந்து எழுந்து வருவார். வீட்டுக்குள் பூட்டி வைத்தால், வயலில் இருப்பார். இலந்தை முள்ளால் பாடையொன்று செய்து அதில் படுத்துக்கொள்வார். தன் வயிற்றில் ஒரு கொட்டுக் கூடையை வைத்து எண்ணெய் ஊற்றி திரியிட்டுக் கொளுத்துவார். தேர் புறப்படட்டும் என்பார். சிறுவர்கள் 'பரபர'வென்று இழுத்துச் செல்வர். ஏதாவது தவறு நிகழ்ந்திருப்பின், 'அச்சு முறிஞ்சு போச்சுடா' என்று சுவாமிகள் சொல்வார். ஊரே திரண்டுவந்து இழுத்தாலும் ஓர் இம்மிகூட நகராது. ஏதோ அபசாரம் நடந்து விட்டதென ஊர் கூடிப் பேசி அதற்குக் காரணமானவருடன் சுவாமிகளிடம் மன்னிப்புக் கேட்பர். பரிகாரங்களையும் ஊரார் செய்வர். 'அச்சு கூடிருச்சுடோய்' என்று சுவாமிகள் திருவாய் மலர, சிறு பிள்ளைகள் கூட இருக்க வலம் வந்து சுவாமிகள் தன் வீடு செல்வார். அதுவரை விளக்கு எரியும், சுவாமிகள் ஊற்றிய எண்ணெயிலேயே. இடி மழை பேய்க்காற்றானாலும் விளக்கு அணையாது. ஞானக்கதிரவனைப் பேய் மழை என்ன செய்யும்?

சுற்றுப் பட்டிகளிலிருந்து சுவாமிகளை தரிசிக்க மக்கள் வந்த வண்ணம் இருப்பர் - தமக்கு விமோசனம் வேண்டி. பில்லி, சூனியம், பேய், பிசாசால் பாதிக்கப்பட்டவர், நோயுற்றவர்கள் இவர்கள். அவர்களுக்கு நல்லகாலமாக இருந்தால் சுவாமிகள் நிட்டை நீங்கிப் பார்த்து ஒரு சிரிப்பு சிரிப்பார். அவ்வளவுதான் எல்லாரும் சுகம் பெற்று சுவாமிகளை வணங்கித் திரும்புவர்.

'சிரித்துப் புரம் மூன்றும் வென்ற' சிவாம்சம் பெற்றவரே சுவாமிகள். சிவனே மானிடச் சட்டையில் வந்தான் போலும்!

பேரானந்த சொரூபியான சுவாமிகளைத் எப்படியும் வருத்தப்பட வைத்துவிட வேண்டும் என்று சேரியில் வாழ்ந்த ஒருவர் எண்ணினார். 'சுத்த சைவமான சுவாமிகளை அசைவம் ஆக்கிவிட்டால்'... இப்படிச் சென்றது அவர் மூளை.

கொடிக்காலில் அகத்திக் கீரையைப் பறித்து அதில் உயிருள்ள அட்டை ஒன்றையும் வைத்து சுவாமிக்கு சமர்ப்பித்தார். சுவாமிகள், 'அதை அப்படியே நறுக்கிப் போட்டு சமை' என்று தன் தாயாரிடம் சொன்னார். சுவாமிகளோ நைட்டிக பிரம்மச்சாரி.

சுவாமிகள் உணவு உண்டு முடித்து திண்ணையில் அமர்ந்திருக்கும்போது, வந்தார் அந்தச் சோதனைப் பேர்வழி.

ஆசாமி : 'என்ன சாமி! எப்படிச் சாப்பாடு?'

சுவாமிகள் : 'இறைவன் தந்த பிரசாதம் அற்புதம்'.

ஆசாமி : 'அட்டையும் இனிக்கிறதா சாமி?'

சுவாமிகள் : 'அது பத்திரமாக இருக்கிறது என்று சொல்லி, தூவெனத் துப்ப அட்டை தரையில் நெளிந்து சென்றது.

சோதித்தவர் உடல் முழுவதும் வெண்குட்டம், துடித்தார், துவண்டார். மன்னிப்புக் கேட்டார்.

கருணைக்கடல், சிரித்தார்; சரியாகிவிட்டது.

அன்றிலிருந்து சுவாமிகளின் பரம்பரைக்கு அட்டை தின்னி என்ற பட்டப்பெயர்.

சுவாமிகள் என் தாய் வழியில் ஒன்றுவிட்ட பாட்டன். சுவாமிகளின் அண்ணன் மகனுக்கு என் தந்தையின் தமக்கையை மணம் முடித்திருந்தார்கள்.

சுவாமிகள் பல சித்துகள் ஆடி, ஆனந்த வடிவமாகவே அருப்புக் கோட்டை காரியாபட்டியில் சமாதி ஆனார்கள்.

காக புசுண்டர் என்ற சித்தர் யுகங்கள் பலவாக, காக உருவில் இருக்கின்றார். சாதாரணக் காக்கைக்கு ஆயுள் ஆயிரம் வருடம் (Source: Geographical Magazine).

காகத்தைப் பற்றிய இரண்டு சுவையான செய்திகளையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள அவா. ஒன்று அது காணக்குளிப்பது. மற்றொன்று யாரும் காணாமல் புணர்வது. காகப் புணர்ச்சியைப் பார்த்தவர்கள் கிடையாது. அப்படியே இரவு கண் விழித்து மறைந்திருந்து யாரேனும் பார்த்தால் அந்தச் சேதியைச் சொல்ல அவர் இருக்க மாட்டார்.

'கேளப்பா இப்படியே பிரளயந்தான்
கிருபையுடன் ஏழு லட்சம் கோடி யானால்
....
வாளப்பர் காக மென்ற ரூப மானேன்'

என்பது அவர் பாடல்.

தனது காகபுசுண்டர் குறளில்

'நேத்திரத்தைக் காகம்போல் நிச்சய மாய்நிற்க
ஆத்துமத்தி லானந்த மாம்'

என்கிறார்.

சிவப்பேறு பெற்றவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதற்காகவே ஆனந்த ரூபிகளான

காக புசுண்டர், தூங்கன் சுவாமிகள் இவர்களைக் குறிப்பிட்டோம்.

புகையிலாச் சோதியான ஆத்மாவை மரண பரியந்தம் தியானித்துக் கொண்டு இருப்பவன் சீவன் முக்தன் என்கிறது யோக குண்டலி உபநிடதம்.

அஞ்ஞானிகட்கு உலகம் துக்க சமூகமாம். ஞானியர்கட்கோ ஆனந்தமயமாம் என்கிறது வராக உபநிடதம்.

புலன்கள் அறிகின்றன. எனினும் அறிவிக்க அறிவு வேண்டும். அவ்வறிவு வடிவான ஆன்மாவுக்கு இறைவன் அறிவித்தாலே அறியும் என்கிறது சிவஞான போதம்.

சூத்திரம் - 11.

புலன்கள் அறியத் துலங்கும் அறிவென

அறிவறி விருப்பன் இறைவன்; அதனால்

பராபக்தி பூண்டவர் திருவடி தேடுமே

— கவியோகி

தியானத்தின்போது நாம் இறைவனுடன் பேரின்பம் அனுபவிக்கின்றோம். அங்கே மந்திரத்திற்கு வேலை இல்லை. ஏன் எனில் மந்திரரூபிணி சுவாமியுடன் இருக்கின்றார். யந்திரமும் இல்லை, ஏனெனில் இறைவன் வடிவம் கடந்து நிற்கின்றான். தந்திரமும் இல்லை. அவனும் அவளும் ஆடுகின்ற பேரின்ப நடனம்காண்பதால்.

தியானமில்லா மற்ற வேளைகளில் மாயை வந்து நம்மைக் கௌவுவதால் நாம் அவனை நாட மந்திர, தந்திர, யந்திர பாவனைகள் நமக்குத் தேவைப்படுகின்றன.

சுருங்கக் கூறில், தியானத்தில் இறைவன் நம்மை நாடி வருகின்றான். மற்ற வேளையில் நாம் அவனை நாடிச் செல்கின்றோம்.

சரி முத்திக்கு வழி யாது?

அடுத்த இதழில்...

அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி

அமரர் சின்னிக் கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு வந்த சிறுகதைகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுகதைகளை இங்கே அறிவிக்கிறோம். ஒவ்வொரு சிறுகதையும் நூறு ரூபாய் அன்பளிப்பைப் பெறுகின்றது. சிறுகதைகள் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

இவைதவிர, வெளியிட ஏற்றுக் கொள்ளப்படும் சிறுகதைகளின் விவரம் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

எழுதியவரின் பெயர்	-	கதையின் பெயர்
1. லக்ஷ்மி ரமணன்	-	தேவி
2. சி. பன்னீர்செல்வம்	-	காணாமல் போன நதிகள்
3. கங்கா ராமமூர்த்தி	-	ஈரம்
4. உத்தம சோழன்	-	ஒரு பூவின் காயம்
5. நித்யா மூர்த்தி	-	அது ஓர் இந்தியக் குழந்தை
6. இளவேனில் ராஜன்	-	தவறும் நூலிழைகள்
7. நீலவன்	-	மரங்கள்
8. இரா. கேசவ மூர்த்தி	-	சுமையாகும் சுமைதாங்கிகள்
9. சுப்ரியா	-	சிறை
10. சுபத்ரா கோவிந்தராஜன்	-	48 மணி நேரம்

சங்கப் பலகை

நாடகம்

உயிர்ப்பு

ஆசிரியர் : விநோவியா. வெளியீடு : வான்மலர் இல்லம், 116. நான்காம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018. பக்கங்கள் : 32. விலை : ரூ. 5 /–

கிறித்தவ மத போதனைக் குறு நாடகங்கள் இரண்டு இந் நூலில் இடம் பெற்றுள்ளன. இயேசுபிரான் சிலுவையில் அறையப்பட்ட நாளில் நடிப்பதற்காக எழுதப்பட்ட நாடகங்கள். எளிமையான உரையாடல்கள்.

ஆராய்ச்சி

கருணை பொழியும் ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை

ஆசிரியர் : அம்மன் சத்திய நாதன். வெளியீடு : அம்மன் பதிப்பகம், 9. கங்கையம்மன் கோயில் சந்து, இராயப்பேட்டை, சென்னை – 600 014. பக்கங்கள் : 80. விலை : ரூ. 7 /–

தஞ்சை மாவட்டத்தில் பாபநாசத்திற்கு அருகில் உள்ள திருக்கருகாவூரில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகையின் தல வரலாற்றைக் கூறும் நூல். கர்ப்பகாலத்தில் பெண்டிர் துதிக்க வேண்டிய சுலோகங்களும், குழந்தை பிறக்கும்வரை பாட ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு பாடலையும் இந் நூலாசிரியர் இயற்றியிருக்கிறார். திருக்கருகாவூர் செல்வதற்கான வழித்தடங்களையும் தெளிவாகக் கூறியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாச

ஆசிரியர் : லியோ இரா லிங்கம். வெளியீடு : இமய பதிப்பகம், 8 நீலா தெற்கு வீ நாகப்பட்டினம் – 611 001. கங்கள் : 115. விலை : ரூ. 12 /–

பாவேந்தரை நன்கு அறி வர்கள், அவரோடு நெருங்கி பழகியவர்கள் ஆகியோரி கருத்துகளையும், அவர்களி நூல்களிலிருந்து சாறெடுத்து இந் நூலைப் படைத்திருக்கிற இதன் ஆசிரியர் என்று தெ கிறது. ஆனாலும் அவருட நெருக்கமாய்ப் பழகிய இன்னு சில முக்கியமானவர்களை அணுகி விவரம் சே திருந்தால் நூலின் சிற மேலும் உயர்ந்திருக்கும்.

—குடந்தை புகழே

சிறுவர் இலக்கியம்

வால்கள் ஜாக்கிரதை

(எழுதியவர் : ராஜேந்திரகுமார். வெளியீடு : விஷ்ராம்ஸ் பதிப்பகம், ஃபிளாட் நம்பர் 2, செஞ்சுரி மெய்டன், 22 ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை – 31. விலை : ரூ. 12.60).

குமுதம் இதழில் ஒவ்வொரு வாரமும் வெளிவந்து இலட்சக்கணக்கான இளம் உள்ளங்களையும் முதிய உள்ளங்களையும் சாறாகப் பிழிந்தெடுத்த இன்பக் கதைகளின் தொகுப்பு. ராஜேந்திரகுமாரின் இனிய இதய வாயில்கள்!

புது மழை

(ஆசிரியர் : தண்டரை முகில்வண்ணன். வெளியீடு : நியுசெஞ்சுரி வெளியீடு : சென்னை – 98. பக்கங்கள் : 40. விலை : ரூ. 5 /–).

உழைத்தால் உணவு, உணவில் பங்கு, வேற்றுமையில் ஒற்றுமை போன்ற உயரிய கருத்துகளை உள்ளடக்கிய சிறுவர் நூல்.

சிறுவர் நூலில் படமும், பாடலும் முரண்படாமலிருக்க வேண்டும். பல கடிகாரங்கள் பற்றிய பாடலுக்கு சுவர்க்கடிகாரப் படம் மட்டுமே இருப்பதுடன், "நொடிகள் நிமிடம் மணி எல்லாம் நுட்பமாகக் காட்டிடும்" என்ற வரிகளை சொல்லும்போது படத்தில் நொடி முள் இல்லையே!

—ஆர்.பி. சாரதி

கட்டுரை

மிகக் குறைந்த முதலீட்டில் நூற்றுக்கணக்கான சிறுதொழில்களும் செய்யும் முறைகளும்

(ஆசிரியர் : நடராசன். வெளியீடு : செந்தில் பதிப்பகம், 78. பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14. பக்கங்கள் : 136. விலை : ரூ. 13/–)

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்' என்று கைத்தொழிலின் சிறப்பை ஒரு கவிஞர் குழந்தைப்பாடலில் கூறியுள்ளார்.

வேலை இல்லாத, சுய தொழில் செய்ய முற்படுவோருக்கு பயன்படும் நூல். 'இந்நூலில் ஏற்படும் சந்தேகங்களுக்கு நேயர்கள் கடிதம் எழுதி ஆசிரியரிடமிருந்து விளக்கம் பெற்றுக் கொள்ளலாம்' என்ற குறிப்பு வித்தியாசமானது.

— வி.எஸ். திரும

ஆன்மிகம்

ஸர்வதேவதா அஷ்டோத்தர சத நாமாவளிமாலா

(தொகுப்பாளர் : அனாதிமங்கலம் கே. நாராயணஸ்வாமி அய்யர், வெளியீடு : பவானி புக் சென்டர், 19, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை – 33. விலை : ரூ. 20/-)

முழுவதும் சம்ஸ்கிருதத்தில் ஸ்தோத்திரங்கள் கொண்ட நூல்.

தெய்வீக மூர்த்திகளைப் பற்றிய முப்பது அஷ்டோத்தர சத ஸ்தோத்திரங்களைச் சேகரித்து, அவற்றுக்கான உரிய பதங்களையும் வழங்கி வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீ காஞ்சி பரமாச்சாரியாரின் முகவுரை ஆசியுடன் வெளியாகி இருக்கும் இந்நூல் ஆஸ்திக அன்பர்களுக்கு மனப்பாடம் செய்து வழிபாடு செய்ய உதவியாக இருக்கும்.

சித்திரைப் புராணம்

(ஆசிரியர் : எஸ்.பி. ராமச்சந்திரன். வெளியீடு : தாமரை நூலகம், 7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை – 26. விலை : ரூ. 10/-)

சூரியன் மேஷராசியில் இருக்கும் காலம் வைசாகம். அதாவது சித்திரை மாதம். வைசாக புராணம் என்று தலைப்பிடாமல், புரியும்படியாகச் 'சித்திரைப் புராணம்' என்று இந்நூலுக்கு ஆசிரியர் பெயரிட்டு, வெயில் தாபம் மிகுந்த சித்திரையில் என்னென்ன விரதங்களைக் கடைப்பிடிக்கலாம் என்று நூலில் விளக்கியுள்ளார்.

–க.ப.

இராமாயண ரத்தினங்கள்

(எழுதியர் : இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசனார். வெளியீடு : ஓரி நிலையம், 3 / 37, சத்தியமூர்த்தி நகர், நந்தனம், சென்னை – 35. விலை : ரூ. 30.00).

இராமாயணம், கங்கு கரை காணாத வாழ்க்கைக் கடல். அக்கடலிலிருந்து நூற்று ஒன்பது ஒளி முத்துக்களை எடுத்துத் தந்துள்ளார் ஆசிரியர். வால்மீகி, கம்பர் கதைகள் முழுவதையும் கற்றுத் தெளிந்தவர்கள்கூட, மேலும் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் நிரம்ப உள்ளன. எத்தனை தடவை படித்தாலும் அத்தனை தடவையும் இனிக்கும் நூல்.

–தாமரைக்கண்ணன்

அறிவியல்

தெரியுமா உங்களுக்கு?

(ஆசிரியர் – டாக்டர். சோ. சேசாசலம். வெளியீடு – பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை – 600 017. பக்கங்கள் – 64. விலை – ரூ. 7)

நமது உடலின் உறுப்புகளைப் பற்றி, இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை பற்றி, இயற்கையின் பல்வேறு அதிசயங்கள் குறித்து, தாவரங்கள், விலங்குகள், ஜடப் பொருள்கள் குறித்து அறிவியல் மற்றும் பொது அறிவு தொடர்புள்ள 185 விளக்கங்களைக் கொண்ட நூல். எல்லாருக்கும் பயன் தரவல்லது.

அன்றாட வாழ்வில் அறிவியல்

(ஆசிரியர் – டாக்டர். சோ. சேசாசலம். வெளியீடு – ரவி பதிப்பகம், 36, சுங்குராமத்தெரு. சென்னை – 600 001. பக்கங்கள் – 312. விலை – ரூ. 36)

நம் உடற்கூறு, மருத்துவம் சுற்றுப்புற சூழ்நிலை, பூமி, காற்று, நீர், எண்ணெய் வளம், தொலைக்காட்சி, வானொலி, பல இயந்திரங்கள் ஆகியவை தொடர்பான அறிவியல் விளக்கங்கள் விரிவான முறையில் தரப்பட்டுள்ளன. பாராட்டத்தக்க முயற்சி.

– 'கே.ஏ'.

மண்வளமும் நீர்ப்பாதுகாப்பும்

ஆசிரியர் : எம்.எஸ்.பி. முருகேசன். வெளியீடு : தாரிணி பதிப்பகம், 323. நடேசநகர் முதல் பிரதான சாலை, விருகம்பாக்கம், சென்னை – 600 092. பக்கங்கள் : 192. விலை : ரூ. 21 /-

மண் வகை, மண் அரிப்பு, நீரின் சுழற்சி, மழை, மண்ணுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு, மண் வளப் பாதுகாப்பு, களர் நிலங்கள், அமில நிலங்கள், தரிசு நிலம் – இப்படிப் பல்வேறு தலைப்புகளில் விரிவான செய்திகளைத் தெளிவான முறையில் எளிய நடையில் விவரித்திருக்கிறார் இந்நூலாசிரியர்.

பழத்தோட்டமும் பழத் தொழில்களும்

ஆசிரியர் : அ. ராம் கோபால், வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41 – B. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை – 600 098. பக்கங்கள் : 171. விலை : ரூ. 24 /-

மண் வளம், நீர்ப்பாசனம், நிலத்தேர்வு, எரு, வேலி என்று பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றன. அத்துடன் பல்வேறு பழ வகைகளையும் அவை பயிராகும் நிலம், தட்ப வெப்பநிலை ஆகியவை பற்றியும் விரிவாகக் கூறியிருக்கிறார். – கு.புகழேந்தி



"மிகக் குறுகிய காலத்தில் நான் மிகப் பெரிய பதவி உயர்வினைப் பெற்றதற்கு அதிர்ஷ்டம் தான் காரணம் என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். ஆனால்... ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கு அதிர்ஷ்டம் மட்டுமே காரணமாக அமைந்து விடுவதில்லை என்பதே என் கருத்து"

சில வருடங்களுக்கு முன் நான் ஒரு பிரபல வர்த்தக நிறுவனத்தில் சாதாரண குமாஸ்தாவாகச் சேர்ந்தேன்.

நான் பணிபுரியும் நிறுவனத்தில் நல்ல திறமையுடையவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகள் இருப்பதை அறிந்து, உயர்பதவியினைப் பெற ஆர்வமுடன் செயலாற்றினேன்.

ஆனால்... உயர்பதவிகளைப் பெற ஆங்கிலத்தில் போதிய புலமை பெற்றிருப்பது அவசியம் என்பதை நாளடைவில் புரிந்துகொண்டேன்.

"நமக்குத்தான் ஆங்கிலத்தில் தொடர்ந்து நாலு வார்த்தை கூடப் பேச வராதே" என்று எனது முயற்சியை நான் கைவிட்டுவிடவில்லை.

ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு, பல புத்தகங்களை வாங்கிப் படித்தேன். ஆனால் இம் மொழியை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் கலங்கிக் கொண்டிருந்தேன்.

திசை தெரியாமல் நடுக்கடலில் தத்தளிக்கும் படகோட்டிக்கு கலங்கரை விளக்கம் தென்பட்டதைப் போல, விவேகானந்தா கல்வி நிலையத்தின் ஆங்கிலப் பயிற்சி பற்றிய விளம்பரம் என் கண்ணில் பட்டது.

முயற்சி செய்பவர்களுக்குத் தெய்வம் வலிய வந்து உதவும் என்ற குறளிற்கேற்ப, ஆங்கில மொழியில் புலமை பெற வேண்டும் என்ற எனது முயற்சி வெற்றி பெற விவேகானந்தா கல்வி நிலையத்தின் தபால் முறைப் பயிற்சி பெரிதும் உதவியது.

இப் பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது எந்தச் சூழ்நிலையிலும் தயக்கமின்றி ஆங்கிலத்தில் மிகச் சரளமாகப் பேச முடிகிறது. இதனால் உயர்பதவி என்னைத் தேடி வந்துள்ளது.

எனவே எனது வெற்றியின் ரகசியம் விவேகானந்தா கல்வி நிலையத்தின் ஆங்கிலப் பயிற்சி தான் என்பதில் மிகையேதும் இல்லை அல்லவா?

கீழ்க்கண்ட முகவரியில் நீங்களும் தொடர்பு கொண்டு பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம்,
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை 600 017.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு."

முதுமையிலும் இன்பம்

(ஆசிரியர் : பேராசிரியர் வ.செ. டராசன். வெளியீடு : சக்தி பதிப் கம், 17, 17ஆவது தெரு, 'க்யு' ளாக், அண்ணா நகர், சென்னை 40. விலை : ரூ. 18.00 /-)

மனிதனுக்கு வயது ஏற ஏற, உலக வாழ்க்கையின் அனுபவ அறிவும் கூடுகிறது. வயதான முதியோரே அனுபவக் களஞ்சி யங்கள். அவர்களுடைய அனு பவங்களே, இளைஞர்களுக்கு நல்ல வழி காட்டிகளாகத் திகழ் கின்றன; அவையே வாழ்க்கை யின் நெறிமுறைகள்! நல்வாழ் வின் சீரமைப்புகள்! இவ்வாறு, வருங்கால சமுதாயத்தினருக்கு வழிகாட்டிகளாக உள்ள முதிய வர்கள் சமுதாயத்தால், உற்றார் உறவினர்களால், ஏன் நாம் பெற்ற மக்களால் நன்றிக் குரிய கடவுளராக வணங்கப் பெறுகிறார்களா? அவர்கள் இறுதி வாழ்நாள்களில் இனிய முகத்துடன் உபசரிக்கப் பெறு கிறார்களா என்றால் நிறை வான பதில் கிடைக்காது. அக் குறையை இந்த நூல் போக்கு கிறது.




முதியவர்களுக்கு ஏற்படும் உடல் நோய்கள், மன நோய்கள், நல்ல அரவணைப்பு இன்றித் துன்புறும் சமுதாய நோய்கள் யாவற்றையும் விளக்கி, அவற் றிற்குரிய தீர்வுகளையும் நல்ல முறையில் விளக்குகிறார், இந் நூலாசிரியர். முதியவர்க்கே உரித்தான இதய நோய், நீரிழிவு நோய், மலச்சிக்கல், பக்க வாதம், மூட்டு வலி, எலும்பு தொடர்பான நோய்கள், நாள மில்லாச் சுரப்பிகளின் தொல்லை, தோல் நோய், கண் நோய் முதலானவற்றை நுணுக்கமாக எடுத்துச் சொல்லி, உணவுக் கட்டுப்பாடு, உடற் பயிற்சிகள், மருத்துவம் மூலம் அந் நோய்களைப் போக்கி, உயிரோடு இருக்கும் வரை மகிழ்ச்சியோடு வாழும் வழிகளையும் கூறுகிறார். வய தான பெண்களின் நோய்ச் சிக்கல்களும் தீர்வுகளும் பற் றித் தனியாகக் கூறப் பெற் றுள்ளது.

'நம் நாட்டிலேயே முதன் முதலாய்ச் சென்னை அரசு பொது மருத்துவமனையில் 1978 ஆம் ஆண்டில் மூப்பியல் மருத்துவம், புற நோய்ப் பிரி வாகத் தொடங்கப்பட்டது' (பக் : 187) என்ற செய்தியே நம்மில் பலருக்கும் தெரியாது. அனை வருக்கும் புரியும்படியாக எளிய, இனிய தமிழ் நடை, தேவையான இடங்களில் தேவையான படங்கள், பெரிய எழுத்தில் கண்கவர் நூல் அமைப்பு, குறைந்த விலை ஆகியவை நூலின் தனிச் சிறப்புகள்! தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசைப் பெற்றுள்ள இந்த நூல், முதியவர்களுக்கு வரப் பிரசாதமாகும். நூலைப் படித்தாலே, பாதி நோய் குறைந்து போகும் அளவுக்குத் தரமுள்ள இந்நூலை 'சக்தி ஒளி' ஆன்மிக இதழ் தொடர் கட்டுரையாக வெளியிட்டதைப் பாராட்டிப் போற்றலாம்.

—தாமரைக்கண்ணன்.

நாவல் மனிதர்கள்



சுஜாதா ஃபிலிம்ஸ் லிட்.,நிறுவனமும், அமுதசுரபி வெளியீட்டாளர்கள் ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய போட்டியில்

ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்


2

"என்னங்க இதெல்லாம்?... நீங்க என்னான்னா ஜனங்களைத் திருத்தப்போறேன்னு சொல்றீங்க. உங்க ரெண்டாவது தம்பி என்னடான்னா நேதாஜி அவங்களோட 'இளைஞர் படை'யிலே சேரணும்னு சொல்லித் தன்னோட பொஞ்சாதிகிட்ட சொல்ல, அவ வந்து நீங்க வெளியே பஞ்சாயத்துக்குப் போனப்பறமா வந்து பொலம்பி அழுதிட்டுப் போகுது. ரெண்டாவது தம்பி மேலே ஊரு ஜனங்க கரிசனமா இருக்காங்க. உங்க ரெண்டு பேத்தையாச்சும் ஒரு வகையிலே சேக்கலாமாம், அவரை எதுலேயும் சேக்கக் கூடாது. 'ஆளையே இல்லாமே செய்யணும்னு' பெரியவங்க பேசிகிட்டதாகவும், எதுக்கும் உன்னோட புருஷன் கிட்டே சொல்லி வைம்மான்னு சில பேரு வந்து எச்சரிக்கை செய்துவிட்டுப் போனாங்கன்னு 'கோ'ன்னு அழுதுகிட்டு தன்னோடு அம்மா வூட்லே கொண்டுபோய் விட்ருன்னு சின்னது வந்து கட்டாயப்படுத்துது. என்னாங்க இதெல்லாம்... நம்ம குடும்பத்துக்கு இதெல்லாம் தேவையா? அக்கடான்னு தறிக்குழியிலே உக்காந்தோம், ரெண்டு நாளைக்கு ஒரு சேலன்னு நெஞ்சோம், கொண்டு போய் முதலாளிகிட்டே கொடுத்தோம், பணம் வாங்கிப் பொங்கிச் சாப்பிட்டோம்னு இல்லாமே, நாளைக்குப் பின்னை உங்க மூணு பேத்துலே யாருக்காவது என்னாச்சும் ஆச்சுன்னா என்னங்க செய்யறது? சொல்றது சொல்லியாச்சு ஆமா."

வீட்டிற்குள் நுழைந்ததுமே ராஜம்மாவின் மூச்சுவிடாத தொடர் பேச்சு ராஜப்பாவைக் கொஞ்சம் அசத்தி வைத்தாலும், பெண் என்பவள் பேசக்கூடிய எச்சரிக்கையான விவகாரம்தான் என்பதால் முகத்தைச் சலனத்திற்கு ஆட்படுத்தாமல் உதடுகளில் சிரிப்பு நெளிய உள்ளே நுழைந்து, தன்னுடைய சட்டையைக் கழற்றி மூங்கில் கழி மீது போட்டு விட்டு, துண்டை எடுத்து முதுகு முகம் என்று வியர்வையைத் துடைத்து விட்டு ஜன்னல் பக்கம் அமர்ந்து வீதியைப் பார்த்துவிட்டு உள்ளே பார்வையைத் திருப்பி ராஜம்மாவை அருகில் கூப்பிட்டு,

"ராஜம்!... நீ சொல்வது ஒரு வகையில் உண்மைதான். இல்லேன்னு சொல்லலே. 'இடைத்தரகரா' இருந்து முதலாளிங்க கிட்டே கொடுத்து லாபம் சம்பாதிக்கிறவங்களை நம்ப ஜனங்க இன்னமும் அடையாளம் கண்டுக்காமே ஓடாத்தேஞ்சி ஒழைச்சி இப்படி உருப்படியில்லாமே போறாங்களேன்னு எனக்கு ஆதங்கம்.

இவங்க உழைக்கற அளவுக்கு நேரடியா முதலாளிகிட்டேயிருந்து 'கூலி' வாங்கினா நா எதுக்கு இப்படி இவங்க மேலே வருத்தப் படணும். நீ சொல்லு".



"சரி நீங்க இந்த மாதிரி கவலைப்படுங்க, உங்க தம்பிமாருங்க நாட்டுப் பற்று, கடவுள் இல்லாத பற்றுன்னு கவலைப்படட்டும். நாளைக்கு ஏதாச்சும் ஆனா இந்த ஜனங்கதான் வந்து காப்பாத்தப் போறாங்க. என்னமோ, எனக்குத் தெரிஞ்தெல்லாம் இதுதான். ஜனங்களைப் பத்தி நெனச்சிகிட்டு வீட்டைப் பத்திக் கவலைப் படாதவங்க எத்தனை பேரு உருப்பட்டுட்டிருக்காங்க இந்த மண்ணுலே? நீங்களே சொல்லுங்க பார்க்கலாம்?"

"ராஜம்! ஜனங்களைப் பத்தி எல்லாருமே கவலைப்பட முடியாது. ஒரு சிலருன்னு தான் இதுக்குன்னு விசனப்பட்டு, வேதனைப்பட்டு கிளம்பறாங்க. அது அவுங்கவுங்க மனசோட தூண்டுதல்தான் காரணம். ஏதோ கொஞ்சம் காலம் இருக்கோம். ஏதாச்சும் செஞ்சிட்டுப் போலாம்னுதான் எனக்கு ஆசை.

அதுக்குன்னு குடும்பத்தை விட்டுட்டா நா வீணாப் போறேன்? சொல்லு. தெரிஞ்சோ தெரியாமலோ பெரிய மனுஷன்னு ஊர்லே பேரு எடுத்தாச்சு. நல்லது பொல்லாதுனு போகாம கலக்கமா இருந்தா எப்படி?"

"நீங்க இந்தப் போக்குலே போறீங்க. பெரிய தம்பியோட சாந்தி முழுவாம இருக்கா... இப்போதே போய் நான் 'இளைஞர்படைலே சேரப்போறேன்னா என்ன அர்த்தம்? இளைஞர் படையைப் பத்தி அக்கம் பக்கம் உசிலம்பட்டி - திண்டுக்கல் - ஆத்தூர் ஜனங்க இங்கு சந்தை யிலே வந்து சொல்றது பாத்தா வயிறு கலங்குது.

ஒருவேளை இவரு தலைவரோட சேர்ந்து வேறு ஊருக்கு, இன்னும் சொல்லப்போனா... தொண்டை அடைக்குது, கடல்கடந்து போனா சாந்திக்கு ஏதாச்சும் ஆச்சுன்னா யாருங்க சொல்ல முடியுன்னு நீங்க நெனைக்கிறீங்க?

ரெண்டாவது தம்பியோட உசிரு கெட்டியா இருக்கணும், ராதாவோட 'தாலி' பாக்கியம் நிலைக்கணும்னா 'ராமர் பட்டாபிஷேகப்படத்தை' எரிக்கறதைக் கைவிடணும்.

'கடவுள்' இல்லேன்னு போயிட்டாக்கூடப் பரவாயில்லையே, தர்க்கம் பேசிட்டு, இப்படி எக்குத்தப்பா ஏதாச்சும் நடந்து' போலீஸ் வந்து இழுத்துகிட்டுப் போயி...என்னமோ எனக்குப் பயமா இருக்கு".

"ராஜம்! எல்லா விஷயத்திலும் விவகாரம் இருக்கத்தான் செய்யுது, ஆனா அதோட விளைவுங்களைச் சம்பந்தப்பட்டவங்க நிச்சயம் எதிர்பார்த்து தான் ஆகணும். இல்லைன்னா, இதைப் பத்தியெல்லாம் பேசவே கூடாது. கொஞ்சம் நெனைச்சிப் பாரு.

'புட்டாப் போட்டு நெய்யறதுக்கும் சாதா வாக, பிளைனா நெய்யறதுக்கும் கூலியை முதலாளிங்ககிட்டே கூட்டிக் கொடுங்கன்னு சொல்லிப் போராட்டம் நடத்தாமே போயிருந்தா, இன்னைக்கு இந்த அளவு கூலி கிடைக்குமா?

நான் செய்யறது எப்போதும் சரியா இருக்கும்னு தான் செய்யறேன். ஜனங்க என்னோட ஒத்துழைச்சா அவங்களுக்கும் நல்லது, அவங்களோட பிள்ளைங்களுக்கும் நல்லது. மொத்தத்திலே நெசவாளிக் கிராமமா இருக்கற நம்ப கிராமத்துக்கு எதிர்காலத்திலே நல்லது. இதை எப்பப்புரிஞ்சுக்கப் போறாங் களோன்னு தான் இப்ப யோசனை".

"ஆமா... ஆமா. நல்லா யோசனை செஞ்சிங்க போங்க. இந்த ஜனங்களுக்காகப் பாடுபட்டு என்னத்தை அனுபவிக்கப் போறோம்னுதான் எனக்குப் புரியலே".

"நாம அனுபவிக்கவா இதைப் பத்தி யெல்லாம் பேசறோம், செய்யறோம்? இல்லை ராஜம்! சாதிக்கத்தான், சாதிக்கும்போது தான் எல்லாரும் நம்மைப் பார்ப்பாங்க. இல் லேன்னா இல்லைதான். ஆனா பிறர் பேசுவாங் கன்னோ, பாராட்டுவாங்கன்னோவா நாம் செய்யறோம்? என்னோட கடமை... இதுவரைக் கும் தொடர்ந்து அந்த நெசவாளிங்க பிரச்னை களுக்கெல்லாம் தீர்வு செஞ்சு கொடுத்திருக் கேன். இந்த ஒரு விஷயத்திலே மட்டும் ஜனங்க பின்வாங்கறாங்க. அதுவுமில்லாமே, 'நம்மோட சுதந்திரம்' பத்திய கவலை. ம்... நடக்கறது நிச்சயம் நடக்கும்ங்கற நம்பிக்கை எனக்கிருக்கு. இன்னைக்கு இல்லைனாக்கூட இன்னொரு நாளைக்கு, சரி சரி சோறு போடு ராஜம்! வயிறு பசிக்குது".

"உங்க விஷயத்துக்கு இதெல்லாம் சரி, உங்க ரெண்டு தம்பிகளோட பிரச்னைகளைப் பத்தி

என்ன சொல்லப் போறீங்க? இதையும் சொல்லிட்டு, தாராளமா வயிறு நெறையச் சாப்பிட்டு எழுந்திருங்க. நா ஒண்ணும் வேணாம்னு சொல்லப் போறதில்லே ஆமா".

சலிப்புடன் ராஜப்பாவின் விளக்கங்களைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜம்மா தன் முக வாய்க்கட்டையைத் தோளில் இடித்துக் காட்டியபடி, தொட்டியின் ஒரமாய் வைத்திருந்த 'மொடா'விலிருந்து வாளியில் நீரை எடுத்து வைத்துவிட்டு ஏதோ சத்தம் வரவே, வெளியே எட்டிப் பார்க்க, பத்துப் பதினைந்து பேர் திமுதிமு வென்று வந்து வாசலில் ஒன்றாக நின்று, 'அண்ணாச்சியைப் பார்க்க வேண்டும்" என்றார்கள்.

புறக்கடைப் பக்கமாகப் போய் உள்ளே வந்து காலில் நீர் ஊற்றிக் கொண்டிருந்த ராஜப்பாவிற்கு ஆச்சரியம், திகைப்பு. எதற்காக இவர்கள் அதற்குள் தேடி வந்திருக்கிறார்கள்... ஒருவேளை தன் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து, 'சரி' என்று ஒப்புதல் சொல்ல வந்திருக்கிறார்களோ என்னவோ என்று தான் முதலில் நினைத்தார்.

ஆனால் - வாசல் பக்கம் நின்றவர்களின் முகங்களில் ஏதோ பீதியும் கலவரமும் இருக்கவே என்ன விஷயம் என்றபோது,

"மேட்டுப்பட்டி கந்தசாமி செட்டியாரோட மகள் விஜயா கிணத்துலே விழுந்து செத்துப் போச்சி. அதனாலேதான் உங்களைக் கையோட கூப்பிட்டுப் போகணும்னு ஒடி வந்தோமுங்க".

"அப்படியா... இதோ, சட்டையை மாத்திகிட்டு வர்றேன். முன்னாலே போங்க" என்று சொல்லிவிட்டு உட்புறமாக வந்தபோது ராஜம்மா விரிசல் விட்டிருந்த வீட்டுக் கேணியின் பக்கமாக முழங்கையை ஆதரவாகக் கொடுத்து அழுதபடி இருந்ததைக் கவனித்தார் ராஜப்பா.

"ஏங்க ஒரு வாயி சோறு சாப்பிட்டுட்டுப் போயிருங்க. இதுக்குத் தானே இவ்வளவு சிரமப்படறோம். போகவேண்டாம்னு சொல்லலே நான்... கொஞ்சம் கேளுங்க... சாப்பிட்டுட்டு..." ராஜம்மா பேசி முடிக்கவில்லை.

"என்னோட ராஜம் இப்படிப் பேசும்னு நெனச்சிக்கூடப் பார்க்க முடியலே... அங்கு செத்துப் போன பொண்ணு நம்ப பொண்ணு வயசில்லே... என்ன ராஜம்? பொணத்தை அங்க போட்டு இங்கே கை நனைக்கச் சொல்றியா... பொம்பளைங்க மனசு எப்பவுமே இளகிப் போயிருக்கும்னு சொல்லுவாங்க. அதுவும் புருஷன் விஷயத்திலே கேட்கவே வேணாம்னு தோணுது, நீ சொல்றது என்னடான்னா... பரவாயில்லே, அங்கே என்னவோ ஏதோன்னு காத்துகிட்டு இருப்பாங்க. என்னை எதிர்பார்த்துதான் எதையும் செய்வாங்க. தம்பிங்க வந்தா அங்கே வரச் சொல்லு".

இன்னமும் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தால் ராஜம்மாவிடம் இருந்து மீள முடியாது என்ற நிலையில், சட்டையை மாற்றிக் கொண்டு துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு விரைவாக வீதியில் இறங்கினார் ராஜப்பா.


மேட்டுப்பட்டி தண்ணீர் சேமிப்புத் தொட்டியிருந்த காந்தி மைதானத்தைத் தாண்டி இரண்டொரு வளைவுகள் திரும்பி 'சாயப் பட்டறை' ஒன்றின் சந்திப்பில்தான் ஆண்களும், பெண்களும், சிறுவர் சிறுமியர்களும் சோகங் கலந்த முகங்களோடு காணப்பட்டனர்.

அவர்களின் எதிர்பார்ப்பு தன்னைப் பற்றித் தான் இருக்கும் என்று எதிர்பார்த்தவருக்கு அவர் கூட்டத்தில் நுழைந்தவுடன் ஏற்பட்ட சலசலப்பு பெண்களின் அழுகைக் குரல்களை மீறி இறந்து போன பெண்ணின் அப்பா அம்மா இரண்டு பேரும், வெளியூர்களுக்கு விஜயாவின் கல்யாணத்திற்காகப் பத்திரிகை வைக்கப் போயிருந்தது தெரிய வந்தது ராஜப்பாவிற்கு.

அவருடைய பார்வை சாயப்பட்டறையின் கடைசிப் பரப்பில் சுமாரான ஓண்டு வீட்டின் முன்பு தரையில் கிடத்தப்பட்டிருந்த இளம் வயதுப் பெண்ணைப் பார்த்துத் திரும்பியது.

மயில் கழுத்துச் சேலை அந்த உடலில் முகத்தைத் தவிர மூடியிருந்தது. முகத்தில் மஞ்சளின் திட்டும் நெற்றியில் கரைந்து போய் அடையாளமிட்டுக் கொண்டிருந்த குங்குமமும் சுமங்கலித்தனமாய்க் காட்டிக் கொண்டிருந்தது.

நீரில் ஊறிப் போயிருந்த கால்கள் வெளுத்துப் போயிருந்தாலும் சில நாள்களுக்கு முன் போட்டிருந்த மருதாணி விரல்களில் சிவப்பேறிப் போயிருந்ததையும் அவரால் நன்றாகப் பார்க்க முடிந்தது.



என்ன நடந்தது ஏது நடந்தது என்று அவர் விசாரிக்கத் தொடங்குவதற்கு முன்பே அங்கிருந்த சூழ்நிலையையும் ஊர்க்காரர்கள் பேசிக் கொண்ட சம்பாஷணைகளையும் வைத்து ஓரளவு அவராலே ஊகித்துக் கொள்ள முடிந்தது.

பெண்ணிற்குச் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் அவரை நெருங்கி வந்து சாயப்பட்டறையின் வலக் கோடிப் பக்கம் கூப்பிட்டுப் போய் அவர் அனுமானத்தில் கொஞ்சம் தேங்கியிருந்த சந்தேகத்தையும் விளக்கிவிட்டு, அவரை இனி என்ன செய்யலாம் என்ற கேள்விப் பாணியில் முகம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

கூட்டத்திலிருந்து ஒருவர் 'போஸ்ட்மார்ட்டம்' செய்யாமலேயே பிணத்தைப் புதைத்து விடலாம் என்று சொன்ன யோசனையை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. பலரும் வற்புறுத்தியும், 'போலீசுக்குத் தகவல் தெரிவிக்காமல் பிணத்தை எரிப்பது என்பதோ, புதைப்பது என்பதோ சட்டப்படிக் குற்றம்' என்பதைச் சொல்லிவிட்டு.

தான் ஊர் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தாலும் பாசம் - உறவு - நிர்ப்பந்தம் என்பவற்றின் பேரில் சட்டத்திற்குப் பாதகமான விஷயங்களைச் செய்ய ஒத்துவரமாட்டேன் என்று சொல்லிவிட்டு, அங்கிருந்த சிநேகிதர் ஒருவரிடம் தப்பு தன்மீது இல்லை என்றும், எது எப்படியோ 'திண்டுக்கல்' தர்மாஸ் பத்திரிக்குப் பிணத்தைக் கொண்டு போக அம்பாத்துரை ரயில்வே ஸ்டேஷன் போலீசாரிடம் தெரிவித்துக் காரியத்தை எசகு பிசகு இல்லாமல் செய்யும்படி வற்புறுத்திவிட்டுத் திரும்பி விட்டபோது.

ராஜப்பாவிற்கு மனசு கனத்தது என்னவோ உண்மைதான். இறக்கி வைக்க முடியாத பாரமொன்று தன் மனதை அழுத்தக் காரணமாயிருந்தது அந்தப் பெண்ணின் களங்கமற்ற முகம், அந்த சின்னஞ்சிறு உடலின் அழகுகள் சின்னாபின்னமாகிப் பின் கோணிச்சாக்கில் கட்டித்தரும்போது... நினைக்கவே கண்களில் நீர் கசியும் போலிருந்தது. நடந்து கொண்டிருக்கும்போது எதிரெதிரே நண்பர்கள் சிலர் வந்தபோதும் கவனம் என்னவோ அந்தச் சாயப்பட்டறைப் பக்கமாய் கிடத்தி வைத்திருந்த பெண் விஜயா மீதுதான் அழுந்திக் கிடந்தது.

இதையும் மீறி, தான் உடந்தையாக இருக்க முடியாது என்று திட்டவட்டமாகவே சொல்லும் போது, பெண்களின் பக்கமிருந்து வந்த காதில் விழுந்த சொற்கள் மனதில் ஆழமான வடுவைச் செருகியதையும் உணர்ந்து கொள்ள முடிந்தது அவரால்.

"பாவி! இவனோட மவ இப்படி ஏதாச்சும் அசம்பாவிதமா செஞ்சிருந்தா இப்படியா அம்போன்னு வுட்டுட்டு போவா... போலீஸ் கத்தரிக்காயின்னு... எல்லாம் அவங்க அவங்களுக்கு வந்தாதான் தெரியும். இவனையெல்லாம் ஊர் பஞ்சாயத்துத் தலைவர்னு ஏத்தி வச்சிருக்கோம்லே, நமக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். பாவி மவ, கொஞ்சம்கூட இரக்கங்கறதேயில்லாமே போறார் பாரு ஜடம் மாதிரி".

கூட்டத்திலிருந்து எதிரொலித்த வார்த்தைகள் மனசில் எதிரொலித்து ஒருவித விரக்தியைத் தந்தபோது, வீட்டிற்குள் தன்னையும் மறந்து கால் எடுத்து வைக்கும்போது,

"அப்படியே புறக்கடைப் பக்கமா வந்து குளிச்சிட்டுப் போங்க, எப்பவுமே யோசனை தானா?" என்ற ராஜம்மாவின் சலிப்பான வார்த்தைகளால் சுயநினைவிற்கு வந்து புறக்கடைப் பக்கமாக நுழைந்து குளித்துவிட்டு வெளியே பார்த்தபோது,

வீதி விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. வீதியின் முன்புறங்களில் பெண்களும், சிறுமிகளும், வயதுவந்த பெண்களும் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தனர். மேலும் செளடம்மன் கோயிலுக்கு விளக்கு ஏற்ற தாவணிப் பெண்கள் தட்டில், கிண்ணங்களில் பூ, தேங்காய், எண்ணெய் சகிதமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். பாதையோரத்து வேப்பமரங்களும் பூவரசம் மரங்களும் சில்லென்று காற்றைத் தெளித்துக் கொண்டிருந்தன.

3

"சடக்... சடக்... சடக்.." தறிச் சட்டத்தின் இருபுறமும் நூலை இழுத்துக்கொண்டு போன நாடாநாழி ஒரு நாழிகைக்குக்கூட நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தது. ஓய்வில்லாமல் இழுவைக் கயிற்றை இலகுவாக இழுத்தபடியும் அதேசமயம் தறிக்குழியின் கீழ்ப்புறத்தில் கால் பதிப்பதற்காக இருந்த மிதிகட்டையில் பாதங்களை அழுத்தியும் தனக்கு எதிர்ப்புறமாக இருந்த தறிச்சேலையை உருவாக்கும் பாவில் கவனமாகப் பார்வையைச் செலுத்திக் கொண்

டும் சேலையை நெய்து கொண்டிருந்த ராஜப்பா வுடன் -

பட்டுப்பாவில் இழைகள் அடிக்கடி அறுந்து விட, தறிப்பாவுக் கட்டையின் ஓரத்தில் வைக்கப் பட்ட சிறிய கிண்ணத்திலிருந்து பசையை விரல்களால் தடவி அறுந்துபோன இழை களைச் சேர்த்துப் பிணைத்து முறுக்கிய நிலை யில் பாவில் தன் விரல்களை அடிக்கடி சிக்கி விழும் பட்டு நூல் இழைகளைச் சரிசெய்து கொண்டிருந்தாள் ராஜம்மா.

ராஜப்பாவின் முகத்திற்கு நேரே 'கோன்ப்ளு' கலரில் சேலை உருவாகிக் கொண்டிருந்தது. சேலையில் உடற்பரப்பில் 'முந்திரிப்பழ' வடிவ புட்டாவும் அதைக் கொத்தும் கிளியின் உருவ மும், சேலைகளின் கரைப் பக்கமாய் கோபுர வடிவத்தின் அடுக்குகளுமாய் கொஞ்சமாய் கொஞ்சமாய் உருவங்கள் விழுந்து கொண் டிருந்தன.

எப்படியும் நாளை ராத்திரிக்குள் சொல்லி வச்ச மாதிரி நான்கு சேலைகளையும் முதலாளி



FORM IV

[See Rule 8]

REGISTRATION OF NEWSPAPERS [CENTRAL] RULES

1956

Statement about ownership and other particulars about the

"AMUDHASURABI"

1. Place of Publication	123, Angappa Naicken Street, MADRAS - 600 001.
2. Periodicity of the Publication	Monthly
3. Printer's Name Whether citizen of India Address	R. Janarthanan Yes, Indian M/s. Orr Jay Process 43, Leungs Garden Road, MADRAS - 600 002.
4. Publisher's Name Whether Citizen of India Address	A.V.S. Raja Yes, Indian 123, Angappa Naicken Street, MADRAS - 600 001.
5. Editor's Name Whether Citizen of India Address	Vikraman Yes, Indian 2, Jayasankar Street, MADRAS - 600 033.
6. Name and address of individuals who own the newspaper and partners or share holders holding more than one percent of the total capital	Shriram Trust 123, Angappa Naicken Street, MADRAS - 600 001.

I, A.V.S. Raja hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

[Sd.] A.V.S. Raja
on behalf of
Shriram Trust
Publisher.

Date : 1.3.92

யிடம் கொடுத்து ஒட்டு மொத்தமாய்ப் பணம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பு இப்போது முன்பிருந்ததைவிடக் கொஞ்சம் வேகங்கொள்ள வைத்தது.

மதிய வெயில் உக்கிரமாய் வீதி மண்ணையும் மனிதர்களையும் சுட்டுக் கொண்டிருந்தது. "பதனி.. பதனீர்... நாவலு... கொட்டப்புளி.." என்ற வியாபாரக் குரல் கேட்டுவிட்டு,

"ராஜம்! பனைக்குருத்துலே பதனி வாங்கிட்டு வா. ரொம்ப அலைஞ்சதிலே உடம்பு சூடா இருக்கு. குடிச்சா கொஞ்சம் நல்லா இருக்கும்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் தறிக் குஞ்சத்தை இழுக்கவும், அவரது மகள் கண்மணி, "அப்பா, அப்பா, சின்ன சித்தப்பாவைப் போலீசு அடிச்சி கூட்டிகிட்டுப் போகுது" என்று அலறவும் சரியாய் இருந்தது.

அதற்குள் தன் சின்னத் தம்பியின் மனைவியும் ஓடிவந்து, "பாவா.. பாவா! அவரைப் போலீசு புடிச்சிகிட்டுப் போகுது" என்று சொல்லவும் இன்னமும் தர்மசங்கடமாய்ப் போய்விட்டது ராஜப்பாவிற்கு.

அவரால் ஒன்றும் பேசமுடியவில்லை. சமையல்கட்டிலிருந்து சத்தம் கேட்டு வெளியே வந்த ராஜம்மாவைக் கட்டிக் கொண்டு ராஜா அழுதபோது, "இவங்களையெல்லாம் திருத்த முடியாதும்மா. எதுக்குப் பெரியவங்க சொல்லுறாங்க? அண்ணிங்கற ஸ்தானத்துலே சொல்ற மட்டுந்தான் நான் சொல்லமுடியும். ஆனா, உன்னைக் கட்னவருங்கற ஸ்தானத்துல நிச்சயமா உன்னாலே முடியும். நீ என்னான்னா, ஆஊன்னா அம்மா வீட்டிலே கொண்டு போய் விட்டிருங்கன்னு பொலம்பறே.

அம்மா வீட்டுக்குக் கல்யாணமான பொண்ணுங்க போறதுக்கும் வர்றதுக்கும் விஷயமில்லாமே இல்லேம்மா... இதுக்கெல்லாம் போனா அவ்வளவுதா. சரி.. சரி அழாதே.. பாவா தா போறாரில்லே" அவளின் தலையைக் கோதிய படி அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தாள் ராஜம்மா.

என்ன காரணத்திற்குத் தன் சின்னத் தம்பியைப் போலீஸ் பிடித்துக்கொண்டு போகிறது என்பதை நடந்து கொண்டே எதிரெதிராய் வந்தவர்களிடமும்வேண்டியவர்களிடமும்கேட்ட போதே ஊர்ஜிதம் ஆகிவிட்டது ராஜப்பாவிற்கு.

செக்காபட்டி ராமர் கோயிலின் முன்பு 'ராமர் பட்டாபிஷேகப் படத்தை' சீனியும் மற்றும் அவனது சிநேகிதர்களும் தடையை மீறி எரித்த தற்காகத் தான் அம்பாத்துரை போலீஸ் வந்து கைது செய்துகொண்டு போன விஷயம் துலாம்பரமாகத் தெரிந்தபோது ராஜப்பாவினால் ஒன்றும் செய்யமுடியாமல் தான் பலவீனப் பட்டுப்போனது போல திக்பிரமை. இதுபோன்ற விஷயங்கள் எல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்த போதும், வேறுவழி எதுவும் தோணாத காலத்தில், கால்கட்டுப் போட்டால் சரியாய் விடும் என்ற நிலையில்தான் ராஜப்பா சீனிக்குக் கல்யாணம் செய்து வைத்தது. இதையும் மீறி சீனியின் பிடிவாதம் அதிகமானபோது திருத்த வழியில்லை என்று கொஞ்சம் கொஞ்சமாய் ஒதுங்கியும் கொள்ள வேண்டியதாயிற்று வேறு வழியில்லாமல்.

'கடவுள் மறுப்பு' சங்கத்தின் செல்வாக்கு சின்னாளப்பட்டியிலும் ஆத்தூர் - திண்டுக்கல் - வெள்ளோடு என்று பரவலாய் பரவிக் கொண்டிருந்தாலும், சுதந்திர தேசத்தின் தாகத்தைவிட அது பெரிய கொள்கையாக,லட்சியக் கொள்கையாக யாராலும் சரியாய் மதிக்கப்படாத நிலையில், தன் தம்பி சீனியின் போக்கைக் கண்டு அதிருப்திதான் பட முடிந்ததே தவிர வேறெதுவும் அப்போதைக்குச் செய்ய முடியவில்லை என்பதும் உண்மை.

ஊரில் பஞ்சாயத்துத் தலைவர் என்ற ஹோதாவில் அவர் எப்போதும் எதையும் தனக்கு நியாயமில்லாத ஒன்றை நியாயங்கட்டி சரி செய்ததில்லை என்பதை அந்த ஊர் ஜனங்களே வாக்குமூலம் தந்தபிறகு, சீனியின் விஷயத்தில்

மிகவும் சிரத்தை எடுத்தோ, மேற்போக்கிற்கோ கூடப் பேசாமலிருந்ததொன்றே, ஊர் ஜனங்களுக்கு இவர்மீது மதிப்பு ஏற்படும்படியான நிலை ஏற்பட்டது.

இருந்தபோதும், வீட்டிற்குள் சீனியின் மனைவியின் முகத்தைக் காணும் அவசியமான வேளைகளில் அல்லது பேச்சுகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் எல்லாம் தலை குனிந்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை ராஜப்பாவிற்கு.

தன்னுடைய மௌனமான நிலையைக் கண்டும் தன் கணவன் இல்லாத வீட்டில் இனி என்ன வேலை என்று சொல்லாமல் சொல்வது போல, ஒருநாள் சீனுவின் மனைவி தன் மனைவி ராஜத்திடமும், தன்னிடமும் பிறந்த வீட்டிற்குப் போய்விட்டு, கணவன் திரும்பி வந்தபின் வருகிறேன் என்று சொல்லும்போது, ராஜப்பாவிற்கு உடனே என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை என்றாலும் அதைவிட முக்கியமாய் சீனி திரும்பிவந்து எப்படி அவளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பினீர்கள் என்றாலும் என்ன செய்வது என்றுதான் யோசிக்க வேண்டியதாயிருந்தது.

தன்னுடைய உணர்வுகளுக்கு எப்படிப் பிறரிடமிருந்து மரியாதையையும் மதிப்பையும் எதிர்பார்த்து வாழ்ந்து பழக்கமாகிவிட்டதாலோ என்னவோ, 'கனகு'க்கும் சரி சீனிக்கும் சரி அவரவர் எண்ணப்படியே விட்டுக் கொடுத்துப் போனதன் பலன்தான் இப்போது தான் அனுபவிக்கும் நிலை என்பது ராஜப்பாவிற்குப் புரிந்து போன விஷயம்.

பெற்றவர்களின் இழப்பைப் பற்றிய கவலையை அறியாதபடியே தம்பிகளை வளர்த்து ஆளாக்கிய விஷயத்தில் மறுபடியும் இப்போது அந்தப் பெருந்தன்மையான உணர்வுகளைக் களங்கப்படுத்திக் கொள்ள இஷ்டமில்லை. எல்லாமே நடந்து போன விஷயம். இனி நடக்கப் போகும் விஷயம் என்னென்ன என்று தீவிரமாய் சிந்தித்துக் கொண்டிருந்த போதுதான் மீண்டும் இறங்கியது ராஜப்பாவின் தலையில் இன்னோர் இடி.

✧ ✧ ✧

"வேண்டாம் கனகு! சொன்னாக் கேளு. சீனு ஜெயில்ல இருக்கான். வழக்கு முடிஞ்சு எப்ப வெளியே வருவான்னு சொல்ல முடியாமே இருக்கு. நீயும் இப்போ 'நேதாஜியோட படையிலே போய்ச்சேரப் போறேன்னு அடம் பிடிக்கிறியேப்பா. நான் ஒருத்தன் மட்டும் தனியா இந்தக் குடும்பத்திலே பொழைக்கனும்னு ஏதாச்சும் தலையெழுத்தா என்ன?

சொல்லுப்பா! அதுவுமில்லாமே சாந்தி 'முழு காம' இருக்கறதா உன்னோட அண்ணி சொன்னா, படையிலே சேரவே வேண்டாம்னு நான் உனக்குத் தடை போடலையப்பா... இப்போ வேணாம். கொஞ்சம் பொறுத்துப் போன்னுதானே சொல்றேன். நீங்க எல்லாம் இல்லாமே இந்த வீட்லே எப்படிப்பா கல கலன்னு சிரிச்சுப் பேசி சந்தோஷமா இருக்க முடியும்?"

"சொன்னா கேளுங்க பாவா, பெரிய பாவா, சொல்றாரில்லே? நீங்க அப்படிப் போயிட்டா நான் என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும். எனக்கு ஒருவழி சொல்லிட்டுப் போங்க. சாதாரணமா சீட்டுக் கச்சேரிக்குப் போற மாதிரியில்லே பிடிவாதம் பிடிக்கிறீங்க... வேண்டாம் பாவா.."

தன் அண்ணனின் பேச்சையும் சரி, அழு குரலில் பேசிய தன் மனைவி சாந்தியின் பேச்சைப் பற்றியும் சரி எதையும் காதில் போட்டுக் கொண்டவனாக கனகு நடந்து கொள்ள வில்லை. அவனிருந்த நிலையில் யார் சொன் னாலும் கேட்பதாயில்லை என்று கட்டியங் கூறுவது போலிருந்தது.

"முடியாது, முடியாது... நான் யாரோட பேச்சையும் கேட்கத் தயாரா இல்லை இப்போதைக்கு! 'இளைஞர் படை'யிலே நான் ஏற்கெனவே சேர்ந்தாச்சு. தலைவர் நேதாஜி கல்கத்தா கார்ப்பரேஷன் தேர்தலில் ஜெயிச் சாச்சு. பேப்பர்லே போட்டிருக்காங்க. அவ ரோட கை ஓங்கியிருக்கு. நிச்சயமா தேச விடுதலைக்காகவும் சுயராஜ்ஜியக் குரலுக்காக வும் அவரோட போராட்டத்துலே என்னோட பங்கும் என்னோட சிநேகிதர்களின் பங்கும் உண்டு. சேர்ந்தே குரல் கொடுப்போம்.

'அலிப்பூர்' சிறையிலிருந்து தலைவர் நேதாஜி விடுதலையாகி இப்போது இருக்கறதோ பர்மா - மாண்டலே ஜெயில்லே. அவர் அங்கிருந்து விடுதலையாறதுக்குள்ளே நானும் சிநேகிதர் களும் அங்குபோய் தலைவரோட சேர்ந்து போராடத் திட்டம் போட்டிருக்கோம்.

நான் புறப்படப் போவது நிச்சயம்தான். தலைவர்கிட்டே இருந்து இல்லேனா, அவரோட செகரட்டரிகிட்டே இருந்து 'உத்தரவு' வந்ததும் கிளம்பிப் போயிடுவேன்.

சாந்தியை நான் வரும்வரைக்கும் அவங்க அம்மா வீட்டிலேயோ, சம்மதமிருந்தா உங்க ளோடவோ இருக்க வச்சிக்குங்க.."

"தம்பி பொண்ணுன்னு இருந்த அதுவும் ஒருத்தனை நம்பிக் கல்யாணம் செய்துகிட்டு வந்துட்டா.ஏழையா இருந்தாலும் சரி பணக்கார வீட்டுப் பொண்ணாயிருந்தாலும் சரி, கட்டின புருஷனோட இருக்கறதுதாம்ப்பா முறை. உன் னோட எதிர்காலத்தை வீணாக்கிடாதேப்பா!

சாந்தி முழுவாம இருக்கா, இந்த நெலை யில அவளை விட்டுட்டுப் போறேங்கிறியே இது உன்னோட மனசுக்கே நியாயமாப் படுதா? கொஞ்சம் யோசிச்சுப் பாரு.

எங்க மாதிரியா, மூணு குழந்தைகளைப் பெத்து வளத்துட்டு.. இதுதானா சம்சாரிங்க வாழ்க்கைன்னு சலிச்சுகிட்டு எதுவுமே இனி வேணாம்னு பொறுப்பில்லாம போறதுக்கு?

அவளோட மனசைப் பத்திக்கொஞ்சமாச்சும் நெனைச்சிப் பார்த்தியா கனகு? உன்னை நம்பி வந்திருக்கவளே நீ விட்டுட்டுப் போயிட்டா, ஒரு வேளை அங்கேயே வச்சிருந்தா ஊரு நாலு தட்டு கெட்டித்தனமா வார்த்தை பேசாதா?

அவ அம்மா வீட்டுக்கு நீ சொல்ற மாதிரி அனுப்பி வச்சிட்டோம்னு வை. உன்னோட தாத்தா பெருமைங்க, இப்போ நம்ப குடும்பத் தோட பெருமைங்க, எல்லாமே போயிருது காத்துலே மானம் மரியாதை இல்லாமே. 'என்னோட பெண்ணை வச்சுக்கஞ்சி ஊத்த முடியாத துப்புகெட்டபசங்க'ன்னு சாந்தியைக் பெத்தவங்க நம்மைப் பார்த்து இனிமே எதுக்கு 'உறவு'ன்னு நெனச்சி பேச மாட்டாங்க.. என்ன தம்பி, இப்படிப் பொறுப்பில்லாம நடந்துக் கிறீங்க.

எல்லாமே நல்லதுக்குதான் சொல்றேன் நான். என்னைக் கட்டின புருஷனைவிட கட்டிக் காத்து வளர்த்த பிள்ளைங்க நீங்க. நாளைக்கு ஏதாச்சும் நடந்திருச்சின்னா என்னாலேயும் தாங்க முடியாதப்பா... ஆமா" என்று ஏகக் குர லில் சோகத்துடன் பொங்கிவந்த அழுகையை முன்றானையால் துடைத்துக்கொண்டு சமையல் கட்டிற்குப் போனாள்.

கனகுக்குக் கோபம் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை. அவன் அண்ணி சொன்ன பொறுப்பான விஷயங்களையும் நிகழப்போகும் சம்பவங்களையும் பற்றிக்கொஞ்சம்கூடக்காதில் போட்டுக் கொண்டதாகவோ, அதைப் பற்றிச் சிந்தித்ததாகவோ தெரியவில்லை. தன் அண்ணி போன சமையல்கட்டின் பக்கம் பார்வையைத் திருப்பிக்கோபம் கலந்த உச்சக் குரலில் பேசினான்.

"எனக்குப் பொறுப்பில்லேன்னு நீங்க மறை முகமாக அழுத்தமா சொல்லிக் காட்டறது புரி யுது அண்ணி! பரவாயில்லை. எங்க அண்ண னோட இரக்கத்திலேதான் இந்த வீட்டுக்கு நீங்க மூத்த மருமகளா வந்தீங்க.

நீங்க இப்ப சொல்லிக் காட்டினீங்களே..., அதாவது குத்திக் காட்டினீங்களே எங்களை வளர்த்து வாலிபம் செஞ்சுன்னு... இதெல்லாம் நீங்க செஞ்ச பெரிய காரியம்னு நெனச்சிட்டுப் பேசினீங்க. நீங்கன்னு இல்லாமே, வேறு எந்தப் பொண்ணு எங்க அண்ணனுக்கு மனைவியா வந்திருந்தாலும் அவங்களும் நீங்க செஞ்சதைத் தான் செஞ்சிருப்பாங்க. இப்படி விளம்பரப் படுத்திப் பேசியிருக்க மாட்டாங்க".

"என்னங்க, என்னங்க..., பாவா..! என்ன பேச்சு நீங்க பேசுறீங்க? அக்காவைப் பத்தியா இப்படி நா கூசாம பேசறீங்க..., வேண்டாங்க. இனிமே ஒண்ணுமே பேசாதீங்க. என்னோட வாழ்க்கை இப்படித்தான்னா இதை மாத்த யாராலே முடியும்?

பொறந்த வீடோ, புகுந்த வீடோ எங்கேயோ என்னோட வாழ்க்கையை நான் போக்கிக் கிறேன்.

தயவு செஞ்சு இதுக்குமேலே அவளைக் குத்தம் சொல்லாதீங்க..''சமையல் கட்டிலிருந்த கனகு சொன்ன வார்த்தைகளைக் கேட்டுவிட்டு அழுது கொண்டு வெளியே வந்த தன்னுடைய 'அக்கா' முறையான ராஜம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள் சாந்தி.

ராஜப்பா மிகவும் தர்மசங்கடமான நிலையில் வெளிவாசலையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார். தன் தம்பி கனகின் வார்த்தைகள் குத்தீட்டியாய் நெஞ்சில் பாய்ந் ததை அவரால் உணர்ந்துகொள்ள முடிந்த போதும், அப்போதைக்கு வேறு ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் இருந்தது போலக் கையை மட்டும் பிசைந்து கொண்டு நின்றார்.

"எலே,... கனகு..., நீ பேசின பேச்சுக் கெல்லாம் நான் அர்த்தம் தேடவோ, அகராதி தேடவோ போகப் போறதில்லே. ஒண்ணு மட்டும் ஞாபகத்துலே வச்சுக்க.

இங்கே பாரு, இந்த பட்டுகோன் குவியல் எவ்வளவு சுத்தமா 'பளிச்'சுன்னு இருக்கு! இதைப் போலதா உன்னோட அண்ணியும். இவ ளோட மனசு எப்படிப்பட்டதுன்னு எனக்கு மட்டுந்தான் தெரியும். உனக்கும் உன்னோட தம்பிக்கும் இன்னும் சொல்லப் போனாஇந்தக் குடும்பத்தோட கௌரவமும் மானமும்...., வெளியே சொல்ல முடியாத வேதனைகளும் போக்க உன்னோட அக்கா, தங்கச்சி ரெண்டு பேர்த்தையும் கரையேத்தி... அந்தக் காலத்தி லேயிருந்து இந்தக் காலம் வரை தனக்குன்னு எதுவுமில்லாமே எல்லாத்தையுமே இங்கிருக்க வங்களுக்காக விட்டுக் கொடுத்தே வாழ்ந் திருக்கா. ராஜம் என்னோட மனைவிங்கற நெனப்பிலே இவளைத்தூக்கிவச்சுப் பேசறதா நீ நினைக்கலாம். ஆனா, உண்மை அப்படியில் லப்பா!

இந்த வீட்லே இருக்கற நாடாநாழி, ராட்டை, தறி, தறிக்குழி அவ ராத்திரி பகலா சுத்திப் போட்ட பட்டு நூல் கண்டுங்க, சிட்டங்க இன்னும் என்னென்னவோ இவளோட கடமையைப் பத்திச் சொல்லும்பா.

இன்னொன்னையும் கடைசியா உனக்கு நெனவுபடுத்தனும்னு. இதை மட்டும் எதுக்கு அழுத்தி சொல்றேன்னா, 'தியாகத்துக்கும் கடமைக்கும் உள்ள வித்தியாசம் தெரியாமே பேசிக்கிட்டிருக்கே. இப்போ, இந்த இரண் டுக்கும் உள்ள வித்தியாசத்தை நீ தெரிஞ்சுக் கனும்னு நெனச்சுத்தான் இதை நான் சொல் றேன்.

அப்போ உனக்கு வயசு பத்து இல்லேன்னா பதினொண்ணு இருக்கும். உன்னோட தம்பி சீனுக்கு ஏழு வயசு இருக்கும். மஞ்சள் காமாலை நோய் வந்து உன்னோட தம்பி சீனு படுத்த படுக்கையா இருந்தான். கிராமத்துல இருந்த மூலிகை வசதிங்களையெல்லாம் மீறி நோய் முத்திப்போச்சு.

கண்ணெல்லாம் மஞ்சத் தண்ணியக் கலந்து ஊத்துனாப்போல இருந்திச்சு. வயிறு எப்படி யிருந்தது தெரியுமா?... இப்போ இதையெல்லாம் நெனச்சா நெஞ்சே வெடிச்சிடும் போல இருக்குப்பா!

தலை வச்சுப் படுத்துப் படுத்து எண்ணெய் அழுக்கு அப்பி திண்டாய்ப் போன ஒரு தலையணை மூட்டை மாதிரி வீங்கிப் போய்... அவனைப் படுக்க வச்சிருந்த வெள்ளை வேஷ்டி அப்படியே மஞ்சத் தண்ணியிலே நனைச்சி எடுத்த மாதிரி, வந்து பாக்கறவங்க எல்லாமே சந்தேகம்னு சொல்லிட்டுப் போனாங்க. எப்படி இருந்திருக்கும்னு நீ நெனைச்சிப் பாரு.

சிறுமலையிலிருந்து பறிச்சிட்டு வரச் சொன்ன கீழாநெல்லியும் 'சீவல் சருகு' கிரா மத்துலே இருந்து தயிர் கொண்டு வர்ற பாப் பம்மாகிட்டேயும் சொல்லிக் கொண்டு வரச் சொன்ன 'கீழாநெல்லியையும்' ராத்திரி பகல்னு பாக்காம வேளா வேளக்கி கைநோக அரைச் செடுத்து வெள்ளாட்டுப் பாலிலே கலக்கிக் கலக்கிக் கொடுத்ததை நான் சொல்ல வேண்டாம் கனகு! இந்த ஊரு பஸ் ஸ்டாண் டிலே இருந்து சொக்காப்பட்டி கள்ளர் வீதி வரை சொல்லுவாங்க.

அப்போ எனக்குக்கல்யாணமாகலே. உங்க அம்மா செத்துப் போன நேரம், அத்தை வீடுன்னு அப்ப உங்க அண்ணி அந்த வயசு



லேயே இந்தக் குடும்பத்தை கவனிச்சுட்டிருந்தா. எடுபிடி வேலைங்க எதுன்னாலும் தானே வந்து வேலை செஞ்சு கொடுத்துட்டுப் போவா. கிணத்துலே தண்ணி சேந்தி வைக்கற திலிருந்து.

சந்தையிலே காய்கறிங்க வாங்கித் தந்துட்டுப் போறதிலிருந்து அவ செஞ்சத மறக்க முடியுமா என்ன?

சின்னாளபட்டியிலே சரியாகாமே, ரோட்டாஸ்பத்திரின்னு சொல்ற கஸ்தூரிபாய் ஆஸ்பத்திரியிலிருந்து திண்டுக்கல் தர்மாஸ்பத்திரிக்கு சீனுவைக் கொண்டு போறப்பவே சொல்லிட்டாங்க பையன் பொழைச்சி வர்றது கஷ்டம்னு, நெனைச்சிப் பாரு கனகு!

நம்மைப் பெத்தவங்க யாரும் இல்லாத சமயத்துலே, வீட்லே பொம்பளைங்க யாருமில்லாத சூழ்நிலையிலே தன்னந்தனியா என்னாலே எப்படியிருந்திருக்க முடியும்..? உன்னோட அக்கா தங்கச்சியெல்லாம் விவரம் தெரியாத பொண்ணுங்க. என்னோட மனசு நிலை குறையற நேரமெல்லாம் ராஜம் வந்து ஆறுதல் சொல்லித்தேத்தாமே இருந்திருந்தா, என்னோட வாழ்க்கை எப்படியெல்லாமோ ஆயிருக்கும்.

திண்டுக்கல் தர்மாஸ்பத்திரியிலே சீனுவைச் சேத்தப்புறமா ஆன கொடுமையை நெனச்சா தான் மனசு நொறுங்கி சுக்கு நூறாப் போகுது இப்பக்கூட.

சீனுவுக்கு ரத்தப்போக்கு. மனுஷனோட ஒடம்பிலே இருக்கிற துவாரங்க எத்தனையோ அத்தனையிலேயும்.

டாக்டருங்க எல்லாமே கைவிட்டுட்டாங்க. ரத்தப்போக்கு நின்னபாடில்லே. வெளியே வந்து எச்சில் துப்பிட்டுப் போறதுக்குள்ளேகூட ஏதாச்சும் நடந்து முடிஞ்சுடும்னு பயம்.

பயம்னா சாதாரண பயமில்லேப்பா... கூடப் பொறந்த பொறப்பே சாவுக்குக்காவு கொடுக்க வேண்டியதா இருக்கேங்கற கடைசி பயம்.

டாக்டருங்க சொன்னாங்க. இந்த கவர்மெண்ட் ஆஸ்பத்திரியிலே இருக்கற நோயாளிங்க எல்லாருக்குமே எங்களாலே 'கேரண்டி' தரமுடியும். ஆனா, இந்த நோயாளியைத் தவிர...இனி ஒன்னும் செய்யறதுக்கு இல்லே. சொல்றவங்களுக்குச் சொல்லியனுப்பிடுங்கன்னு .

கனகு!

எப்படியிருந்திருக்கும்னு நீயே சொல்லு. அப்பா அம்மா இல்லாமே இருந்த உங்களை வளர்க்கற பொறுப்பிலே இருந்த எனக்கு இப்படியொரு சம்பவம் ஏற்படும்னு நான் நெனச்சா பார்த்தேன்?

வேறே வழியே இல்லையான்னு டாக்டர் கிட்டே கேட்டப்போ, ரத்தம் வெளியே அதிகமா போயிடுச்சு, ரத்தப்போக்கு நிற்க சரியான மருந்துகூட இல்லே...

இருக்கற ஒரே ஒரு மருந்தைக் கடைசியா போட்டுப் பார்க்கலாம். ஆனா ஒண்ணே ஒண்ணு...

சீனுவோட 'ரத்த' வகையைச் சேர்ந்த ஏதோ ஒருவகை ரத்தம் மூணு பாட்டிலிலே இருந்து அஞ்சு பாட்டில் வரை வேணும்னா பாரு... எவ்வளவோ கஷ்டப்படற நேரத்தில் இந்த மாதிரி ஒரு சின்ன ஆதரவான வார்த்தை டாக்டருகிட்டேஇருந்து.

ஏன்னா என்னோட பரிதவிப்பும்... கூடவே எடுபிடி வேலைக்குன்னு வந்த ராஜத்தோட கண்ணீரும் கம்பலையுந்தான் டாக்டரோடு மனசை மாத்திருக்குன்னு நெனைக்கிறேன்.

கடைசியா –

சீனுவோட ரத்தம் வகை என்னோட ரத்தத்துக்கும், கள்ளத்தெரு சிநேகிதன் குமாரவேலு ரத்தத்துக்கும் ஒத்துப் போச்சு. அவனோட அதிர்ஷ்டம்... ஆயுசு கெட்டி. இப்போ அவன் நடந்துக்கற முறை... என்ன சொல்றதுக்கு இருக்கு?

ராஜம் அப்போ இருந்து நடந்துகிட்ட முறையை எல்லாம் மனசுலே வச்சுதான் நான் இவளையே கல்யாணம் செய்துகிட்டேன்.

இதுல எல்லாத்தையும் மீறுகிற மாதிரி இவ கல்யாணத்துக்கு முன்னாலேயே மனசுலே நெனைச்சிகிட்ட ஒரு சம்பவத்தை நெனைச்சா இப்போதுகூட என்னோட வாழ்க்கைக்கு அர்த்தமே ராஜம்தான்னு நெனக்கத் தோணுது.

ஒருத்தனைக் கல்யாணம் செய்துக்கணும்னு நெனைக்கறதும் பிள்ளைங்க பெத்துக்கணும்ங்கறதும் வயசுவந்த பெண்ணுங்க யாருக்கும் ஏற்படற சகஜமான ஒண்ணு. இந்த கிராமத்தைப் பொறுத்தவரை ஜனங்க புழங்க ஆரம்பித்த காலத்திலேயிருந்து இதுதான் நடக்குது. இன்னும் சொல்லப் போனா நெசவுவேலை செஞ்சது போக கெடைக்கற நேரத்திலே 'டூரிங்'

தியேட்டர்லே சினிமா பாத்தா போதும். மாசத்துக்கு நாலு படம்.. வாழ்க்கை சொர்க்க லோகம்னு நெனைக்கறாங்க.

உங்க அண்ணி இருக்காளே ராஜம்..., அந்த வயசிலே என்ன நெனைச்சிக்கிட்டா தெரியுமா கனகு..? எனக்கே அப்போ தெரியலே. கல்யாணத்துக்கு அப்புறமாத்தான் தெரிஞ்சது.

வெளிப்படையா சொல்றேன், வெட்கப் படாமே. கல்யாணமாகி, 'முதல் ராத்திரி'யிலே ஒர் ஆசையை என்கிட்டே சொன்னா; கண்டிஷன் போட்டா இன்னமும் சொல்லப்போனா..

ஆமா, கனகு சீனுக்கு உடம்பிலே எந்த நோயும் நொடியும் இல்லாமே, பொழச்சி எழுந்திருச்சா, குலதெய்வ கோயிலே 'அங்கப் பிரதட்சணம்' செய்யறதா வேண்டிகிட்டாளாம்.

அந்த வேண்டுதலையை நிறைவேத்தாம 'தாம்பத்யம்' நடத்த மாட்டவே மாட்டேன்னு என்கிட்டே தெளிவா சொல்லிட்டா.

இதுக்குப் பின்னாலேதாம்ப்பா,இந்த வேண்டுதலை நிறைவேற்றின பிறகுதான் உன்னோட அண்ணி என்கிட்டே நெருங்கினா.

ஏம்ப்பா, இதைவிட ஒரு பொண்ணு 'அம்மா' ஸ்தானத்திலே என்னப்பா செய்திட முடியும்னு நெனைக்கிறே?

இதையெல்லாம் சொல்றதனாலேதான் ராஜத்தோட குணத்தை நான் பெரிசுபடுத்தறதா நெனைக்காதேப்பா...

என்ன செய்யறது... இந்தக் காலம் அப்படி. பெண்டாட்டியைத் தூக்கித்தலையிலே வச்சுட்டு ஆடறாங்கன்னு உன்னைமாதிரி இருக்கறவங்க குத்தம் சொல்லுவாங்க.

உங்க அண்ணியும் சரி, அவ மாதிரி இருக்கற வேறு யாராயிருந்தாலும் சரி, செஞ்சதை வெளியே சொல்லிக் காட்ட முடியாதுப்பா. ஆனா, இவங்களைப் பத்தி இவங்களாலே அனுபவிச்சவங்களை விட, இந்த ஊருலே இவங்களைப் பத்தி இவங்க வயசிலேயிருந்து வந்தவங்களைக் கேட்டா தெரியும்பா.

சாதாரணமா.. ஒரே வார்த்தையிலே சொல்லிட்டே, இவகிட்டே போய் 'வேறு எந்தப் பெண்ணும் எங்க அண்ணனுக்கு மனைவியா வந்திருந்தாலும் அவங்களும் நீங்க செஞ்சதைத்தான் செய்திருப்பாங்கன்னு எடுத்தெறிஞ்சு..' பரவாயில்லை உன்னோட நிலையில் நான் இருந்திருந்தேன்னாகூட இப்படித்தான் உன்னை மாதிரி சொல்லியிருப்பேனோ என்னவோ?'


— தொடரும்

மனிதனை மனிதனாக்கும் கல்வி

அண்மையில் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்த பல்கலைக் கழகத்தின் அற்புதமான துணைவேந்தர் அவர்களும், அறிஞர் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி அவர்களும் இணைந்து "வருகிற தலைமுறைக்கான கல்வி" என்ற பொருள் பற்றி ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றை அமைத்தனர். அதில் முக்கிய உரையாற்ற டாக்டர் உதயமூர்த்தி அவர்கள் என்னைப் பணித்தார்கள்.

கருத்தரங்கு உண்மையிலேயே கருத்தைக் கவர்ந்தது. கருத்தரங்கின் பொருளே பொருள் பொதிந்ததாக இருந்ததுதான் காரணம். இன்று எங்கு பார்த்தாலும் கருத்தரங்குகள். ஆனால் இவை பலவற்றில் அரங்குகள் உள்ளனவே தவிர கருத்தே கிடையாது. அதேபோல் இப் போது வித்தியாசமான விழாக்கள் பல கொண் டாடப்படுகின்றன. வாரந்தோறும் சில பல விழாக்கள் இப்படி நடக்கின்றன. என்ன மாதிரி விழாக்கள்? பாராட்டு விழாக்கள். எதற்குப் பாராட்டு? யாருக்குப் பாராட்டு? அதுதான் தெளிவாகத் தெரிவதில்லை. பாராட்டுப் பெறுவோரே, "பினாமியாக" விழாக் களை அமைத்துக் கொள்ளுகிறார்களோ என்ற சந்தேகம் எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

பல கருத்தரங்குகளில் கருத்துக்குச் சிறிதும் சம்பந்தமே இல்லாதவர் பங்கேற்பர். பேச்சு களும், (சொற்பொழிவுகள் எனக் கூறப்படு பவை) இதே ரகத்தில்தான் இருக்கும். பல ஆண்டுகட்கு முன்னர் ஒரு மாண்பு, தமிழ்த் தாத்தா உ.வே.சா.விழாவில் வ.உ.சி. பற்றி யாரோ தயாரித்த சொற்பொழிவை ஆற்றி தள்ளாத தமிழ்க்கிழவர் உ.வே.சா. அவர்களை செக்கிழுக்க வைத்தார். அண்மையில் ஒரு மேதகு ஆளுநர் பெருமான்கூட வேறொரு நிகழ்ச்சியில் நிகழ்த்தப்பட வேண்டிய சொற் பொழிவைப் படிக்க ஆரம்பித்து, இரண்டாவது "பாராவுக்குப்" பின் உண்மையை உணர்ந்து உடன் உரிய சொற்பொழிவுக்கு மாற்றிக் கொண்ட செய்தியைப் பத்திரிகைகளில் கண் டோம். இந்த ஆளுநர் அவர்கள் அறிஞர். எனவே தவறைத் திருத்திக்கொண்டார். பலர்




தவற்றைஉணராமலேயேமேலே மேலே போய்க் கொண்டிருப்பர், சொற்பொழிவில்தான்.

இப்படிப்பல கருத்தரங்குகள் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கும் இந்நாளில் அறிஞர், பண்பாளர், சிந்தனையாளர், டாக்டர் எம்.எஸ் உதயமூர்த்தி அமைத்திருந்த கருத்தரங்கு வித்தியாசமானதாக இருந்தது. என் நண்பர் திரு. உதயமூர்த்தி அவர்களே வித்தியாச மானவர்தான்.

என்ன மாதிரி வித்தியாசம்? ஆங்கிலத்திலே சொல்லப்போனால் "Dr. M.S. UDAYAMURTHI IS ALWAYS RELEVANT" - இதுதான் அவரது மிகச் சிறந்த பண்பு. இந்த அடிப்படையில்தான் அண்ணா பல்கலைக் கழகக் கருத்தரங்கும் அமைந்திருந்தது. மிகவும் வித்தியாசமான கருத் தரங்கு. திரும்பத் திரும்ப இதை நான் அடித்துக் கூற விழைகிறேன். முதற்கண் கல்வித்துறை அதிகாரிகளோ, அரசு அமைச்சர்களோ இல்லை. இது நல்லதா கெட்டதா? என்னும் ஆராய்ச்சியில் நான் இறங்கவில்லை. அங்கு அன்று கருத்தரங்கில் கண்ட உண்மைகளை மட்டுமே விவரிக்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வேறொரு மாநிலத்தில் நான் இருந்தேன். அங்கு எந்த விழா நடந்தாலும் ஒரே நிகழ்ச்சி நிரல்தான் உள்ளது. அத்துணை மந்திரிகள், சபாநாயகர், துணை சபாநாயகர் இவர்கள்தான் கதா நாயகர்கள். வேறு யாரும் விழாவில் இருக்க மாட்டார்கள், இருக்கவும் கூடாது. அரசு எடுக்கும் விழா அல்லவா? அரசே, கலப் படமற்ற அரசே, விழாவில் இருக்கும். விழா வில் கூட்டத்திலும் அரசின் அதிகாரிகள் சிலரே இருப்பர். இருந்தாலும் நம் பழைய கலைப் பண்பாட்டின் அடிப்படையில் "அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடைபெறும்" என்ற முறையில் இவ்விழாக்கள் நடைபெறும். தேதி போடாமல் அழைப்பிதழ்களைக்கூட அடித்து வைத்துக் கொள்ளலாம். ஏனென்றால், பேச் சாளர்களில் மாற்றமே கிடையாது. இதை யெல்லாம் பார்த்துக்களித்த எனக்கு அண்ணா பல்கலைக் கழகக் கருத்தரங்கு புட்டிப்பால் சாப்பிட்டே பழகிய குழந்தைக்குத் தாய்ப்பால் கிடைத்த மாதிரி இனித்தது.

அமைச்சர்களே இல்லை என்றால் வேறு யார் இருந்தார்கள்? அண்ணா பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர் டாக்டர் அனந்த கிருஷ்ணன், விளம்பரமே விரும்பாத அறிவு மேதை. இவர் தவிர, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அமைதியே உருவான அறிஞர் டாக்டர் சாதிக் அவர்கள். இன்று மகாத்மா காந்தியடிகளை வெகு வேகமாக நாம் மறந்து வரும் வேளையில் காந்திய நெறியில் சிறிதும் அசையாது நிற்கும் காந்தி கிராமப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அறம் அவர்கள். கோயம்புத்தூர் விவ சாயப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்து உலகப் புகழ் பெற்ற முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஜி. ரங்கசாமி அவர்கள், சிந்தனையாளர் திரு இரா. செழியன் அவர்கள், இவரை அரசியல் வாதி என்றால் பொருந்தாது. எனவே சிந்தனை யாளர் என்றேன். மாண்புமிகு நாவலர் அவர் களின் இளைய சகோதரர் இவர். அறிஞர்.



இவர் தவிர உழைக்கும் ஆசிரியர்கள் பலர். (உழைக்காத ஆசிரியரும் உண்டோ? என்று நீங்கள் சிறு குரலில் கேட்பது எனக்குக் கேட்கிறது). மேநிலைப் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகளில் உள்ள பேராசிரியர்கள், ஆரம்ப ஆசிரியர் பலர், இப்படித் தமிழகம் தழுவியவர்கள் வந்திருந்தார்கள்.

அண்ணா துணைவேந்தர் அவர்கள் தன் வரவேற்புரையில் இக்கருத்தரங்கின் அவசியத் தையும் அவசரத்தையும் வலியுறுத்தினார். கருத்தரங்கின் ஜீவநாடியாக விளங்கிய டாக்டர் உதயமூர்த்தி அவர்களின் அறிமுக உரை மிகவும் சீரிய முறையில் அமைந்திருந்தது. கல்வியின் குறிக்கோள் என்ன? என்ற கேள்வியுடன் ஆரம்பித்து எப்படி முன்னேறிய நாடுகள் கல்வியை ஒரு பெரும் முதலீடாக நினைக்கின்றன என விவரித்தார். (HUMAN INVESTMENT) இதை நம் வள்ளுவன் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சொன்னான், "அறிவுடையார் எல்லாமுடையார்", "மாடல்ல மற்றயவை" என்று.

வருங்காலத்தில் - 21 ஆம் நூற்றாண்டில் கல்வி மட்டுமன்று,உலகிலேயே எவை, எவை முதலிடம் வகிக்கும் என்ற கேள்விக்குப் பேராசிரியர் ஜான் நிஸ்பெட் கூறிய பதிலை திரு.உதயமூர்த்தி மும்முறை கூறி நம் மனத்தில் பதிய வைத்தார். JOHN NESBIT FORESAW "WOMEN AND A SENSE OF SPIRITUALITY TAKING PRIORITY IN THE COMING CENTURY". இவர் கூற்றுப்படிப்பெண்களின் முன்னேற்றமும், ஆன் மிகமுமே வருங்காலத்தில் முன்னிலை வகிக் கும். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற பத்தாம் பசலிக் கேள்வி இறந்துபடும், அல்லது தற்கொலை செய்து கொள்ளும். எங்கும், எதிலும் பெண்கள் என்ற நிலை வரும். நம்முடைய இந்திய இராணுவத்தில்கூடப் பெண் களைச் சேர்க்க முடிவெடுத்திருக்கிறார்கள்.

அதேபோல்தான் ஆன்மிகமும். ஆன்மிகமே உலகின் அச்சாணி என்ற நிலை வரும் என்கிறார், அறிஞர் அறிவுலக மேதை ஜான் நிஸ்பெட். இதையே திருவண்ணாமலை "ஆன் மிக மலை" யோகி இராம் சுரத்குமார் அவர் களும் தினம் தினம் இன்று கூறி வருகிறார்கள்.

சரி, கல்விக் கருத்தரங்கில் ஆன்மிகப் பேச்சு எப்படிப் பொருந்தும் என்று எதிலும் நம்பிக்கை யற்ற அறிவாளிகள் சிலர் முணுமுணுப்பது என் காதிலும் விழுகிறது.


இதற்கு நான் பதில் கூறுவது எளிது. அமெரிக்க ஹார்வேர்ட் (HARVARD) பல்கலைக்கழகம் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நம் மாண்புமிகு அமைச்சர் பொருளாதார மேதை ப.சிதம்பரம் அவர்கள் படித்த பல்கலைக் கழகம். முன்னாள் அமைச்சர் சிந்தனைச் செல்வர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அவர்கள் பேராசிரியராக இருந்து பெரும்புகழ் பெற்ற பல்கலைக்கழகம். இந்தப் பல்கலைக்கழகம் மட்டுமன்றி, பேரறிஞர் நம் ஒப்பற்ற மேதை அண்ணா அவர்களை அழைத்துப் பெருமை பெற்ற யேல் பல்கலைக்கழகம் - இப்பெரும் சர்வ கலாசாலைகளில் ஒரு புதிய படிப்பை, ஒரு புதுப் பாடத்தை இப்போது புகுத்தி இருக்கிறார்கள். விஞ்ஞான அறிவுக்குப் பெயர் பெற்ற இப்பல்கலைக்கழகங்கள் மெய் ஞானத்தின் பக்கம் இப்போது திரும்பி இருக் கின்றன. "நன்னெறி" (ETHICS) என்பதே அப்புதுப் பாடம். நம் தமிழகத்தில் அன்றே, நன்னெறி பற்றி அறிவோம். நன்னெறியற்ற அறிவு பயன் பெறாது என நம் மூதாதையர்கள் கூறினர்.

ஆனால் வளர்ந்த நாடுகள் (Developed Countries) என்று கூறப்பட்ட "அரைவேக்காடு" நாடுகள் ஆன்மிகக் கலப்பற்ற கல்வியையே ஏற்றுப் போற்றி உலகின் முன்னணியில் நின்றனர். எவ்வளவு நாட்கள்? கொஞ்ச காலமே. அதுவும் சோவியத் ஒன்றியம் "கடவுளையே" நாடு கடத்திய செய்தியை உலக மறியும். ஆனால் இந்த ஒன்றியம் 75 ஆண்டுகள்கூடக்கடவுள் இன்றித்தாக்குப்பிடிக்க முடியவில்லை. செல்வத்தையே போற்றி வந்த அமெரிக்கா இன்று இழந்த ஆன்மாவைத் தேடி அலைகிறது.

அண்மையில் ஒரு ஐரோப்பியப் பத்திரிகையில் ஒரு முக்கிய செய்தி கொடுத்திருந்தார்கள். சோவியத் ஒன்றியம் பல துண்டுகள் ஆக உடைந்தவுடன் யாவரும் கண்ட ஒரு காட்சி, என்ன? மாதாக் கோயில்கள் முன்பு, முஸ்லிம் தர்காக்கள் முன்பு "கியூ வரிசையில்" பெரும் கூட்டம்.

ஆன்மிகம் கடைசியில் வெற்றி வாகை சூடிவிட்டது. ஆன்மிகத்தை இகழ்ந்த லெனின் இரண்டாம் முறை இறந்தார். அவர் பழைய பிணத்தைப் புதிதாக ஒருமுறை புதைத்தார்கள்.

மனமுள்ளவனே மனிதன்! மனமற்ற இரும்பு மனிதர்களைப் படைத்த நாடுகள் அந்த இரும்பு மாக்களாலேயே அழியும் நிலை ஏற்பட்டபோது மனிதனுக்குள் மனத்தைத் திரும்பவும் பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன இன்று




அமெரிக்கக் கல்விச்சாலைகள், இதன் விளைவே "ஆன்மிகம்" பற்றிய புதிய புதிய பாடங்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்படுகின்றன.

அரசு நடத்தும் பொதுநிலைப் பள்ளிகள் இல்லாத காலத்தில் "நன்னெறி நல்கல் பெற்றோர் கடனாக" இருந்தது. இன்று இது ஆசிரியர் கடனாக மாறியிருக்கிறது. இதைத் தான் உலகம் முழுதும் பள்ளிகள் செய்ய ஆரம்பித்துள்ளன. முக்கியமாக மேலை நாடுகளில். இதுபற்றி நாம் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

நம் நாட்டின் நிலை என்ன? நாற்பதிற்கு மேற்பட்டு உயர் ஆராய்ச்சி நிலையங்களுக்குப் பல கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டும், அற்புதமான கண்டுபிடிப்புகள் எதுவும் நிகழவில்லை. அமெரிக்க "கோல்கேட்" (COLGATE) பற்பசையையேதான் இன்னும் நாம் உபயோகிக்கிறோம். ஜப்பானிய "சோனி" தொலைநோக்கியே இங்கு அதிகம் இருக்கின்றன. 1951 இல் கல்விக்காக மொத்தச் செலவில் 1.8 சதவீதம் ஒதுக்கினோம். இதில் 56 சதவீதம் ஆரம்பக் கல்விக்குச் சென்றது. இன்று கல்விக்கே 3.5 சதவீதம், அதில் 29 சதவீதமே ஆரம்பக்கல்விக்கு.

ஆனால் எல்லோரும் நம் அருமை பாரதப் பிரதமர் முதல், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் வரை ஆரம்பக் கல்வி உயர வேண்டும் என்று நாள்தோறும் கூறிவருகிறார்கள். உண்மையிலேயே இதை நிறைவேற்ற அவர்கள் நினைக் கிறார்கள்.

ஆனால் நாம் காண்பது என்ன? அகில இந்திய நிலையில் 100 பேர் 1 ஆவது வகுப்பில் சேர்ந்தால் 5 ஆவது வகுப்பு வருவதற்குள் 52 பேர் பள்ளியை விட்டு நின்றுவிடுகிறார்கள். தமிழகத்தில் மதிய உணவின் பலனாக 21 பேர்தான் ஓடிவிடுகிறார்கள். இலவசக் கல்வி, இலவச உடை இலவசச் சத்துணவு, இலவசப் புத்தகம், சிலேட்டு, 3 ஆவது வகுப்பு வரை இலவசத் தேர்வு (யாரையும் "பெயில்" ஆக்குவதில்லை) இவ்வளவு இருந்தும் இங்கு 21 பேர் பள்ளியை விட்டு வீராங்கனை ஓட்டப் பந்தயத் தங்கப்பெண் பி.டி. உஷாவின் வேகத்தில் ஓடிவிடுகிறார்கள். என்ன காரணம்? அகில இந்திய அளவில் 51 பேர் ஓடிவிடுகிறார்கள். ஏன் இந்த அவலநிலை? இதை ஆராய வேண்டும் என்று இந்தக் கருத்தரங்கில் நான் கூறினேன். இராஜஸ்தானில் 1991 ஆம் ஆண்டில் கூட 14 சதவீதமே பெண்கள் பள்ளிக்கு வருகிறார்கள். இதன் காரணத்தை ஆராய வேண்டாமா என்று கேட்டேன்.



டாக்டர் உதயமூர்த்தி அவர்கள் ஒரு அருமையான கருத்தைக் கூறினார்கள். நம்முடைய மூளை இருபக்கங்களைக் கொண்டது. இடதுபுறம், வலப் புறம். அறிவைச் சார்ந்த (Knowledge Sector) இடப் புறத்தையே நம் இன்றையக் கல்வி வளர்க்கிறது. வலப்புறம் உள்ளுணர்வையும், சிந்தனா சக்தியையும் வளர்க்கிறது. அதை நாம் வளர்க்கவில்லை. இது ஆன்மிகத்தையும் ஊக்குவிக்கும், நல்லுணர்வுகளை வலப்புறம் வளர்க்க உதவும். ஆனால் முன்பே கூறியபடி நம் பாடத்திட்டத்தில் இது வரவில்லை.

நாம் இடப்புறத்தைச் சட்டை செய்வதில்லை. வலப்புறத்தை மட்டுமே வளர்க்கிறோம். எனவே இடம் வலம் இரண்டையும் வளர்த்து நூற்றாண்டின் கல்வி மாணவனுக்குத் தன் காலில் நிற்கும் பேராற்றலை உருவாக்கும் முறையில் அமைக்கப்பட வேண்டும் என்றார் அவர்.


இன்று அமெரிக்கத் தொழிலதிபர் பலர் மலையேறுதலில் பயிற்சி பெறுகிறார்கள். ஏன்? தன்னம்பிக்கை, தைரியம் இவற்றை வளர்க்க இது உதவும்.

தைரியமாக எதையும் செய்யும் ஆற்றல் இல்லாத பெரியவர்களைக்கூட நாம் நம் வாழ்க்கையின் எப்பக்கமும் பார்க்கிறோம். "YES MINISTER - என்ற B B C ஆங்கிலத் தொடர் தொலைக்காட்சியில் இதை நன்கு விவரித்தது. பார்த்துப் பார்த்து நாம் சிரித்தோம். ஆனால் எதற்கும் சரிசரி என்று சொல்லும் "ஆமாம் சாமிகள்" கூட்டம் நாள்தோறும் பெருகி வருகிறது என்பதை நாம் உணரவில்லை. இவர்கள் எல்லாம் படித்தவர்கள். ஏன் நம் தலைமுறையிலேயே அன்பே கடவுள் என்று போதித்த நம் மகாத்மாவைச் சுடவில்லையா? இக்கொடிய செயல் இங்கு நடக்கவில்லையா? அன்னை இந்திரா, அமைதியின் மறுஉரு ராஜீவ் காந்தி பெருமான் இவர்கள் கொல்லப்படவில்லையா? ஈக்கும், எறும்புக்கும் கூடத் துன்பம் நினைக்காத தேசப்பிதாவையே கொன்றோம். அதன் பலன்தான் நம் நாடு இன்று இருக்கும் அவல நிலை.

எனினும் நாம் இன்று மனம் தளரக்கூடாது. விவேகானந்த அடிகளார் கூறினார்:

"பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், இந்தியாவின் மாண்பை உணர்ந்து, சிங்கத்தின் பலம் பெற்று, அடிமட்டத்திலுள்ளவரை நேசித்து, நாடு முழுவதும் சுற்றி யாவரும் சமம் என்னும் தாரக மந்திரத்தைப் பரப்பி, உலகின் சிறந்த நாடு பாரதமே என்று நிரூபிக்கும் காலம் வரும். நிச்சயம் வரும். ஐயமே இல்லை. அக்காலத்தை உருவாக்குவது நம் கல்விதான். அதற்கு நம் கல்வி எப்படி இருக்க வேண்டும்! மனிதனை உருவாக்கும் கல்வியாக அது அமைய வேண்டும் (Man Making)" - என்றார் இந்த தீர்க்கதரிசி. இவர் கூற்றில் எத்துணை உண்மை இருக்கிறது பாருங்கள்.

இன்று உலகெங்கும் நடப்பவற்றை நம்மால் மறுக்க முடியாது. தஞ்சாவூர் பொம்மையாக மாறும் மனிதன்தான் மேலே மேலே செல்ல முடிகிறது. ஆனால் தன் கொள்கையில் பிடிப்புடன், தைரியமுடன் இருப்பவன் அரச



மரத்துப் பிள்ளையாராக இருந்த இடத்திலேயே இருக்கிறான். அல்லது திருப்பூர் குமரன் மாதிரி கொடியுடன் மரிக்கிறான். கல்வி, இன்றையக் கல்வி சிந்தனா சக்தியைக் கொன்று விடுகிறது. "ஆசிரியர் என்ன விடை சொல்லுகிறாரோ அதையே மாணவனும் சொல்ல வேண்டும். வேறு முறையில் சரியான விடையைச் சொன்னாலும் அவன் கண்டிக்கப்படுகிறான்" என்ற உண்மையை ஒரு ஆசிரியை இக்கருத்தரங்கில் சொன்னார்.


ஆம்! அன்று உலகம் உருண்டை என்று சொன்ன பேரறிஞன் கலிலியோவின் காலைக் கையை வெட்டி உலகம் துன்புறுத்தவில்லையா? "உன்னை நன்றாகத் தெரிந்துகொள்" என்று சொன்ன சோக்ரதருக்கு உலகம் விஷம் கொடுத்தது. 'பிறரை நேசி' என்று சொன்ன ஏசு நாதர் பெற்ற பரிசு சிலுவையில் அறையப்படும் கொடுமை.

வியட்நாம் போரில் வெடித்த உடன், உடல் பூராவும் பற்றிக் கொள்ளும் கொடிய "நப்லாம்" (NAPLAM) குண்டுகளை L.K.G. நர்சரி பள்ளிகள் மீதும், சங்கைக்குரிய கன்னியர் வசிக்கும் வீடுகள் மீதும், ஆஸ்பத்திரிகள் மீதும் எறிந்தவர் படிப்பற்ற பாமரர்கள் அல்லர். நன்கு படித்துப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற விமானிகள். இதற்காக நாடு அவர்கட்குத் தங்கப்பதக்கம் வழங்கியது.

இவர்கள் கற்ற கல்வி அவர்களை மிருகங்களாக மாற்றியது. உலகின் பேரொளி விவேகானந்த அடிகளார் நமக்கு இக்கல்வி வேண்டாம், மனமுள்ள மனிதனை உருவாக்கும் கல்வியே தேவை என்றார். இதைப் பெற்றோர், ஆசிரியர், மாணவர், அரசு இவை ஏற்றுக்கொண்டால், நமக்கு ஒரு பொற்காலம் தோன்றாதா? நிச்சயம் தோன்றும். ஃ

உங்கள் முதுகைக் கொஞ்சம் பாரீர்

பி.வி.கிரி



இல்லாததை
இருப்பதாகவும்
சொல்லாததைச்
சொன்னதாகவும்...

பார்க்காததைப்
பார்த்ததாகவும்
கேட்காததைக்
கேட்டதாகவும்...

கூடாததைக்
கூடியதாகவும்
தேடாததைத்
தேடியதாகவும்...

நாடாததை
நாடியதாகவும்
பாடாததைப்
பாடியதாகவும்...

எண்ணாததை
எண்ணியதாகவும்
செய்யாததைச்
செய்ததாகவும்...

பறை சாற்றுவோரே – நெஞ்சம்
பதை பதைக்கிறது
குறை கூறும் முன்னே – உங்கள்
முதுகைக் கொஞ்சம் பாரீர்!



வள்ளுவரே... வணக்கம்!

பாலா. இரமணி

வள்ளுவப் பெருந்தகையே...!
நீங்கள் மீண்டும்
பிறந்து வரப்போவதாய்
வதந்திகள் உலவுகின்றன!
வதந்திகள் -
இப்போது
உண்மைகளைவிடவும்
ஏவுகணையிலேறி -
பரப்பளவை
விஸ்தரித்துக்கொண்டுள்ளன!
ஆதலாற்றான்
'வதந்தி' என்பது
'உண்மை' என்பதன்
மறுபொருளாகிப் போனது!
சரி...
வதந்திக்கு வருகிறேன்!
நீங்கள் மீண்டும்
பிறந்து வருவதற்குமுன்
இரண்டு செவிகளை
என்னிடம் தாருங்கள்!
இரண்டு செய்திகளை
உங்களிடம் சொல்லுகிறேன்!
ஒன்று -
உங்கள் திருக்குறளுக்கு
உரையைப் படித்தபின்
எதுவும் புரியாமல்
ஈற்றடிக் குறளையே
எங்கேயோ தொலைத்தோம்!
பெருங் கடலைச்
சிறு கடலைக்குள்
அடைத்தீர்கள்!
ஆயின் -
குறளுக்கு உரையோ
பெருங் குடலைச்
சிறுகுடல் தின்னும்
புரியாத பசியை
ஏற்படுத்திவிட்டது...!
மூலத்தை
உரை தின்றுவிட்டு
உறக்கத்தையல்லவா
விட்டுச் செல்கிறது!
எனவே
உங்கள் குறளுக்கு
நீங்களே
உரை எழுதுமாறு
உரைக்கின்றேன்!
இன்னொன்று -
நீங்கள் தந்திட்ட
முப்பாலாம்
அறத்துப்பால்
பொருட்பால்
காமத்துப்பால்
இப்போது
முறைமாறியிருக்கிறது!
எங்களில் பலர்
முதலில்
காமத்துப்பாலை
முடித்துவிட்டுப்
பொருட்பாலை
முடித்துவிட்டு
அறத்துப்பாலை
அறியத் துவங்குகையில்
ஆயுளை முடித்துவிட்டனர்...!
எனவே -
அறத்துப் பாலை மட்டும்
அவசியம் சொல்க!
அது இயலாமல் போனால்...
நீங்கள்
மீண்டும் மீண்டும்
பிறந்துகொண்டே...
இருத்தல் வேண்டும்!

வீட்டு நூலகம்

சென்னை மாணவர் மன்றத் தலைவர் புலவர் தணிகை உலகநாதன் அவர்கள், 50க்கும் மேற்பட்ட பாடநூல்களையும், 22 பொது நூல்களையும் எழுதியவர். தமிழக அரசின் பரிசு, நல்லாசிரியர் விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார். சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவையின் தலைவராகவும் உள்ளார்.

இவருடைய நூலகத்தில் 600 நூல்கள் இருக்கின்றன. குழந்தை இலக்கியம் தொடர்பான நூல்களே அதிகம். கையெழுத்துப் படிகளும் உண்டு. நூல்களைப் பட்டியல் போட்டு வைத்துள்ளார்.

இவர் குழந்தைக் கவிஞர் என்பதால், இவர் வீட்டுக்குக் குழந்தைகள் அவ்வப்போது வந்து போவார்கள். அவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு கதைகள் சொல்வார். அது மட்டுமல்ல, அந்தக் குழந்தைகளுக்குப் பல்வேறு புத்தகங்களையும் படிக்கக் கொடுப்பார். குழந்தைகள், அந்தப் புத்தகங்களைக் கையெழுத்துப் போட்டு பெற்றுக் கொண்டு படித்து விட்டுத் தந்துவிடுவார்களாம். இப்படி இந்த நூலகம், குழந்தை நூலகமாகவே காட்சியளிக்கிறது.

இவரது நூலகத்தில் பழைய நூல்கள், புதிய நூல்கள் என்று இரு பகுதிகள் உள்ளன. பெரும்பாலான நூல்கள் நடைபாதைக் கடைகளில் வாங்கியவையாகும். ஆசிரியர் பணியிலிருந்து ஒய்வு பெற்றுப் பல ஆண்டுகள் ஆகியும்கூட, இன்னும் நல்ல நூல்களை வாங்கிச் சேர்த்து வருகிறார்.

மறைமலையடிகளார், புத்தகங்களுக்கெல்லாம் தாமே

"புத்தகத்தில் கிறுக்குவது கிறுக்குத்தனம்!"



அட்டை போட்டு வைத்திருப்பாராம். அதைப்போல இவரும் புத்தகங்களுக்கு அட்டைபோட்டு வைத்திருக்கிறார்.

"புத்தகங்களைச் சேர்த்து விடலாம். ஆனால் அவற்றைப் பாதுகாப்பது எளிதான செயலல்ல. பயிரைப் பாதுகாப்பது போல அவற்றைப் பாதுகாக்க வேண்டும். உடலுக்குச் சட்டை போடுவதுப் போல, புத்தகங்களுக்கு மேலட்டை போட வேண்டும்" என்று கூறுகிறார் இவர்.

ஒரு சமயம், இவருடைய நூல்கள் சிலவற்றைச் செல் அரித்துவிட்டது. அதைக் கண்டு மனம் நொந்த இவருக்கு, அந்த நிலையிலும் ஒரு கவிதை பிறந்தது.

"செல்லுக்கு ஒரு சொல்" என்னும் தலைப்பில்,

புலவர்
தணிகை உலகநாதன்

"செல்லே! செல்லே! செல்வது மெங்கே?
சிறிதே நின்றிடுவாய்!
சொல்வதைக் கேளாய் புலவரின் நெஞ்சம்
சோர்ந்திடச் செய்யாதே!"

என்றும்,

"தில்லை நகரில் தேவா ரத்தைத்
தின்றதும் போதாதோ?
தொல்லை அளிப்பதே உன்றன் வாழ்வில்
தொடர்கதை யானதுவோ?"

என்றும் மனம் புழுங்குகிறார்.

புத்தகத்தைப் பாதுகாக்க இவர் கூறும் யோசனை - வசம்பு, மஞ்சள் போன்றவற்றைப் புத்தகங்களுக்கிடையில் புகுத்தி வைக்கலாம்.

அபிதான சிந்தாமணி, ஆனந்த விகடன் அகராதி, மதுரைத் தமிழகராதி, சிறுவர் கலைக்களஞ்சியம், 'லெக்சிகன்' போன்ற நூல்களையும் இவர் கண்ணைப் போலக் காத்து வருகிறார்.

"அவ்வப்போது ஏற்படும் ஐயப்பாடுகளை நீக்கவும் கட்டுரைகள், கவிதைகள், கதைகளை எழுதவும் கருவளிக்கும் கற்பகம் என் வீட்டு நூலகம். உள்ளத்தில் சோர்வு ஏற்படும் போதெல்லாம் உற்ற தோழனாகவும் விளங்குகிறது. இதழ்களில் வெளியிடப் பெறும் புதிய நூல்களை அடிக்கடி வாங்கி அடுக்கி வைத்துக் கொள்வேன். நான் எழுதிய நூல்களுக்குத் தனியிடமும் உண்டு" என்று கூறும் இவர், 'புத்தகத்தில் கிறுக்குவதும், தமது கருத்துகளை எழுதுவதும் கிறுக்குத்தனம்!' என்கிறார்.

—பேட்டி : பி.வி. கிரி.

வீட்டு நூலகம்

"மாதத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கலாம்!"



கவியரசர் இளந்தேவன்

கவியரசர் இளந்தேவன - பாவேந்தர் விருது, ராஜீவ் விருது, தமிழ் வளர்ச்சித் துறைப் பரிசு ஆகியவற்றைப் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், இந்தி, வடமொழிகளில் புலமை பெற்றவர். 9 நூல்கள் எழுதியுள்ளார்.

இவர் வீட்டு நூலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. தமிழ் இலக்கண இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள், பலதுறை சார்ந்த தமிழ்க் கட்டுரைகள் ஆகியவை இவர் நூலகத்தை அலங்கரிக்கின்றன.

"பார்வை நூல்களையே (Reference Books) அதிகமாக வாங்குகிறேன். சிறுகதைகள் போன்ற புனைகதைகளை அதிகமாகப் படிப்பதில்லை. அதிக விருப்பம் கவிதை, கட்டுரை நூல்களே!" என்கிறார் கவிஞர்.

இவர் நூலகத்தை இன்னும் அலசி ஆராய்ந்தபோது, பகவத் கீதையின் பல்வேறு பதிப்புகள் இருப்பதையும், ஆங்கில மொழி இலக்கியம் பற்றிய பழமையான நூல்கள் இருப்பதையும் பார்க்க முடிந்தது.

புத்தகத்தை இரவல் கொடுப்பது குறித்து இவரது கருத்து:

"புத்தகத்தை இரவல் வாங்கிச் செல்பவர்கள் பெரும்பாலும் திருப்பித் தருவதில்லை. இதுகுறித்து நமக்கு மனக்கசப்பு வருகிறதா என்றால் அதுவுமில்லை. காரணம், அவர்கள் வாங்கிச் சென்ற புத்தகங்களைப் பற்றி நமக்கு ஞாபகம் இருப்பதில்லை. இதற்குப் பரிகாரமாக, நூல் பெற்றுச் செல்வோர் கையொப்பத்தை, நூல் விவரத்தைப் பெற்று வைத்துக் கொள்ளலாம்".

நாளையத் தலைமுறைக்கு இவர் கூறும் நல்லுரை என்ன?

"இளமைப் பருவத்திலேயே புத்தகம் படிக்கும் பழக்கத்தை வளர்க்கப் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குப் புத்தகங்களை விலைக்கு வாங்கித் தர வேண்டும். கையில் பணம் தந்து அவர்களே புத்தகங்களை வாங்கத் தூண்டலாம். தகுந்த நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவி செய்யலாம்.

"குழந்தைகள் நாம் சொல்வதிலிருந்து எதையும் கற்றுக் கொள்வதில்லை. நாம் செய்வதிலிருந்துதான் கற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, புத்தகம் விலைக்கு வாங்கும் பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். மாதத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை நூல்கள் வாங்குவதற்காகவே ஒதுக்கலாம்.

"இளைஞர்களுக்கு ஒரு வார்த்தை:

"படிப்பதில் உள்ள இன்பம், படித்தவற்றை அசைபோடுவதிலே உள்ள இன்பம், அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் உள்ள இன்பம் இவை அனுபவிக்கப்பட வேண்டியவை. இந்த அறிவார்ந்த இன்பத்தை இளமையிலேயே பெறவேண்டும். யாருக்கும் எந்த வகையிலும் தீமை பயவாத இன்பம், இந்த இன்பம் தான். இந்த இன்பத்தைப் பெறுகிறபோது, பக்க விளைவுகளாகப் பயன்கள் ஏற்பட்டே தீரும். ஆகவே, இளைஞர்களே! படியுங்கள் - பாட நூல்களை மட்டுமல்ல, பல துறை நூல்களையும்.

"குடும்ப நூலகம் என்பதே, குடும்பத்தின் தாவரச் சொத்து. ஆனால் நமக்கு உடைமையாக இருக்கும் அந்தச் சொத்தின் விலையை எண்ணாமல், மதிப்பை மதிப்பீடு செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். வீடுதோறும் நூலகம் என்ற இயக்கம் தமிழன்னைக்கே உவப்பான ஒரு கோட்பாடாகும்".

—பேட்டி : பி.வி.கிரி.

உங்கள் ராசி பலன்

14 - 3 - 1992 முதல்
12 - 4 - 1992 வரை

ப்ரஜாபதி வருஷம், பங்குனி மாதம்
1 ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை :

கிரக மாறுதல்

17 - 3 - 1992 முதல் புதன் - வக்கிர ஆரம்பம்
19 - 3 - 1992 முதல் கும்ப - செவ்வாய்
2 - 4 - 1992 முதல் மீன - சுக்கிரன்
9 - 4 - 1992 முதல் புதன் - வக்கிர நிவர்த்தி

பங்குனி மாதம் 1 ஆம் தேதி (14 - 3 - 1992)

கிரக பாதசாரம் : சூரியன் - பூரட்டாதி 4; சந்திரன் - புனர்பூசம் 2; செவ்வாய் - அவிட்டம் 1; புதன் - ரேவதி 1; குரு - பூரம் 1; (வக்ரி) சுக்கிரன் - சதயம் 1; சனி - திருவோணம் 4; ராகு - மூலம் 4; கேது - திருவாதிரை 2.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

5இல் உள்ள குருவும், 10இல் உள்ள செவ்வாயும் உங்கள் ஜன்ம ராசியைப் பார்ப்பதால் உங்கள் அறிவாற்றலும், செயல்திறமையும் பளிச்சிடும். எடுத்த காரியத்தில் வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். நல்லவர்களும், வல்லவர்களும் உங்களுக்குப் பக்கபலமாக விளங்குவார்கள். உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கப் பெறுவார்கள். தெய்வீக மார்க்கங்களிலும், தரும காரியங்களிலும் ஈடுபாடு கொள்வீர்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பு உண்டாகும். நூதனப் பணிகளில் பிரவேசிக்கலாம். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துகளின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெற வாய்ப்பு உண்டாகும். உடன் பிறந்தவர்களால் அனுகூலத்திற்கு இடம் உண்டு.

பாலஜோசியர்

சூரி புத			கேது
சுக்	கிரக நிலை		
செவ் சனி			குரு - வ
ராகு			

அரசாங்க விவகாரங்கள் அளவோடு நலம் தரும்
பொருளாதார நிலை திருப்தி தரும்.

எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். வழக்கு, வியா
ஜியங்களில் அனுகூலமான போக்குத் தென்படும்
சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்
கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் உற்சாகமா
சூழ்நிலையைக் காண்பார்கள். குடும்பநல
மகிழ்ச்சி தரும். மக்களாலும், வாழ்க்கைத்துணை
வராலும் அனுகூலங்கள் உண்டாகும். கூட்டு
தொழில் லாபம் தரும். பொது நலப்பணியாளர்கள்
மருத்துவர்கள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்
வர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கெல்லாம் வ
வேற்பு கூடும். எந்தத் தொழிலானாலும் சரி அதி
முன்னேற்றம் காண இந்த நேரம் அனுகூ
மானதாக அமையும்.

மக்களாலும், உடன்பிறந்தவர்களாலும், அரசா
கத்தாராலும் ஓரிரு செலவுகள் ஏற்படும். அ
சியல்வாதிகள் புதிய கொள்கைகளை இந்
நேரத்தில் வெளியிடாமல் இருப்பது நல்லது. விய
பாரிகள், கணிதத் துறையாளர்கள், எலக்ட்ரானி
கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோரு
கெல்லாம் சிறுசிறு சோதனைகள் அவ்வப்போ
ஏற்படும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது
மார்ச் 14,15,18,20,21,28,29,30 ஏப்ரல் 1,3,4,7,8,11,1
தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்கு
திசைகள் அனுகூலமானவை. சிம்ம, மகர, கும்
ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,9 எண்க
அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2 ஆம் பாதம் முத ரோகிணி, மிருக சீரிஷம் 2ஆம் பாதம் (முடிய)

11இல் உள்ள கிரகங்கள் உங்கள் அறிவாற்றலை
யும், செயல்திறமையையும் வெளிப்படுத்துவார்கள்
அரசாங்கத்தாரால் எதிர்பார்த்த காரியங்களி
ஒன்றிரண்டு ஈடேறும். வியாபாரிகள் அளவோ
வளர்ச்சி பெறுவார்கள். ரேடியோ, வீடியோ
டி.வி., கம்ப்யூட்டர் போன்ற நவீன விஞ்ஞான
துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பா
யைக் காண்பார்கள். நிறுவன, நிர்வாகத் துறையி
ருக்குச் சுபிட்சம் உண்டாகும். மக்களால் அ
கூலத்திற்கு இடம் உண்டு. ஸ்பெகுலேஷன், கொடு
கல் - வாங்கல் இனங்கள் அளவோடு ஆதாய

தரும். குடும்பநலனில் கவனம் செலுத்தினால மோசமான நிலை என்று ஏதும் உண்டாகிவிடாது. நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துகளால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. பேச்சிலும், உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு தேவை. பிற மொழி, மதக்காரர்களை நம்பி எக் காரியத்திலும் பிரவேசிக்க வேண்டாம். 19ஆம் தேதி முதல் பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெளிச்சமான சூழ்நிலை உதயமாகும்.

சட்டம், காவல், இராணுவம் போன்ற துறை களைச் சேர்ந்தவர்கள் புகழும், பொருளும் பெறு வார்கள். செயற்கரிய சாதனைகளைச் செய்வதற் குரிய சந்தர்ப்பமும் கனிந்துவரும். இதுவரையிலும் தேங்கியிருந்த காரியங்கள் புத்துயிர் பெறும். ஏப்ரல் 2ஆம் தேதி முதல் சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். புதிய ஒப்பந்தங்கள் கைவரப்பெறவும் கூடும். ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட் களின் சேர்க்கைக்கும் இடமுண்டு. கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு உண்டாகும். பெண்கள், தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். கணவன், மனைவியரிடையே இதுவரையிலும் இருந்துவந்த சலனங்கள் விலகும். 8இல் ராகு உலவுவதால் பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. விஷ ஜந்துக்களால் உபத்திரவம் உண்டாகவும் கூடும்; எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. பண நட மாட்டம் சீராகவே இருந்துவரும். மார்ச் 14,15,18, 20,21,23,24,29,30 ஏப்ரல் 1,3,7,8,12 தேதிகள் சிறப் பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. மீன ராசிக் காரர்கள் உதவுவார்கள். 1,5 எண்கள் அதிர்ஷ்டம் தரும்.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

9,10 ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் மனத்தில் நல்ல எண்ணங்களை விதைப்பார்கள். புனிதமான காரியங்களில் ஈடுபாடு கொள்வீர்கள். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்க ளுக்கும் அளவோடு நன்மைகள் உண்டாகும். தொலைதூரப் பயணம் ஆக்கம் தரும். வெளி நாட்டுத் தொடர்பால் அனுகூலம் பெறுவீர்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். புதிய ஆடை அணிமணிகள், அலங்காரப் பொருட்களின் சேர்க்கைக்கு இடம் உண்டு. அரசாங்கத்தார் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறமுடியும். எதிர்ப்புகள் கட்டுக்கடங்கியிருக்கும். போட்டிப் பந்தயங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்புகளைப் பெறுவீர்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும். மாணவர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், சிற்பிகள், நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்த வர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான பாதை தெரியவரும்.

கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர் களிடம் விழிப்புடன் பழகிவருவது நல்லது. 8இல் சனி உலவுவதால் எதையும் சுலபமாகச் சாதித்து விடமுடியாது. கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். குரு 3இல் இருப்பதாலும், சனி 8இல் அமர்ந்து, 2ஆம் இடத்தைப் பார்ப்பதாலும் பொருளாதார நிலையில் விசேடமான அபி விருத்திக்கு இடமிராது. தீயவர்களின் தொடர்பை அறவே கைவிடுவது அவசியம். வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடவேண்டாம். வழக்கு, வியாஜ் ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது அரிதாகும். செவ்வாயினுடைய சஞ்சாரம் திருப்தி கரமாக இல்லாததால் பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. பெரியவர்களின் மனம் புண்படாதவாறு நடந்துகொள்வது அவசிய மாகும். தெய்வீக மார்க்கங்களில் தொடர்ந்து ஈடுபடு வதன் மூலம் நலம் பெற வாய்ப்புண்டாகும். மார்ச் 14,15,18,20,21,23,24,25 ஏப்ரல் 1,3,4,7,8,12 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. கும்ப, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

குருபலம் காரணமாக உங்கள் பேச்சுத்திறமை கூடும். நல்லவர்களின் நட்புறவால் நலம் கூடப் பெறுவீர்கள். பொருள் நடமாட்டம் திருப்திகரமாக இருந்துவரும். குடும்பத்தில் குதூகலம் கூடும். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். கடன் உபத்திரவம் குறைவடையும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறு வார்கள். மக்களால் அனுகூலம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். தாய், தந்தையர் நலம் சீர்பெறும். பயணத்தால் குறிப்பிட்டதொரு எண்ணம் கைகூடப் பெறுவீர்கள். பிற மொழி, மதங்களைச் சார்ந்த வர்கள் உதவி புரிவார்கள். கணவன், மனைவி யரிடையே சிறுசிறு பிரச்சினைகள் உருவானாலும் அவற்றைச் சமாளித்துவிடுவீர்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். புதிய ஒப்பந்தங்கள் கைவரப்பெறுவீர்கள்.

அரசியல்வாதிகளுக்கும், அரசுப்பணியாளர் களுக்கும் முன்னேற்றத்திற்கான மார்க்கம் புலப் படும். தொழிலாளர்களும், விவசாயிகளும் வளர்ச்சி பெற கடுமையாக உழைக்கவேண்டிவரும். 19ஆம் தேதி முதல் பொறியியல் துறைகளைச் சேர்ந்த வர்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். உடன் பிறந்தவர்களால் தொல்லைகளுக்கு இடம் உண்டு. வீண் வழக்கு, வியாஜ்ஜியங்களில் பிரவேசிக்க லாகாது. ரியல் எஸ்டேட் இனங்களைச் சேர்ந்த வர்கள் தங்கள் பணிகளில் அதிகம் அக்கறையுடன் ஈடுபட்டால் ஓரளவு ஆதாயம் கிடைக்கப் பெற முடியும். ஏப்ரல் 2 ஆம் தேதி முதல் பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதயமாகும். புதிய

பொருட்களின் சேர்க்கை நிகழும். புனித யாத்திரை மேற்கொள்ளவும் சந்தர்ப்பம் கூடிவரும். வெளி நாட்டுத் தொடர்புடன் தொழில் புரிபவர்கள் ஏற்றம் பெறுவார்கள். மார்ச் 14,15,18,20,21,23,25,27,28,29 ஏப்ரல் 2,3,4,7,8,12 தேதிகள் சிறப்பானவை. வட கிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. சிம்ம, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 8-லும், குரு ஜன்ம ராசியிலும் சஞ்சரிப்பதால் அலைச்சலும், மனக்கிலேசமும் உண்டாகும். அரசாங்கத்தாராலும், மக்களாலும் பிரச்சினைகளுக்கு ஆட்பட வேண்டிவரும். பொருளாதார நிலையில் அதிகம் வளர்ச்சியை எதிர் பார்க்க இயலாது. வாழ்க்கைத் துணைவி அல்லது வாழ்க்கைத் துணைவரின் குடும்பத்தாரால் சங்கடங் களுக்கு ஆட்படுவீர்கள். சினிமா, நாடகம், நாட்டி யம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்த வர்கள் விழிப்புடன் தங்கள் பணிகளில் ஈடுபடுவது அவசியமாகும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. உஷ்ணாதிக்கத்தால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப் படலாம். தகுந்த பாதுகாப்புடன் இருப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள், அரசுப் பணியாளர்கள், வியா பாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கணி தத் துறையாளர்கள் ஆகியோர் முன்னேற்றம் காணத் தடையிருந்துவரும். விரும்பத்தகாத இட மாற் றமோ, நிலை மாற்றமோகூட ஏற்படும்.

6,11 ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் பிரச்சினைகளைச் சமாளிக்கும் பராக்கிரமத்தை உங்களுக்கு வழங்குவார்கள். தொழிலாளர்களது கோரிக்கைகள் நிறைவேற வாய்ப்புண்டாகும். பொறியியல் துறையாளர்களும், விவசாயிகளும் தங்கள் உழைப்பிற்குரிய பயனைப் பெறுவார்கள். கடன் உபத்திரவம் ஓரளவு குறைவடையும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கு நிலவி வரும். நிலபுலன்களால் ஆதாயத்திற்கு இடம் உண்டு. 19ஆம் தேதி முதல் நூதனமான பொருட் களின் சேர்க்கை நிகழும். கூட்டுத் தொழிலில் வளர்ச்சி தெரியவரும். ஏப்ரல் 2ஆம் தேதி முதல் கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். பெண்களுக்கு உற்சாகமான சூழ் நிலை உதயமாகும். கணவன், மனைவியரிடையே இருந்து வந்த பிரச்சினைகள் குறைவடையும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். மதிப்பும், அந்தஸ்தும் உயரும். மார்ச் 14,15,18,20,21,23,24,27,28,29,30 ஏப்ரல் 4,7,8,12 தேதிகள் சிறப்பானவை. தென்[illegible] அனுகூலமானது. மேஷ, மிதுன ராசிக்காரர் உதவுவார்கள். 7,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : (உத்திரம் 2 ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் அபிலாஷைகள் நிறை வேற நீங்கள் அரும்பாடுபடவேண்டிவரும். பண நடமாட்டம் திருப்திகரமாக இராது. மனத்தில் சஞ்சலம் குடிகொள்ளும். மக்களால் செலவுகள் ஏற்படும். அலைச்சலால் உடற்சோர்வு உண்டாகும். நூதன நட்பு வேண்டாம். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்காமல் இருப்பது அவசியம். பெண்களுக்குப் பிரச்சினைகள் சூழும். தந்தையால் அனுகூலமிராது. வெளிநாட்டுத் தொடர்புடன் வியாபாரம் செய்பவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. பேச்சில் நிதானம் தேவை. கணவன் மனைவியரிடையே சலசலப்புகள் உண் டாகும். பக்குவத்துடன் பழகிவருவதன் மூலம் நிலைமையைச் சரிசெய்து கொள்ள முடியும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்த வர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள்.

19ஆம் தேதி முதல் உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் பிறக்கும். ஓரிரு எண்ணங்கள் ஈடேறவும் வாய்ப்புக் கனிந்துவரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம், மின்சாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதை யைக் காண்பார்கள். எதிர்ப்புகளைச் சமாளிக்கக் கூடிய ஆற்றல் உண்டாகும். வழக்கு, வியாஜ்ஜி யங்களில் அனுகூலமான போக்கைக் காண்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். மக்கள் நலம் சீர்பெறும். ஏப்ரல் 2ஆம் தேதி முதல் கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அளவோடு வளர்ச்சி தெரியவரும். கூட்டுத் தொழிலிலும் ஓரளவு முன் னேற்றத்தை எதிர்பார்க்கலாம். பெரியவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வது நல்லது. தெய்வீக மார்க்கங்களில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெற வாய்ப்புண்டாகும். மார்ச் 14,15,18,20,21,23,24,27,28,29,30 ஏப்ரல் 1,3,7,8,12 தேதிகள் சிறப்பானவை. வடமேற்குத்திசை அனு கூலமானது. 7,8 எண்கள் அதிர்ஷ்டமானவை. மகர, மிதுன ராசிக்காரர்கள் உதவ முன்வருவார்கள்.

துலாம் : (சித்திரை 3 ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 5-லும், குரு 11-லும் உலவுவதால் உங்கள் எண்ணங்கள் ஒவ்வொன்றாக ஈடேறிவரும். அறிவாற்றல் காரணமாக மற்றையோரால் பாராட் டப்படுவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். நற் காரியங்களில் ஈடுபாடு கொள்வீர்கள். மதிப்பும், அந்தஸ்தும், புகழும், வாழ்க்கை வசதிகளும் உயர் வடையும். பொருளாதார நிலையில் வளர்ச்சிக்கு இடம் உண்டு. எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பும் உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். புதிய பொருட்களின் சேர்க்கைக்கு இடம் உண்டு. கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு உண்டாகும். நல்லவர்களின் தொடர்பால் நலம் பெறுவீர்கள். பயணம் பயன்படும். எதிர்ப்புகள் என்பவை அக லும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறுவீர்கள்.

தெய்வப் பிரார்த்தனைகளை ஈடேற்றிக் கொள்ள முடியும். புனித யாத்திரை மேற்கொள்ளவும்

வாய்ப்புண்டு. அரசாங்கப்பணிகள் ஆக்கம் அளிக்கும். அரசியல்வாதிகள், சமூகநலப்பணியாளர்கள், மருத்துவர்கள், உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் செழிப்பான பாதை தெரியவரும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். நூதன நண்பர்கள் உதவ முன்வருவார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடையும். புதிய முயற்சிகள் கூடிவரும். 4இல் செவ்வாயும், சனியும் உலவுவதால் உடல்நலனில் அக்கறை செலுத்திவருவது நல்லது. பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்புத் தேவை. தாய்நலம் கவனிக்கப்படவேண்டிவரும். 19ஆம் தேதி முதல் பொறியியல் துறையாளர்களுக்கு அளவோடு வளர்ச்சி தென்படும். கணவன் மனைவியரிடையே களிப்புறவு கூடும். ஏப்ரல் 2 முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் செயலாற்றி வருவது அவசியமாகும். மார்ச் 14,15,18,20,21, 23,24,27,28,29,30 ஏப்ரல் 1,3,4,11,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. தனுசு, கும்ப, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,6 எண்கள் அதிர்ஷ்டம் தரும்.

விருச்சிகம் : (விசாகம் 4 ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

சனி, செவ்வாய், சுக்கிரன் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் தோற்றப்பொலிவும், செயல் திறமையும் பளிச்சென்று பிரகாசிக்கும். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். நண்பர்களாலும், உற்றார், உறவினர்களாலும் நலம் பெற வாய்ப்புண்டாகும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்களின் சேர்க்கைக்கு இடம் உண்டு. ரியல் எஸ்டேட் இனங்கள் ஆதாயம் தரும். புதிய வீடு, மனை, வாகனங்கள் சேர்க்கையும் நிகழும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தெரியவரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். கணவன், மனைவியர் இடையே களிப்புறவு கூடும்.

பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை படைப்பார்கள். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை கனிந்துவரும். உத்தியோகஸ்தர்கள், அரசுப் வியாபாரிகள், பணியாளர்கள் ஆகியோர் விழிப்புடன் காரியமாற்றி வருவது நல்லது. பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்ப்பது கூடாது. பெரியவர்களின் ஆலோசனைகளையும், ஆதரவையும் பெற முயல்வது அவசியமாகும். தெய்வப்பணிகள் மனத்தெளிவை உண்டுபண்ணும். 2இல் உள்ள ராகுவும், 8இல் உள்ள கேதுவும் அவ்வப்போது சிறுசிறு இடையூறுகளை உண்டுபண்ணக்கூடும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. 19ஆம் தேதி முதல் பயணத்தின்போது விழிப்புடன் இருப்பது நல்லது. ஏப்ரல் 2ஆம் தேதி முதல் எதிர்பாராத ஓரிரு நன்மைகள் உண்டாகும். மார்ச் 15,18,20,21,23,24,27,29,30 ஏப்ரல் 1,3,4,7,11,12 தேதிகள் சிறப்பானவை. தென்திசை அனுகூலமானது. மகர, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் தோற்றப்பொலிவும், அறிவாற்றலும் மேலோங்கும். பெரியவர்களும், தனவந்தர்களும் உங்களுக்கு உதவுவார்கள். பொருள்வரவு திருப்திகரமாக இருந்து வரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். பயணத்தால் ஓர் எண்ணம் பூர்த்தி அடையும். வெளிநாட்டுத் தொடர்பால் நலம் பெறுவீர்கள். புனித யாத்திரை, தெய்வ தரிசனம், மகான்களின் தரிசனம் ஆகியவை கிடைக்கப் பெற வாய்ப்புண்டு. மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெறும். மாணவர்கள், கணிதத்துறையாளர்கள், விஞ்ஞானிகள், வியாபாரிகள் ஆகியோர் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். மதிப்பும், அந்தஸ்தும், கௌரவமும் உயர்வடையும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள்.

உடன்பிறந்தவர்களால் அனுகூலம் உண்டாகும். மக்கள்நலம் மகிழ்ச்சி தரும். பெற்றோரால் நன்மைகளைப் பெறுவீர்கள். குடும்பநலம் சீராக இருந்துவரும். நண்பர்கள், உற்றார், உறவினர்கள் சேர்க்கை மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும். பொருள் நடமாட்டமுள்ள இடங்களில் பணியாற்றுபவர்கள் ஏற்றம் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களின் நிலை உயரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்கள் போன்ற ஸ்திரச்சொத்துகளால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. 19ஆம் தேதி முதல் உங்கள் சுயபலம் மேலோங்கும். எதிரிகள் அகலுவார்கள். வழக்கு வியாஜ்ஜியங்களில் வெற்றியின் சாயல் தெரியவரும். பொறியியல் துறையாளர்கள் சுபிட்சம் காண்பார்கள். எடுத்த காரியத்தில் வெற்றி பெறச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். ஏப்ரல் 2ஆம் தேதி முதல் நற்பலன்களின் அளவு கூடும். சுக, சௌக்கியங்கள் அதிகரிக்கும். மார்ச் 18,20,21,23,24,27,29,30 ஏப்ரல் 1,3,4,7,8 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2 ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் முடிய)

2இல் உள்ள சுக்கிரன் உங்கள் முக வசீகரத்தை கூட்டுவார். வாக்குவன்மைப் பிரகாசிக்கும்

பொருளாதார நிலையில் வளர்ச்சி காண்பீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழ இடம் உண்டு. கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். மக்களால் அனுகூலம் உண்டாகும். செய்தொழிலில் ஓரளவு முன்னேற்றம் காண்பீர்கள். பெண்களுக்கு உற்சாகம் வேர்விடும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்களின் சேர்க்கை நிகழும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபடவும் வாய்ப்புண்டு. சூரியன், கேது ஆகியோரது அனுகூலமான சஞ்சாரத்தால் எதிர்ப்புகளை வெல்லும் பராக்கிரமத்தைப் பெறுவீர்கள். அரசாங்கத்தாரால் ஓரிரு காரியங்கள் நிறைவேறும்.

ஜன்ம ராசியில் உலவும் கிரகங்கள் அலைச்சலையும், உழைப்பையும் அதிகப்படுத்துவார்கள். புதன், குரு ஆகியோருடைய பலம் குறைந்திருப்பதால் மறதிக்கு ஆட்பட நேரும். தீய எண்ணங்கள் மனத்தில் உருவாகவும் கூடும். கெட்டவர்களின் சகவாசத்தைத் தவிர்த்து நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் மனம் தீயவழிகளில் செல்லாமல் காத்துக் கொள்ள இயலும். அதன்மூலம் பிரச்சினைகளுக்கு ஆட்படாமல் விடுபட முடியும். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. 19ஆம் தேதி முதல் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். வீண்சண்டை, சச்சரவுகளில் ஈடுபடவேண்டாம். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. அதன் மூலம் குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் உங்கள் மதிப்பைக் காத்துக் கொள்ள முடியும். மார்ச் 15,20,21,23,24,27,29,30 ஏப்ரல் 1,3,4,7,8,11 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு திசை அனுகூலமானது. கும்ப, மீன ராசிக் காரர்கள் உதவுவார்கள். 1,6,7 எண்கள் நலம் தரும்.

கும்பம் : (அவிட்டம் 3 ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் தோற்றப்பொலிவும், மதி நுட்பமும் வெளிப்படும். நல்லவர்களின் தொடர்பால் நலம் பெறுவீர்கள். மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெறும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். புதிய ஒப்பந்தங்கள் கைவரப் பெறவும் வாய்ப்புண்டு. பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதயமாகும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்களின் சேர்க்கை நிகழும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு ஊதிய உயர்வு, இடமாற்றம், உத்தியோக உயர்வு ஆகியவை கிடைப்பதற்குரிய சந்தர்ப்பம் கூடிவரும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புண்டு.

பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அனுகூலங்கள் உண்டாகும். கணவன் மனைவியரிடையே களிப்புறவு கூடும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவுவார்கள். விரயத்தில் கூடியிருக்கும் கிரகங்கள் அவ்வப்போது சிறுசிறு தொல்லைகளை உண்டுபண்ணக் கூடுமானாலும் அவற்றிலிருந்து வெளிவந்துவிடுவீர்கள். 2ஆம் தேதி முதல் சகோதர நலம் சீர்பெறும்.

பொறியியல் துறையாளர்களுக்கு இருந்துவந்த பிரச்சினைகள் ஓரளவு விலகும். ஏப்ரல் 2ஆம் தேதி முதல் குடும்பத்தில் குதூகலம் கூடும். பொருளாதார நிலையில் எதிர்பாராத வளர்ச்சிக்கும் இடம் உண்டு. பேச்சாற்றல் கூடும். நிலபுலங்களால் அனுகூலம் பெறவும் வாய்ப்புண்டாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். சனிப் பிரீதியான காரியங்களில் ஈடுபடுவது நல்லது. மார்ச் 15,18,21,23,24,27,29,30 ஏப்ரல் 1,3,4,7,8,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மீன, சிம்ம, தனுசு ராசிக் காரர்கள் உதவுவார்கள். 3,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

10,11ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் மேலோங்கும். எதிர்ப்புகளைக் கடந்து வெற்றிப்பாதையில் முன்னேற்றம் காண்பீர்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். பிறமொழி, மதங்களைச் சார்ந்தவர்கள் உதவுவார்கள். தோல் பொருட்கள், ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றால் ஆதாயத்திற்கு இடம் உண்டு. கறுப்பு நிறப் பொருட்கள் லாபம் கொண்டு வரும். குடும்பநலம் சீராக இருந்துவரும். ரியல் எஸ்டேட் இனங்களைச் சேர்ந்தவர்கள் பொருள்வரவு கூடப் பெறுவார்கள். உடன்பிறந்தவர்கள் மூலமாக உங்களுக்கும், உங்களால் அவர்களுக்கும் நலம் உண்டாகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள்.

தோட்டங்கள், சுரங்கங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகள் ஆக்கம் தரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். உத்தியோகஸ்தர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. உடல் நலனில் அக்கறை செலுத்திவருவது அவசியமாகும். 19ஆம் தேதி முதல் ஓரிரு பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ள வேண்டி வரும். வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடவேண்டாம். குடும்பநலனில் அக்கறை தேவைப்படும். ஏப்ரல் 2ஆம் தேதி முதல் பொருளாதார நிலை வளர்ச்சி பெறும். நூதன பொருட்களின் சேர்க்கையும் நிகழும். பெரியவர்களின் மனம் புண்படாதவாறு நடந்து வருவதன் மூலம் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடுபவர்கள் மன அமைதி காண்பார்கள். மார்ச் 15,18,20,23,24,27, 29,30 ஏப்ரல் 1,3,4,7,8,11,12 தேதிகள் சிறப்பானவை. தென்மேற்கு, மேற்குத்திசைகள் அனுகூலமானவை. தனுசு, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,6,8 எண்கள் அனுகூலமானவை.

படிப்பைத் தொடர்ந்த சுகந்தி

புவனேச்வரிதாசன்

பெங்களூர் மல்லேஸ் வரத்தில் வசித்து வருகிறார் ராமச்சந்திர ராவ். சென்னை யில் இவருக்கு ஆட்டோ மொபைல் கடை ஒன்று சிறப் பாக இயங்கி வருகிறது. கோயில் கட்டுவது, சத்காரியங் களுக்கு உதவுவது, ஏழைகளின் நலனில் அக்கறை காட்டுவது போன்ற நற்பண்புகள் நிறைந்தவர்.

ஆண் வாரிசு இல்லாததால் ஒரே பெண் சுகந்தியை ஆணுக்கு ஆணாய், பெண் ணுக்குப் பெண்ணாய் வளர்த் தார்.

சுகந்திக்குக் குரல் வளம் இனிமை. அதனால் அவள் பாடும்போது, தெய்வீகச் சூழ் நிலைக்குக் கொண்டு சென்று விடும். ராமச்சந்திர ராவின் குறிக்கோள் தன் பெண்ணை டாக்டராக ஆக்கவேண்டும். மருத்துவப்பட்டம் பெற்று எளிய வர்களின் பிணியைப் போக்க வேண்டும்.

ப்ளஸ் டூ முடித்து, விண் ணப்பித்து நல்ல மதிப்பெண் பெற்று, மருத்துவக் கல்லூரி யில் இடமும் கிடைத்துவிட்டது. படிப்பில் நல்ல அக்கறை காட்டினாள்.

மூன்று வருடப் படிப்பு முடிந்தது. இன்னும் ஒன்றரை வருடப் படிப்புதான் பாக்கி. கல்வி முடியும் நாளை ஆர்வத் தோடு எதிர்பார்த்துக் கொண் டிருந்தார் ராவ்.

ஒருநாள் அவருடைய மனக் கோட்டையில் இடி விழுந்தது.

சுகந்தி விபத்துக்குள் ளானாள். எதிரே வந்த அம்பா சிடர் கார் சுகந்தி தலையில் மோதி நினைவிழந்து ரத்த வெள்ளத்தில், குற்றுயிராய்க் கிடந்தாள். இண்டன்சிவ் கேர் பிரிவில் 48 மணி நேரம் கெடு வில். வேதனை ஓலங்கள் ராவின் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தன. சுகந்தி மரணமடைந்தால் அதன்பின் ராவ் உயிர் தரிக்கமாட்டார். சுகந்தி அவருடைய உயிர்.


ராவின் குடும்ப நண்பர் வாசு தேவன், திருவல்லிக்கேணி பரமஹம்ஸ ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகளைப் பற்றிக் கூறி னார்.

வாசுதேவன் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் காலடியில். கண்ணீர் ஆறாய் ஓடியது. 'பயப்படாதே இது ஒரு கண்டம் தான், பிழைப்பாள். விடாது அம்ருத மம்ருத்யுஞ்ஜய ஜபத்தைச் செய்ய ஏற்பாடு செய்கிறேன். இங்கு நீ நான்கு மணிநேரம் இரு. விபூதியில் யந்திரம் வரைந்து புவனேஸ்வரியைப் பிரார்த்தித்து உத்திராக்ஷத்தை யும் விபூதியையும் அளிக் கிறேன். விபூதியைச் சுகந்தி நெற்றியில் பூசு. தலையணைக் கடியில் உத்திராக்ஷத்தை வை. சுகந்தி பிழைப்பாள்' என்று அருளினார்.

வாசுதேவன் விரைந்தார். சுகந்திக்கு ஸ்வாமிகள் பிர சாதம் வழங்கப்பட்டது. கெடு கொடுத்த நேரத்திற்குள் சுகந்தி நினைவு திரும்பினாள். இரண்டு வார காலம் மருத்துவ மனையிலிருந்து பின் டிஸ்சார்ஜ் ஆகி இரண்டு வாரம் ஓய்வு பெற்று, மீண்டும் மருத்துவப் படிப்பைத் தொடர்ந்தாள். இன்று சுகந்தி எங்கு சென் றாலும் ஸ்வாமிகள் கொடுத்த உத்திராக்ஷத்தை எடுத்துச் செல்கிறாள். பாரத்வாஜ ஆச்ர மத்தில் நடந்த பௌர்ணமி தினத்தில் சுகந்தி ஸ்வாமி களைத் தரிசித்தாள்.

"தேவி உனக்கு ஆயுளைக் கொடுத்திருக்கிறாள். உனது தந்தையின் ஆசைப்படிப் படிப்பு முடித்து ஏழை எளிய வர்களுக்கு உதவவேண்டும். அதனால் தேவி மகிழ்வாள்" என்று அருளாசி வழங்கினார் ஸ்வாமிகள்.

சென்னை - 2 உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன்
ராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி. எஸ். ராஜா, ஆசிரியர் - விக்கிரமன்,
வாக அலுவலகம், த.பெ.எண். 5043, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001.
தொலைபேசி : 528545. ஆண்டுச்சந்தா ரூ. 60.


என்ன சார், ஹிராயின்'னு நீங்க சொன்ன மாதிரி இருந்தது. போதை மருந்து வியாபாரம் ஏதாவது...?
அட நீங்க ஒண்ணு. நான் ஹீரோயின்'னு சொன்னேன்! 'ஹிராயின்' இல்லே!
இவரிடம் கஞ்சத்தனம்! அவரிடம் கஞ்சாத்தனம்!
போதையரே! போதையரே! போதையர் அல்லாதார் பேதையரே! பேதையரே!
நல்ல கம்பவுண்டர் வேலே! டாக்டருக்கு விஸ்கி 10% பிராந்தி 20% ரம் 25% ஒய்ன் 15% பட்டைச்சாராயம் 30% கலந்து கொடுக்கற வேலையே சரியா இருக்கு!
மகாமகக் குளத்திலே முழுக்குப் போட்டதும் 'குடி'க்கும் முழுக்குப் போட்டுட்டார்!
போதையரா? பேதையரா?